320

காவேரி

320
4-54.

ஜய - ஐப்பசி
October - 1954
/8-

இயற்கையின் நடுவே அழகு
அழகுக்குக் காரணம் வாயில்
அச்சடித்த, சாயம் ஏற்றிய மெர்ஸிரைஸ் செய்யப்பட்ட
கடாவ் வாயில்
சுதேசியே வாங்குங்கள்
சிறந்ததையே வாங்குங்கள்
தி கடாவ் மகனஜி ஸ்பின்னிங் & வீவிங் கம்பெனி லிட், மில்கள்: பைக்குல்லா, பம்பாய். ஆபீஸ்: லக்ஷ்மி பில்டிங், பல்லார்ட் பியர், பம்பாய் 1. சில்லறைக் கடை: முல்ஜி ஜேதா மார்க்கெட், பம்பாய் 2. லோகல் ரீடைல் ஸ்டோர்: 216, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோட், மதறாஸ்
KMS-102 TAMIL

மற்றும் ஒரு சிறந்த பிஸ்கோத்து

பிரிட்டானியா...

Glaxo

கிளாக்ஸோ பிஸ்கோத்துகள்

இவை உலகப்பிரசித்தி பெற்ற பாலுணவான கிளாக்ஸோ வின் புஷ்டியான போஷாக்கு சத்து முழுவதும் அடங்கி யிருக்கும்படி தயாரிக்கப்பட்டு, உபரிவிடமின்களும் சேர்க்கப் பட்டவை.

FBMI
FEDERATION OF BISCUIT MANUFACTURERS OF INDIA

BBX-11 TM



அலுப்பு மனிதனை வெல்கிறது

தேநீர்

அலுப்பை
வெல்கிறது

PSTB 126

தேயிலை போர்டு வெளியிட்டது

OUR HEARTY GREETINGS TO ALL OUR CUSTOMERS
AND WELL WISHERS ON THIS HAPPY

DEEPAVALI DAY

FOR BEST BOOK WORK ON MONO MACHINES, EXCELLENT COLOUR WORKS, CALENDARS, SOUVENIRS, SHOW CARDS, Labels, and other Commercial Requisites.

Contact :

PHONE: 3649

SOLAR WORKS,

12, Thambu Chetty Street,

MADRAS.

நின்றுபோன மாதவிடாய்

நிகரற்ற மருந்து (*"தேவி பில்ஸ்"* REGD. No. CDL/688)

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாயை அதிக சுலபமாக தவறாமல் உடனே வெளியாக்கும். அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம். உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8–8–0. மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10–8–0 (தபால் சிலவு தனி)



கர்ப்பத் தடை

நிகரற்ற மருந்து (*"ஸ்பெக் பில்ஸ்"* REGD. No. 266)

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத் தடுக்கும் மாதவிடாய் தவறாது. அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். பில்ஸ் விலை ரூ. 12–0–0 (தபால் சிலவு தனி)

SEENU & Co., Post Box No. 1638, Madras-1

பிராஞ்ச்: 134, Sarangoon Road, Singapore.

தீபாவளி திகழ
புதிய 1100
பியட்
★ வசதியாக உட்கார இடம்
★ நவீன அமைப்பும், நீடித்த உழைப்பும்
★ பிரயாண சாமான்களுக்கு போதிய வசதி
★ குறைந்த சிலவில் சிறந்த பிரயாணம்
டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ் லிமிடெட்.
மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, புதுக்கோட்டை, சேலம்.
சுந்தரம் மோட்டார்ஸ் லிமிடெட்.
மவுண்ட் ரோடு, சென்னை - 6
T.V.S.Z-52

காவேரி

ஜய மலர் 14 | பொருள் அடக்கம் | ஐப்பசி இதழ் 3

குடந்தைக் கல்லூரி நூற்றாண்டு விழா		... 7
காளிந்தியின் கோபம்	நாகு	... 8
மரம் தரும் சர்க்கரை	நா. கி. நாகராசன்	... 17
எகிப்து நாட்டிலே	கே. ஸ்ரீநிவாஸன்	... 20
அமரத்வம் (தொடர் கதை)	எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்	... 27
வேஷக்காரிகள்	காந்தா	... 35
விஞ்ஞானத் துணுக்குகள்	நா. கி. நாகராசன்	... 41
சித்தன்ன வாசல் (தொடர்கதை)	அ. ராம்கோபால்	... 45
உங்கள் எதிர்காலம்	எஸ். பி. பி. எஸ்.	... 55
அலை கடலிலே	சுனஜா	... 59
சினிமாப் பேச்சு	எஸ். கண்ணன்	... 63
வெற்றியும் தோல்வியும் (தொடர் கதை)	ஜி. எஸ். மணி	... 71
டில்லித் தபால்	கே. ஸ்ரீநிவாஸன்	... 82
சந்தேக விளக்கம்	எஸ். பி. ராமகிருஷ்ணன்	... 85

குறிப்பு:

'காவேரி'யில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதினவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

Tele { Grams : "PRINTHOUSE"
Phone : 4037..............

Quality- Printing & Block Making

CONTACT:

COMMERCIAL PRINTING & PUBLISHING HOUSE

[Props. South India Corporation (Madras) Ltd.]

Post Box No. 1569

46, ARMENIAN STREET - MADRAS-1.

The pride of ownership

சொந்த உடைமையில் பெருமை

சொந்த உடைமையில் சகஜமாகவே பெருமை உணர்ச்சியிருக்கும். அதுவும் "ஆர்ம்ஸ்டிராங்" சைக்கிள் விஷயத்தில் பெருமை அதிக மாகவே காணப்படும். ஏனெனில் அது உங்கள் தோழ கைவேயிருந்து துரிதமான சவாரி இன்பத்துடன் குறித்த நேரத்தில் அலுவல்களைக் கவனிக்க உதவி, அதன் பெருமையை ஞாபகப்படுத்திக்கொண்டே இருக்கும்.



ARMSTRONG

THE BETTER BICYCLE.

ARMSTRONG
THE BETTER BICYCLE
ARMSTRONG CYCLES Ltd
BIRMINGHAM

DISTRIBUTORS:-

ROYAL CYCLE & MOTOR CO.,

13/14. BROADWAY, MADRAS-I.

BRANCH.

THE PIONEER CYCLE HOUSE,

47/49. WEST TOWER STREET, MADURAI.

HZ-22

காவேரி

ஜய-ஹு மலர் 14	"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் — கலைச் செல்வங்கள் யாவும்கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" – பாரதியார்	ஐப்பசி இதழ் 3

குடந்தைக் கல்லூரி நூற்றாண்டு விழா

சென்ற வாரம் குடந்தை அரசினர் கல்லூரி நூற்றாண்டு விழா குதூகலமாகக் கொண்டாடப்பட்டது. இது 1854ல் சாதாரணப் பள்ளியாக ஆரம்பிக்கப்பெற்று, 1867ல் கல்லூரியாக மாறி இன்றுவரை ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குக் கல்வி பயில்விப்பதோடு, உயரிய லக்ஷியங்களை உணர்த்தி வந்திருக்கிறது.

கல்லூரியின் கடமை ஞானம் உண்டாக்குவது மட்டுமன்று; சிந்தனை சக்தியைப் பெருகச்செய்வதோடு, மாணவர்களின் உள்ளக் கிளர்ச்சிகளை ஒருவகைப்படுத்தி, லக்ஷியப்பாதையில் நடக்கத் தூண்டுவதுதான் அதன் லக்ஷியம். கல்லூரி வெறும் புத்தி அல்லது உடற் பயிற்சிச் சாலையன்று. மாணவர்கள் கல்வி பயிலுவதோடு தங்கள் பண்பையும் நடத்தையையும் பாங்குபெறச் செய்துகொள்வதே கல்லூரிப் படிப்பின் குறிக்கோள். நாட்டின் எதிர்காலத் தலைவர்களை, அறிஞர்களை, நிர்வாகஸ்தர்களைத் தயாரிப்பதும் அதன் நோக்காக இருந்துவந்திருக்கிறது.

இந்த விதிப்படி பார்த்தால் குடந்தைக் கல்லூரி அரும் பெரும் சேவை செய்திருக்கிறது என்பதை நாம் மறுக்கமுடியாது. மேதைகளும், பாஷா நிபுணர்களும், நிர்வாகஸ்தர்களும் இதில் பயின்று நாட்டிற்குப் புகழை ஈந்துள்ளார்கள். ஆங்கிலேயர்களுக்குச் சரிநிகராகப் பதவி வகித்துள்ளார்கள்.

ஆயினும் ஒரு குறை, தேச விடுதலைப் போராட்டத்தில், இயக்கத்தில், பெரும் தலைவர்கள் பலருள் ஒருவரேனும் இக்கல்லூரியினின்று வெளிவரவில்லை என்ற வருத்தம்தான் தோன்றுகிறது. ஆனால் இது இழுக்கன்று, குறையே.

விழாவில் கலந்துகொண்ட பல அறிஞர்கள் கல்லூரிப் படிப்பின் எதிர்காலத்தைப்பற்றிப் பல அபிப்பிராயங்கள் தெரிவித்தனர். தாய் மொழியிலேயே மேல் கல்வியும் கற்றல் வேண்டுமென்று ஒரு கல்வி மந்திரி குறிப்பிட்டார்.

உயர்தரக் கல்வி பயின்றவனின் எதிர்காலம் வேறு. அவன் நாடு முழுவதும் சுற்றி வேலை ஏற்க நேரிடலாம். அவனுடைய ஞானம் எல்லோருக்கும் பயன்படக்கூடிய வகையில் அமைதல் வேண்டும், மொழி வளர்ச்சிக்கு அவனுடைய கல்வியைப் பணயம் வைக்கலாகாது. மொழியைக் கடந்து பன்மொழிகளிலிருந்து ஞானம் பெற்று, தன் அனுபவத்தை அவன் நாட்டு மக்களுக்கு அளித்தல்வேண்டும். எனவே உயர்தரப் படிப்பிற்குத் தாய்ப் மொழி மூலம் கற்பது அவசியம் என்று கொள்ளுதல் தவறு. கல்வி பயில ஆரம்பிக்கையில் அன்னிய மொழி மூலம் எல்லாப் பாடங்களையும் உணர்வது, அதுவும் இளம் வயதில், கடினமான காரியம் என்பதை உணர்ந்து, தாய் மொழியிலேயே கல்வி பயிலும் திட்டத்தை அமுலுக்குக்கொண்டு வந்துள்ளார்கள். மாணவன் புத்தி தேர்ச்சி அடைந்த பின்னும், தாய் மொழி மூலம்தான் கற்கவேண்டுமென்று மொழிவது அவனுக்கே தீங்கிழைப்பதாகும். பல்வேறு தாய்மொழிகள் அமைந்துள்ள இந்நாட்டில் மேல் படிப்புப் படிப்பவர்கள் தனித் தனியே தம் பாஷையில் முற்றிலும் பயிலுவது எவ்வகையில் அவர்களுக்கு எதிர் காலத்தில் நன்மை பயக்கும் என்பதை சிந்தித்துணர வேண்டுகிறோம். நாள் தோறும் வளர்ந்து கொண்டே வரும் நவீன ஆராய்ச்சிகளைக் கற்றுணர ஆங்கிலம் போல் வேறு சாதனம் கிடையாது. தாய் மொழி மூலம் இவ் அனைத்தையும் தெரிந்துகொள்வது கடினம்.

இன்னும் பல்வேறு விஷயங்கள் விவாதிக்கக் கூடியவை, முடிவுகாணவேண்டியவை இருக்கின்றன. தீர்க்க தரிசனத்துடன் ஆலோசிக்க வேண்டியவை அநேகம். இதில் அவசரப்பட்டு முடிவுகாண்பது ஆபத்தில் கொண்டுபோய்விடும். ஆயினும் எல்லோரும் சிந்திக்கவேண்டிய பிரச்னைகளே இவை.

நூறு வருடம் கல்வி பயிற்றுவித்த பிறகு திரும்பிப்பார்த்து நாம் சாதித்தது சாதிக்கவேண்டியது எல்லாவற்றையும் ஆராய்வது முறையே. குடந்தைக் கல்லூரி ஜோதிப் பிழம்பாய் எதிர்காலத்தில் திகழ்வதோடு நாட்டின் ஞான ஊற்றாகவும் விளங்க வேண்டுமென்று இறைவனை வேண்டுவோமாக. இதைக் குறிக்கோளாகக்கொண்டு மாணவர்களும் ஆசிரியர்களும் உழைப்பார்களாக.

குடந்தைக் கல்லூரி ஒரு பகுதியின் வசிகரத் தோற்றமே நம் அட்டைப்படத்தை அலங்கரிப்பது.

காளிந்தியின் கோபம்

நாகு

அன்று தீபாவளி. நம்மூர் இரட்டை மாட்டு வண்டியைப்போல் இரண்டு குதிரைகள் பூட்டப்பட்ட குதிரை வண்டி அந்த ரஸ்தாவில் மெதுவாகப்போய்க்கொண்டு இருந்தது.

"ஏ, டாங்காவாலா! ஜரா ஜல்தி ஜாவ் பாய்!" என்று குதிரை வண்டிக்காரனுக்கு உத்தரவிட்டேன், வண்டியிலிருந்த நான்.

"அபி தேக்கியே ஸாப்! யே தூபான்மேல் ஹை, தூபான் மேல்!" என்று பகர்ந்துவிட்டு, இரண்டு குதிரைகளுக்கும் அவன் இரண்டு சவுக்கடி கொடுத்தான். குதிரைகள் நான்கு கால் பாய்ச்சலில் கிளம்பிவிட்டன, அவை ஓடிய ஓட்டத்தில் வண்டி எங்கே குடை சாய்ந்துவிடுமோ என்றுகூட எனக்குப் பீதி ஏற்பட்டது.

அந்தச் சாலையின் இரு புறமும் பச்சைப் பசேலென்று பசுமை காணப்பட்டது. தொலைவிலிருந்த மலைகளைப் பனிப் படலம் திரையிட்டு மூடி இருந்தது. அந்தப் படலத்தைக் கீறிக்கொண்டு காலைக் கதிரவனின் பொன்னிறக் கிரணங்கள் பாய்ந்தோடி வந்தன. அன்று தீபாவளி தினமாகையால், இங்குமங்குமாக யானை வெடி, குதிரை வெடி, 'ஆட்டம் பாம்' முதலிய பயங்கர வெடிகள் வெடித்து அப் பிராந்தியத்தையே அதிரச் செய்தன. மற்றப் படி அமைதியே குடி கொண்டிருந்த அந்தப் பிரதேசத்தில், காலை நேரத்தில், குதிரை வண்டியில் நான் சவாரி செய்தபோது, என் மனம் சொல்லொணுக் குதூகலம் அடைந்தது. அத்துடன், அதி சீக்கிரமே பேஸின் கோட்டையைப் பார்க்கப் போகிறோம் என்கிற ஆனந்தத்தில் என் உள்ளம் புளகாங்கிதம் அடைந்தது.

"தீபாவளியும் அதுவுமாகப் பேஸின் கோட்டையைப் பார்க்க ஏன் ஐயா கிளம்பிவிட்டீர்?" என்று நீங்கள் கேட்கலாம். அதற்குக் காரணங்கள் இருந்தன. முதலாவது, நான் பம்பாய்க்கு வந்து பத்து வருஷங்களாகியும் பேஸின் கோட்டை என் வீட்டிலிருந்து இருபது மைல் தூரத்தில்தான் இருந்தும்—அதை நான் இது வரை பார்க்காமல் இருந்தது; இரண்டாவது காரணம், புதிதாகப் பம்பாய்க்கு வரும் என் உறவினர்களும், நண்பர்களும் பேஸின் கோட்டையைப்பற்றி என்னை ஒவ்வொருதடவையும் விசாரித்த போதும் நான் அதைப்பற்றிச் சரியாகச் சொல்லத் தெரியாமல் கைகளைப் பிசைந்து முழிக்கத் தொடங்கியது; தீபாவளி என்று கூடப் பாராமல் அதைக் கண்டுவிட்டுத் தான் மறு ஜோலியைக் கவனிப்பது என்று நான் தீர்மானம் செய்யும் நிலைமைக்கு என்னை விரட்டிய மூன்ருவது முக்யமான காரணம், மூன்று மாதங்களுக்கு முன் நான் ஒரு வெளி

நாட்டவரிடம் இக்கோட்டை விஷயமாகப் பேசி, அகப்பட்டு அவமானப்பட்டது. முதலில் அது எப்படி நேர்ந்தது என்பதைச் சொல்லுகிறேன்.

சென்னையிலிருந்து பம்பாய்க்கு வந்த என் நண்பன் ஒருவனை வரவேற்பதற்காக நான் விக்டோரியா டர்மினஸ் ஸ்டேஷனுக்குச் சென்றிருந்தேன். வண்டி வருவதற்கு அரை மணி நேரம் இருந்தது. ஆகையால் ப்ளாட் பாரத்தில் காலியாகக் கிடந்த ஒரு பெஞ்சின் மேல் உட்கார்ந்தேன். சில நிமிஷங்களுக்குப் பின், அதே பெஞ்சில் என்னருகில் ஒரு வெள்ளைக்காரர் வந்து உட்கார்ந்தார். அவருடைய உடைகளைப் பார்த்தபோது அவர் ஒரு உல்லாஸ யாத்ரீகரைப் போல் காணப்பட்டார். சீக்கிரமே எங்கள் இருவர்களிடையில் சம்பாஷணை தொடர்ந்தது.

"மிஸ்டர்" என்றார் அவர். "ஏன்"? என்றேன் நான்.

"நீங்கள் பம்பாய்க்காரர்தானா?"

"ஆம்; உங்களுக்கு என்ன வேண்டும்?"

"உங்கள் நாட்டைச் சுற்றிப் பார்ப்பதற்காக அமெரிக்காவிலிருந்து அறுபது பேர் கோஷ்டி ஒன்று நேற்றைய கப்பலில் பம்பாய்க்கு வந்திருக்கிறதே, அதைப்பற்றித்தெரியுமா உங்களுக்கு?"

"பேஷாகத்தெரியும்: காலையில்தான் பேப்பரில் படித்தேன்".

"அந்தக் கோஷ்டியில் நானும் ஒருவன். இப்பொழுது சொல்லுங்கள், பேஸின் கோட்டை எங்கே இருக்கிறது?"

"பேஸின் கோட்டையா?... இங்கிருந்து சர்ச்கேட் ஸ்டேஷனுக்குச்சென்று, மின்சார ரயிலில் ஏறி, பேஸின் ரோட் ஸ்டேஷனில் இறங்குங்கள். அங்கிருந்து குதிரை வண்டியிலோ... அல்லது... பஸ்ஸிலோ செல்லவேண்டும் போலிருக்கிறது..."

"எதில் என்று உங்களுக்கு நிச்சயமாகத் தெரியாதா?"

"தெரியாது: நான் போனதில்லை"

"சரி, பேஸின் ரோட் ஸ்டேஷனிலிருந்து கோட்டைக்கு எத்தனை மைல் இருக்கும்?"

மௌனம்

"அதுபோகட்டும்: அங்கே பார்க்கும்படியான என்ன விசேஷம் இருக்கிறது? அக்கோட்டை எதனால் பிரஸித்தம் என்றாவது உங்களால் சொல்லமுடியுமா?"

"ஏதடா, இவர் விடமாட்டார் போலிருக்கிறதே" என்று நினைத்து, 'அதைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது; தயவு செய்து அந்த ஸ்டேஷன் மாஸ்டரையே விசாரியுங்கள்' என்று சொல்லிப் பேச்சை அங்கேயே வெட்டினேன்.

"சரி, ரொம்ப வந்தனம்" என்று கூறிவிட்டு, சிறிது தயங்கிய பிறகு, ,அக்கோட்டையைப் பற்றி வெளி நாட்டானாகிய எனக்கு எவ்வளவு தெரிந்திருக்கிறதோ அவ்வளவே தான் உள்ளூர்க்காரராகிய உங்களுக்கும் தெரிந்திருக்கிறது" என்று குறும்பாகச் சுட்டிக் காட்டிச் சிரித்தார். அந்த ஏளனச் சிரிப்பு என் உடலை நடுங்க வைத்தது. வெட்கம் பிடுங்கித் தின்னத் தொடங்கியது. ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து இந்தியாவின் பெருமையை அறிந்து, சரித்திரப் பிரஸித்திபெற்ற இடங்களைப்பார்க்க, நம் நாட்டுக்கு அவர்கள் வருகிறார்கள். ஆனால் நானோ பத்து வருஷங்களாகப் பம்பாயில் இருந்து கொண்டே அருகிலிருந்த ஒரு பிரசித்தமான இடத்தைப் பார்க்கவில்லை என்றால் அதைவிட வெட்கப்படவேண்டிய விஷயம் வேறு என்ன இருக்கமுடியும்? ஆகவே எப்படியும் பேஸின் கோட்டையைப் பார்த்துவிடுவதென்று அந்த க்ஷணமே தீர்மானித்துவிட்டேன்.

பம்பாய் எக்ஸ்பிரஸில் வந்துசேர்ந்த என் நண்பனை அழைத்துக்கொண்டு வீடு சென்றேன். அன்று சாயங்காலம் என் நண்பர்கள் சிலரை அழைத்து, பேஸின் கோட்டையைப் பார்ப்பது விஷயமாக அபிப்பிராயம் கேட்டேன். அப்போது மழைக்காலம். ஆகையால் அங்குச் செல்லும் பாதையெல்லாம் சேறும் சகதியுமாக இருக்குமென்றும், கோட்டையைப் பார்த்து ரஸிப்பதற்கு அது சரியான சமயமல்லவென்றும், மழைக்காலம் முடிந்தபிறகு அதைப் பார்க்கலாம் என்றும் அவர்கள் புத்திமதி அளித்தார்கள். அவர்கள் சொல்வதில் உண்மை இருக்கவே மழைக்காலம் எப்போது முடியும் என்று காத்துக் கொண்டிருந்தேன், ஆனால் இவ்வருஷம் அது எதிர்பாராதவிதமாக நீண்டுகொண்டே போய், தீபாவளிக்குப் பத்துநாள் இருக்கும் வரையில் மழை பொழிந்து கொண்டிருந்தது. மழை நின்றதும் முதல் முதலாகக் கிடைத்த விடுமுறை தீபாவளியின் போதுதான். ஆகையால் தான் தீபாவளியன்று, நண்பர்கள் வரமுடியாமல் இருந்ததைக்கூட லக்ஷியம் செய்யாமல், தன்னந்தனியாகவே நான் பேஸின் கோட்டையைப் பார்க்கக் கிளம்பிவிட்டேன்.

வஸயீ கோட்டை எனப்படும் பேஸின் கோட்டைக்குப் பம்பாய்க்கு முப்பத்துமூன்று மைல் தூரத்திலுள்ள பேஸின் ரோட் ஸ்டேஷனில் இறங்கி, சுமார் ஐந்து மைல் தூரம் செல்லவேண்டும். நாலரைமைல் வரையில் நேர்த்தியான காங்க்ரீட் ரஸ்தா போடப்பட்டிருக்கிறது. அது வரை பஸ்கள் ஜம்மென்று ஓடுகின்றன. அங்கி

ருந்து அரைமைல் தூரம் நாட்டு ரஸ்தாவில் சென்றால் பேஸின் கோட்டை தென்படும்.

அக்கோட்டை சமுத்திரக் கரையில் கருங்கல்லில் கட்டப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அதன் ஒரு பகுதி இடிந்து பாழடைந்து, மரம் செடி கொடிகள் முளைத்துக் கிடந்தாலும் அந்தக்காலத்தில் அது உன்னதமான நிலையில் இருந்திருக்க வேண்டும் என்பது நன்றாகப் புலனாகிறது. நீல வானத்துக்கடியில், ஒருபுறம் கண்ணுக்கெட்டிய வரையில் நீலக்கடலும் மறுபுறம் பச்சைப் போர்வை போர்த்தது போன்ற குன்றுகளும் காவல் புரியக் கம்பீரமாக நிற்கிறது பேஸின் கோட்டை. அந்த ரமணீயமான பிரதேசம் கண்களுக்குத் தெவிட்டாத விருந்தை அளிக்கிறது. அக்கோட்டை தசகோண உருவத்தில் அமைந்திருக்கிறது. கோட்டைச் சுவர் முப்பது முப்பத்தைந்து அடி உயரம் உள்ளது, மேற்கிலுள்ள சுவர் ஐம்பது அடி அகலமும், மற்றப் பக்கங்களிலுள்ள சுவர்கள் ஐந்து அடி அகலமும் உள்ளன. மேற்குக் கோட்டைச் சுவரில் ஒரு ரகசிய வாசலும், தெற்குச் சுவரில் இரண்டு ரகசிய வாசல்களும் ஆபத்துக் காலங்களில் வெளியேறுவதற்காகக் கட்டப்பட்டிருக்கின்றன.

அக்கோட்டையின் சரித்திர வரலாற்றையும் அங்கே சென்றதும் அறிந்துகொண்டேன். கி. பி. 1526 முதல் கி. பி. 1537 வரையில் பஹாதூர் ஷா குஜராத்தின் சுல்தானாக இருந்தார். அப்போது போர்த்துகீஸியப் படையெடுப்புகளைத் தடுப்பதற்காகப் பேஸின் டவுனைச் சுற்றி ஒரு பலமான கோட்டையைக் கட்டும்படி, தீவ் என்னுமிடத்தில் கவர்னராக இருந்த மலிக் துகன் என்பவருக்கு, கி. பி. 1532-ல் சுல்தான் கட்டளையிட்டார். அப்படியிருந்தும் போர்த்துகீஸிய படையெடுப்புகள் நிற்கவில்லை. அதே சமயம் பார்த்து ஹுமாயூன் சக்ரவர்த்தியும் குஜராத்தியின் மேல் படையெடுக்கத் திட்டமிட்டிருந்தார். ஆகவே இந்த இரு முனைகளிலும் போர் புரிவதைத் தவிர்ப்பதற்காக, கி. பி. 1534-ல் குஜராத் சுல்தான் அக்கோட்டையைப் போர்த்துகீஸியர் வசம் ஒப்படைத்தார். அன்று முதல் கி. பி. 1739 வரையில்—அதாவது மகாராஷ்டிரர்கள் அக்கோட்டையைக் கைப்பற்றிய வரையில்—அது போர்த்துகீஸியர் வசம் இருந்தது. அப்போது அவர்கள் பேஸினில் மாதாகோவில்கள், கிறிஸ்தவ மடங்கள், அனாதை ஆசிரமங்கள் முதலிய அழகான பல கட்டடங்கள் கட்டி, அந்நகரைச் சிறப்பித்தார்கள். கி. பி. 1739-ல் பேஷ்வா முதலாவது பாஜி ராவின் சகோதரரான ஸ்ரீமந்த் சிமாஜி அப்பா பேஸின் கோட்டையை முற்றுகையிட்டு, அதை மூன்றே மாதக் காலத்துக்குள் கைப்பற்றியும்விட்டார். அப்போது நடந்த அதி கோரமான போரில் மகாராஷ்டிரர்கள் போர்த்துகீஸியரை நன்றாக வெளுத்துக் கட்டினார்கள். அதே போரில்தான் போர்த்துகீஸிய ஜெனரலான ஸில்வைரா த மின்ஸிஸ் கொல்லப்பட்டார். பிறகு கி. பி. 1802ல், பேஸின் ஒப்பந்தப்படி, மஹாராஷ்டிரர்கள் அந்நகரைப் பிரிட்டிஷாரிடம் ஒப்படைத்தார்கள். கி. பி, 1818ல் அது பம்பாய் மாகாணத்துடன் சேர்க்கப்பட்டது. இவ்வாறு நானூறு வருஷங்களுக்கு முன்னால் கட்டப்பட்ட அப்புராதனக்கோட்டை ஹிந்து, முஸ்லீம். போர்த்துகீஸ், ஆங்கிலேயர்கள் ஆகிய நான்கு ஆட்சிகளைக் கண்டிருக்கிறது.

இப்படிச் சரித்திர மகத்துவம் வாய்ந்த அக்கோட்டையில் ஒரு இடம் விடாமல் எல்லாவற்றையும் நன்றாகச் சுற்றிப்பார்த்தேன். அப்பொழுது அங்கே என்னைத் தவிர வேறு யாருமே இருக்கவில்லை. நாற்புறமும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. சிறிது நேரம் அதன் கட்டட அழகையும் அக்கால கட்டட நிபுணர்களின் அபார திறமையையும் கண்டுவியந்தபிறகு, 'போகலாம்' என்று திரும்பினேன். ஆனால் திடீரென்று எங்கிருந்தோ வந்த அதி பயங்கரமான அலறும் குரல் என்னைத் திடுக்கிடவைத்தது. என் சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது. ஒருகால் அது மடிந்து போன போர்த்துகீஸிய ஜெனரலின் ஆவியாக இருக்கலாமோ! கத்திமுனை சாதிக்கமுடியாத காரியத்தைப் பேனா முனை சாதித்துவிடும் என்பது உலகறிந்த உண்மை. இதனால் கத்திவீரரைவிடப் பேனாவீரர் பராக்கிரமசாலி என்று ஆகிறதல்லவா? ஆகையால் ஒரு வேளை என்னைக் கண்டுதான் போர்த்துகீஸிய ஜெனரலின் ஆவி அஞ்சி அலறியதோ என்று சந்தேகப் பட்டேன். தவிர, போர்த்துகீஸியர் இந்தியாவிலிருந்து வெளியேறவேண்டுமென்று நான் பலதடவை சமீபத்தில்தாக்கி எழுதியிருக்கிறேன். அப்படித்தாக்கி எழுதிய அதே பேனா அப்போது என் பையில் இருந்தது. ஒருகால் அப்பேனாவைக் கண்டு தான் அந்த ஆவி கூவியதா என்ற சந்தேகமும் எழாமலில்லை. எதற்கும் தைரியத்தைக் கைவிடாமல் நாற்புறமும் திரும்பிப் பார்த்தேன். அப்போது அங்கே தூரத்தில் ஒரு வாலிபன் வருவது தெரிந்தது. உடனே அவனை அருகே வரும்படி உரக்கக்கூவி அழைத்தேன். அவனும் வந்தான். மறுபடியும் அதே அலறும் குரல் கேட்டது. 'இது என்னப்பா குரல்?' என்று நான் அவனைக் கேட்டேன். 'வாருங்கள் காண்பிக்கிறேன்' என்று கூறி அங்கே குகையைப்போல் இருந்த ஒரு இடத்தை நோக்கி நடந்தான். நானும் நிழலைப்போல் அவனைப் பின்தொடர்ந்தேன். குகை சிறிது இருட்டாகக் காணப்பட்டது. அவன் தைரியமாக உள்ளே நுழைந்து என்னையும் வரும்படி அழைத்தான்: நான் சிறிது தயங்கினேன். 'அஞ்சாதீர்கள், என் கூடவே வாருங்கள்' என்று அவன் தைரியமூட்டினான். நான் ஒரு இயந்திரத்தைப்போல் குகையில் நுழைந்தேன். அலறும் குரல் சமீபத்தில் இன்னும் உக்கிரமாகக் கேட்க ஆரம்பித்தது. அதைக் கேட்டதும் என் துடைகள் நடுங்கவில்லை; கைகள் மட்டும் நடுங்கத் தொடங்கின. இதைக்கண்ட வாலிபன் என்

கரங்களைப் பற்றி, கரகர வென்று உள்ளே இழுத்துச் சென்றான். என் நெஞ்சம் திக் திக்கென்று அடித்துக்கொண்டது. என் குலதெய்வத்தை மனதில் தியானம் செய்துகொண்டே எமன் வாயில் செல்லுவதுபோல் நான் அவன் பின்னால் சென்றேன். 'இதோ பாருங்கள்' என்று சொல்லி அவன் ஒரு மூலையைக் காட்டினான். சுவரிலிருந்த வெடிப்பின் மூலம் சிறிது வெளிச்சம் வந்துகொண்டிருந்ததால் அவன் காட்டிய இடத்தைப் பார்க்கமுடிந்தது. அங்கே தாடி மீசையுடன் கிழிந்த உடையணிந்த பயங்கர ரூபமுடைய ஒரு கிழவர் உட்கார்ந்திருந்தார். அவருக்கு வயது சுமார் அறுபது இருக்கலாம். "இவர் ஏனப்பா இங்கிருக்கிறார்? இவர் யார்?" என்று கேட்டேன் கூடவந்த வாலிபனிடம். "'இவரை எல்லோரும் பாபா' என்று அழைக்கிறார்கள்" என்று பதிலளித்தான் அவன். அவரைப் பார்க்க எனக்குப் பயமாக இருந்ததோடு பரிதாபமாகவும் இருந்தது. "இவர் எதற்காக இப்படிக் கத்துகிறார்? ஏதாவது தீராத வியாதியா?" என்று வினவினேன். "வியாதி ஒன்றுமில்லை; இவருக்குப் பைத்தியம்" என்று என் காதண்டை மெதுவாகச் சொன்னான். "அடப் பாவமே, அருகிலுள்ள டாணா ஜில்லாவில் பிரபலமான ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரி இருக்கிறதே, அங்கே இவரை அழைத்துச் சென்றால், வியாதி சொஸ்தமாகுமே" என்று நான் யோசனை சொல்லி முடிப்பதற்குள், "அது முடியாத காரியம்; இதுமாதிரி எத்தனையோ பேர்கள் சொல்லியிருக்கிறார்கள்" என்றான் அவன். "ஏன்?" என்று சிரத்தையுடன் நான் கேட்டதற்கு," அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று, உயிர் போனாலும் பாபா இந்தக் கோட்டையை விட்டு வெளியே செல்லமாட்டார், இரண்டாவது இந்தப் பைத்தியம் தெய்வத்தின் சாபத்தால் ஏற்பட்டது. ஆகையால் அதை மருந்துகளால் குணமாக்க முடியாது" என்று கூறினான்,

"அதென்னப்பா தெய்வத்தின் சாபம். அவர் ஏன் இக்கோட்டையை விட்டு நகரமாட்டார்; இக்கோட்டைக்கும் இவருக்கும் ஏதாவது சம்பந்தமுண்டா?" என்று ஆவலாகக் கேள்விமேல் கேள்விகளை அடுக்கினேன்.

"அது ஒரு பெரிய கதைங்க" என்றான் அவன். "பெரிய கதையைக் கேட்க எனக்கு இப்போது அவகாசமில்லை; அந்தக் கதையையே கொஞ்சம் சுருக்கமாகச் சொல்" என்றேன் நான், இதேமாதிரி இன்னொரு பயங்கரக் குரலைக் கேட்பதற்கு முன்னால் அங்கிருந்து நடையைக் கட்டவேண்டும் என்கிற எண்ணத்தில்.

"சரி, கேளுங்க" என்று சொல்லி, அங்கிருந்த ஒரு இடிந்த மேடையின்மேல் அவன் ஏறி உட்கார்ந்தான். நானும் அவன் அருகில் உட்கார்ந்தேன்.

அவன் சொல்ல ஆரம்பித்தான்.

இக்கோட்டைக்கு அந்நாளில் காளிந்தியம்மன் கோட்டை என்று பெயர். ஏனென்றால் இக்கோட்டை காளிந்தியம்மன் கோயிலைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது. அப்போது பேஷ்வாக்களின் ஆட்சி நடந்துவந்தது. அந்தப் பேஷ்வாவின் சைனியத்தில் நாராயண்ராவ் ஷிந்தே, மஹாதேவ் போன்ஸ்லே என்று இரு போர்வீரர்கள் இருந்தார்கள். அவர்கள் க்ஷத்திரியர்கள். ஒரு நாள் நாராயண்ராவ் ஷிந்தே உளவறிவதற்காகப் போர்த்துகீஸியரின் முகாமுக்குள் சென்றிருந்தபோது, பணத்தாசை பிடித்த மஹாதேவ் போன்ஸ்லே போர்த்துகீஸியரிடமிருந்து பணம் வாங்கிக்கொண்டு நாராயணராவ் ஷிந்தேயைக் காட்டிக்கொடுத்துவிட்டான். எதிரிகள் ஷிந்தேயைச் சித்திரவதைக் குள்ளாக்கினர். அவரிடமிருந்து உண்மையைத் தெரிந்துகொள்ள எவ்வளவோ முயற்சித்தார்கள் அவர்கள். ஆனால் வீர க்ஷத்திரியரான ஷிந்தே, 'உயிர் போனாலும் தாய் நாட்டைக் காட்டிக் கொடுப்பதில்லை; ராஜத்துரோகம் செய்வதில்லை' என்று வாயைத் திறக்காமல் இருந்தார். கடைசியில் ஒன்றும் பயன்படாமல் போகவே எதிரிகள் அவரை விடுவித்துவிட்டார்கள். போன்ஸ்லேதான் தம்மை எதிரிகளிடம் காட்டிக் கொடுத்துவிட்டான் என்பது ஷிந்தேக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அன்று முதல் அந்த இருவர்களிடையில் ஜன்மப் பகை ஏற்பட்டது.

ஷிந்தேக்கு ஒரு ஆண் மகனும் ஒரு அழகிய பெண்ணும் இருந்தனர். பெண்ணின் பெயர் அஞ்சனி. அங்கே சுற்று வட்டாரத்தில் இருந்த மக்கள் அனைவரும் அஞ்சனியின் ரூப லாவண்யத்தை அப்ஸரஸ்களுடன் ஒப்பிட்டார்கள். அவளுடைய திடகாத்திர தேகக் கட்டும், அதை மேலும் அலங்கரித்த நகை நட்டும், அக்கண்களிலே இருந்த மின் வெட்டும், அவளுடைய உடலை அணைத்திருந்த ஜரிகைப் பட்டும், சிவந்த நெற்றியிலே சோபிதமான திலகப் பொட்டும் கண்டு, அவள் ஒரு கந்தர்வ கன்னிகையோ, தங்கப் பதுமையோ அல்லது சிங்கார சித்திரமோ என்று எண்ணி எல்லோரும் வியந்தனர்.

அப்படிப்பட்ட சுந்தரவதனியின் கண்களுக்கு மன்மதனைப் பட்டான் பிரபாகர். ஆனால் பிரபாகர் துரதிர்ஷ்டவசமாக, போன்ஸ்லேயின் மகனாக இருந்தான். இவ்வாறு ஜன்ம விரோதிகளின் மகனும் மகளும் ஒருவரையொருவர் காதலித்து வருவது ஒரு விந்தையாகவே எல்லோருக்கும் தோன்றியது. அதைப்பற்றி ஊர் மக்களிடையில் பேச்சு வார்த்தை வளர்ந்து கொண்டேபோய், கடைசியில் ஒரு நாள் ஷிந்தேயின் காதுகளையும் அது எட்டி விட்

டது. இந்தக் காதல் விஷயத்தைத் தன்மானமுள்ள எந்தத் தந்தை தான் சகித்துக் கொள்வார்? இதை விட மானக் கேடான விஷயம் வேறு என்ன தான் இருக்க முடியும்? ஊராரின் பேச்சு ஷிந்தேயின் மனதை வாட்டியது. அவருடைய தலை சுற்றத் தொடங்கியது. 'மானத்தைக் காக்க என் மகளை வாளால் வெட்டி வீழ்த்துவேன்; ஆனால் அந்த வஞ்சகப் பேயின் வம்சத்தில் போக விடமாட்டேன்' என்று சங்கல்பம் செய்து கொண்டார், உடனே தம் மகளைக் கூப்பிட்டனுப்பினார்.

அஞ்சனி உடல் நடுங்க, உள்ளம் பதற அவர் முன் வந்து நின்றாள்.

'அஞ்சனி, இதோ பார்; இன்று முதல் நீ வெளியில் காலடி எடுத்து வைக்கக்கூடாது. அந்தச் சண்டாளனைச் சந்திக்கவும் கூடாது?'

'ஏன் அப்பா? அவரை ஏன் சண்டாளன் என்கிறீர்கள்? உங்களுக்கு அவர் என்ன கெடுதல் செய்தார்? அவர் என்னைத் தன் உயிரை விட மேலாக அல்லவா நேசிக்கிறார்!' என்று சிறிது தைரியமாகவே பதிலளித்தாள், சூரருக்குப் பிறந்த வீராங்கனை.

'அவன் செய்வது நேசமல்ல; சுத்த மோசம்... சர்வ நாசம்.'

'எது வேண்டுமானாலும் இருக்கட்டும் அப்பா. எங்கள் இருவருக்குள் உண்மையான காதல் இருக்கும் வரையில் அவர் எப்படி இருந்தாலும் எனக்குக் கவலையில்லை.'

'என்ன, உனக்குக் கவலையில்லையா? வஞ்சகனுக்கா வாழ்க்கைப் படப் போகிறாய்? வைரியின் மகனையா விவாகம் செய்து கொள்ளப் பார்க்கிறாய்? உன் தந்தையைக் காட்டிக்கொடுத்து, தகாத காரியம் செய்தவனின் தனயனுக்கா நீ தாரமாகப் பார்க்கிறாய்? தந்தைக்கே துரோகமா? ஊரார் நம் முகத்தில் காரித் துப்புவார்கள்... இது எங்குமே கேள்விப்படாத ஆச்சரியமாக அல்லவா இருக்கிறது!'

'இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? இதில் என்ன அவமதிப்பு இருக்கிறது? இதில் என்ன அவச் சொல் இருக்கிறது? இதில் என்ன அநீதி இருக்கிறது? உங்கள் சொற்படி அவர் ஒரு வஞ்சகராகவே இருக்கட்டும்; துஷ்டராகவே இருக்கட்டும். அப்படியிருந்தும் அவர் என்னை உண்மையாகவே காதலிக்கிறார். நான் அவரை நேசிக்கிறேன். ராக்ஷஸ ராவணனை மாதுசிரோமணி மண்டோதரி மணக்கவில்லையா? இறைவனை இகழ்ந்து, இளம் பாலகனை இம்சித்த இரக்கமில்லா அரக்கனான இரண்யனுக்கு இதமான இல்லாள் இருக்கவில்லையா? காதல் மட்டும் இருந்தால்...'

'சீ, வாயை மூடு. நிறுத்து உன் பிரசங்கத்தை. போதும் உன் உபதேசம்' என்று ஷிந்தே கர்ஜித்தார்; கோபித்தார்; கண்டித்தார். ஆனால் கர்ஜனையையும் கோபத்தையும் கண்டிப்பையும் கண்டு அஞ்சுமா காதல்? அவர் எவ்வளவுக்கெவ்வளவு தடுக்கப்பார்த்தாரோ அவ்வளவுக்கவ்வளவு அக் காதல் தீ கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. இளம் காதலர்களின் சந்திப்புகள் அதிகரித்தன. ஆனால் ஷிந்தேயா அதைக் கண்டு அஞ்சுபவர்? 'காதலர்களைக் கலைத்துவிடவேண்டும், பிரபாகரைத் தொலைத்துவிடவேண்டும்' என்று அவர் இராப்பகலாகத் திட்டம் போட்டு வந்தார்.

அத் திட்டத்தை நிறைவேற்றுவது எப்படி என்றுதான் அவருக்குத் தெரியவில்லை. ஆனால் அதற்குச் சாதகமாக நிகழ்ந்தது ஒரு சம்பவம். அவ்வூரின் நாட்டாண்மைக்காரர் திடீரென்று மரணமடைந்தார். ஆகையால் அப்பதவிக்கு வேறு ஒருவரை நியமிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்பதவி நியமனத்துக்காக அவ்வூரில் ஒரு பழைய சம்பிரதாயம் இருந்தது. அதாவது, வாள் வித்தையில் வல்லவர்களான வாலிபர்கள் அனைவரையும் கூட்டி, ஒரு போட்டி நடத்திவந்தார்கள். அந்த வாள் போட்டி, மஹாராஷ்டிரர்களுக்குப் புனிதமான தீபாவளி தினத்தன்று, ஊர்த் தெய்வமாகிய காளிந்தியம்மன் கோவிலுக்கு எதிரில் இருந்த மைதானத்தில் நடத்தப்பட்டு வந்தது. அதில் எந்த வாலிபன் வெற்றி பெறுகிறானோ அவனே நாட்டாண்மைக்காரனாக நியமிக்கப்பட்டு வந்தான். இப்போதும் அதுமாதிரி போட்டி ஒன்று நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இச் செய்தி ஊரெங்கும் பறை சாற்றப்பட்டது. தகுதியுள்ள இளம் வாலிபர்களெல்லாம் போட்டிக்குச் சித்தமானார்கள்.

ஷிந்தேயிடம் வாள்வித்தைப் பயிற்சியடைந்த வாலிபன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் வாமன்ராவ் ஹோல்கர். வாளைக் கையாளுவதில் வாமன்ராவ் மஹா சூரன். அந்த வட்டாரத்திலேயே அக்கலையில் அவனுக்கு ஈடில்லை என்றே கருதப்பட்டு வந்தது. அவனுக்கு ஷிந்தேயிடம் மிகுந்த மரியாதையும் குரு பக்தியும் இருந்தன. அவன் என்னதான் வீரனானாலும், குரு பக்தி இருந்தாலும் அவன் ஒரு மானிடன்தானே? அவனுக்குக் குருவின் மகளான அஞ்சனியின்மேல் ஒரு கண் இருந்தது. ஷிந்தே அதையும் அறிந்திருந்தார். நல்லொழுக்கமுள்ளவனும் சாமர்த்தியசாலியுமான அவனைத் தம் மாப்பிள்ளையாகப் பெறுவது தம் பாக்கியம் என்றே அவர் கருதினார். அவர் போட்டிருந்த திட்டத்தை நிறைவேற்றக் கூடியவன் வாமன் ராவ்தான் என்றும் முடிவு செய்தார். ஒரே கல்லால் இரண்டு மாங்காய்களை வீழ்த்தலாம் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டது. இப் போட்டியில் பிரபாகர் எப்படியும் கலந்து கொள்வான் என்று அவருக்குத் தெரியும். ஆகையால் வாமன் ராவையும் அதில் பங்கு கொள்ளச் சொல்வது. இருவருக்கும் வாள் போர் நடக்கும் போது தற்செயலாகப் பாய்ந்தது போல், வாமன் ராவ் தன் வாளைப் பிரபா

கரின் மார்பில் குறிபார்த்துக் குத்த வேண்டியது. பிராபகர் இறந்து விடுவான். வாமன் ராவ் நாட்டாண்மைக்காரனாகத் தேர்ந்தெடுக்கப்படுவான். பிறகு கொஞ்ச நாட்களுக்குப் பிறகு அஞ்சனியைத் தேற்றி அவனையே மணந்து கொள்ளச் சம்மதிக்கச் செய்வது. இதுதான் அவருடைய யுக்தி. அதன்படி நடக்க வாமன் ராவ் உடன்பட்டு விடுவான் என்று அவருக்கு நன்றாகத்தெரியும். ஏனென்றால், அதில் அவனுடைய நன்மைதான் அதிகமாக இருந்தது. ஆகவே அவர் உடனே வாமன் ராவிடம் சென்று, அதுவிஷயமாகப் பேசி, ஆலோசித்து, அவனை எளிதில் சம்மதிக்கவும் செய்துவிட்டார்.

மறுநாள் தீபாவளி அன்றிரவு அவர் நிஷ்கவலையாகப் படுக்கச்சென்றார். ஆனால் அந்த நள்ளிரவில் அவருடைய படுக்கையறையின் பக்கத்து அறையிலிருந்து மெதுவாகப் பேச்சுக்குரல் கேட்டது. உடனே அவர் கதவண்டை சென்று, ஒட்டுக் கேட்டார். அறையில் அஞ்சனியும் அவள் தோழியும் பேசிக்கொண்டிருந்தது மங்கிய வெளிச்சத்தில் கதவிடுக்கின் வழியாகத் தெரிந்தது.

"அடி அஞ்சனி. இன்னும் தூக்கம் வரவில்லையா உனக்கு?"

'இல்லையடி ரஞ்சனி; நாளைக்கு நடக்கப்போகும் வாள் போட்டியைப் பற்றித்தான் எனக்குப் பயமாக இருக்கிறது. நான் அங்கே போனால் அப்பா கோபித்துக்கொள்வார்: போகாவிட்டாலோ பிரபாகர் கோபித்துக்கொள்வார். பிரபாகர் என்னைக் கட்டாயம் வரவேண்டுமென்று நூறுதடவை சொல்லியிருக்கிறார். என்ன செய்வதென்றே தெரியவில்லை; தர்மசங்கடமாக இருக்கிறது.'

"உன்னை ஏனடி அவர் அங்கே கூட்டத்தில் வரச் சொல்லியிருக்கிறார்?"

"கேளடி. அவரை எதிர்க்கப்போகும் வாமன் ராவ் என் அப்பாவிடம் பயிற்சிபெற்றவன். அவன் மகா சூரன். அவனை வெல்லுவது என்பது பிரபாகரால்கூட முடியாது. அதை அவரே என்னிடம் சொன்னார். தவிர இந்த ஊர் பூராவும் வாமன் ராவுக்குச் சாதகமாக இருக்கிறது. அதற்காக அவர் வருத்தப்படவில்லை. இந்த ஊர் ஜனங்கள் எல்லோரும் வாமன் ராவுக்கு அளிக்கும் உற்சாகத்தை நான் ஒருத்திமட்டுமே அவருக்கு ஊட்டமுடியுமாம். நான் அங்கே நின்றாலே போதுமாம். என் முகத்தைக் கண்டதுமே அவருக்கு எங்கிருந்தோ அசுரபலம் வந்துவிடுமாம். அதன் பிறகு ஒரு வாமன் ராவ் என்ன, நூறு வாமன்ராவ் வந்தாலும் சளைக்கமாட்டாராம்.

ஆகையால் இப் போட்டியில் ஜயிக்க முற்றிலும் என்னைத்தான் நம்பியிருக்கிறார். நான் மட்டும் அங்கே வராதிருந்தால், அவர் ஜயிப்பதில் எனக்கு விருப்பமில்லை என்று நினைத்துக்கொள்வாராம். அத்துடன் நம் காதலுக்கும் முற்றுப் புள்ளி வைத்துவிடவேண்டியதுதானாம். ஆகையால் தாண்டி ரொம்பவும் பயமாக இருக்கிறது."

"நீ கவலைப்படாதே. நாளைக் காலையில் உன் அப்பாவிடம் நானே சொல்லி நீ அங்கே போவதற்கு அனுமதி பெற்றுவிடுகிறேன். இப்போது கவலையில்லாமல் தூங்கு" என்று தோழி சொல்லவே, அஞ்சனி அவளைச் சந்தோஷத்தால் இறுக அணைத்துக்கொண்டாள். சிறிது நேரத்தில் அறையிலிருந்த விளக்கு அணைக்கப்பட்டது, இருவரும் நித்திரையில் ஆழ்ந்தனர்.

இந்தச் சம்பாஷணையைக் கேட்ட ஷிந்தேயின் கண்களில் கோபாக்கினி வீசிற்று. அடர்ந்த மீசை அடிக்கடி துடித்தது. 'என் சதிக்கு எதிராக மற்றொரு சதியா? அதுவும் என் வீட்டிலா? அதை என் மகளே செய்வதா? பார்த்துவிடுகிறேன். நாளைக் காலையில் இவர்களை அறையிலிருந்து வெளியே விட்டால்தானே!' என்று கறுவிக்கொண்டு. ஓசைப்படாமல் வெளிப்புறமாகச் சென்று அவர்கள் தூங்கிக்கொண்டிருந்த அறையின் கதவைப் பூட்டி, சாவியைத் தம் தலைமாட்டில் வைத்துக்கொண்டு படுத்தார். அவருடைய கண்களில் வெற்றிக்குறி காணப்பட்டது.

பொழுது விடிந்தது. அன்று தீபாவளி. காளிந்தியம்மன் கோட்டையை நோக்கி மக்கள் சாரி சாரியாகச் சென்றனர். மேளதாள தாரைகள் தெருவெங்கிலும் ஒலித்துக்கொண்டே சென்றன. ஊர்வலம் காளிந்தியம்மன் கோவிலில் வந்து முடிந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் அங்கே பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்டிருந்த ஒரு மேடையின் மீது வாள் போட்டி ஆரம்பமாயிற்று. அதில் பல வாலிபர்கள் தங்கள் திறமையைக் காட்டி, போட்டி போட்டனர். ஒவ்வொருவராகத் தோற்றுப்போகவே கடைசி சுற்றில் பிரபாகரும் வாமன்ராவும் எதிர்த்தனர். மக்களினடயில் ஒரே குதூகல ஆரவாரம். அங்கே கூடியிருந்த எல்லோரும் வாமன் ராவையே உத்சாக மூட்டினர். அப்படி உத்சாக மூட்டியவர்களில் முன்னணியில் இருந்தார் ஷிந்தே என்று சொல்லவும் வேண்டுமா? தனது சுயமான திறமையுடன் மக்கள் அளித்த ஊக்கமும் சேர்ந்துவிடவே வாமன்ராவ் பிரபாகரைத் திணற அடித்து வந்தான். பிரபாகர் முற்றிலும் களைத்துவிட்டான். அவனுடைய சோர்வடைந்த கண்கள் அந்த மாபெருங் கூட்டத்தில் யாரையோ தேடி அலைந்தன: ஆனால் சீக்கிரமே ஏமாற்றமடைந்தன. நிமிஷத்திற்கு நிமிஷம் களைப்பு மேலிட்டு வந்தது. அஞ்சனி தன்னை ஏமாற்றிவிட்டாள் என்றே அவனுக்குப்பட்டது. அவன் நிராசையானான். ஆனால் திடீரென்று அக்கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. யாரோ எல்லோரையும் முண்டியடித்துக்கொண்டு முன்னால் வருவதுபோல் தெரிந்தது, 'யார் அது?' என்று எல்லாக் கண்களுமே அத்திசையை நோக்கின. ஆம்: சந்தேகமே இல்லை. அஞ்சனியே தான் அது. பிரபாகரின் கண்கள் அஞ்சனியைக் கண்டும் விட்டன. பிறகு கேட்பானேன்! ஐந்தே வினாடிகளில் வாமன்ராவ் பிடித்திருந்த வாள் துகள் துகளாகிக் கீழே ஒடிந்து விழுந்தது. வாமன்ராவ் தரையில் விழுந்துவிட்டான். இதை

யாருமே எதிர்பார்க்கவில்லை. இதைக்கண்ட ஷிந்தே ருத்ர மூர்த்தியாகிவிட்டார். 'இதற்குத் தம் மகள்தான் காரணம்; முதலில் அவளைத் தொலைத்துவிட வேண்டும்' என்று அடி எடுத்து வைத்தார். இதற்குள் 'பிரபாகருக்கு ஜே!' என்னும் கோஷம் வானைப் பிளந்தது. பிரபாகர் ஜயித்துவிட்டான், அவனைப் பாராட்டுவதற்காக எல்லோரும் நெருங்கி அவனைச் சூழ்ந்து கொண்டனர். அந்தச் சந்தடியில் ஷிந்தே அஞ்சனியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவள் கூட்டத்தில் எங்கோ மறைந்துவிட்டாள்.

கோலாகலம் அடங்கி, சிறிது நேரத்துக்கெல்லாம் கூட்டம் கலைய ஆரம்பித்தது. ஷிந்தேயின் உள்ளத்தில் துயரம் நிறைந்திருந்தது. அவர் போட்ட திட்டம் இப்படியா மட்டம் ஆகவேண்டும்? அவர் செய்த சதிக்கு இக்கதியா நேரவேண்டும்? அவருடையகண்கள் கலங்கியிருந்தன; கால்கள் தள்ளாடின. அவர் மெதுவாக நடந்து காளிந்தியம்மன் கோவிலுக்குச் சென்றார். களைப்பு மேலிட்டிருந்தது. ஆகையால் பிராகாரத்தில் ஒதுக்குப்புறமான ஒரு இடத்தில் சிறிது படுத்தார். உடனே கண்ணயர்ந்தார். அப்படி எவ்வளவு நேரம் அவர் படுத்திருந்தாரோ அது அவருக்கே தெரியாது. அவரைத் தூக்கத்திலிருந்து தட்டி எழுப்பியது அங்கே காற்றில் மிதந்து வந்த ஒரு சிரிப்பொலி. உடனே கண்களைக் கசக்கிக்கொண்டே எழுந்தார் ஷிந்தே. சிரிப்பொலி வந்த திக்கை நோக்கினார். அங்கே ஒரு வாலிபனும் யுவதியும் கை கோத்துக்கொண்டு குஷாலாகக் கர்ப்பக் கிரகத்தில் நுழைவது தெரிந்தது. அந்த மங்கிய வெளிச்சத்தில் அவர்கள் யார் என்று கண்டுபிடிக்க அவருக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. ஆம்; அவர்கள் அஞ்சனியும் பிரபாகரும்தான். 'அன்றைய அற்ப வெற்றிக்காக அம்மனுக்கு அஞ்சலி செலுத்த வந்திருக்கிறான் அயோக்கியன். அவனை அழிக்கவேண்டும்; ஒழிக்கவேண்டும்: பழி வாங்கவேண்டும்' அவர் வாய் முணுமுணுத்தது. இதற்குள் பிரபாகரும் அஞ்சனியும் காளிந்தியம்மனுக்கு முன் தலை வணங்கிப் பிரார்த்தனை செய்தனர். ஷிந்தேயின் ரத்தம் கொதிக்க ஆரம்பித்தது. கண்களில் தீப்பொறி பறக்க ஆரம்பித்தது. சீறி எழுந்தார் சிறுத்தையைப்போல. அவருடைய கை, வாளை உருவியது. ஷிந்தே உருவிய கத்தி என்றைக்குமே இரையின்றி, ரத்தக் கரையின்றி, உறையிலே விரைவிலே சென்றதில்லை. அவர் இரண்டே எட்டில் கர்ப்பக் கிரகத்தை அடைந்தார். அவரது ஆக்ஞையை அவரது வாள் நொடியில் நிறைவேற்றியது, பிரபாகரின் தலை உருண்டு, காளிந்தியம்மனின் காலடியில் விழுந்து, அம்மனின் பொற் பாதங்களை ரத்தத்தால் கழுவியது. சட்டென்று ஷிந்தே தூணுக்குப் பின் மின்னலைப்போல் மறைந்துவிட்டார்.

எதிர்பாராத தருணத்தில் தன் தலைவனின் தலை துண்டிக்கப்பட்டதைக் கண்ட அழகி அஞ்சனி அலறினாள்; உள்ளம் பதறினாள்: கண்ணீர் வடித்தாள்; புழுவைப்போலத் துடித்தாள். பழி வாங்கியவன் யார் என்றே அவளுக்குத் தெரியவில்லை. அதை அறியவும் அவள் முயலவில்லை. பிராண பதியைப் பிரிந்து ஒரு வினாடியேனும் இப்பாழும் உலகில் அவள் தனித்து இருக்க விரும்பவில்லை. உடனே பிரபாகரின் உடைவாளை உருவி, தன் மார்பிலே சொருகிக்கொண்டு பிரபாகரின் பிரேதத்தின்மேல் சாய்ந்தாள் அந்தக் கற்புக்கரசி!

அதே க்ஷணத்தில் ஆயிரம் இடிகள் ஏக காலத்தில் இடித்ததுபோன்ற சப்தம் எழுந்தது. கர்ப்பக் கிரகம் கிடுகிடுவென்று ஆடத்தொடங்கியது. காளிந்தியின் கோபமாகத்தான் இருக்கவேண்டும்! அம்மனுக்குப் பின்னாலிருந்து திடநெஞ்சர்களும் திடுக்கிடும்படியாக ஒருதெய்வீக வாணிகேட்டது.

"மறைந்திருக்கும் மானிடப் பதரே! மதியிழந்து மிருகமான மூர்க்கனே! என் பக்தனைப் பழிவாங்கிய பாதகப் புழுவே! காதலைக் குலைத்த கருணையில்லாக் கயவனே! அன்புக்கே உறைவிடமான என் பவித்ர சன்னிதானமா உன் பொறாமையின் பலிபீடம்? பெற்றவனின் குற்றத்துக்காகப் பிள்ளையை பலி வாங்கினாய், பெற்ற பெண்ணின் புதுமண வாழ்வுக்குப் பாடை கட்டினாய்; பகுத்தறிவை இழந்தாய்; பாதகச் செயல் புரிந்தாய்: பைத்தியமானாய்; படுபாவியானாய். நீ பைத்தியமாகக்கடவது; பட்டினி கிடந்து பேய்போலத் திரியக்கடவது; நீ மட்டுமல்ல; உன் பிள்ளை, அவன் பிள்ளை, அவன் பிள்ளைக்குப் பிள்ளை- இப்படி ஏழு தலைமுறைவரையில் உன் வம்சமே திண்டாடித் துடிக்கக்கடவது!"

எவ்வளவு கொடுமையான சாபம்! ஷிந்தே நடுநடுங்கினார். மன்னாதி மன்னர்களையும் சூராதி

சூரர்களையும் துச்சமாக எதிர்க்கவல்ல அவருடைய இரும்பு நெஞ்சம் காளிந்தியின் கோபத்துக்கு முன்னால் நெருப்பிலிட்ட மெழுகுபோல உருகி ஓடியது. அந்த நிமிஷமே அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது.

கதையை நிறுத்தினான் வாலிபன்.

அந்த உருக்கமான கதை என் உள்ளத்தின் ஆழத்திலே தொட்டுவிட்டது. என் உடம்பெல்லாம் வியர்த்துக் கொண்டிருந்தது,

''அதுசரி, இந்தக் கதைக்கும் இந்தக் கிழவருக்கும் என்னப்பா சம்பந்தம்?'' என்று நான் ஒரு கேள்வி கேட்டேன்.

''அப்படிக் கேளுங்கள். இந்தக் கிழவரின் முப்பாட்டனின் பாட்டன்தான் நாராயண்ராவ் ஷிந்தே. இது ஆறுவது தலைமுறை'' என்றான் அவன்.

''அப்போ, இன்னும் ஒரு தலைமுறை பாக்கி இருக்கிறதா? கிழவருக்குப் பிள்ளை இருக்கிறானா?'' என்று விசாரித்தேன்.

''இருக்கிறான், அது நானேதான்'' என்று அவன் கூறி, ''நாங்கள் காளிந்தியின் சாபப்படியே பட்டினி கிடந்து வாடுகிறோம். எனக்கு எங்குமே வேலைகூடக் கிடைப்பதில்லை. உங்களைப் போன்றவர்களின் உபயத்தால்தான் அரை வயிறு உண்டு உயிர் வாழ்ந்து வருகிறோம்'' என்று அவன் சொன்னபோது, அவன் முகத்தில் துக்கத்தின் சாயை படிந்திருந்தது.

அக்காட்சி என் மனதை உருக்கிவிட்டது. என் பையிலிருந்து ஒரு ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து அவனிடம் நீட்டி, ''இந்தாப்பா, இதை வைத்துக்கொள். பட்டினிப்பேய் ஒரு பொல்லாத பேய். அதை விரட்டுவது சாமானியமல்ல. இப் பிரபஞ்சமே அதன் பிடியில் சிக்கிப் பதறுகிறதப்பா.........பாவம், பெரியவரைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்'' என்று சொல்லி எழுந்து, பஸ் ஸ்டாண்டை நோக்கி நடக்கலானேன், திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே.

* * * *

பேஸின் ரோட் ஸ்டேஷனுக்குவந்து, பம்பாய்க்கு ரயில் வண்டி ஏறினேன். என் மனத்திரையில், நாராயணன் ராவ் ஷிந்தே, மஹாதேவ் போன்ஸ்லே, அஞ்சனி, பிரபாகர், வாமன் ராவ், காளிந்தியம்மன் முதலான பாத்திரங்கள் ஒருவர்பின் ஒருவராகத் தோன்றி மறைந்தனர். என் மனதிலே எண்ணற்ற எண்ணங்கள் எழுந்தன.

இதற்குள் 'ஸார்' என்று என் எதிரிலிருந்த ஆசாமி என் தோள்களைப்பிடித்துக் குலுக்கினார். நான் ''என்ன வேண்டும்?'' என்று கேட்டேன்.

''நெருப்புப்பெட்டி இருக்கா?'' என்று விசாரித்தார்.

''மன்னிக்கவும், எனக்கு சிகரெட் பிடிக்கும் பழக்கம் இல்லை.''

அவர் வாயிலிருந்த சிகரெட்டை எடுத்து சட்டைப்பையில் வைத்துக்கொண்டார். ''ஏன் ஸார், எங்கிருந்து வருகிறீர்கள்?'' என்று என்னைக் கேட்டார்.

''பேஸின் கோட்டையிலிருந்து.''

''அங்கே பாபாவைச் சந்தித்தீர்களா?''

''ஓ, சந்தித்தேன். அவருடைய உள்ள முருக்கும் கதையையும் கேட்டேன். பரிதாபப்பட்டு ஐந்து ரூபாய் பணத்தையும் கொடுத்தேன்.''

ஆசாமி வயிறு குலுங்கச் சிரித்தார்.

''சரிதான் கதை சொல்லி உங்களையும் ஏமாற்றியிருக்கிறான்''.

''என்ன. அவன் சொன்னதெல்லாம் நிஜமில்லையா? அவ்வளவும் கதையா? என்று கேட்டேன், துள்ளிக் குதித்து.

''ஆம்; அவ்வளவும் கதை; கட்டுக்கதை; வயிற்றுப்பிழைப்புக்காக அவன் சொல்லும்கதை!'

எனக்கு ஆத்திரமாக வந்தது, திரும்பிச்சென்று அறையலாமா என்றுகூடத் தோன்றியது.

வீடு சென்றதும் நிதானித்து அதைப்பற்றிச் சிந்தித்தேன். ''அவன் உம்மிடம் பணம் கேட்கவில்லை; நீராகத்தான் உணர்ச்சி வசப்பட்டு, அவனுக்குப் பணம் தந்தீர். அவன் வயிற்றுப் பிழைப்புக்காகக் கதை சொன்னான்; நீரும் வயிற்றுப்பிழைப்புக்காகத்தான் கதை எழுதுகிறீர்?'' என்று வக்காலத்து வாங்கிப் பேசியது என் மனம். அதுவும் சரியென்றே எனக்குப் பட்டது.

ஜெய் காளிந்தி! ஜெய் காளிந்தியின் கோபம்!!

மகத்தான தீபாவளி வெளியீடு!

அசோகா பிக்சர்ஸ்,

18 லஸ் அவன்யூ மயிலாப்பூர், மதராஸ்-4.

மரம் தரும் சர்க்கரை

நா. கி. நாகராசன்

ஜெர்மனியில் ஹிட்லரது ஆட்சி உச்ச நிலையிலிருந்த காலத்தில், அந்நியரது தயவின்றி நாட்டுக்குத் தேவையான பொருள்கள் அனைத்தையும் அங்கேயே தயாரிக்கவழி காண்பதில் அந்நாட்டு விஞ்ஞானிகள் முனைந்திருந்தார்கள். சேர்க்கை முறையில், நிலக்கரியிலிருந்து பெட்ரோலைத் தயாரித்ததோடு அவர்கள் நிற்கவில்லை; மரத்தூளிலிருந்து மாமிசத்தையும், சர்க்கரையையும் அவர்கள் தயாரித்தார்கள். செயற்கையில், அஹிம்சா முறையில் கிடைத்த இப்புலால் எவ்வளவு தூரம் பயன்பட்டதோ அறியோம். ஆனால் மரத்திலிருந்து கிடைத்த சர்க்கரை, பல ரசாயனத் தொழில்களுக்கு இன்றியமையாததொரு மூலப் பொருளான எதில் ஆல்கஹாலைத் (Ethyl Alcohol) தயாரிக்கப் பயன்பட்டது என்பது திண்ணம். வர்ணம் முதல் வாணம் வரை முக்கியமான பலவற்றின் தயாரிப்புக்குத் தேவையாகும் இப்பொருளை, மலிவாக இம்முறையில் தயாரித்த பெருமை ஜெர்மானிய விஞ்ஞானிகளையே சாரும். (எதில் ஆல்கஹால் என்ற பெயரைக் கண்டு மலைத்துவிடவேண்டாம்! சாராயம் என்ற பொருளை ரசாயன அறிஞன் இவ்வாறு குறிக்கிறான்.)

சர்க்கரை என நான் மேலே குறிப்பிட்டது, தமிழரது பண்பாட்டின் ஓர் அம்சமாக ஆய்விட்ட காப்பிப்பானத்துக்கு இனிமையூட்டும் பொருள் என்று கருத வேண்டாம். கரி, ஹைடிரஜன், ஆக்ஸிஜன் ஆகிய மூன்று பொருள்களும், குறிப்பிட்டதொரு வகையில் ரசாயன முறையில் கூடியுள்ள பொருள்கள் அனைத்தையும் ரசாயன அறிஞன் சர்க்கரை என்று அழைக்கிறான். நமது வீடுகளில் யாராவது நோய்வாய்ப்பட்டால், அவர்கள் அருந்தும் பானத்தில் சர்க்கரைக்குப் பதிலாகக் கலந்து தரும் குளுகோஸ் என்ற பொருளும் இவ்வகையைச் சேர்ந்ததே. பழத்தின் இனிப்புக் காரணமான பொருளைப் பழச்சர்க்கரை யென்றும், பாலுக்கு இனிமை தருவதைப் பால்சர்க்கரை என்றும் கூறுவார்கள். தாவரங்களில் பெரும் பகுதி செல்லுலோஸ் என்ற பொருளினால் ஆனது. அதைச் சிதைத்து, அதைவிட எளிய பொருளான சர்க்கரையாக மாற்றும் வித்தையைத் தாவரங்கள் கற்றிருக்கின்றன. லட்சக்கணக்கான வருஷங்களாகத் தாவரங்கள் செய்துவந்த இந்த ரசாயன மாறுதலையே இப்போது மானிடனும் செய்து முடித்திருக்கிறான்.

சமாதான காலத்திலேயே முக்கியமான ரசாயன மூலப் பொருளான எதில் ஆல்கஹாலின் தேவை போரின் போது பன்மடங்காகப் பெருகி விடும். ஆகையால் இதைப் புதிய முறைகளில் தயாரிக்கும் வழிகளை, இரண்டாம் உலகப் போரின் போது நேசநாட்டு விஞ்ஞானிகளும் ஆராய்ந்தார்கள். அதன் விளைவாக, கழிவு மரத்திலிருந்து சர்க்கரையைப்பெற்று, அதில் எதில் ஆல்கஹாலாகமாற்றும் முறையை, பெரிய அளவில் பயன் படுத்த அமெரிக்காவில் திட்டம் வகுக்கப்பட்டது. ஜெர்மானியர் வகுத்த முறையை அமெரிக்காவில் திருத்தியமைத்தார்கள், இப்புது முறையில் ரசாயன மாறுதல் இன்னும் திறமையுடனும், விரைவாகவும் நிகழ்கிறது.

மரத்தூளையும், மரச்சக்கைகளையும் இம்முறையில் பயன்படுத்துகிறார்கள். சுமார் 20 டன் கொள்ளத்தக்க பெரிய தொட்டிகளில் அதை இட்டு நிரப்புவார்கள். தொட்டியின் அடியில் உள்ள ஒருகுழாயின் வழியே நீராவியை உயர்ந்த அழுத்தத்தில் உள்ளே செலுத்துவார்கள். அப்போது தொட்டியின்வெப்ப நிலை சுமார் 150° ஆகும்.

இப்போது தொட்டிக்குள், நூற்றில் அரைப் பங்கு கந்தகாமிலம் கலந்த தண்ணீரைச் செலுத்துவார்கள். இந்த அமில நீரினால் மரப்பொருளான செல்லுலோஸ் ரசாயன மாறுதல் அடைந்து, சிதைந்து, சர்க்கரைப் பொருளாகவும், லிக்னின் என்ற மரப்பிசினாகவும் பிரிந்துவிடும். சர்க்கரைப் பொருள் நீரில் கரைந்துவிடும். இந்நீரை அவ்வப்போது அகற்றிவிட வேண்டும். மாறுதல் துவங்கியபின் நீராவியின் அழுத்தத்தைப் படிப்படியாக அதிகமாக்க வேண்டும். ரசாயனச் சிதைவு தேவையான

அளவுக்கு நிகழ்ந்த பின்னர், தொட்டியில் பிசின் பொருள் மட்டுமே எஞ்சியிருக்கும். இதைப் பிழிந்தெடுத்து இப்போது அடுப்பெரிக்க மட்டுமே பயன்படுத்துகிறார்கள். இதைப் பயன்படுத்த வேறு நல்ல முறைகள் கண்டால், இம்முறையில் ஆகும் செலவு குறையும்.

தொட்டியிலிருந்து அகற்றும் நீரை, வெப்பமான நிலையிலேயே இன்னொரு தொட்டிக்குள் நிரப்பி, அதை அழுத்தத்துக் குள்ளாக்குவார்கள். அப்போது சர்க்கரைகள் நீங்கலாக ஏனையபொருள்கள், ஆவியாகிப் பிரிந்துவிடும். இவற்றுள் பர்பரால் (Furfural) மரச் சாராயம், அஸிட்டிக அமிலம் (Acetic Acid) ஆகியவற்றைக் குளிர்வித்துச் சேமித்து வைத்துக் கொள்வார்கள். இவையனைத்தும் பயனுள்ள ரசாயனப் பொருள்கள். இப்போது தொட்டியிலுள்ள திரவத்தில் சுண்ணாம்பு நீரை விட்டால், திரவத்திலுள்ள அமிலம் வண்டலாக மாறும். ஆகையால் திரவத்தை வடிகட்டி, சர்க்கரை நீரைத் தனியே பிரித்துவிடலாம்.

இவ்வாறு பெறும் திரவத்தைக் குளிர்வித்த பின்னர், அதிலுள்ள சர்க்கரைப் பொருளை, எதில் ஆல்கஹாலாக மாற்ற வேண்டும். பால் புளிப்பதற்கும், இனிய பதநீர் கள்ளாக மாறுவதற்கும், திராட்சை ரசம் மதுவாக மாறுவதற்கும், கண்ணுக்குப் புலப்படாத சில உயிரினங்கள் காரணமாகும். இவற்றுள் ஒன்று யீஸ்ட் (Yeast) எனப்படும். இது ஒரு தாவர வகை என்பர். சர்க்கரைப் பொருள் கொண்ட திரவத்தில் இதைச் சிறிது சேர்த்தால், இது விரைவில் வளர்ந்து, பல்கி, அதை ஆல்கஹாலாக மாற்றுகிறது. ஆகையால், குளிர்வித்த திரவத்தைப் பெரிய சேமிப்புத் தொட்டிகளில் ஊற்றி, அதில் யீஸ்ட்டைச் சேர்த்து, சுமார் 20 மணி நேரம் வைத்திருந்தால் அது 'பீர்' என்ற மதுபான வகையாக மாறும். அதில், சுமார் 2 சத விகிதம் ஆல்கஹால் இருக்கும். அதை வாலைவடித்து, எதில் ஆல்கஹாலைப் பிரித்தெடுக்கலாம்.

இவ்வாறு செய்யாமல், சர்க்கரைத் திரவத்தை வேறொரு வகையிலும் பயன்படுத்தலாம். இதிலுள்ள நீரில் பெரும் பகுதியை ஆவியாக்கி, இதைச் செறித்தால், கருப்பஞ் சர்க்கரைத் தயாரிப்பின் போது கிடைக்கும் பாகு போன்ற பொருளான சர்க்கரைப் பாணியைப் பெறலாம். இதிலிருந்தும் ஆல்கஹால் தயாரிக்கலாம்; இதை வேறு வகைகளிலும் பயன் படுத்துவதுண்டு. கால்நடைத் தீவனங்களை இதில் ஊற வைத்து அளித்தால், கால்நடைகள் நல்ல ஊட்டம் பெற்று, கொழுத்து வளரும். யீஸ்ட் என மேலே கூறிய பொருள் வைடமின் மருந்தாகப் பயனாகிறது; மது இறக்கும் தொழிலிலும் ஏராளமாகத் தேவையாகிறது. இதைத் தயாரிக்கவும் சர்க்கரைப் பாணி பயன்படுகிறது. யீஸ்ட், நல்ல புரதச் சத்துள்ள பொருள். இது மனிதர்க்கும், விலங்குகட்கும் சிறந்த உணவாகும்.

காட்டின் விளைபொருள்களைச் சரிவரப் பயன்படுத்துவதற்கான எந்தத் திட்டத்திலும் மரச் சர்க்கரைத் தயாரிப்பு மிக முக்கியமானது. ஏனெனில் இதைத் தயாரிக்க, மரத்தூள், மரச்சக்கை முதலிய கழிவுகளும், வேலைக்கு லாயக்கற்ற மரவகைகளும் பயன்படும். நம் நாட்டில் தொழில் வளர்ச்சி துரிதமாக நடைபெறும் இந்நாளில், எதில் ஆல்கஹால் தயாரிப்பு மிக முக்கியமாகும். இம்முறையில், லாபகரமாக எதில் ஆல்கஹாலைத் தயாரிக்கலாம் என்று கண்டறிந்திருக்கிறார்கள். ஆகையால் இம்முறை நம்நாட்டுக்கு எவ்வளவு தூரம் பொருந்தும் என ஆராய்வது அவசியம். மரவேலைத் தொழில் நடந்துவரும் பகுதிகளில், கழிவு மரத்தைக்கொண்டு சர்க்கரைப் பாணியையும், ஆல்கஹாலையும் தயாரிப்பது அத்தொழிலுக்குப் பேருதவியாக இருக்க முடியும்.

'பெர்க்கின்ஸ்' டீஸல் இன்ஜின்களையே

பொருத்துங்கள்



பஸ்களுக்கும்

லாரிகளுக்கும்

ஏனெனில்



★ எவ்வித ரஸ்தாவுக்கும் பளுவுக்கும் ஏற்ற அதிக சக்தி
★ பராமரிப்புக்கிடையே கூடுதலான மைல்கள் ஓட்டம்
★ பெட்ரோல் இயந்திரத்தை விட மைலுக்கு மூன்றரை செலவில் சேமிப்பு
★ புகை ஏற்படாததோடு எண்ணை சேதாரமும் இல்லை
★ குறைந்த ரிப்பேர் செலவுடன் சுலபமான பராமரிப்பு
★ எவ்வித சிரமுமின்றி எளிதில் இயங்குவது
★ ஓட்டுபவர்களுக்கு மிகவும் சௌகரியம்

உங்களுக்கு அதிக செலவின்றி லாபமளிக்கிறது

ஸிம்ஸன் & கோ., லிமிடெட்

மதராஸ் - 2

பிராஞ்சுகள்: பெங்களூர்-உதகமண்டலம்-திருச்சிராப்பள்ளி-செகந்திராபாத் (Dn.)

இந்தியா முழுவதும் விற்பனையும் ஸர்விஸும் உண்டு

அருகாமையிலுள்ள உங்கள் '**பெர்க்கின்ஸ்**' வியாபாரியை விசாரிக்கவும்

எகிப்து நாட்டிலே

கே. ஸ்ரீநிவாஸன்

கெய்ரோவில் கடைகள் கண்ணிகள் எல்லாம் மேனாட்டு மோஸ்தரில் உள்ளவை. அதாவது, சிறிய சிப்பந்தி முதல் பெரிய முதலாளிவரை மேனாட்டுப் பாணியில் வருபவர்களை வரவேற்று உள்ளே அழைத்துச் செல்கிறார். கடைகள் என்றால் சாதாரணமான நம் ஊர் கடைகள் அல்ல. லக்ஷக்கணக்கில் முதல் போட்டு, பகட்டாக அலங்காரம் செய்து, சாமான்களைக் கண்காட்சியில் வைப்பது போன்று வைக்கிறார்கள்.

முக்கியமாக, "செயின்" ஸ்டோர்ஸ் என்பது அநேகமாக எங்கும் தென்படுகிறது. "செயின்" என்றால் சங்கிலி. இந்தச் சங்கிலி ஸ்டோர்ஸ்களில், துணிமணிகளிலிருந்து பல சரக்குவரையிலும், கழுத்துத் துணிகள் முதல் கறிகாய் வரையிலும், தனித்தனியான விடுதிகளில் வைத்து விற்கிறார்கள், ஸ்டோருக்குள் நுழைந்தால் வெளியே வருவதற்குள் என்ன தேவையாக இருந்தாலும் ஒரே "கூரைக்கு" அடியில் வாங்கலாம். அதிக அலுவல் உள்ளவர்களும் உயர்ந்த பணம் மிகுந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் இதுமாதிரியான ஸ்டோர்களுக்குப் போவார்கள். என் நண்பர் ஸ்ரீ பார்த்தஸாரதி எடுத்த எடுப்பிலேயே சொல்லிவிட்டார். "கால் ரூபாய்க்கு மேல் கறிகாய் வாங்குவதானால் கொத்தவால் சாவடிக்குச் செல்லும் நமக்கு இது பிரயோஜனம் இல்லை."

ஒவ்வொரு கடை காரியாலயமும் நன்கு விளக்குகளால் அலங்கரிக்கப்படுகிறது. அதிலும் இரவில், பலவித வர்ண ஜாலங்கள் கொண்ட மின்சார விளக்குகள் கடையின் முகப்புகளை அலங்கரிக்கின்றன, பார்வைக்காகச் சாமான் வைக்கும் வெளி ஜன்னல் போன்ற இடத்தில் சாமான்களை வாரி வீசி விடுகிறார்கள். மொத்தத்தில் இரவு பகலாகி விடுகிறது. நடைபாதையோடு செல்பவர்களுக்கு ஒவ்வொரு காட்சியரங்கத்தையும் பார்த்துக்கொண்டு சென்றாலே மனதிற்கு ரம்மியமாக இருக்கிறது. அதுவும் செல்லுமிடமெல்லாம் கடைவீதிகளாகவும் இருந்து ஜகஜ்ஜோதியாக அலங்காரமும் இருந்தால் கேட்கவேண்டுமா?

கெய்ரோவின் ஜீவனே நைல் நதி. இந்த நதியைக் கடக்க நான்கு இடங்களில் பாலங்கள் அமைத்திருக்கிறார்கள். இவைகளில் முக்கியமானது நகரத்தின் "ஹிருதயத்தின்" அருகில் உள்ளது. மிகவும் விசாலமான இந்தப்பாலத்தில் அமைக்கப்பட்டிருக்கும் விளக்குகளை இரவில் எப்படி இருக்கிறது என்று நைல் நதிக்கரையில் உள்ள ஸாமிராமிஸ் என்ற ஹோட்டலின் மாடியிலிருந்து பார்த்தோம். இந்த ஹோட்டல் கெய்ரோவில் உள்ளவைகளுள் மிகவும் உயாந்தது, தங்குவதற்கும் சாப்பாட்டிற்கும் அனாயாசமாகச் சார்ஜ் செய்கிறார்கள். கெய்ரோ நதியின் பாலத்தில் ஜனங்கள் பீச்சுக்கரையில் ஆயிரக்கணக்கில் கூடுகிறார்கள், நதியில் பலவிதப் பட்டுகள் முணுக்முணுக்கென்று விளக்குகளுடன் ரம்மியமாகச் செல்கின்றன. அவைகளை நன்றாகப் பார்க்கும் பொருட்டு மிகவும் பிரகாசமான வெகுதூரம் செல்லும் விளக்குகளைப் பொருத்தி அவைகளைத் தோணிகளின் மேலே செலுத்துகிறார்கள். நைல் நதியின் இருகரைகளிலும் மின்னும் லக்ஷக்கணக்கான தீபங்களை இரவு பூராவும் பார்த்துக் கொண்டிருக்கலாம். பார்த்துக் கொண்டும் இருக்கிறார்கள். எப்படி?

இங்குதான் "இரவு கிளப்"களைப் பற்றிச் சொல்லவேண்டியிருக்கிறது. இந்தக் கிளப்புகள் இரவு பூராவும் திறக்கப்பட்டிருக்கின்றன. கெய்ரோவிலும் சரி, துறைமுகப் பட்டினமான அலெக்ஸாண்டிரியாவிலும் சரி, இந்தக் கிளப்புகள் அபரிமிதமாக உள்ளன. சாதாரணமாக இங்குச் சாராய வஸ்துக்கள் அருந்தப்படுகின்றன. அதைத் தொடர்ந்து இரவு சாப்பாடு போடப்படுகிறது. அதைக் கீழே "தள்ள' மேலும் குடிக்கிறார்கள். சாதாரணமாக, 10 மணிக்கு மேல் தான் சாப்பாட்டுக்கு ஏற்பாடு நடக்கிறது. அதுவரை மதுபானம் அருந்துபவர்களுக்குக்கான விருந்து உண்டு.

"இரவு கிளப்"களில் மிகவும் அவசியமான அங்கம் அங்குள்ள "அயிட்டங்கள்". அலெக்ஸாண்டிரியாவில் ஸான்ஸ்டெபாரோ என்ற ஹோட்டலில் முதலில் மிகவும் அவ

எகிப்தின் தலைவர்களான கர்னல் நாஸரும், ஜெனரல் நாகுப்பும் வீற்றிருக்கும் காட்சி

சியமான இரு அங்கங்களை மட்டும் மூடிக் கொண்டு சில மாதர்கள் நடனமாடினார்கள். எங்களுக்கு அதைப் பார்க்கவே சங்கடமாக இருந்தது. இந்தக் கோரம் போதாதென்று சில சர்க்கஸ் வித்தைகளுக்குப் பிறகு ஒரு "கிழக்கத்திய" நடன விருந்து அளிக்கப் பட்டது. நல்ல லக்ஷணம் உள்ள எகிப்திய அழகிக்குக் காற்றிலும் லேசானபாவாடை கட்டி, சதஸில் நடனம் ஆரம்பமாயிற்று. ஆஹா, என்ன நடனம்! வயிற்றிலுள்ள சிறிய சதையையும் பின்பக்கம் உள்ள அங்கத்தையும் தாளம் தவறாமல் ஆட்டினாள் அந்த அழகி! நண்பர் பார்த்தசாரதிக்கு ஆத்திரம் பீறிக்கொண்டு வந்தது. "இந்தக் கோரத்தில் "ஏன் 'கிழக்கத்திய நடனம்' என்று பெயர் வைத்தார்கள்?" என்று அருகில் இருந்த எகிப்திய நண்பரைக் கேட்டார். "இதுமாதிரி நடனம் உங்கள் நாட்டில் இல்லையா?" என்று அவர் பதிலுக்குக் கேட்டார். உடனேயே பார்த்தசாரதி நம் பரத நாட்டிய மேன்மையையும் கர்நாடக சங்கீதத்தையும் பற்றி விளாச ஆரம்பித்துவிட்டார்.

அப்பொழுதுதான் எல்லாவற்றிற்கும் சிகரமான நிகழ்ச்சி நடந்தது. சூத்திரதாரி போன்றவர் ஒரு பெண்ணைக் கொண்டுவந்து சதஸில் நிறுத்தி, அவள் எத்தனைவித மார்பு அணியும் இடுப்பு அணியும் அணிந்திருக்கிறாள் என்று சபையோரைக் கேட்டார். பாண்டு சங்கீதம் முழங்க, அந்த மாது முன்னும் பின்னும் நடனமாட, சுற்றி உட்கார்ந்திருந்த கிளப் பிரியர்கள் அந்த மாதின் உடைகளை ஒவ்வொன்றாக அவிழ்த்தெறிந்தார்கள். கடைசியில், இடுப்பில் ஒரு சாண் அகலம் உள்ள ஒரு மெல்லிய அணியே மிஞ்சிற்று. இந்தச் சமயத்தில் தான் ஆரவாரமும் கும்மாளமும் அதிகமாயின.

இதுமாதிரியான லஜ்ஜையைக் காற்றில் பறக்கவிட்ட நிகழ்ச்சிகள்தான் 'இரவு' கிளப்களின் ஜீவன், அனுசிதமாக ஒன்றும் நடக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் பேரின்பமும் தெய்வபக்தியும் உண்மைக் கலைப் பிரியமும் மிகுந்த நம் நாட்டில் இதுமாதிரி கிளப்புகளுக்கு இடம் இல்லை. கலாசாரம் என்பதை அறியாத பஞ்சாபிகளுக்குத்தான் இந்தமாதிரி அசம்பாவிதங்கள் பிடிக்கும். ஸ்ரீ பார்த்தசாரதிக்கு ஒருவிதத்தில் திருப்தி. 'அப்பாடா, நீங்கள் ஒரு உடையைக் கழற்ற வேண்டும் என்று நம்மிடம் சொல்லாமல் இருந்தானே அந்தக் கோமாளி' என்றார் அவர்.

எகிப்து எவ்வளவுதான் புராதன நாகரிகம் மிகுந்தது என்றாலும் தற்போதைய எகிப்தில் அந்த நாட்டின் பழமையையும் மேன்மையையும் கண்ணாடிபோல் காட்டக் கலைகள் எதுவும் இல்லை. அந்த நாட்டில் உள்ள பழைய சிற்பங்களும் அளவில்லாத கலைக்கோயில்களுமே எகிப்தின் பழமைக்கும் பெருமைக்கும் சான்று கூறுகின்றன.

நிற்க, இந்தியா திரும்பியதும் என் நண்பர்கள் கேட்டார்கள், சாப்பாட்டு விஷயமாக உங்களுக்கு ஏதும் கஷ்டம் இல்லையே என்று. இதற்குப் பதில் சொல்லுவது கொஞ்சம் கஷ்டம்தான். எகிப்தில் மாமிசம் சாப்பிடாதவர்களுக்கென்று நம் நாட்டில் உள்ளதுபோன்று தனி சமையல் கிடையாது. கெய்ரோவை அடைந்த நாளே உணவுப் பிரச்னை பலமாகி விட்டது. முட்டை சாப்பிட மட்டும் பழக்கமான எனக்கும் பார்த்தசாரதிக்கும் முட்டையால் செய்யப்பட்ட தோசைபோன்ற "ஆம்லெட்"டும் வேகவிட்ட கறிகளும் மட்டுமே கிடைத்தன. திராக்ஷைப்பழம் ஏராளமாகக் கிடைத்தது. இருந்தும், நம் எதிரில் உள்ளவர்கள் திண்டியாக ஆடுமாடுகளை டன் கணக்கில் சாப்பிடும்பொழுது எங்களுக்கு ஏதோ பறிகொடுத்ததுபோலத்தான் இருந்தது. அதுவும், பரிமாறும் "வெயிட்டர்" கொஞ்சம் பரிதாபமாக எங்களைப் பார்க்கும்பொழுது எப்படி இருக்கும். இருவேளைக்குப் பிறகு நாங்கள் கொஞ்சம் தெண்டி அரிசிச் சாதத்திற்கு ஏற்பாடு செய்துகொண்டோம். கொஞ்சம் தயிர்மட்டும் கிடைத்தால்? "நான் ஆயுள் பூராவுமே தயிர் சாதத்தில் ஜீவிப்பேனே" என்றார் ஸ்ரீ பார்த்தசாரதி. கடைசியில், மிகவும் ஆராய்ச்சி செய்து தயிருக்கு "ஜபாதி" என்று எகிப்தில் பெயர் என்று கண்டுபிடித்தோம். அன்று முதல் எங்கள் பிரச்னை தீர்ந்தது.

மாமிசம் சாப்பிடும் பழக்கம் உள்ள என் நண்பர் ஸ்ரீ ராமனுக்கு, சாப்பிடும் பொழுதெல்லாம், எங்களைப் பார்த்துக் கிண்டல். சமயத்தில் 'சரி ஒழியட்டும், மாமிச ஆகாரத்தைச் சாப்பிட்டால்தான் என்ன?' என்று கூடத் தோன்றும். பிறகு தோன்றும் "சீ, யாரோ பரிகாசம் செய்கிறார் என்பதற்காக நம் பழக்கத்தை மாற்றிக்கொள்வதா" என்று சமாதானம் ஆகிவிடும். நாங்கள் தங்கிய சில நாட்களில் பல விருந்துகள் நடந்தன. அங்கும் சென்று ஏன் சாப்பாட்டு விஷயமாக நெருக்கடியை உண்டாக்கவேண்டும் என்று நானும் என் நண்பர் ஸ்ரீ பார்த்தசாரதியும் பல அழைப்புகளை ஏற்றுக்கொள்ளவில்லை.

முதலில் சொன்னபடி, எகிப்தில் பழையன என்பது புராதன மசூதிகள், 'பிரமிட்' (PYRAMID), மற்றும் சரித்திரச் சின்னங்கள் சம்பந்தப்பட்டவரைதான். தற்கால எகிப்தில், அதிலும் குறிப்பாகப் பட்டணங்களில் பிரத்யேகமான எகிப்திய உடை என்பதைப் பார்ப்பது கஷ்டம். எகிப்தியர்கள் மேனாட்டுப் பாணியில் உடைதரித்து, ஐரோப்பிய பாணியில் வீட்டை ஒழுங்கு செய்கிறார்கள். மத்திய வகுப்பினர் வீட்டில் கூட வருபவர்களை உட்காரவைக்கும் அறை (Drawing Room), சமையல் அறை, சாப்பிடும் அறை என்று பிரத்யேகமாக இருக்கின்றன. சாப்பாடுகூட மேஜைமேல்தான். ஆனால் சக்திக்குத் தகுந்தவாறு டிராயிங் ரூமை அலங்கரிக்கிறார்கள். கெய்ரோவில் எங்களுக்கு வழிகாட்டியாக இருந்த ஸ்ரீ சயித்-எல்-கிண்டி என்பவர் வீட்டில் கண்ணாடியில் செய்த அபூர்வ பொம்மைகளை ஸ்படிகம் என்று நம்பி மேஜைமேல் வைத்திருந்தார்கள். ஸ்ரீமதி கிண்டி சொன்னாள் ஒவ்வொரு வீட்டிலும் ஏதாவது அலங்காரம் இருக்கும் என்று. தன்வீடு அலங்காரமாகவும் நறுவிசாகவும் இருக்கவேண்டும் என்ற மனப்பான்மை மிகவும் மெச்சத்தக்கதே.

எகிப்தில் பெரும்பான்மையானவர்கள் முஸ்லிம்கள்தான். இருந்தும் பரந்த மனப்பான்மையே நிலவுகிறது. பாகிஸ்தானில் உள்ளதுபோல் முஸ்லிம் அல்லாதவர்கள் மிலேச்சர்கள், சுட்டுத்தள்ள வேண்டிவர்கள் என்று எண்ணுவதில்லை. எங்கள் வழிகாட்டியான ஸ்ரீ கிண்டியின் மச்சினியான ஸ்ரீமதி ஸாமியாவுக்கு என்னைப்பற்றிய எதுவும் பிடித்திருந்தது. ஆனால் பெயர் மட்டும் பிடிக்கவில்லை. "மிகவும் கஷ்டமான பெயர், வாஸன் என்று வைத்துக்கொள்ளுங்கள்" என்றாள். இந்த வம்பு எதற்காக என்று எகிப்திய சர்க்கார் எழுதிய கடிதங்களில் எல்லாம் என் பெயரை "ஸ்திரினிஹாசன்" என்றே எழுதினார்கள். எகிப்திய பெயர்கள் மாத்திரம் சுலபமாக இருந்தனவா? அனாயாசமாக "ஹ" "ஷ" "ஸ" முதலிய அக்ஷரங்கள் கொண்ட இந்தப் பெயர்களை உச்சரிப்பதே கஷ்டமாக இருந்தது.

எகிப்தில் இந்தியாவைப்பற்றிப் பாகிஸ்தான் அபாண்டப் பொய்யைப் பரப்புகிறது இந்தியாவில்தேசிய பாஷை ஆங்கிலமாம். நம் நாட்டில் மருந்துக்குக்கூட ஒரு முஸ்லிம்



60000க்கு மேற்பட்ட தேசிய வீரர்கள் வணக்கம் தெரிவிக்கும் காட்சி

கிடையாதாம்! காஷ்மீரத்தை, முஸ்லிம் காஷ்மீரத்தை, ஹிந்து இந்தியா கபளீகரம் செய்ததாம்! இந்தத் துஷ்பிரசாரத்திற்குப் பதில் கொடுப்பது எங்கள் பொறுப்பாயிற்று. இந்தியா சுதந்திரத்துக்குப் பிறகு என்னென்ன சாதித்தது என்பதையெல்லாம் சொல்லிவந்த பிறகு, ஒரு எகிப்தியர் எங்களைக்கேட்டார்: "சரி உங்கள் ஹிந்தி ராஷ்டிர பாஷையாக இருந்தால் சற்று அதில் பேசுங்களேன்" எங்கள் நால்வரில் எனக்கும், ஸ்ரீ ராமனுக்கும் ஸ்ரீ சென்குப்தாவுக்கும் மட்டும்தான் தனித்தனி ரகத்தில் ஹிந்தி வரும். ஸ்ரீ பாரதத்தசாரதிக்கு "ஹை" கூட வராது. இருந்தும் விட்டுக்கொடுக்காமல் நாங்கள் வெளுத்து வாங்கினோம். ஸ்ரீ பார்த்தசாரதி இடையிடையே தமிழில் கலந்து வெளுத்து அள்ளிக்கட்டினர். அங்கு யார் கண்டார்கள் எது தமிழ் எது ஹிந்தி என்று.

எகிப்தியர்களைப் பொறுத்தவரையில் இந்தியாவைப்பற்றி நல்ல அபிப்பிராயம் தான். மூன்று காரணங்களால் எகிப்தியர்களுக்குப் பாகிஸ்தானைக் கண்டால் பிடிப்பதில்லை. ஒன்று பாகிஸ்தான் மதத்தை அடிப்படையாகக்கொண்ட தேசம். இது எகிப்தியர்களுக்கும் முற்றிலும் பிடிக்காத விஷயம், ஏனென்ருல், பக்கத்தில் உள்ள இஸ்ரேல் நாடு, முஸ்லிம் நாடுகளுக்கு நடுவே, கிறிஸ்துவ ஆசான், ஸ்ரீ இயேசு கிறிஸ்து பிறந்த இடம் என்பதால தானே ஏற்பட்டது? அரபிக் பாஷை தெரியாதவர்கள் முஸ்லிம்களே இல்லை என்பது எகிப்தியர்களின் அபிப்பிராயம். மூன்ருவதாக, பாகிஸ்தான் மத்திய கிழக்குக்குத் தலைமை வகிக்க விரும்புகிறது என்ற சந்தேகம் வேறு. "அமெரிக்காவுடன் நட்புக் கொண்டு, ராணுவ ஒப்பந்தம் செய்து கொண்ட பாகிஸ்தானுடன நாங்கள் உறவு கொண்டாடுவோம்" என்று சீறினர் ஒரு இளைஞர் தலைவர்.

நிற்க, எகிப்திய முஸ்லிம்களின் மதம் தங்கள் சொந்த விஷயங்கள் வரைதான். எங்களுக்குத் தெரிந்தவரை மதம் ஒரு

தடவைதான் எங்கள்முன் பிரஸ்தாபிக்கப்பட்டது. நண்பர் ஸ்ரீ ராமனுக்கு எகிப்தில் எதைக்கண்டாலும் பிடித்துவிட்டது. நாங்கள் எகிப்திய அந்நிய நாட்டு இலாக்கா, ஸ்ரீ அபுஸ்ஸுவத்துடன் சாப்பிடும்பொழுது ஸ்ரீ ராமன் சொன்னார்: எகிப்திய மாதர்கள் யாவரும் கிளியோபாட்ராவைப் போல் அழகிகள்." ஸ்ரீ அபிஸ்ஸுவத் சொன்னார்: "அப்படியானால் நீங்கள் ஒரு பெண்ணை மணம் செய்துகொண்டு விடுவதுதானே?" ஸ்ரீ ராமன் தானும் அப்படியேதான் திட்டமிடுவதாகச் சொன்ன பொழுது ஸ்ரீ அபுஸ்ஸுவத் நகைத்துச் சொன்னார்:" ஸ்ரீ ராமன், அதுதான் நடக்காது. முஸ்லிம்கள் முஸ்லிம் அல்லாதவர்களைக் கல்யாணம் செய்துகொள்வது குரானுக்கு விரோதம், ஆனால் நீர் ரஹ்மானானால் அப்பொழுது தடையில்லை." நாங்கள் யாவரும் சிரித்தோம்.

எகிப்தில் இரவில் வெகு நேரம் வரை விழிப்பது காரணமாக காலையில் நேரங்கழித்துத்தான் எழுந்திருக்கிறார்கள். இதனாலேயே நாங்கள் தங்கிய ஹோட்டலில் தினம் காலை எட்டு மணிக்கு டெலிபோன் மணி அடித்தது. "குட் மார்னிங். எழுந்திருக்க நேரமாகிவிட்டது" என்றாள் ஹோட்டல் டெலிபோன் எக்ஸ்சேஞ்சில் வேலை செய்யும் மாது.

நாங்கள் எகிப்தின் விடுதலையை ஒட்டி இரண்டாம் வருஷக் கொண்டாட்டத்திற்காகச் சென்றிருந்ததால், முதல் இரண்டு நாட்கள் சர்க்கார் அலுவல்களிலேயே நேரம் செலவழிந்தது. ஜூலை 23-ஆம் தேதிதான் எகிப்து "மீட்க"ப்பட்டது. அன்று இரவுதான் கர்னல் கமல் அப்டல் நாஸர் தலைமையில் ராணுவம் எழுந்து அரசர் பருக் மாளிகையைச் சூழ்ந்து அதிகார ஸ்தானங்களைக் கைப்பற்றிற்று. பிறகு ஜெனரல் நக்விப்பின் தலைமையில் அரசர் தேசத்திலிருந்து விரட்டப்பட்டார். முதல் "குடியரசு" சர்க்கார் அமைக்கப்பட்டது.

ஜூலை 23-ஆம் தேதி எகிப்திலேயே புனித நாள். சாயந்திரம் அரண்மனைக்கு எதிரே உள்ள குடியரசு சதுரத்தில் ஆடம்பரமான விழா நடந்தது. பிரம்மாண்டமான சதஸில் எகிப்திய ராணுவத் தலைவர்கள் தங்கள் சாதனைகளைப்பற்றி விவரித்தார்கள். சதுரத்தில் எள்ளுப்போட்டால் எள்ளு விழாது கூட்டம். சுமார் ஒருமைல் அருகாமையில் உள்ள இப்ராஹீம் பாச்சா என்ற இடத்திலிருந்து அந்த இடத்தை அடைவது கஷ்டமாகத்தான் இருந்தது.

சரியாக 11-மணி அடித்ததும் எகிப்தின் நாலுகோடிகளிலிருந்தும் புறப்பட்ட தீவட்டி தாங்கிய ராணுவத்தினரும், ஓட்டப்பந்தய வஸ்தாத்துகளும், மாணவர்களும் ஆயிரக்கணக்கில் சதுரத்தை அடைந்தனர். சரியாக 11-மணிக்கு "விடுதலை" பீடத்தில் ஒரு பிரம்மாண்ட தீபம் ஏற்றப்பட்டது. இது பல நூறு ஆண்டுகளுக்குப்பிறகு ஜனங்கள் கொடுங்கோல் அந்நிய ஆட்சியிலிருந்து மீட்கப்பட்டதைக் குறிக்கும் சின்னம். பல்லாயிரம் ஜனங்கள் ஆரவாரித்தனர். வாண வேடிக்கையும் பெரிய பீரங்கியிலிருந்து 23 வெடிகளும் ஜனங்கள் உத்சாகத்தைப் பன்மடங்கு அதிகரித்தன.

மறுநாள் காலை ராணுவ அணிவகுப்பு. சுமார் இரண்டுமணி நேரம் சிப்பாய்களும் டாங்கிகளும், மெஷின் துப்பாக்கிப் படைகளும் சென்றவண்ணம் இருந்தன. எகிப்திய ராணுவம் நம் ராணுவத்தில் ஒரு சிறு பகுதி கூட இல்லை என்றாலும், ராணுவமே இல்லாமல் இருந்த அந்த நாட்டுக்கு, இப்பொழுதுள்ள ராணுவம் பெரிய சாதனைதான்.

கெய்ரோவில் கடை கண்ணிகளைப் பார்த்தோம். அலங்கார வீதிகளைப் பார்த்தோம். வானளாவும் கட்டிடங்களைப் பார்த்தோம். ஆனால் இவைகள் அல்ல எகிப்தியர்களுக்குப் பெருமை தருபவை. எகிப்தியப் பேசா மடந்தை எனப்படும் 'ஸ்பிங்கஸ்' சிலையும் (Sphinx), பெரிய 'பிரமிட்'டும் (pyramid) மகமத்அலி மசூதியும், உலகிலேயே நாகரிகம் முதல் முதல் எகிப்தில் பிறந்தது என்பதை நிரூபிக்கும் எகிப்திய மியூஸியமும்தான் எகிப்தின் பெருமைச் சின்னங்கள். இவைகளை அடுத்த கட்டுரையில் விவரிக்கிறேன்.

ருசிமிக்க சாப்பாட்டை தயாரித்திருந்தேன்
. . . எப்படி என்று எனக்கே தெரியவில்லை!

என்றும்போல்தான் சாப்பாட்டு வேளையில் இன்றும் அமளி. என் கணவர் வழக்கம்போல் தாமதித்து வந்தார். குழந்தைகள் கை, கால் கழுவும் ஆரவாரம். கைக்குழந்தை ஒரு பக்கம் அலறியது. எல்லோரும் ஒருவாறுக அமர்ந்ததும், சாப்பாட்டைப் பரிமாறினேன். அப்பொழுதுதான் ஒரு அதிசயம் நடந்தது. ஒரே நிசப்தம். ஒரு சாப்பாட்டுப் போட்டி நடப்பது போலிருந்தது. இது எங்கள் வீடுதானு என்று நான் வியந்தேன். இத்தகைய மாறுதலேற்பட நான் என்னதான் செய்தேன்!

என் கணவர் எப்பொழுதுமே என் சமையலில் குற்றம் கண்டு பிடிப்பார். இவ்விஷயத்தில் என் குழந்தைகளும் தகப்பனுரையே கொண்டிருந்தனர். இன்று ஏனே ஒருவரும் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. சாப்பாட்டிற்கு பிறகு காலையில் என்ன சாமான்கள் வாங்கினேன் என்று நினைத்துப் பார்த்தேன். அதே காய்கறிகள்தான் . . . வாடிக்கைக் கடையிலிருந்து வாங்கும் அதே பருப்பு, உப்புத்தான் . . . ஹாங்! ஞாபகத்துக்கு வந்துவிட்டது. புதிதாக ஒன்று வாங்கத்தான் செய்தேன்!

அன்று காலையில்தான் டால்டா வனஸ்பதி உபயோகித்துப் பார்க்கலாம் என்று திட்டமிட்டேன். கடைக்காரர் பொரிக்கவும், வறுக்கவும், தித்திப்புப் பண்டம் தயாரிக்கவும் ஏற்ற சிறந்த தாவரக் கொழுப்பு என்று அதை சிபார்சு செய்தார். அவர் காற்றுப்புகாத சீல்செய்த டின் ஒன்றை என்கையில் தந்தவாறு, "உணவின் இயற்கை ருசியை இது பரிமளிக்கச் செய்கிறது. அதனுல் உங்கள் வீட்டில் எல்லோரும் சாப்பாட்டை ரசிப்பார்கள்" என்றுர்.

ஆம். இந்த மாறுதலுக்குக்காரணம் கட்டாயம் டால்டா வனஸ்பதியில் சமைத்ததுதான். அது எல்லாவித சமையல்களுக்கும் சிறந்தது. அன்றியும் ஞாபகமிருக்கட்டும்—சமையல் கொழுப்பை சில்லறையாக கடையில் வாங்குவது ஆரோக்கியத்திற்கு கெடுதல் விளைவிக்கலாம். மிகவும் விலையுயர்ந்த கொழுப்பும் கலப்படமாகவும், ஈ, அழுக்கு இவைகள் காரணமாக அசுத்தமானதாகவுமிருக்கலாம். காற்றுப்புகாத சீல்செய்த டின்னில் கிடைக்கும் டால்டா வனஸ்பதி எப்பொழுதும் புத்தம் புதிதாகவும், சுத்தமாகவும், ஆரோக்கியமளிப்பதாகவுமிருக்கிறது. மேலும் இது லாபகரமானது. மறுமுறை சாமான்கள் வாங்க கடைக்குச் செல்லும் பொழுது டால்டா வனஸ்பதியை உங்கள் ஜாபிதாவின் முதலில் குறித்துக் கொள்ளுங்கள்!

10, 5, 2, 1, ½ பவுண்டு டின்களில் கிடைக்கிறது. டால்டா வனஸ்பதியில் இப்பொழுது விடமின் 'ஏ', 'டி' இருக்கிறது.

ஊட்டமளிக்கும் உணவை
உங்கள் குடும்பத்தினருக்கு
அளியுங்கள்.

இலவச ஆலோசனைகளுக்கு
இன்றே எழுதுங்கள்:
தி டால்டா அட்வைஸரி
ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353,
பம்பாய் 1

மர அடையாளமுள்ள
டின்னைப் பார்த்து
வாங்குங்கள்.

டால்டா வனஸ்பதி

சிறந்த சமையல் — குறைந்த செலவு

HVM. 213-X52 TM

"வெண்மையான, சுத்தமான

லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரை மிகவும்

மிருதுவானது, நறுமணம் கமழ்வது..."

என்று கூறுகிறார்

குமாரி கமலா

லக்ஸ் டாய்லட் சோப் இவ்வளவு வெண்மையாயிருப்பதின் காரணம் என்ன? அதை தயாரிக்க மிகவும் சுத்தமான எண்ணெய்களையே உபயோகிக்கப்படுகிறது என்பது தான். குமாரி கமலா கூறுவதாவது: "எனது பூரண அழகு பராமரிப்பும் லக்ஸ் டாய்லட் சோப் உபயோகிப்பதுதான். அதன் சுறுசுறுப்பான, மென்மையான நுரை ஆழப் புகுந்து சுத்தம்செய்து சருமத்தைப் பட்டுப் போல் மென்மையாகவும், தெளிவாகவும் வைத்திருக்கிறது. நீங்களும் அதை தினமும் உபயோகித்து உங்கள் வதனத்தையும் அழகாக வைத்துக்கொள்ளுங்கள். அதன் நறுமணத்தையும் நீங்கள் மிகவும் விரும்புவீர்கள்!"

"... அதனால்தான் என் வதனத்தை தெளிவாகவும், மலர்ச்சியோடும் வைத்திருக்க லக்ஸ் டாய்லட் சோப்பையே நம்பியிருக்கிறேன்!"

முக்கிய செய்தி!

தலைமுதல் கால்வரை
கவர்ச்சி அளிக்க
புதிய பெரிய சைஸிலும்
இப்பொழுது கிடைக்கிறது!
இன்றே வாங்கி உபயோகியுங்கள்!

★ சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப் ★

LTS. 428-X52 TM

தொடர் கதை:

அமரத்வம்

எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்

அத்தியாயம் 1

வானம் இடிந்து விழுந்தாலும்...

'சந்திரா, நீ ஆயிரம் சொன்னாலும் உண்மை ஒன்றுதானே. பெண்களுடைய சுதந்திரத்திற்கு ஒரு எல்லை உண்டு. இந்த எல்லையை மீறினால் அவர்கள் பெண்மையை இழக்கின்றனர். ஆண்மை, பெண்மை என்பவை இரண்டு வேறுபட்ட தன்மைகள் என்பது ஒப்புக்கொள்ளப் பட்டால், பெண்மையை இயற்கையாகச் சரீரத்தில், உள்ளத்தில். அவயவங்களில் பெற்றவர்கள் இந்த நிலையை மீறமுடியாது. நம் நாட்டில் பெண்கள் எப்பொழுதுமே இந்த எல்லைக்கோடு போட்ட சுதந்திரத்தை அனுபவித்து வந்திருக்கின்றனர். இப்பொழுது இயர்கையாகவும், செயர்கையாகவும் உள்ள பாகுபாடுகள் மாற வேண்டுமென்பது உன்னுடைய எண்ணமா? அவ்விதமானால் உன்னுடைய அந்த லக்ஷ்யம் கைகூடுவது கடினம். ஏன்? இயற்கையால் போடப்பட்ட எல்லைக்கோடுதான் காரணம். பெண்ணின் சரீரத்தில், அவயவங்களில் வேறுபாடுகள், உள்ளத்தில் உள்ள மிருதுத்தன்மை, இவைகளை நிமிஷத்தில் மாற்றமுடியுமா? பெண்கள் இல்லையேல், பெண்மைத்தனம் இல்லையேல், உலகம் இவ்வளவு நாட்கள் பிறப்பு, இறப்பு என்ற பெரிய வட்டத்தின் முடிவை எப்பொழுதோ கண்டிருக்கும். இந்த மாதிரியான பிரளயத்தை உண்டுபண்ணுவது சுலபமல்ல' என்று விசு சொன்னது ராமச்சந்திரனுடைய நெஞ்சைத் தொட்டதாகத் தெரியவில்லை. ஒரு புன்முறுவல் அவன் முகத்தில் சாயைபோல் பரவிச் சென்றது விசுவின் கூரிய கண்களுக்கே தெரிந்தன. இவ்வளவு பிரசங்கத்தைச் செய்தும், ராமச்சந்திரனுடைய மனதைத் திருப்ப முடியவில்லையே என்று விசு ஏமாற்றமடைந்ததாகவும் தெரியவில்லை. ராமச்சந்திரனை இந்த மாதிரியான பிரசங்கங்களால் மாற்றிவிடலாம் என்ற நம்பிக்கையுடன் விசு தன் கருத்துக்களை வெளியிடவில்லை. தனக்கும் ஒரு கக்ஷி இருக்கிறது, தனக்கும் வேறுபட்ட அபிப்பிராயம் கொள்வதற்குள்ள தகுந்த முகாந்தரம் இருந்தது, ஆதாரம் இருந்தது என்று தெரிவிக்கவே விரும்பினான். இது தர்க்கப் போர். தர்க்கப் போரில் வெற்றியோ, தோல்வியோ ஏற்பட்டதால் மனிதர்கள் தங்களுடைய வெகு நாளைய லக்ஷ்யங்களை மாற்றிக் கொண்டது துர்லபம்.

விசுவிற்குப் பெண்கள் எப்படியிருக்க வேண்டும் என்பதில் அலாதி அபிப்பிராயங்கள் உண்டு. பெண்கள் சுதந்திரம் சில விஷயங்களில் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று எண்ணிய போதிலும், பெண்களின் சக்திதான் உலகத்திற்கு ஆக்கத்தை அளிப்பது. அது தான் உலகத்தை அழிவிலிருந்து காப்பாற்றுவது என்று நினைப்பவன். விசுவின் அபிப்பிராயங்கள், கருத்துக்கள் நல்லதா கெட்டதா என்று விகல்பமில்லாமல் மற்றவர்கள் தீர்மானிப்பதற்கு ஒரு இடையூறு

இருந்தது. அவன் ஒரு "போக்கு". குடும்பத்தினர் இந்தப் "போக்கை" மதிப்பிட்டது, அவனுக்குச் சாதகமாக இல்லை என்றே கொள்ளவேண்டும். பல முக்கியமான சந்தர்ப்பங்களில் அவன் நடந்துகொண்ட முறை அவனிடம் வெறுப்பை உண்டு பண்ணுவிட்டாலும் அவன் வார்த்தைகளில் மதிப்பை ஏற்படுத்தவில்லை. தீர்மானமாகவும், தைரியமாகவும், தன்னம்பிக்கையுடனும் காரியங்களைச்செய்யாததால் "பிறர் மதிப்பு" என்னும் மதிப்பில்லாத பொருளை யிழந்திருந்தான்.

விசு அறிவில் போதிய அளவு முதிர்ச்சி பெற்றிருந்தான் என்றே சொல்ல வேண்டும். இருந்த போதிலும் மனது என்பது கட்டிலடங்காத குதிரை. நம்மையும் மீறி, சில சமயம் தாவிக் குதிப்பது உண்டு. எந்த விஷயத்தைப்பற்றிக் கடுமையாகவும், தீவிரமாகவும் பேசவேண்டும், எதைப்பற்றி விளையாட்டாகப் பேசவேண்டும் என்று விசுவிற்குத் தெரிந்திருந்தும், மனக்குரங்கு கட்டைமீறித் தாவிக் குதித்தது. அபிப்பிராயங்களைச் சீர்தூக்கிச் சொல்லவேண்டிய சந்தர்ப்பங்கள் சிலவற்றில் அவன் தவறிவிட்டான்.

இதற்கு எதிர்ப்படையானவன் ராமச்சந்திரன். லக்ஷ்யவாதி என்று சொல்ல முடியாது. காரியவாதி என்று தீர்மானமாகச் சொல்லலாம். அவனுக்கு மனச்சாக்ஷியென்பது காலப்போக்கில் இல்லாமலே போய்விட்டது. மேல்நாட்டினரின் பழக்க வழக்கங்களில் மோகம் உள்ளவன். தன்னுடைய மதத்தைப் பற்றி ஒன்றும் தெரியாவிட்டாலும் அதைப்பற்றித் தூற்றுவதற்கு அஞ்சான்.

பல நாட்களாகவே இவர்களுக்குள் இருந்த அபிப்பிராய பேதம் உருவாகிக்கொண்டு வந்தது. சரஸுவைப் படிக்கவைப்பதுபற்றிச் சர்ச்சை செய்யப்படாவிட்டாலும், தன் அபிப்பிராயத்திலிருந்து, தாயார் ருக்மணியும் சகோதரன் ராமச்சந்திரனும் வேறுபட்டிருக்கிறார்கள் என்ற எண்ணம் விசுவிற்கு இருந்தது. இன்று குடும்பத்தினர் எல்லோருமே வீட்டு ஹாலில் சாப்பாட்டிற்குப் பிறகு கூடியிருந்தனர். தகப்பனார் இறந்த பிறகு, வீட்டின் விவகாரங்களில் தலைமை வகிக்கப் பாத்தியதைப் பெற்றவன் விசு. ஆனால் அந்தப் பாத்தியதையை இழந்திருந்தான். தாயார் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதில் அவனுக்குத் திருப்திதான். இருந்தபோதிலும், இந்தப் பொறுப்பை வகிக்கக்கூடிய அனுபவமும், சக்தியும் பல விஷயங்களில் அவளுக்கு இல்லை என்பதைச் சமீபகாலத்தில் பலதடவைகள் அவன் கண்டிருக்கிறான். இப்பொழுது அவன் தீர்மானிக்கவேண்டியது அவன் அருமைத் தங்கை சரஸுவைப்பற்றியது. இந்த விஷயத்தில் அவன் அசிரத்தையாக இருந்துவிட முடியாது.

சரஸு பல வர்ணங்களுடன் ஜகஜ்ஜோதியாக மின்னும் புஷ்பம். தூரத்திலிருந்து பார்க்கும் எவரையும் வர்ணத்தின் ரம்யத்தினாலோ, அல்லது வாசனையினாலோ சில புஷ்பங்கள் மனிதர்களின் மனதைக் கவரும். நுணு புஷ்பம் வாசனையில் எந்தப் புஷ்பத்தையும்விடக் குறைவில்லை. இந்தப் புஷ்பம் பெரிதாகப் புகழப்படுவதில்லை. ரோஜாவின் சுகந்தமும், தாமரையின் அழகும் உள்ள புஷ்பம், ஏதாவது உண்டு என்றால் அத்துடன் சரஸுவை ஒப்பிடலாம். சரஸுவைப் பற்றி இம்மாதிரிதான் விசு மதிப்பிட்டிருந்தான். சாதாரணமாகச் சந்திரனுடன் தர்க்கத்தில் ஈடுபடாதவன், சரஸுவிடம் இருந்த தனி அன்பாலேயே பேசத் துணிந்தான்.

ராமச்சந்திரனுக்கும் சரஸுவிடம் அளவிலாத அன்பு இருந்தது. தகப்பனார் இறந்த பிறகு சரஸுவின் பிற்கால வாழ்க்கையை உருவகப் படுத்த வேண்டியது தன் கடமையென்று நினைத்தான். விசுவிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைக்கப் பயந்தான். 'பத்தாம் பசலி'க் கொள்கைகளையுடைய விசுவிடம் சரஸுவை ஒப்படைத்தால், குரங்கின் கையில் பூமாலையைக் கொடுத்தது போல்தான்.

சரஸுவின் பிற்காலம் எப்படியிருக்க வேண்டும் என்பதை மனதில் சித்திரித்துக்கொண்டு அடிக்கடி சந்தோஷப்பட்டான். சென்னையில் உள்ள பெண்கள் எல்லோருமே இன்னும் அடிமைத் தளைகளைத் தகர்த்து எறியவில்லையென்று நினைத்தான். அவ்விதமில்லாமல் சரஸுவை உயர்ந்த படிப்புகள் படிக்கவைத்து, சிறந்த நாகரிகப் பெண்மணியாக விளங்க வைக்கவேண்டுமென்பது அவன் ஆசை. கல்லூரியில் சரஸுவைப் படிக்க வைப்பதற்கு விசு ஆக்ஷேபணை சொன்னதும் ராமச்சந்திரனுக்கு 'இந்த முட்டாளுடனும் நாம் பேச வேண்டியிருக்கிறதே' என்று நினைத்துக் குமுறினான்.

"சரஸுவைப் படிக்க வைக்க வேண்டுமென்று உங்கள் தகப்பனாரே சொல்லிக் கொண்டிருந்தார். அவருடைய ஆசையை உத்தேசித்தாவது அவளைப் படிக்க வைக்கவேண்டியது அவசியம். சரஸு அப்படிப் பெரியவளாகவும் வளர்ந்து விடவில்லையே. கல்யாணம் என்று ஒன்று ஆகிவிட்டால் அவள் எங்கு படிக்கப் போகிறாள். ஏதோ இப்பொழுது படிக்க வசதியிருக்கிறது. அனாவசிய வம்புகள் இல்லாமல் படிக்கத்தான் படிக்கட்டுமே" என்று ருக்மணியம்மாள் தன் எண்ணத்தைச் சொன்னாள்.

"அம்மா, நான் சரஸு படிக்கக்கூடாது, முட்டாளாக இருக்க வேண்டுமென்று சொல்கிறேன். வெள்ளைக்காரன் படிப்பு வேண்டாமென்று தான் சொல்லுகிறேன்."

"விசுவின் அசட்டுக் கொள்கைகளை என் காதால் கேட்கக்கூட வெறுப்பாக இருக்கிறது.

இந்த விஷயத்தில் யாருடைய அபிப்பிராயத்தையும் கேட்பதில் பிரயோசனமில்லை. சரஸுவைப் படிக்க வைப்பதை யாரும் தடுக்கமுடியாது, நாம் இருப்பது இருபதாவது நூற்றாண்டு. பதினெட்டாவது நூற்றாண்டில் இப்பொழுது போய் வசிக்கமுடியுமா?" என்றுசொல்லிவிட்டுக் கடைக் கண்ணால் விசுவின் முகபாவத்தைக் கவனித்தான்.

விவாதம் பலத்தது. ருக்மணியம்மாள் சொற்போரிலிருந்து மல்யுத்தத்தில் முடியாமல் இருக்க வேண்டுமேயென்று பயந்தாள்.

சரஸு இதுவரையில் விவாதத்தில் கலந்து கொள்ளாமல் தூரத்தில் இருந்து கவனித்துக் கொண்டிருந்தாள், நிலைமையில் நெருக்கடி ஏற்பட்டுவிட்டதைக் கவனித்து விசுவின் பக்கத்தில் இருந்த ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு,

"அண்ணா, நீ என்னை இங்கிலீஷ் படிப்பு படிக்கக்கூடாது. சம்ஸ்கிருதத்தில் தேர்ச்சிபெற்று, சாஸ்திரங்கள், இதிகாசங்கள் இவைகளில் பாண்டித்யம் பெறவேண்டும், சங்கீதம், சித்திரம் போன்ற ரசிக கலைகளில் ஈடுபடவேண்டும், பிற்காலத்தில் குடும்பத்தின் ஆதார சக்தியாகவும், ஜீவ சக்தியாகவும், அதி தேவதையாகவும் இருக்க வேண்டுமென்று விரும்புகிறாயல்லவா? அம்மாதிரியான கலாசாலைகள் இதுவரையில் எங்கும் நிர்மாணிக்கப்படாதது ஒரு பெரிய குறை. இந்தக் குறையை நீக்கக்கூடிய பொறுப்பை உன்னைப் போன்றவர்கள்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுவரையில் இங்கிலீஷ் படிப்பைப் புறக்கணிப்பதில் லாபமில்லை. என்னுடைய ஆசையையும், மற்றவர்கள் ஆசையையும் நீ ஏன் கெடுக்க வேண்டும்? உன்னுடைய பூர்ண சம்மதம் பெற்றுக்கொண்டே நான் சேருகிறேன். உனக்கு இது வரையில் இஷ்டமில்லையென்றாலும்கூட இனி சம்மதமில்லாமல் இருக்க முடியாது. சம்மதம் என்று சொன்னால்தான் நானே அப்புறம் நகருவேன்!" என்று சொல்லிவிட்டு அவன் எதிரில் நாற்காலியை நகர்த்தி உட்கார்ந்து கொண்டாள்.

"சரஸு, உன் பேச்சு சாதுர்யத்தைக் காட்டுகிறதே தவிர, பொறுப்புள்ளதாக இல்லை. என்னுடைய விருப்பப்படி நீ நடப்பதாக இருந்தால், எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆங்கிலப் படிப்பு வேண்டாம் என்றே சொல்வேன். ஆனால் உன் விருப்பம் கல்லூரியில் சேரவேண்டும் என்றால் நான் அதைத் தடுக்கப்போவதில்லை" என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டு ஆசனத்தை விட்டு எழுந்தான்.

விசு ஹாலை விட்டுப் போனபிறகு மற்ற மூவரும் சிறிது நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தனர். ஒவ்வொருவர் மனதிலும் ஒவ்வொரு விதமான போராட்டம் நடந்துகொண்டிருந்தது. ருக்மணி அம்மாள் விசுவின் பேச்சில் சில உண்மைகள் இருப்பதை உணர்ந்தாள். இருந்தாலும் காலத்திற்கு உகந்ததாக இல்லாமலும், கணவனுடைய விருப்பத்திற்கு மாறுபட்டதாகவும் இருந்ததால் ராமச்சந்திரனுடைய பக்கமே 'சாயும்படி' நேர்ந்தது.

சரஸு எல்லோரையும்விடச் சீக்கிரத்திலேயே முடிவு கட்டிவிட்டாள். 'அம்மா, உலகமே எதிர்த்து நின்றாலும் நான் படிக்கத்தான் போகிறேன். என் இஷ்டத்திற்கு விரோதமாக யார் எது சொன்னாலும் கேட்கப்போவதில்லை.' என்று சொன்னபிறகுதான் மனதில் இருந்த சந்தேக நிலையை மற்றவர்கள் அகற்றினர்.

சரஸு அன்று டென்னிஸ் விளையாடக்கூடப் போகவில்லை. வெகுநேரம்வரை கதவைச் சார்த்திக்கொண்டு ரூமில் தனித்து உட்கார்ந்து கொண்டிருந்தாள். தன்னுடைய மனதில் இருந்த ஒரு பெரிய வேட்கையை, பெரிய போராட்டத்திற்குப் பிறகு ஒதுக்கித் தள்ளினாள். ஒரு கடின சோதனைக்காலம் காத்திருந்தது.

அத்தியாயம் 2

"ஆபத்து காலத்தில் என்னை நினைத்துக்கொள்"— கீதையில் பகவான்.

விசு கீதையை வைத்துக்கொண்டு படித்துக் கொண்டிருந்தான். சரஸு அவனை உன்னிப்பாகக் கவனிப்பதை அவன் கவனிக்கவில்லை. அன்று நடந்த விவாதத்திற்குப் பிறகு விசு யாருடனும் அதிகமாகப் பேசவில்லை. தனிமையை நாடிச் சென்றான். புஸ்தகங்களைப் படிப்பதில் காலத்தைக் கழித்தான். மற்றச் சமயங்களில் கண்களை மூடிக்கொண்டு மணிக் கணக்கில் ஒரே நிலையில் உட்கார்ந்திருந்தான்.

நம்முடைய மதம் பெரிது. சாஸ்திரம் பெரிது. முன்னோர்கள் பெரியவர்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. முன்னோர்கள் கண்டு, அனுபவித்து, சந்தோஷப்பட்டதாகச் சொல்லப்படும் அந்தப் பாதையில் தானும் செல்ல விரும்பினான். சரஸு இம்மாதிரியான கர்ம வீரனைத்தான் தூரத்தில் உட்கார்ந்துகொண்டு ஆச்சர்யத்துடன் கவனித்துக்கொண்டிருந்தாள். எந்த எல்லையைக் குறியாக வைத்துக்கொண்டு விசு பாடு படுகிறான்? அவ்விதமான லக்ஷ்யம் தனக்கும் உண்டா? இது மாதிரியான கேள்விகள் மின்னல்போல் தோன்றி மறைந்தன.

எப்பொழுதும் விசுவுடன் கீதையைப்பற்றிச் சர்ச்சை செய்யவரும் சுதர்சனன் வந்துவிட்டால், உடனே ஓட்டம் பிடிக்கும் அவளே அன்று அவர்கள் சர்ச்சையைக் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தாள். எங்கிருந்துதான்

சுதர்சனனுக்குச் சமாசாரம்] கிடைக்குமோ தெரியாது. தினசரி ஊரில் நடக்கும் அதிக்ர மங்களை ஒன்று பாக்கியில்லாமல் விசுவிடம் ஒப்புவித்து விடுவான். இந்தச் செய்திகளுக் கெல்லாம் முற்றுப்புள்ளி உலகத்தில் அதர்மம் மலிந்துவிட்டது. கலியின் லீலைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன. பிற்காலத்தைப்பற்றி நினைக்கும்பொழுது என் குடல் நடுங்குகிறது என்ற பல்லவிதான்.

சுதர்சனனுக்கும், விசுவிற்கும் பல விதத்தில் வேறுபாடுகள் உண்டு. சுதர்சனன் ரத்தத்தில் குழந்தைப் பருவத்திலிருந்து ஊறிய சில எண்ணங்களுக்கு மாறுபாடாக எது நடந்தாலும் பிரளயமே வந்துவிட்டது என்று நம்பு கின்றவன். உண்மை மதக் கோட்பாடுகள் என்ன? அந்தக் கோட்பாடுகள் தினசரி வாழ்க் கையில் அநுசரிக்கக்கூடியவையா? நம்மைச்சுற்றி நடக்கும் சம்பவங்களுக்கு இந்த அளவுகோலை உபயோகப்படுத்த முடியுமா? இம்மாதிரி விஷயங் களைப்பற்றிச் சிந்திக்கவே மாட்டான் சுதர்சனன். பெண்கள் எதேச்சையாகத் திரிவதையும், ஆண் களுக்குச் சரி நிகர் சமனாக உத்தியோகங்கள் செய் வதையும், மற்ற வாழ்க்கைத் துறைகளில் ஈடுபடு வதையும், சுதர்சனன் மதக்கோட்பாடுகளுக்கு விரோதம் என்று நினைத்தான். ஆனால் அந்த மதக்கோட்பாடுகளை அநுசரித்தால் எங்கு அழைத்துச் செல்லும். எந்தப் பெரிய காரியத் தைச் சாதிக்கலாம் என்ற விஷயம் அவனுக் குத் தெரியாது. உலகத்தில் நடப்பது எல்லாம் அவனுடைய குறுகிய உள்ளத்தில் பிரளய காலத் தைச் சீக்கிரப் படுத்துவதுபோல் பட்டது.

விசு மதத்தின் சாரத்தை அறிந்தவன். மதத் தின் கோட்பாடுகளை அநுசரிப்பதால் எந்த லக்ஷ் யத்தை அடையலாம், எதிர்பார்க்கலாம் என் பதை அறிந்தவன். அந்த எல்லையை, லக்ஷ் யத்தை அடையத்தான் அவன் பாடுபட்டான். மற்றவர்களும் தங்களை அறியாமலே இந்த எல்லையை அடையத்தான் விரும்பினார்கள் என் றும் அவன் நம்பினான்.

விசுவின் அபிப்பிராயங்களையோ, விவாதங் களையோ காது கொடுத்துக்கேட்க இஷ்டப் படாதவள், இன்று அவன் பேச்சிலும் ஏதோ கவர்ச்சி இருப்பதைக் கண்டாள் சரஸு, தன்னை யறியாமலே அவள் சுதர்சனனை உத்தேசித்துச் செய்த சொற்பொழிவைச் செவிசாய்த்துக் கேட்டாள்.

"ஹிந்து தர்மம் 1000 வருஷங்களுக்கு முன் எப்படியிருந்தது என்பதைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியம் என்ன? ஒவ்வொரு நூற் றூண்டிலும் இந்தத்தர்மம் மாறுபாட்டை அடைந் திருக்கிறது. சங்கரர், ராமாநுஜர், மத்வாசாரி யார் முதலியோர் ஒருவருக்கொருவர் முரண்பா டான தர்மத்தைப் போதித்திருக்கின்றனர். இவர்கள் மூவரில் யாரை நாம் நம்முடைய மதத் தின் விரோதி என்று சொல்ல முடியும்? ஒவ் வொருவரும் ஒரோரு விதத்தில் தங்கள் மேதை யைக் காண்பித்திருக்கின்றனர். ஒவ்வொருவரும் ஹிந்து தர்மத்திற்கு ஆக்கமளித்திருக்கின்றனர். அவர்களுடைய அபிப்பிராயங்களில், மதக்கோட் பாடுகளில், வேறுபாடிருப்பதின் காரணத்தை அறியவேண்டுமானால் இந்தப் பெரியவர்கள் ஜீவி தமாக இருந்த காலத்தில் இருந்த சமூகத்தின் நிலையை அறிய வேண்டும். அவர்கள் காலங்களில் இருந்த சமூகக் கோளாறுகளை அகற்றவே அவர்கள் பாடுபட்டிருக்க வேண்டும். சமூகம் தேக்கத்தை விரும்புவதில்லை. முன்னேறுவதற்கே விரும்புகிறது.

நாம் இப்பொழுது பார்க்கும், அறியும், சமூக மும் முன்னேச்சிச் செல்வதற்குப் பெரிய முயற்சி செய்கிறது. இம்முயற்சிக்கு விரோதமாக எந்த விதமான சக்தி வேலை செய்தாலும் வெற்றி பெறப்போவதில்லை. அடிப்படைத் தத்துவங் களுக்கு விரோதமில்லாமல், இந்த முன்னேற்றம் இருக்கவேண்டும் என்றே நாம் விரும்பலாம். பல நூற்றூண்டுகளுக்கு முன் இருந்த நிலைமையை மறுபடியும் நிலை நிறுத்த வேண்டுமென்று நினைப்பது பயித்தியக்காரத்தனம். கீதையை நீ கவனமாகப் படித்தால் இந்த உண்மையை அறியலாம். என்று விசு சொன்னதும் அவனு டன் கை குலுக்க வேண்டுமென்று சரஸு நினைத்தாள்.

தெருவில் பெரிய இரைச்சல் கேட்டது. சரஸு சுதர்சனன் முதலியோர் பரபரப்புடன் தெருவை நோக்கி ஓடினர். விசு கீதையிலிருந்து தன் கவனத்தைத் திருப்ப வில்லை. "தீ தீ ஓடிவாருங் கள்" என்ற கூக்குரலும். ஜனங்கள் ஓட்டம் பிடிக்கும் சப்தமும் 'ஐயோ' என்ற தீனக் குரலும் விசுவிற்குக் கேட்டன. அவனுடைய முகத்திலும் சிறிது படபடப்பு ஏற்பட்டது. ஆனால், சிறிது நேரத்தில் படபடப்பு அடங்கி, கண்களை மூடிக்கொண்டு அசைவற்று உட்கார்ந்து விட்டான்.

ராமச்சந்திரன் வெளியில் சென்று விட்டு வீட்டிற்கு அப்பொழுது தான் திரும்பியவன். பலவீடுகள் தீப்பிடித்துக் கொண்டு ஜ்வாலை விட்டு எரிவதைக் கண்டு முன் பின் யோசியாமல் தீப்பிடித்து, எரியும் வீடுகளை நோக்கி ஓடினான். அன்று அவனுடைய எல்லையற்ற துணிச்சலைப் புகழாதவர்கள் இல்லை. ஆனால். தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டபொழுது, தீப்பிடித்து எரியும் ஒரு பெரிய கட்டிடத்திலிருந்து குதித்தான். பலத்த காயத்துடன் தப்பினான்.

ராமச்சந்திரனைக் கட்டுகளுடன் வீட்டில் கொண்டுவந்து சேர்த்த பொழுதும், விசு தன் நிஷ்டையிலிருந்து எழுந்திருக்கவில்லை. வீட்டில்

அன்று அவனுடன் யாரும் முகம் கொடுத்துப் பேசவில்லை. "கீதையை உடைப்பில் போடு. ஜீவகாருண்யத் தன்மை, மனிதத் தன்மையுள்ளவர்கள் இன்று கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருந்திருக்க முடியாது." இது போன்ற பேச்சுக்கள் விசுவின் காதில் அடிக்கடி விழுந்தன. ஆனால், அவன் முகத்தில் இருந்த சாந்த நிலைக்கு இதனால் பங்கம் ஏற்படவில்லை.

அத்தியாயம் 3

களங்கமும், எச்சரிக்கையும்

ராமச்சந்திரன் பி. ஏ. பரீக்ஷையில் ராஜதானியிலேயே முதன்மையாகப் பாஸ் செய்ததை உத்தேசித்து அவன் நண்பர்கள் எல்லோரும் ஒரு விருந்து நடத்தினர். கோபாலன், பிரபாகரன், சர்மா இதரர்கள் ஏற்பாடு செய்தால் விருந்தைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? பணக்கார மனிதர்கள் வீட்டுப் பிள்ளைகள். இந்தமாதிரியான தேநீர்க் கச்சேரிகள் அநேகம் நடத்திப் பழக்கமுள்ளவர்கள்.

ஒரு அழகிய தோட்டத்தில் இந்த விருந்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். சாயங்கால வேளையாகையால். பூக்களின் இயற்கையழகிற்குக் கதிரவனின் பொற்கிரணங்கள் மேலும் அழகையூட்டின. பூக்களின் மென்மையான சுகந்தத்துடன் பலவிதச் செயற்கை வாசனையும் சேர்ந்து மனதிற்கு ரம்மியமாக இருந்தது.

ரங்கு அங்குக் கூடியிருந்த யுவர்கள் கூட்டத்தில் கம்பீரத் தோற்றத்தில் முதல் பரிசு வாங்கியிருப்பான். யுவதிகள் எல்லோருக்கும் இந்த விஷயத்தில் வோட்டுச் செய்யும் உரிமையிருந்தால் அவர்கள் தங்கள் வாக்கை ரங்குவிற்கே கொடுத்திருப்பார்கள். சரஸுவிற்கு ரங்குவின் பரிச்சயம் இப்பொழுது தான்முதல் தடவையாக ஏற்பட்டது, ரங்குவின் நடை, உடை, பாவனை இவைகள் அவள் உள்ளத்தையும் கவர்ந்தன. சம்பாஷணை விஷயத்தில், அதுவும் பெண்களுக்குப் பிரீதியாகப் பேசுவதில், அவனுடன் போட்டியிடக் கூடிய திறமை யுள்ளவர்சள் அங்கு இல்லை. ரங்குவுடன் காலம் போவது கூடத் தெரியாமல் சரஸு அன்று சாயங்காலம் பேசினாள். விருந்திற்குப் பிறகு நண்பர்கள் சிறு, சிறு பிரிவாகப் பிரிந்து தோட்டத்தில் சுற்றிச் சுற்றி உலாவிவந்தனர்.

அந்தி மங்கி பூர்ண சந்திரனின் பால்போன்ற கிரணங்கள் தோட்டத்தின், செடி, கொடிகளின் மேல் தோய்ந்து, படிந்திருந்தது. ரங்குவும், சரஸுவும் கவிதை உலகில் சஞ்சரித்தனர். ரங்கு சரஸுவை ரதியென்று மதித்தான். அவள் அவனை மன்மதனாக மதித்தாள். சமுத்திரம் நல்ல நிலவொளியைக் கண்டதும் கொந்தளிக்கிறது. நிலவைக் காண்பதற்கு முன் இந்தக் கொந்தளிப்பு எங்கு ஒளிந்து கிடந்தது? நல்ல

வேனிற்காலத்தில் செடிகொடிகள் பூக்களைத் தாங்கி நிற்கின்றன. இதுவரையில் எங்கோ ஒளிந்துகிடந்த வண்டுகளும் காலத்தின் மாறுதலைஅறிந்து பூக்களைத்தேடி ஓடி வருகின்றன.

தோட்டத்தில் அன்று இருந்த சூழ்நிலையில் யுவர்களும், யுவதிகளும் உணர்ச்சி வசப்பட்டனர். கட்டுப்பாடுகள், சமூகம், பிற்கால வாழ்க்கை, தர்மம், அதர்மம், தத்துவங்கள், லக்ஷ்யங்கள் இவைகள் உணர்ச்சிவெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. அன்று நடந்த விஷயங்களைத் தனிமையில் உட்கார்ந்து சிந்திக்கும்பொழுது பெண்கள் வெட்கினர். சரஸு இதயத்தில் ஒரு பெரிய மலை உட்கார்ந்தது போன்ற உணர்ச்சியை அனுபவித்தாள். மனச்சாக்ஷி ஈட்டியால் குத்தியது.

மறுநாள் வயலூர் கிராமத்தில் போய் எஞ்சிய விடுமுறை நாட்களைக் கழிக்கலாம் என்று சொன்னதும், சரஸு, ராமச்சந்திரன் எல்லோரும் ஒப்புக்கொண்டனர். விசுவிற்கே இது ஆச்சர்யமாக இருந்தது. சரஸுவின் சுருங்கிய முகத்தைக் கண்டு அவன் திடுக்கிட்டான். அவள் உள்ளத்தில் இருந்த சுமையையும் அதன் காரணத்தையும் அறிந்திருந்தால் அவன் மூர்ச்சைபோட்டு விழுந்திருப்பான்.

கிராமத்தில் சிறியதாயாருடன் சம்பாஷணை செய்து, சிரித்து, விளையாடி சரஸு நாட்களைக் கழித்தாள். மன்மதனுடைய சேஷ்டையால் ஏற்பட்ட விபரீதங்களையும் ஒருவாறு மறந்தாள்.

ராமச்சந்திரன் பொதுவுடைமைக் கொள்கையைப்பற்றி அதிகம் படித்திருந்தான். சென்னையில் இருப்பவர்களுக்கு, பொதுவுடைமை, சம உடைமை, இதுபோன்ற ராஜீய விஷயங்கள் தெரியாமல இருப்பது அழகா? பொதுவுடைமைச் சங்கத்தில் மெம்பர் இல்லாமல் போனாலும் தன்னைப் பொதுவுடைமைக் கக்ஷியில் சேர்ந்தவனகவே மதித்தான். கிராமத்து ஜனங்களிடம் சலிப்பு இல்லாமல் பொதுவுடைமைக் கொள்கைகளைப் பற்றிப் பேசினன். புதுமை காரணமாகக் குடியானவர்கள் செவி சாய்த்துக் கேட்டனர். ஆனல் கிராமத்து மிராசுதார்கள் கோடை விடுமுறையின் முடிவை எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தனர்.

விசுவிற்குக் கிராமத்து விஷயத்தில் பெரிய சிரத்தை ஏற்பட்டது. கிராமத்து ஜனங்கள் ஹிந்துக்கள் என்று கருதப்பட்ட போதிலும் ஹிந்து தர்மத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாமல் இருந்தனர். வயலூர் ஜனங்களின் தினசரி வாழ்க்கை முறை, பழக்கங்கள், வழக்கங்கள், பொருளாதார நிலை, பயிர் செய்யும் முறைகள் இவை போன்ற விஷயங்களைப்பற்றிப் புள்ளி விபரங்களைத் தினசரி சுற்று விசாரணையில் சேகரித்தான். மற்ற நேரத்தைத் தினசரி சிந்தனையில் கழித்தான். வாழ்க்கைப் பிரயாணத்தின் முடிவை அடையப் பல வழிகள் இருந்தபோதிலும், அவனைப் பொறுத்த வரையில் சமூக சேவையே இந்த லக்ஷ்யத்தை அடையச் சிறந்த வழியென்று உணர்ந்தான். ஆகையால், மற்றவர்கள் சென்னைக்குத் திரும்பும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கையில் இவன் அதைப் பற்றி முற்றிலும் மறந்திருந்தான்.

சரஸு, ராமச்சந்திரன் முதலியவர்கள், சென்னைக்குத் திரும்பிய பிறகு, விசு தன் பூரா கவனத்தையும் கிராம உத்தாரண விஷயத்தில் செலுத்தினன். காலியாகக் கிடந்த ஒரு கட்டிடத்தில் மத

விஷயங்களைப்பற்றிச் சாதாரண ஜனங்களுக்கு எடுத்துச் சொல்ல ஒரு பண்டிதரை ஏற்படுத்தினன். பெண் குழந்தைகளுக்கு ஹிந்து தர்மத்திற்கு முரண்படாத கல்வியைப் புகட்ட ஒரு கல்வி மன்றத்தையும் ஏற்படுத்தினன்.

விசுவின் கிராமப் பைத்தியம் எப்படி விஷம் ஏறுவதுபோல் உயர்ந்ததோ, அதேபோல் சரஸுவின் நாட்டியக்கலையில் உள்ள பைத்தியம் சென்னைக்குத் திரும்பிய பிறகு அதிகரித்தது. சிறந்த உழைப்பின் பலனைச் சில மாதங்களில் முன்னேறிச் சென்றாள்.

கண்ணாடி முன் நின்றுகொண்டு தன்னைத் தானே பார்த்து அடிக்கடி பிரமித்தாள். அவள் மேனியில் ஏற்பட்டிருந்த வசீகர மாறுதலை அவளைப் பார்த்தவர்கள் எல்லோருமே சுட்டிக் காட்டினர். உடம்பில் ஒரு வலிவும், தென்பும் இருப்பதைக்கண்டு சந்தோஷப்பட்டாள். ஆனால் அவள் உள்ளத்தில் சில உணர்ச்சிகள்—அடக்கப்பட்டு, கட்டிப்போடப்பட்டிருந்த உணர்ச்சிகள் பீறிட்டுக்கொண்டு எந்த நிமிஷத்திலும் அவளைக் காட்டிக்கொடுத்துவிடும் என்று பயந்தாள்.

உடல் வலிமை உயர்ந்ததே தவிர அவளுடைய மனோ வலிமை குறைந்தது. நாட்டியம் ஆடும் பொழுது அவள் தேகத்தில் ஏற்படும் ஒவ்வொரு அசைவும் அவள் உள்ளத்தில் அடக்கப்பட்டுக் கிடந்த ரகசிய உணர்ச்சிகளை, 'கிச்சுக்'கிச்சு' மூட்டிக் கிளப்பின. இந்த உணர்ச்சிகள் தெய்வீக உணர்ச்சிகளல்ல, தன்னிடம் இருக்கும் மிருக உணர்ச்சிதான் என்பதை அவள் மனச்சாக்ஷி ஒப்புக்கொண்டது. அதன் விளைவு என்ன என்று நினைத்து, நினைத்து அவள் மூளை சுழன்றது. பிற்காலம் பெரிய சூனியம் நிரம்பிய அந்தகாரமாகத் தோன்றியது. குடும்ப வாழ்க்கை, தனிவாழ்க்கை இதுபோன்ற பிரச்னைகளைப் பற்றி என்றும் நினையாதவள், இப்போது அவைகளைப் பற்றித் தீவிரமாக எண்ணுவதற்கு ஆரம்பித்தாள்.

குடும்ப வாழ்க்கை வேண்டுமென்றால், அதற்கு வேண்டிய தியாகபுத்தி, தன்னடக்கம், தெய்வீகத்தன்மை இவைகள் தன்னிடம் இல்லை என்று நம்பினாள். நாட்டியக்கலையில் ஈடுபட்டதின் விளைவாக அவளிடம் ஏற்பட்டிருந்த கீழ்த்தர உணர்ச்சிகள் கட்டிலடங்காதவை, பேய் போன்ற சக்தி படைத்தவை என்ற காரணத்தால் தனிவாழ்க்கை நடத்துவதில் உள்ள பெரிய ஆபத்துகளையும் உணர்ந்தாள். இந்தக் குழப்பங்களிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள அவள் செய்த முயற்சிகள் எல்லாம், அவைகளை அதிகப்படுத்துவதற்கே பயன்பட்டன!

ஒரு நாள் தபாலில் விசுவிடமிருந்து கடிதம் வந்ததும், சரஸுவிற்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் கடிதத்தைப் படித்ததும், அவள் உள்ளத்தின் உள்ளத்தில் பதுங்கிக் கிடந்த வேட்கைகள் விடுதலை பெற்று அவளைத் தத்தளிக்கச் செய்தன. மணிக்கணக்கில் சிந்தனையில் ஆழ்ந்தும் அவள் உள்ளத்தில் சாந்தி நிலவவில்லை.

பல விஷயங்களைப்பற்றிச் சர்ச்சை செய்து விட்டு விசு எழுதியிருந்தான், 'என்னுடைய தீவிரமான அபிப்பிராயம் என்னவெனில் மனிதன் பரிசுத்தமான தன்மையை அடைவதற்குப் பல நாட்கள் முயற்சி செய்ய வேண்டும். ஒரு நாள் திடீரென்று 'இனி பரிசுத்தனாக இருக்கப்போகிறேன்' என்று முடிவு கட்டி விட்டால் தானாகவே இந்த நிலையை அடைந்து விடமுடியாது.

'மனிதனிடம் இருக்கும் சக்தி அபூர்வமானது. கூரிய கத்தி போன்றது. கத்தியை மனிதர்களின் நன்மையின் பொருட்டும் உபயோகப்படுத்தலாம் அல்லது மனிதர்களின் நாசத்திற்காகவும் உபயோகிக்கலாம். மனிதத்தன்மை என்ற தேஜஸைக் காபந்து செய்து வளர்த்தால், ஆசை, காமம், குரோதம் போன்ற இருட்டைப் போக்கடிக்கலாம். இல்லையேல் இந்தச் சக்தி ஆதாரத்தையே அழித்து விடலாம். குழந்தைப் பருவத்திலிருந்தே இவ்விதம் தேஜோமயமான நிலையை அடையக்கூடிய பயிற்சியை அளிக்க வேண்டும்.

'எந்த மனிதனும் சாவை விரும்புவதில்லை. சாகாவரத்தையே வேண்டுகிறான். அமரநிலையை அடையத்தான் முன்னோர்களும் பாடுபட்டார்கள்; பெரிய முயற்சிகள் செய்தார்கள். அவர்களுக்கு அந்த நிலை கிட்டிற்று! நாமும் முயற்சி செய்தால் கிட்டாமலா போகும்?

'மந்திரம் என்பது பித்தலாட்டம் என்று நீ பேசியிருக்கிறாய்? ஒரு வெகுநுண்ணிய தாள் நான்கு பக்கமும் பிகுவாக இழுத்துக் கட்டப்பட்டிருக்கிறது என்று வைத்துக்கொள். அதன் முன்னிலையில் கடூரமான சப்தங்களை உண்டுபண்ணினால் அந்தத்தாள் கிழியக்கூடும். முறையோடு கூடிய சில சப்த அலைகளை உண்டு பண்ணியும் அந்தத்தாளை நாம் கிழித்துவிடலாம். மந்திரங்கள் சப்த அலைகளின் ஆராய்ச்சியின் மேல் ஏற்பட்டவை. சக்தி பொருந்தியவை. மனிதனின் நுண்ணிய ஆதார ஸ்தானங்களைத் தொட்டு, தட்டி எழுப்பக்கூடியவை."

விசுவின் கடிதத்தில் கண்டிருந்த மேல்கண்ட விஷயங்கள் தன்னுடைய பிரசங்கங்கள் ஒன்றிற்குப் பதில் என்பதை அவள் எளிதில் உணர்ந்து கொண்டாள்.

(தொடரும்)

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்,

(ஸ்தாபிதம் 1932)

Sir. A ராமஸ்வாமி முதலியார் K. C. S. I. D. C. L (OXON) (சேர்மன்)

சென்னை நகரத்தில் உள்ள காரியாலயங்கள்

நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் ரோடு; பெரியமேட்; திருவல்லிக்கேணி; மயிலாப்பூர்; & தியாகராயநகர்

கிளைகள்

அம்பாஸமுத்ரம்	மதுரை	திருநெல்வேலி ஜங்ஷன்
ஆம்பூர் (N. A. Dt)	மாயூரம்	திருநெல்வேலி டவுன்
சிதம்பரம்	பாலக்காடு	திருச்சிராப்பள்ளி
கூடலூர்	புதுக்கோட்டை	வேலூர்
ஈரோடு	ராமநாதபுரம்	விஜயபுரம்
காஞ்சீபுரம்	சீர்காழி	விழுப்புரம்
காரைக்குடி	தஞ்சாவூர்	&
கும்பகோணம்	தென்காசி	விருதுநகர்

சேமிப்புகளுக்குரிய வட்டி விகிதம்

ஸேவிங்ஸ் பாங்க்: ஒரு வருஷத்திற்கு 2½% வீதம் வட்டி கொடுக்கப்படும்.

மாதாந்தர சேமிப்பு & காஷ் சர்டிபிகேட்டுகள்: ஒரு வருஷத்திற்கு 4% to 4½% வீதம் காலத்திற்கேற்றபடி பயனளிக்கும்.

தவணை டிபாசிட்டுகள்:

City { ஒரு வருஷ தவணைக்கு 3% p. a வீதமும், இரண்டு வருஷத் தவணைக்கு 3¼% p. a. வீதமும்

Mofussil { ஒரு வருஷத் தவணைக்கு 3¼% வீதமும் இரண்டு வருஷத் தவணைக்கு 3½% வீதமும் வட்டி கொடுக்கப்படும்.

S. கிருஷ்ணஸ்வாமி
செக்ரடரி

குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

டோங்ரேயின் பாலாம்ருதம்

K. T. டோங்கரே அண் கோ லிட்., பம்பாய்-4

வேஷக்காரிகள்

காந்தா

சங்கீத நிகழ்ச்சி முடிந்ததும் ரேடியோவில் டாண் டாண் என ஒன்பது முறை மணி யோசை கேட்டது.

சேகரன் திடுக்கிட்டான்.

"மணி ஒன்பதாகிவிட்டதே! கல்யாணியை இன்னும் காணவில்லையே..." என்று முணகிக் கொண்டே ரேடியோவை நிறுத்திவிட்டு, மாடியிலிருந்து இறங்கி, பின் கட்டுப்பக்கம் சென்றான்.

"அம்மா... கல்யாணி ஏதாவது சொல்லி விட்டுப் போனாளா?... என்று கலவரத்துடன் கேட்டான்.

"அதென்னமோடா... எதுக்கு அவள் சொல் லிட்டுப் போறாள்... பெண்ணானா இப்படியா?... இங்கே போறேன்; அங்கே போறேன்னு ஒரு வார்த்தை ஆத்திலே இருக்கறவாகிட்டே சொல் லிட்டுப் போகணுமே...ஹூம்...உன் ஆம்படையாள் உன்னையும் மதிக்கிறதில்லே; மத்தவாளையும் மதிக்கறதில்லெ...ஊர்லே இருக்கிற பொம் மண்டாட்டிகளெள்ளாம் இப்படியா இருக்கா... தினம்-அதுவும் இப்ப ஒரு வாரமா எட்டு மணிக்கு முன்னாலே வீட்டுக்கு வர்ரதில்லே...அவ போறதும் வர்ரதும் எனக்கென்னவோ கொஞ் சம்கூட பிடிக்கலே... ஆம்படையான் சொன்னாத் தானே கேப்பள்..." என்று நீட்டி முழக்கிக் கொண்டிருந்த மரகதத்தின் வார்த்தைகளைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு மீண்டும் மாடிக்கே சென்றான்!

மாடியறை வெறிச்சோடிக்கிடந்தது. கல்யாணி இல்லாவிட்டால் அந்த வீடே வெறிச்சென்று தான் இருக்கிறது... அவள் இருந்தால், நிமிஷத் திற்கு ஒரு முறை மாடிக்கும் கீழுக்கும், தனது இனிமையான குரலில் எதாவது புதிய சினிமாப் பாட்டை முணகிக்கொண்டே ஓடி ஓடி நடப்பாளே...

"கழுதை... வரவர ரொம்பத் துளுத்துதான் போச்சு... பெண் சுதந்திரமாம், மண்ணாங்கட்டி யாம்... ஒன்பதுமணி வரைக்கும் இவளுக்கு வெளியில் என்ன வேலை...வரட்டும்" என்று நெஞ்சிற்குள் கருவியவாறு, நிமிஷத்திற்கொரு முறை கைக்கடிகாரத்தையும் தெரு முனையையும் கவனித்தவனாய் மாடி வராந்தாவில் முன்னும் பின்னும் உலாவிக்கொண்டிருந்தான் சேகரன்.

மணி ஒன்பதே கால்...தெரு முனையில் இருளைக்கிழித்துக்கொண்டு காரின் வெளிச்சம் பளீரிட்ட போதுதான், வெளியே லேசாக மழை தூறிக்கொண்டிருந்ததை அவன் கவனித்தான்...

"அடேடே... அவள் காரெடுத்துக்கொண்டு கூடப் போகவில்லையே" என்று அவன் மனம் பதைத்தபோது, தெரு முனையில் கண்ட அழகிய 'ஹில்மான்' கார் ஒய்யாரமாக அசைந்து அவன் பங்களாவின் முன்னே நின்றது.

'அது கிரிஜா வீட்டுக் கார் மாதிரி தெரிகிறதே!... என்று நினைத்தவுடன் அவன் பார்வை காரின் 'நம்பர் பிளேட்'டில் பாய்ந்தது... M. S. Z. 2122 ... 'ஆமாம் கிரிஜா வீட்டுக் கார் தான்' என்று நினைத்தவுடன் அவன் மனம் முணு முணுத்தபோதே, காரின் முன்புறக் கதவைத் திறந்துகொண்டு கல்யாணி இறங்கினாள்...

"யாரது... கல்யாணியா?..."

டிரைவர் ஸீட்டில்... யாரோ ஒரு ஆடவன்...

கிரிஜாவின் அண்ணன் சம்பத்... அந்தக் காலிப்பயலுடன், இரவில் தனிமையில், காரில்... சை... மானங்கெட்டவள்... பின்புற ஸீட்டுத்தான் காலியாக இருக்கிறதே... பின் ஏன் முன் ஸீட்டில், அவன் பக்கத்தில்..." என்றெல் லாம் சேகரின் மனம் ஆத்திரத்தால் குழம்பிய நேரத்தில் - வெளியே... 'சீரியோ...' என்று கைகளை ஆட்டினாள் கல்யாணி!

கார் நகர்ந்தது... அவனும் உள்ளிருந்தவாறே கைகளை ஆட்டினான்... தெருமுனையில் கார் திரும்பும் வரை பார்த்துக்கொண்டேயிருந்தாள் கல்யாணி! கார் மறைந்ததும் தன் கையிலிருந்த அழகிய பிளாஸ்டிக் பர்ஸைத் தூக்கிப்போட்டுப் பிடித்துத் துள்ளிக் குதித்துக்கொண்டு உள்ளே ஓடினாள்.

"ஆசை நாயகன் வருவாரே

பேசி மகிழ்வேன் அவருடனே"...

என்ற அடிகளை ஏதோ ஹிந்தி 'டியூனி'ல் அவள் முணு முணுத்தது சேகரின் காதுகளில் விழாமலில்லை!

ஆத்திரத்தால் அவன் முகம் சிவந்தது...

"வேஷக்காரி... என்னிடம் உயிரையே வைத்திருப்பதாகச் சொல்வதெல்லாம் பொய்!... வெறும் வேஷம்..." என்று சொல்லிப் பற்களைக் கடித்தான்.

'தட தட' வென மாடிப் படிகளில் ஏறிய கல்யாணி, தன் எதிரே முகம் சிவந்து நிற்கும் கணவனைக் கண்டு நடுங்கிப் போனாள்.

"ஓ!... நீங்கள் வந்து விட்டீர்களா?..." என்று புன்முறுவலுடன் கேட்டாள்... இன்னும் அவன் முகத்தில் தாண்டவமாடும் கோபத்தைக் கண்ட நடுக்கம் அவள் வார்த்தைகளில் தெரிந்தது.

"நான் வந்திருக்கட்டும்... நீ இவ்வளவு நாழி எங்கே போயிருந்தே..." என்று அதட்டலாகவே கேட்டான் சேகரன்...

"லேடீஸ் கிளப்புக்கு..."

"பொய்!... லேடீஸ் கிளப்பில் சம்பத்துக்கென்னடி வேலை?..." என்று அவன் கேட்டதும்... அவள் முகம் சிவந்தது... கோபத்தாலோ... அவமானத்தாலோ... அவள் பதிலொன்றும் பேசவில்லை...

"ஏன் நம்ம வீட்டில் கார் இல்லையா?... என்ன இருந்தாலும்... சம்பத் ஓட்டும் காரில் அவனுடன் ஒன்றாக உட்கார்ந்துகொண்டு போகும் 'குஷி' நம் வீட்டுக் காரில் இருக்குமா?..." என்று அவன் குத்தலாகக் கேட்டதும்...

"போதும்... வாயை மூடுங்கள்... அவனுடன் தான் காரில் வந்தேன்... அதிலென்ன தப்பு?... கிரிஜாவை நீங்க நம்ப கார்லே ஏத்திண்டு போனதில்லையா?... 'சோஷியல் மூவிங்'னு ஆம்பளைங்களுக்குமட்டும் தானா?..." என்று கோபமாகவே கேட்டாள் கல்யாணி!

"சம்பத்தைப்போல் நான் ஒன்றும் காலிப்பயலில்லே... என்னோடே கிரிஜா முன் ஸீட்டிலே இழைஞ்சி இழைஞ்சி உக்கார்ந்துக்கலே... தெரியுமோ..." என்று இளித்துக் காட்டினன் சேகர்!

"ஆமா... அப்படித்தான் இருப்பேன்... வழியை விடுங்கோ". அவன் கையைத் தள்ளிவிட்டுத் தன் அறைக்குள் நுழைந்தாள் கல்யாணி!

"உம்... அவளுக்கு என்ன திமிர்!... இருக்கட்டும் பார்க்கிறேன்..." என்று கருவினன் சேகர்!

மணி பத்து.

சேகர் தன் அறையில் சென்று மனப்பாரத்தைத் தாங்கமுடியாதவனுய்ப் படுக்கையில் வீழ்ந்தான்.

சேகருக்கும் கல்யாணிக்கும் மணமாகி இரண்டு வருஷங்கள் தாளுகின்றன.

கல்யாணியும் சேகரும் ஒன்ருகக் காலேஜில் படித்தவர்கள். அவளும் பீ. ஏ. வரை படித்தவள்தான். கல்யாணியின் தகப்பனர் பிரபல வக்கீல். சேகரைக்காட்டிலும் செல்வம் மிகுந்தவர். கல்யாணி அவருக்கு ஒரே பெண்ணுதலின் செல்வமாக, சகல சுதந்திரத்துடனும் வளர்க்கப்பட்டவள்.

கல்யாணி, பிறவிக் குறும்புக்காரி!

சேகர்-முரடனல்ல; பொறுமைசாலிதான்.

என்ருலும், தன் மனைவி, தன்னிஷ்டபடி எங்கெங்கோ சுற்றுவதும்—அதுகூட பெரிய விஷயமல்ல; ஊரறிந்த காலிப்பயல் சம்பத்தோடு ஜோடியாகக் காரில் வருவதென்ருல்... அதை அவனால் பொறுக்க முடியவில்லை!

அவள் படித்தவள், நாகரிகம் தெரிந்தவள் என்பதையெல்லாம் அவனும் ஒப்புக்கொள்வான்!... அதனல் அவள் தன்னை அலட்சியம் செய்கிருள் என்ற எண்ணம் ஏற்பட்ட பின் அவன் மனம் அவளைப்பற்றி மிக மோசமாக நினைத்து வெறுத்தது! அவன் மனம் அவமானத்தாலும் கோபத்தாலும் பொங்கிக் குமுறியது! மேலும் அதைப் பற்றி அவளிடம் கேட்பதே அவனுக்கு அவமானமானதாக இருந்தது!

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு, சேகரன் கல்யாணியிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை. தன்னை மதிக்காதவளிடம் என்ன பேச்சு வேண்டிக்கிடக்கிறது?...

கல்யாணியும் அதைப்பற்றிக் கவலைப்படுபவளாகக் காட்டிக் கொள்ளவில்லை! எப்பொழுதும் போலவே இருந்தாள்.

அன்று காலை. எங்கோ அவசர அவசரமாகக் காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டவள் பத்து மணி வரை திரும்பவில்லை!

ஆபீசுக்கு நாழியாகவே, காருக்காகக் காத்திருப்பதில் பிரயோசனமில்லை என்ற முடிவுடன் சேகரன் தன் ரூமிற்குச் சென்று, 'கோட்டை' எடுத்து மாட்டிக்கொண்டு வெளியே வரும் சமயம், தற்செயலாக அவன் பார்வை, கல்யாணியின் அலங்கார மேசையின்மீது விழுந்தது.

மேசை மீது பொருத்தப்பட்ட நிலைக் கண்ணுடியைச் சுற்றிலும் வாசனைத் தைலங்களும் பௌடர் டப்பாவும் ஸ்னே பாட்டிலும் அப்படி அப்படியே இருந்தன... அவசரத்தில் மறந்து வைத்துவிட்டுப் போன கல்யாணியின் ஹாண்ட் பேக்கும் இருந்தது!

சேகரனுக்கு, அவளுடைய கைப்பையில் என்ன இருக்கிறது என்று பார்க்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது?... அவன் மனதில் எங்கே ஒரு மூலையில் ஒளிந்து கொண்டிருந்த சந்தேகம் உள்ளமெங்கும் பரவி, அவளைப் பரிசோதித்துப் பார்க்கத் தூண்டியது! அறைக் கதவைத் தாழிட்டுவிட்டு அந்தப்பையைத்திறந்து ஆராய்ந்தான்.

அதனுள்...ஒரு மணிபர்ஸ், இரண்டு மூன்று சாக்லெட்கள் கொஞ்சம் சில்லறை நாணயங்கள், சிறு டைரி, பீரோ சாவி, அப்புறம்... அப்புறம்... அதுதான், அவன் நெஞ்சில் உதைத்ததுபோல் இருந்தது...

கல்யாணியும் சம்பத்தும் சேர்ந்த ஒரு போட்டோ...!

ஒரு நாற்காலியில் ஸினிமாக்காரி ஸ்டைலில் கல்யாணி உட்கார்ந்திருக்கிறாள்! அவள் பின்னே நாற்காலியோடு சேர்ந்து அவள் புஜத்தை ஸ்பரிசித்தவாறு சம்பத் நிற்கிறான்!...

"ஹூம்... மானங்கெட்ட கழுதை... இதற்கு ஏதாவது ஒரு முடிவு வேண்டும் என்று நினைத்தவனாய் ஆபீசுக்குப் புறப்பட்டான் சேகரன்.

* * * *

ஆபீஸ் கடிகாரத்தில் மணி நாலரை! மத்தியானம்கூட டிபன் சாப்பிட வீட்டிற்குச் செல்லவில்லை. சேகர். அவன் மனம் குழப்பத்தில் திகைத்தது!

"கல்யாணியின் போக்கிற்கு ஒரு எல்லையே கிடையாதா?... அவள் என்னிடம் அன்பாக இருப்பதாகப்போட்ட வேஷமெல்லாம் கலைந்து விட்டதே; இன்னும் என்ன உறவு வாழ்கிறது... மரியாதையாக, அவள் தகப்பனாரை அழைத்து "ஐயா, உம் பெண்ணை அழைச்சிண்டு போய்ச் சேரும்' என்று நமஸ்காரம் செய்து அனுப்பி விட வேண்டியது தான்"... என்று பலவாறாக அவன் மனம் உளைந்து கொண்டிருக்கையில்... "பூம்...பூம்..." என்ற காரின் ஹாரன் சப்தம் வாசலில் கேட்கவே தலை நிமிர்த்திப் பார்த்தான் சேகர்!

காரிலிருந்து கல்யாணியும் கிரிஜாவும் இறங்கி வந்தனர்.

கல்யாணி அவனைப் பார்த்து லேசாகப் புன்முறுவலித்தாள். அவன் வெறுப்புடன் முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டான்.

"என்ன, ஆபீசிலேயே பழி கிடக்கிறீர்கள்..... மத்தியானம் வீட்டுக்கு வருவீர்கள் என்று வெகு



Retail Branches:

285, China Bazaar Road,
MADRAS.

71, Pondy Bazaar, T. NAGAR.

நேரம் காத்திருந்தோம்... காணவில்லையே..." என்றாள் கிரிஜா! "ஒன்றுமில்லே, தலைவலி..." என்று புளுகினான் சேகர்.

'தலைவலியா?... அதுக்கு இங்கேயே இருந்தா... முகம்கூட என்னவோ போலிருக்கே... ஜுரம் அடிக்கிறதா?...' என்று படபடப்புடன் கூறிய வள், பரிவுடன் அவன் நெற்றியில் கையை வைத்துப் பார்த்தாள் கல்யாணி.

'நல்ல வேஷம் போடுகிறாள்...' என்று மனத் திற்குள் நினைத்துக்கொண்டே, "சாதாரணதலை வலிதான். எங்கே இப்படி... என்ன அவசரம்?..." என்று கிரிஜாவிடம் கேட்டான் சேகரன்.

அவன் தன்னிடம் பேசாத குறையை வெளியே காட்டிக் கொள்ளாமல் எங்கோ பார்வையைச் செலுத்துவதுபோல் பாவனை செய்தாள் கல்யாணி!

'சரி, உங்களை அவசரமாக ஒரு இடத்துக்கு அழைச்சிண்டு பொகணும்... உம், புறப்படுங்கள்'

'மன்னிக்கணும்... இப்போ நான் எங்கேயும் புறப்படறதா இல்லே....'

'அதெல்லா முடியாது... நீங்க வந்து தான் ஆகணும்...உம்..." என்று கிரிஜா விடாது நச்சரிக்கவே, வேறு வழியில்லாமல், கோட்டை மாட்டிக் கொண்டு அவர்களுடன் புறப்பட் டான் சேகர்.

"வெளியே தன்னுடைய கார் நின்றிருப்ப தைக் கண்டவுடன்..." ஓ... வீட்டிலிருந்து தான் வருகிறீர்களா..." என்று கேட்டுக் கொண்டே" டிரைவர் சீட்டில் அமர்ந்தான் சேகர்!

'வேண்டாம்...உங்களுக்குத் தான் தலைவலிக் கிறதே நான் ஓட்டுகிறேன்..." என்று கிரிஜா அவனைத் தடுத்தாள்...

'உம்... அதற்கென்ன பரவாயில்லே... நீங்கள் ஏறிக்கொள்ளுங்கள்..." " என்றான் சேகர்.

பின் சீட்டில் கல்யாணியும் கிரிஜாவும் அமர்ந் தனர். கார், நகர்ந்து அசைந்து விரைந்தது!

* * *

லேடிஸ் கிளப்பின் வாயிற்புறத்தே நிறையக் கார்கள் நின்றிருந்தன.

கூட்டமும் இருந்தது!

சேகரன் கார் அங்கு வந்து நின்றவுடன், முன்னதாகவே அங்கு வந்திருந்த சம்பத்...... சேகரனை வரவேற்றான். வேண்டா வெறுப்புடன் புன்முறுவலை வரவழைத்துக்கொண்டு அவனுடன் கை குலுக்கினான் சேகர்.

'மிஸ்டர், சேகர், இன்று எங்கள் 'கிளப்பில்' வேடதாரி என்னும் நாடகம்... அதற்காகவே உங்களை அழைத்து வந்தேன்... சரி, பணத்தை எடுங்கள்!' என்று கூறிய கிரிஜா தன் கைப் பையிலிருந்து டிக்கட் புத்தகத்தை எடுத்து ஒரு முதல் வகுப்பு டிக்கட்டைக் கிழித்துக் கொடுத் தாள்.

தன் பர்ஸிலிருந்து ஒரு ஐந்துரூபாய் நோட்டை யெடுத்துக்கொடுத்து அதைப் பெற்றுக்கொண் டான் சேகர்.

'மிஸ்டர்,... மன்னிக்கவேண்டும், தங்கள் பக்கத்தில் வந்து அமர்வதற்கு, இன்று மட்டும் கல்யாணியால் முடியாது...' என்று கிண்டலாகக் கூறிய கிரிஜாவை முதுகில் கிள்ளினாள் கல்யாணி!

'ஓ. கோ. டைம் ஆயிடுத்து... டிராமா ஹாலுக்குப் போங்கள்...' என்று கூறிவிட்டு அங்கிருந்து கல்யாணியுடன் நகர்ந்தாள்...

சம்பத்தும் சேகரும் டிராமா ஹாலை நோக்கி நடந்தனர்.

சம்பத்தின் பேச்சும், உறவும் சேகருக்குச் சகிக்க வில்லை; 'இழவே' என்று அவனுடன் போய் முன்ஸீட்டில் அவன் பக்கத்தில் அமர்ந் தான்

டிராமா ஹாலில் லைட்டுகள் அணைந்தன. திரை விலகிற்று!

முதல் காட்சியில் கல்யாணி தோன்றினாள்.... அவளுடன் யாரது? சம்பத்தா?

தன்னருகே திரும்பிப் பார்த்தான் சேகர்.

சம்பத் உட்கார்ந்திருந்தான்... தன்னையும் ஸ்டேஜையும் மாறிமாறிப் பார்க்கும் சேகரை நோக்கிச் சம்பத் சிரித்தான்.

"என்ன சார்! அவதான் சார் கிரிஜா, என் தங்கை... என்னைப்போலவே இருக்கா ஆம்பிளே வேஷம் போட்டவுடன்... இல்லையா?..." என் றான் சம்பத். "எஸ்...எஸ்...யூ ஆர் கரெக்ட்" என்று மென்று முணகினான் சேகர். அவ னுக்கு அங்கு உட்கார முடியவில்லை!

"மிஸ்டர் சம்பத்... மன்னிக்கணும், தலைவலி அதிகமா இருக்கு...வீட்டுக்குப் போறேன்!... கிரி ஜாவிடம் சொல்லிடுங்கோ..." என்று கூறிவிட்டு, அவன் பதிலுக்குக்கூடக் காத்திராமல் டிராமா ஹாலை விட்டு வெளியேறினான் சேகர்!

வெளியே அவனுடைய கார் உறுமி நகர்ந்ததை சம்பத் மௌனமாகப் பார்த்தான்.

* * *

இரவு மணி பத்து! சேகர் தன் அறையில் படுக்கையில் சாய்ந்துகொண்டிருக்கிறான்.

"பாவம், கல்யாணியைத் தவறாக நினைத்துவிட்டோமே" என்று அவன் மனம் வேதனையுறுகிறது!

கையில் பால் கூஜாவுடன், நீலநிற ஜார்ஜெட் சேலை காற்றில் படபடக்க, ஒயிலாக அறைக்குள் நுழைந்தாள் கல்யாணி.

"கல்யாணி..." என்று தொண்டை அடைக்க அழைத்தான் சேகரன்!

அவள் வதனத்தில் நிர்மலமான ஒரு புன்னகை தவழ்ந்தது!

அது 'வேஷமல்ல' என்பதை அவன் மனம் உணரும்போது அவன் கண்கள் கலங்கின.

"கல்யாணி, என்னை மன்னிச்சுடு......" என்று உணர்ச்சிக் கரகரப்புடன் கூறி அவள் கரத்தைப் பற்றினான் சேகர்.

அவள் பதில் பேச முடியாமல் தடுமாறினாள்...

"அன்னிக்கி, நானும் கொஞ்சம் படபடப்பாகத்தான் பேசிட்டேன்... நீங்கள் வீட்டிலே வந்து காத்திண்டு இருப்பேளின்னு எவ்வளவு சொல்லி அவசரப்பட்டாலும், ஒத்திகை முடிஞ்சுதான் போகணும்னு எல்லாரும் சொல்றப்ப நான் என்ன பண்றது? அதுவும் அன்னிக்குக் கடைசி ஒத்திகை!... மேக்கப்'பைக்கூட, கலைக்காமல் கிரிஜா, அவ கார்லே கொண்டுவந்து விட்டுட்டுப் போனா..."

"அட்படியா..."

"ஆமா... நா" மறந்துட்டேன், நாங்க இரண்டு பேரும் 'மேக்கப்போடே ஒரு போட்டோ எடுத்துண்டோமே, உங்களுக்குக் காண்பிக்கணும்' னு நெனைச்சேன்... நீங்கதான் என்னோடே பேசவே இல்லையே..." என்று குறை கூறுபவள்போல் சொல்லிக்கொண்டு அந்தப் போட்டோவை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

அதைப் பார்த்துவிட்டு சேகர், "சரியான வேஷக்காரிகள்..." என்று அவள் கன்னத்தைப் பிடித்துக் கிள்ளினான்.

"உம்... தலைவலி எப்படி இருக்கு..."

அதுவும் ஒரு வேஷம்தான்..." என்று சொல்லிப் பாரமற்றநெஞ்சோடு 'கலகல'வெனச் சிரித்தான் சேகர்.

தினம்-தினம் தீபாவளி!

உங்கள் ஜல சப்ளைக்கு ஒரு மயர்ஸ் பம்பைப் பொருத்துவதின் மூலம், வருடம் பூராவும் தீபாவளியைக் கொண்டாடி மகிழுங்கள்.

MYERS AUTOMATIC ELECTRIC PUMPS



மயர்ஸ் பம்பில்

(1) ஏராளமான தண்ணீர் தட்டாமல் கிடைக்கிறது

(2) தண்ணீர் மிகுந்த (பிரஷருடன்) வேகத்துடன் குழாய்களில் சப்ளையாகின்றது.

(3) எல்லா உபயோகத்திற்கும் வேண்டிய தண்ணீர் கிடைக்கிறது.

இந்தியாவில் "மயர்ஸ்" ஸோல் ஏஜண்டுகள் :—

வாட்டர் சப்ளை ஸ்பெஷலிஸ்ட்ஸ் லிமிடெட்,

5. தம்புசெட்டித்தெரு, மதராஸ்-1

நாளுக்கு நாள் அதிக தெளிவான,
எழிலோங்கும்
சருமம்
கேடில் கலந்த
ரெக்ஸோனா
இந்த அற்புத
வேலையைச்
செய்யட்டும்.
ரெக்ஸோனாவின் கேடில் கலந்த நுரையை உங்கள் சருமத்தில் மெதுவாகத் தேய்த்து பிறகு கழுவுங்கள். உங்கள் சருமம் நாளுக்கு நாள் அதிக மழமழப்பும் தெளிவும் பெறுவதைக் காண்பீர்கள். அதனால் புதுப் பொலிவுடன் விளங்குவீர்கள்.
Rexona
BLENDED WITH CADYL
Rexona
BLENDED WITH CADYL
ரெக்ஸோனா
கேடில்* கலந்த சோப் இதுஒன்றே
* சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.
R.P. 123-50 TM
ரெக்ஸோனா ப்ரோப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது.

விஞ்ஞானத் துணுக்குகள்

நா. கி. நாகராசன்

இளநீரின் மகிமை

போர்க்களத்திலோ, ரயில் அல்லது மோட்டார் விபத்திலோ படுகாயம் பட்டும், பிரசவத்தின்போதும் அதிகமான ரத்தத்தை இழந்தவர்களுக்கு ஊசியின் உதவியால் சர்க்கரை அல்லது உப்பு நீரை உட்செலுத்துவதுண்டு. அதற்குப் பதிலாக இளநீரை ரத்தக் குழாய்க்குள் செலுத்துவது இன்னும் சிறந்த முறை என்று இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். தாய்லாந்து தலை நகரான பாங்காங்கில் இது பற்றிய சோதனைகள் நடந்ததிலிருந்து, இளநீரின் மவுசு தெரிய வந்தது. திரவப் பொருள் ஒன்றை உட்செலுத்துவதே முந்தைய முறையின் நோக்கம். ஆனால் அதற்குப் பதில் இளநீரைச் செலுத்துவதால் வேறு பல நன்மைகளும் கிட்டுகின்றன. இளநீரை ரத்தத்துக்குள் செலுத்தினால் பொட்டாஸியம், மக்னீஷியம், கால்ஸியம் ஆகிய உலோகங்களும், குளோரைடு, பாஸ்பேட்டு முதலிய உப்புக்களும், சர்க்கரைப் பொருளும், புரதப் பொருளும் கிடைக்கின்றன. வலிவிழந்த நிலையில் உள்ள உடலுக்கு இவை யனைத்தும் சிறந்த வகையில் ஊட்டந்தருகின்றன. தேங்காயின் கண்ணின் வழியே ஊசியால் குத்தி, வெளியே எடுத்துப் பயன்படுத்துகிறார்கள். ஆகையால் இனி, போர் நேரும் போதும், காலரா முதலிய தொற்று நோய்களின் போதும் இளநீருக்குக் கிராக்கி மிகுந்து விடும் என எதிர்பார்க்கலாம்.

முதலைக் கண்ணீர்!

சோகமே உருவெடுத்தாற்போல் படுத்திருந்து, தாரை தாரையாகக் கண்ணீர் விடும் முதலையார், தன்னருகே அப்பாவியான விலங்கொன்று வந்தவுடன் தனது வேஷத்தைக் கலைத்துவிட்டு, அதைப் பிடித்து விழுங்கிவிடும் என்பது, நம் நாட்டிலும், வேறு பல நாடுகளிலும் தொன்றுதொட்டே வழங்கி வரும் நம்பிக்கைகளில் ஒன்று. தனது இரையை உண்ணும் போது, "நமது வயிற்றை நிரப்புவதற்காக, அரியாயமாய் உயிர்க்கொலை புரிய நேர்ந்ததே" என உள்ளம் உருகி அது அப்போது கண்ணீர் விடுகிறது என்று கூறுவோரும் உண்டு! எப்படி ஆயினும் இது பசப்புக்கும், பாசாங்குக்கும் சின்னமாய் ஆய்விட்டது. முதலைகள் உண்மையிலேயே கண்ணீர் விடுகின்றனவா அல்லது இது மனிதன் அந்த உயிரினத்தின் மீது அபாண்டமாகச் சுமத்தும் பழியா என்று அறியும் பொருட்டு உயிர் நூலறிஞர்கள் சிலர் ஆராய்ச்சி நடத்தினர். இரைதேடிப் படுத்திருக்கும் முதலையின் முகத்தில் வழியும் நீர் அதன் கண்ணீர் அல்ல என்றும், தெரியாமல் தன்னருகே வரும் விலங்கு சறுக்கி விழுந்து தன்னிடம் மாட்டிக்கொள்ள ஏதுவாக, அது தனது வாயிலிருந்து நீரை உமிழ்ந்து தரையை ஈரமாக வைத்திருக்கிறது என்றும் அவர்கள் கண்டறிந்தார்கள். ஆகையால் முதலையின் கண்ணீர் என்பது, அது தனது இரையை மாட்டிவைக்கும் வலைதான்! இரையை விழுங்கும்போது முதலை உண்மையிலேயே கண்ணீர் விடுவதுண்டாம்! ஆனால் அது அஹிம்சா உணர்ச்சியால் அல்ல. இரையை விழுங்குவதில் ஏற்படும் சிரமத்தால் அதற்குக் கண்ணீர் வந்துவிடுகிறதாம்!

ஓய்வு வேண்டாம்!

நமது உடல் நலம் சரியாக இல்லாதபோது நாம் டாக்டரிடம் போனால், நமக்கு என்ன கோளாறு என்பது அவருக்கு விளங்காதபோது தாரக மந்திரம் ஒன்றைப் பிரயோகித்துவிடுகிறார். "சில நாட்கள் நல்ல ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்" என்று அவர் சொல்லியனுப்பிவிடுகிறார் (தமது 'பீ'ஸை வாங்கிக்கொண்ட பின்னர்தான்!). இத்தகைய 'ஓய்வு சிகிச்சை' எவ்வளவு தூரம் பயனுள்ளது என்று பர்மிங்ஹாம் சர்வகலாசாலையின் மருத்துவப் பேராசிரியர் ஆராய்ந்து பார்த்தார். அவர் கண்டறிந்த உண்மைகள் மிகவும் வியத்தற்குரியவை. நீண்ட ஓய்வினால் நோயாளிக்கு நன்மையை விடத் தீமையேமிகுதியாக விளைகிறது என்று அவர் கண்டறிந்தார். 'அபினி முதலிய போதை மருந்துகளுடன்தான் ஓய்வையும்

சேர்க்கவேண்டும்; ஏனெனில், அபினிப் பழக்கம் ஏற்பட்டவனுக்கு அது இல்லாமல் முடியாது. அதைப்போலவே ஓய்வெடுப்பதும் தவிர்க்கமுடியாத பழக்கமாய்விடும்' என்று அவர் கூறுகிறார். ஓடியாடிவேலைசெய்யும் ஒருவனது உடலின் இயக்கம் அதற்கேற்றவாறு தன்னைச் சரிப்படுத்திக்கொண்டிருக்கும். ஆகையால் அவன் திடீரென்று ஓய்வெடுக்கத் தொடங்கினால் அச் சமநிலை கெடுகிறது. இதனால் மூத்திரக் கோளாறுகள் நேரும்; நாடித்துடிப்பு மெதுவாய்விடும்; ரத்தம் சுண்டிவிடும்; தசைகளின் வலிமை கெடும்' என்றெல்லாம் அவர் பயமுறுத்துகிறார்.

நிறநிறமான அலுமினியம்

உலோகக்கலையில் போரின்போது நிகழ்ந்த முன்னேற்றங்களால் புதுவகை அலுமினியக் கலவைகள் வழக்கத்திற்கு வந்திருக்கின்றன, இதனால் அலுமினியத்துக்கு ஆயிரக்கணக்கான புதிய பயன்கள் தோன்றிவிட்டன. இவ்வுலோகத்தைக் கொண்டு வீடுகளையும், காரியாலயங்களையும் வனப்புறச் செய்யும் முறையொன்றையும் இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். இம் முறையில், அலுமினியத்தில் பீங்கானை உருக்கி இணைக்கிறார்கள். இதனால் அழகுமிக்க பல நிறங்களையும், கலைத்திறன் நிறைந்த சித்திர வேலைப்பாட்டையும் அலுமினியத் தகடுகளின்மேல் பெறமுடியும். அலுமினியத்தாலான பொருளின்மேல் பீங்கானை இணைப்பதற்கு, முதலில் அதை அமிலத்திலும், காரத்திலும் கழுவித் தூய்மையாக்கவேண்டும். குழம்பு போன்ற திரவ வடிவிலுள்ள பல நிறப் பீங்கானை அதன்மேல் பிறகு தெளிக்கிறார்கள். அதன் மேல் பொறிக்க வேண்டிய சித்திரத்தைக் கீறி எடுத்துவிடுகிறார்கள். பீங்கான் உலர அதைத் தாழ்ந்த வெப்பத்தில் அரை மணி நேரம் இருத்தியபின், அப்பொருளை உலையில் சில நிமிஷங்களுக்குச் சுட்டு எடுத்தால் பீங்கான் அலுமினியத்தின்மேல் உறுதியாக இணைந்துவிடும்.

குளிர்விக்கும் வர்ணங்கள்

வருங்காலக் கட்டடங்களில் இன்னொரு புதுமையும் இருக்கும் என எதிர்பார்க்கலாம். புது வகை வர்ணம் ஒன்றை இப்போது விற்கத் தொடங்கியிருக்கிறார்கள். இது 'பிளாஸ்டிகூல்' (Plasticool) எனப்படும். மிகச் சிறந்த வகையில் இது வெப்பத்தைப் பிரதிபலித்து, இதைப் பூசிய பொருள் சூடேறாமல் பாதுகாக்கிறது. இவ்வர்ணத்தில், பிளாஸ்டிக் வகையைச் சேர்ந்த பிசின் பொருள் ஒன்றுடன் நான்கு நிறப் பொருள்கள் கலந்திருக்கும். இந்நிறப் பொருள்களே அதற்கு வெப்பத்தைத் பிரதிபலிக்கும் திறமையைத் தருகின்றன. மரம், எஃகு, வேறு உலோகங்கள், கண்ணாடிகள் முதலிய எப்பொருளின்மேல் இதைப் பூசினாலும் இது அதன்மேல் உறுதியாக ஒட்டிக்கொள்கிறது. தகரத்தாலான கூரையில் இதைப் பூசி, கடுங்கோடையின்போது சோதனை செய்து பார்த்தார்கள். வெளியில், தகிக்கும் வெய்யில் அடிக்கும்போது, அக்கூரை வீட்டில் இருந்தவர்கள் கம்பளிச் சட்டை போட்டுக்கொள்ளவேண்டியிருந்ததாம். ஏனெனில், இவ்வர்ணம், வெப்பத்தை 45 டிகிரி குறைத்துவிட்டது.

செயற்கைத் தூக்கம்

குளிர் நாடுகளில் வாழும் கரடி, அணில், சுண்டெலி முதலிய பல உயிரினங்கள் குளிர் காலத்தில் தூங்கப் போய் விடுகின்றன. பல மாதங்கள் வரை நீடிக்கும் இத்தூக்கத்தின்போது அவற்றின் உயிரின் இயக்கமே பெரிதும் குறைந்துபோயிருக்கும். இதனால் விஞ்ஞானிகள் இதைக் 'குளிர்கால ஒடுக்கம்' (Hibernation) என்பார்கள். இவ்வாறு ஒடுங்கியுள்ள உயிரினத்தின் நிலைமை அநேகமாகச் சாவிற்கு அருகாமையிலுள்ளதொரு நிலை எனலாம். ஏனெனில் அதன் இதயத் துடிப்பும், நரம்புணர்ச்சியும், மூளையின் இயக்கமும் மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கும். இசனால்தான் அவை பல மாதங்கள் வரை இரை எதுவும் இன்றி உயிர் பிழைத்திருக்க முடிகிறது. குளிர் காலத்தில் வெளி வந்து இரைதேடி அலையும் தொல்லையின்றி, குளிர் நாட்டு உயிர் வகைகளைப் பாதுகாப்பதற்கு இயற்கையே இந்த முன் எச்சரிக்கையை எடுத்திருக்கிறது எனலாம். செயற்கை முறையில், மானிடனுக்கும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு இத்தகைய நிலையை ஏற்படுத்துவது சில சமயங்களில் மிகவும் பயன்தரும் என்று இந்தோ சைனாப் போரின் போது, பிரெஞ்சு ராணுவ வைத்தியர்கள் கண்டார்கள். படுகாயமடைந்து அதிர்ச்சியால், உயிர் ஊசலாடும் நிலையில் உள்ளவர்களுக்கு இத்தகைய செயற்கைத் தூக்கத்தை விளைவித்துவிட்டால், அவர்கள் மீண்டும் 'உயிர்' பெற்று எழும்போது அவர்களது உடலும் உள்ளமும் வெகுவாகச் சீர்பட்டு விடுகின்றன என அப்போது தெளிவாயிற்று.

விபத்து முதலிய எதிர்பாராத காரணங்களால் உடலும், உள்ளமும் திடீரெனச் சீர்குலைந்து போவோர்க்கு இம்முறை பெரிதும் பயனுகும் என்று எதிர்பார்க்கிறுர்கள்.

உங்களுக்கு வயதாகிவிட்டதா?

"ஒருவருடைய உணர்ச்சியையொட்டியது அவரது வயது" என்று பொருள்படும் ஆங்கிலப் பழமொழியுண்டு. ஒருவர் தமக்கு வயதாய்விட்டது என்று ஏற்படும் உணர்ச்சிக்கும் அவர் பிறந்து எவ்வளவு ஆண்டுகள் கழிந்துவிட்டன என்ற கணக்குக்கும் பெரும்பாலும் தொடர்பே இருப்பதில்லை. 32 வயதான எனக்கே சில சமயங்களில் வயோதிகத்தை எட்டி விட்டது போன்ற உணர்ச்சி ஏற்படுவதுண்டு. ஆகையால் இந்தப் பிரச்னை அனைவரது கருத்தையும் கவர்வதுதான். மேனாட்டு உளநூலறிஞர் ஒருவர், இதை விரிவாக ஆராய்ந்து, ஐந்து கேள்விகளை வகுத்திருக்கிறுர். இக்கேள்விகளை நீங்களே கேட்டுக்கொண்டு, விருப்பு வெறுப்பின்றிப் பதில் கூறிக்கொள்ளுங்கள். இவற்றின் பதில் 'ஆம்' என்று இருந்தால், உங்களை வயோதிகம் எட்டிவிட்டது என்று முடிவு செய்துவிடலாம். (உங்கள் சோதனையின் முடிவை உங்கள் மனைவியிடம் தெரிவிக்கவேண்டியதில்லை!)

1. கடந்த 24 மணி நேரத்தில் நடந்த சம்பவங்களை எளிதில் நினைவுபடுத்திக் கொள்ளமுடியாமல் இருக்கிறதா?

2. வழக்கமான உடல் வேலையையும், உள்ள வேலையையும் செய்ய இப்போது உங்களுக்கு அதிக நேரம் பிடிக்கிறதா?

3. புதுக் கருத்துக்களை எதிர்க்கும் போக்கு உங்களிடம் காணப்படுகிறதா?

4. வாழ்க்கையில் உங்கள் லக்ஷியங்கள் குறைந்துவருகின்றனவா?

5. கடந்த கால நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்க்கும் வழக்கம் அதிகமாகி வருகிறதா? ●

அவள்
ரூபவதி
ஆனல்!....
கர்ப்பாசய நோயுற்று, ஆரோக்யமிழந்து அவள் வாழ்க்கையில் சுகத்தையோ ஒரு தாயின் இன்பத்தையோ அடையமுடியாது.

அருணா
கர்ப்பாசயரோக நிவாரணி
பெண்களின் தவிப்பட்ட நோய்களைத்தீர்க்கும் ஆரோக்யமுள்ள தாயாவதற்கு உதவும்.
ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

ஒவ்வொரு தினமும் நீங்கள் அழுக்கிலுள்ள கிருமிகளின் அபாயத்துக் குள்ளாகலாம்.
இந்தக் கிருமிகளை லைப்பாய் சோப்பினால் கழுவிக் களைந்து தினமும் உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.
லைப்பாய் சோப்
தினசரித்தொல்லையான அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து உங்களைப் பாதுகாக்கிறது.
லைப்பாயின் "பாதுகாக்கும் நுரை" உங்கள் ஆரோக்கியத்தைக் காப்பாற்றுகிறது.
LIFEBUOY
SOAP
LIFEBUOY SOAP
இந்தியாவில் தயாரித்தது.
L. 246-X52 TM



தொடர் கதை

சித்தன்ன வாசல்

அ.ராம்கோபால்

3

இடம்:—காஞ்சி பௌத்த மடாலயத்தில் சுகதர் சித்திரசாலை.

நேரம்;—இரவு முதல் சாமம்.

(சித்திரசாலையில் ஒரு பக்கம் பாதி முடிந்த சித்தரம் ஒன்றிருக்கிறது. அதற்கருகே வர்ணக் கிண்ணங்கள் வைக்கப்பட்டுள்ளன. மற்றொரு புறத்தில் பகவான் புத்தரின் சிலை ஒன்று ஒரு மேடையின் மீது நிற்கிறது. அதன் காலடியில் சாத்திய புஷ்பங்கள் சிதறிக்கிடக்கின்றன. அகல் விளக்கொன்று அதன் அருகே சுடர்விட்டு எரிந்துகொண்டிருக்கிறது. சிலைக்கருகே அமர்ந்து வீணை மீட்டிப் பகவான் புத்தர் மீது பக்திப் பாடல்கள் பாடிக்கொண்டிருக்கிறார் சுகதர். அங்கேவந்த அவருடைய கிரேக்க மாணவன் டேமதஸ் பாட்டு முடியும் வரை கைகட்டி, பயபக்தியுடன் பேசாமல் நிற்கிறான். பாட்டு முடிந்ததும் சுகதரின் கால்களைத் தொட்டு வணங்கி ஒரு பக்கமாக ஒதுங்கி நிற்கிறான்)

சுகதர்: டேமதஸ்! இன்று ஏன் உன் முகம் ஒருவிதமாக வாடி இருக்கிறது?

டேமதஸ்: அப்படி ஒன்றுமில்லையே குரு தேவா!

சுக;—உன் முகத்தில்தான் சிந்தனைக் குறிகள் தெளிவாகத் தெரிகின்றனவே. உண்மையைச் சொல். எதற்காக மறைக்கிறாய்?

டேம:—சில நாட்களாகவே எனக்கு என் சொந்த நாட்டு நினைப்பு அடிக்கடி தோன்றுகிறது குருதேவா!

சுக:—இது யாருக்கும் இயற்கைதானே. இதை ஏன் மறைக்கிறாய்?... நாளை மறுநாள் மிளகும் ஏலமும் ஏற்றிக்கொண்டு முசிரியிலிருந்து ஒரு கப்பல் புறப்படுகிறதாம். அதற்குள் நீ அங்கே எப்படிப் போய்ச் சேரமுடியும்?

டேம:—இப்பொழுது ஒன்றும் அவசரமில்லை குருதேவா! அடுத்த மாதம் தொண்டிக்கு ஒரு கப்பல் வருகிறதாம்.

சுக:—அப்படியானால் இங்கே இருந்து இன்னும் பத்துநாளில் புறப்பட்டால்தானே அங்கே சரியான சமயத்தில் போய்ச் சேரமுடியும்?

டேம: ஆம் குருதேவா! (சேனாபதி பம்பாபதி பிரவேசிக்கிறான்)

பம்பாபதி:—சுகதரே!

டேம:—(சற்றுக் கடுமையாகவும் அதிகாரத் தொனியுடனும்) யாரையா நீர்? இது உங்கள் வீடல்ல. பௌத்த மடாலயம். மரியாதையாக நாவை அடக்கிப் பேசும்.

பம்:—தம்பி! முதலில் நீ நாவை அடக்கிப்பேசு. நான் யார் தெரியுமா?

டேம:—இது கூடவா தெரியாது. நீங்கள் ஒரு மனிதர். மனிதப்பண்பில்லாத மனிதர். உலகம் போற்றும் ஒரு மேதையை மதிக்கத் தெரியாத மனிதர்.

பம்:—போதும் வாயை மூடு. உன்னிடம் பாடம் கற்றுப்போக நான் வரவில்லை. நான் யார் தெரியுமா? பல்லவ சேனாபதி.

டேம:—ஓகோ! தெரிந்தது! தெரிந்தது! உங்களைச் சொல்லிப் பயனில்லை. உங்கள் பதவிமிடுக்குத்தான் இதற்குக் காரணம். குடிகாரன் குடிவெறியில் ஏதேதோ பிதற்றுகிறான். நீங்கள் பதவிப் போதையில் பிதற்றுகிறீர்கள்.

சுக:—டேமதஸ்! நீ போய்ச் சாப்பிடு. போதையில் உள்ளவர்களுக்கு என்னதான் புத்தி சொன்

னாலும் புரியாது......பல்லவ சேனாபதி! இப்படி அமருங்கள். வந்த காரியம் என்ன?

பம்:—(துடுக்காக) நான் இங்கே அமரவோ ஆடல் பாடல் கற்றுப் போகவோ வரவில்லை. அவசரமான அரச கட்டளையை ஏற்று வந்தேன்.

சுக:—(சாந்தமாக) அரச கட்டளையை ஏற்று வந்தால் என்ன? இப்படி அமர்ந்து சொல்லுங்கள்.

பம்:—எனக்கு இங்கே அமர நேரமில்லை... நீங்கள் அரண்மனைக்கு வந்து அரசகுமாரிகளுக்குச் சங்கீதமும் சித்திரமும் கற்றுக் கொடுக்கவேண்டும். இது அரசர் கட்டளை. என்ன சொல்லுகிறீர்கள்?

சுக:—அரண்மனையிலா? அந்தப்புரத்திலா?

பம்:—ஆம், அரண்மனையில் அந்தப்புரத்தில் தான்.

சுக:—இது சுகதனால் ஆகக்கூடியக் காரியமல்ல.

பம்:—இது அரசர் ஆக்ஞை தெரியுமா?

சுக:—தெரியும். ஆனால் அவர் ஆக்ஞை எல்லாம் இந்த மடாலயத்துக்கு வெளியே. மடாலய நியதிகளை அவர் ஆக்ஞை பாதிக்காது. பாதிக்கவும் முடியாது.

பம்:—பல்லவ சேனாபதியாகிய நானே நேரில் கட்டளை இடுகிறேன். அரண்மனைக்கு நீங்கள் போகவேண்டும். அரச குமாரிகளுக்குப் பயிற்சி அளிக்கவேண்டும்.

சுக:—(உறுதியாக) இது நடவாத காரியம் பல்லவ சேனாபதி! எங்கள் மடாலய நியதிப்படி உங்கள் ராஜகுமாரிகள் வேண்டுமானால் இங்கே வந்து பாடம் கற்றுப் போகட்டும். நான் அரண்மனைக்கு வருவதென்பது ஆகக்கூடிய காரியமல்ல.

பம்:—அப்படியானால் ராஜாக்ஞையை நீங்கள் அவமதிக்கிறீர்களா?

சுக:—நான் ராஜாக்ஞையையோ, சேனாபதி கட்டளையையோ அவமதிக்கவில்லை. ஒரு நாட்டின் கௌரவம் அதன் பண்பாட்டிலிருக்கிறது. ஆகையால் மன்னனாக இருந்தாலும் சரி, வேறு யாராயிருந்தாலும் சரி, பண்பாட்டை மதித்து நடக்கவேண்டும். அதைக் காக்கவும் வேண்டும். இல்லாவிடில் நாட்டின் கௌரவமும் பண்பாடும் போய்விடும். உங்கள் அரசரின் ஆக்ஞை பல்லவ நாட்டின் பண்பையும் கௌரவத்தையும் குலைப்பதாக இருக்கிறது. நாட்டின் கௌரவம் மன்னனின் கௌரவத்தை விட முக்கியமானது, மேலானது என உங்கள் மன்னனிடம் சொல்லுங்கள்.

பம்:—பகைவர் கண்டால் பதறி நடுங்கும் பல்லவ சேனாபதியாகிய நானே நேரில் வந்து சொல்லுகிறேன். பிச்சை எடுத்துப் பிழைக்கும் ஆண்டிக் கூட்டத்துக்குப் பண்பாடாம், கௌரவமாம். (பல்லை நற நற என்று கடித்து) என்னை யாரென்று நினைத்தீர்? நான் உம் என்றால் ஒரு நொடியில் உங்கள் மடாலயம் மகிமை கௌரவம் எல்லாம் காற்றில் பறந்துவிடும், தெரியுமா?

டேம:—நாங்களும் எங்கள் மடாலயமும் பறப்பதற்கு முன் உங்கள் தலையும் உங்கள் மன்னர் தலையும் காற்றில் பறந்துவிடும் தெரியுமா?

பம்:—பிச்சைக்காரப் பயலே! (கத்தியை உருவுகிருன்) வாடா யார் தலை பறக்கிறது பார்க்கலாம். (டேமதஸ் பக்கத்தில் கிடந்த ஒரு பெரும் தடியைத் தூக்கிக்கொண்டு ஓடி வருகிருன்.)

சுக:-(டேமதசைத்தடுத்து) வேண்டாம் டேமதஸ்! (பம்பாதியை நோக்கி) சேனுபதி பாரதப் பண்பையும் சீலத்தையும் கௌரவித்து நடத்தக் கற்றுக்கொள்ளுங்கள். உங்கள் மிரட்டல் உருட்டலுக்கெல்லாம் பயந்து நடுங்குபவர் இங்கு யாருமில்லை. ஆகையால் அவற்றை யெல்லாம் வேறு இடத்துக்குப் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளுங்கள்.

பம்:—(அதிகாரக் குரலுடன்) சுகதரே!

சுக:—ஏன் சேனுபதியாரே!

பம்:—நீங்கள் நான்கு குற்றத்துக்குப் பொறுப்பாகவேண்டும். அரச கட்டளையை அவமதித்தது ஒன்று. என் கட்டளையை அவமதித்தது ஒன்று. என்னை அவமதிப்பாகப் பேசியது ஒன்று. என்னையும் அரசரையும் அவமதிப்பாகப் பேசிய உங்கள் மாணவனுக்கு அடைக்கலம் அளித்திருப்பது ஒன்று. இந்த நான்கு குற்றத்துக்கும் உங்களுக்குத் தக்க தண்டனை கிடைக்கும் தயாராக இருங்கள்.

சுக:—நான் தயாராக இருக்கிறேன். நீங்கள் போய்வரலாம். (பம்பாபதி போகிருன்)

4

இடம்:- காஞ்சி அரண்மனையின் ஒரு பகுதி

காலம்:– அதிகாலை

(காஞ்சி மன்னன் மகேந்திரனும் பிரிவாதினியும் ஸ்நாநம் செய்துவிட்டு, கோவிலுக்குப் புறப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். பம்பாபதி அச்சமயம் அங்கே வருகிருன்)

பம்:- ஜய விஜயீபவ! வணக்கம் மகராஜ்!

மகே:- ஆச்சாரிய தேவர் என்ன சொன்னுர் பம்பாபதி?

பம்:– அதை ஏன் கேட்கிறீர்கள் மகராஜ்! போனதற்கு மூக்கறுபட்டது தான் லாபம்.

மகே:- ஏன் ஆச்சாரியதேவர் சம்மதிக்கவில்லையா?

பம்:- சம்மதிக்காதது மட்டுமல்ல. அங்கே வேறு விபரீதமெல்லாம் நடந்துவிட்டது மகராஜ்! அதை எல்லாம் சொல்லவே எனக்கு வாய் கூசுகிறது.

மகே:- ஏன் மறைக்கிருய்? என்ன நடந்தது? கூசாமல் சொல் பம்பாபதி! குற்றம் செய்தவர் யாராயிருந்தாலும் தக்க தண்டனை கிடைக்கும்.

பம்:- நான் என்ன சொல்லட்டும் மகராஜ்! சொல்லவே என் நாவு நடுங்குகிறது. இந்த நாட்டில் தங்கள் உத்தரவை யாரும் மீறி நானறியேன். மீறும் துணிவு யாருக்கும் வந்ததில்லை. இன்று ஆச்சாரியர் மீறியதோடு நில்லாமல் அவமானமும் செய்துவிட்டார். நான் தங்கள் கட்டளையைச் சொன்னதும் அவர் ஏளனமாக நகைத்து, 'எனக்குக் கட்டளையிட உங்கள் மன்னர் யார்? நான் அரண்மனைக்கு வரமுடியாது. வேண்டுமானுல் உங்கள் ராஜகுமாரி எங்கள் மடாலயத்துக்கு வந்து படித்துப்போகட்டும்' எனச் சொல்லிவிட்டார்......

பிரி:- (நடுவில் புகுந்து) நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள் சேனுபதி! மற்றவர்களுக்குச் சீலமுறைகளைக் கற்பிக்கும் ஒரு ஆச்சாரியர் இவ்விதம் ஒருபோதும் நடந்திருக்கமாட்டார்,

பம்:– நடக்கக்கூடியவரல்ல என்பது உண்மைதான் தேவி! ஆனுல் ஏனே இன்று அப்படி நடந்தார். எனக்கே இது ஆச்சரியமாகத்தானிருக்கிறது.

பிரி:– அப்படி அவர் நடந்தது உண்மையானுல் நீங்கள் முதலில் அவரை அவமானப்படுத்தி இருக்கவேண்டும். பசுவும் கோல்கொண்டு குத்திஞல் முறைத்துப் பார்க்கத்தான் செய்யும். மடாலயத்துக்கு வந்து கற்றுப் போகும்படி சொன்ஞர் என்கிறீர்களே. அதற்கு நீங்கள் ஏன் சம்மதப்படவில்லை? அரசர் உங்களுக்கு இட்ட கட்டளை என்ன? மடாலயத்தில் கற்றுக்கொடுக்க இணங்காவிட்டால் அரண்மனைக்கு அழைக்கும்படிதானே கட்டளை. அரசகட்டளையை நீங்களே மதியாமல் அவமதித்துவிட்டு ஆச்சாரியதேவர் மீது பெரிதாகக் குற்றத்தைச் சுமத்துகிறீர்களே.

பம்:—என்னை மன்னிக்கவேண்டும் ராஜகுமாரி! நான் அரசர் கட்டளைப்படி நடக்கவில்லை என்பது உண்மைதான். இக்குற்றத்தை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனுல் ஒன்று. பல்லவ ராஜகுமாரி ஒரு மடாலயத்தில்போய் பாடங் கற்றுக்கொள்ளுவதாக இருந்தால் பல்லவ குலத்துக்கே அது இழுக்காகவல்லவா வந்து முடியும்? தங்கள் வம்ச கௌரவத்தைத் தாங்கள் காப்பாற்றவேண்டாமா?

பரி:—(படபடப்புடன்) இங்கே பாரும் சேனுபதி! எங்கள் குல கௌரவத்தைக் காப்பாற்றிக்

கொள்ள எனக்குத் தெரியும். நீங்கள் அதற்காகக் கவலைப்படவேண்டாம். அரசர்கட்டளையை அவமதிக்கவும் வேண்டாம்.

மகே:—பம்பாபதி! அரசர் கட்டளையை அவமதித்தது யார். தெரிகிறதா?

பம்:—தெரிகிறது மகராஜ்! அறியாமல் தவறு செய்துவிட்டேன். மன்னித்தருளவேண்டும்.

மகே:—இது முதல் தடவை. ஆகையால் மன்னிக்கிறேன். இனி இப்படி நடந்தால் அரச தண்டனை கடுமையாக இருக்கும்... சரி போ! முதலில் ஆச்சார்ய தேவரைச் சந்தித்து மன்னிப்புக் கேள், அரசகுமாரிகள் மடாலயத்தில் பாடம் பயில ஏற்பாடு செய். மந்திரி விஷ்ணு வர்மரையும் உடன் அழைத்துப் போ!

பம்:—(பணிவுடன் வணங்கி) உத்தரவு மகராஜ்! (போகிறான்.) அவன் பின்னால் மகத தூதன் சண்டசேனன் வந்து அவன் தோளில் கை போடுகிறான். பம்பாபதி திடுக்கிட்டுத் திரும்புகிறான்.)

சண்:—(சிரித்துக் கொண்டே) எங்கே அண்ணே! இவ்வளவு அவசரம்?

பம்:—யார்? நீங்கள்தானா!... இங்கே எங்கே வந்தீர்கள்?

சண்:—இங்கே எங்கேயும் வரவில்லை. உங்களைத்தான் பார்த்துப் போகலாம் என்று வந்தேன். நேற்று மடாலயத்துக்குப் போனீர்களே. மூக்கு ஒன்றும் பறி போகவில்லையே. சரியாகத்தானே இருக்கிறது.

பம்:—எனக்கு எதற்குப் பறி போகிறது! ஆச்சாரியார் மூக்குத்தான் பறி போகப் போகிறது. மூக்குப் பறி போவதோடு நின்றால் பரவாயில்லை. அவர் மடாலயமும் பறி போய் விடும். அவரும் இந்த நாட்டை விட்டே ஓடப் போகிறார்.

சண்:—அட பாவமே! அப்படியா?... எதற்காக அவர் மேல் இத்தனை அன்பு?

பம்:—எதற்கா? பல்லவ சேனாபதியை மதியாமல் பேசியதற்குக் கைமேல் பலன்,

சண்:—ஓகோ அப்படியா? உங்களைக்கூட மதியாமல் பேசிவிட்டாரா அவர்! அவ்வளவு அகங்காரமா அவருக்கு?

பம்:—அவருக்கு அகந்தை இருந்தால் காட்டுகிற இடத்தில் காட்டவேண்டும். என்னிடமே காட்டினால் மூக்கறுபட்டு ஓடவேண்டியதுதான்,

சண்:—அது சரி, அவரை ஓட்டிவிட்டு மடாலயத்துக்கு ஆச்சாரியாராக என்னைப் போட்டு விடும்; பொருத்தமாக இருக்கும். அண்ணன் படைத்தலைவன். தம்பி மடத் தலைவன்.

பம்:—சரி, எனக்கு நேரமாகிறது நான் வருகிறேன் நாளை எல்லாம் பேசிக் கொள்ளலாம். (பம்பாபதி போகிறான். சண்டசேனன் கீழே உட்கார்ந்து சுவரில் சாய்ந்து கண்ணை மூடுகிறான், பிரிவாதினி அங்கே வந்து சேருகிறாள்)

பிரி:—சண்டசேனரே! என்ன தூக்கமா?

சண்:—(திடுக்கிட்டெழுந்து கலவரத்துடன்) வேண்டாம்! வேண்டாம்! என்னை விட்டுவிடுங்கள்! எனக்கு ஆச்சாரியப்பதவி வேண்டாம்!

பிரி:—(சிரித்துக் கொண்டே) சண்டரே! எந்த ஆச்சாரியப் பதவி வேண்டாம்?

சண்;—இங்கே பௌத்த மடாலயம் இருக்கிறது பாருங்கள்.

பிரி:—உங்களை யார் அங்கே ஆச்சாரியராக்கினார்கள்?

சண்:—இப்பொழுதுதான் சேனாபதி பம்பாபதி சொன்னாரே.

பிரி:—என்ன சொன்னார்?

சண்:– ஆச்சாரிய தேவரை இந்நாட்டைவிட்டே விரட்டிவிட்டு எனக்கு அந்தப் பதவியைத் தருவதாக......

பிரி:—எதற்காக ஆச்சாரிய தேவரை விரட்டுகிறாராம்.

சண்:—யாரோ அவரை அவமானப்படுத்தி விட்டார்களாம்.

பிரி:—சரி, அதெல்லாமிருக்கட்டும் சண்டசேனரே! எனக்காக நீங்கள் முக்கியமான காரியம் ஒன்று செய்யவேண்டும். செய்வீர்களா?

சண்:—என் உடலில் உயிர் மட்டும் இருந்தால் ஒன்றென்ன. பத்துக்காரியம் வேண்டுமானாலும் செய்கிறேன்,

பிரி:—ஆச்சாரிய தேவரை உங்களுக்குத் தெரியுமல்லவா?

சண்:—சூரியனைத் தெரியாத மனிதன் யாராவது இருக்க முடியுமா?

பிரி:—பம்பாபதி அவரை ஏன் எதிரியாக மதிக்கிறார் தெரியுமா?

க்ஷணத்தில் நுரையும் ஸன்லைட் அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்யும்

"என் துண்டு எவ்வளவு வெண்மை யாயிருக்கிறதென்று பார்த்தீர்களா? அதற்குக்காரணம் ஸன்லைட் சோப் உபயோகித்து அதைச் சலவை செய்ததுதான். ஸன்லைட் சோப்பின் க்ஷணத்தில் பொங்கிவரும் நுரை அழுக்கைத்திரட்டி வெளிக்கொண்டு வருகிறது. அதனல் துணிகள் யாவும் பளிச்சென்று வெண்மையாகச் சலவை செய்யப்படுகின்றன."

"கலர் துணிகளுக்கு மலர்ச்சி அளிக்க ஸன்லைட் சலவைபோல வேறெதுவுமில்லை. ஸன்லைட் சோப்பின் மிருதுவான நுரை அடித்துத் துவைக்காமலேயே அழுக்கை அகற்றுகிறது. அதனல் துணிகள் நீடித்து வருகின்றன."

டு. 221-X52 TM

இந்தியாவில் தயாரித்தது.

சண்:—ஒருவேளை அவரைப்போல் தானும் மேதையாக இல்லையே என்ற பொறுமையாக இருக்கலாம்.

பிரி:—அதிருக்கட்டும். எனக்காக நீங்கள் இந்தக்காரியம் செய்யமுடியுமா? அவர் மடாலயத்துக்குப் போய் நாளைக் காலையில் அவரைப்பார்க்க நான் அங்கே வருவதாகத் தகவல் சொல்ல வேண்டும்.

சண்:—இதென்ன பிரமாதம். நான் அப்படியே செய்கிறேன் தேவி!

பிரி:—அப்படியானால் நான் வரட்டுமா (போகிறாள்)

5

இடம்:—சுகதரின் சித்திரசாலை.

நேரம்:—விடிந்து இரண்டு நாழிகை,

(சுகதர் தம் சித்திர சாலையில் உட்கார்ந்துகொண்டு ஏதோ ஆழ்ந்த சிந்தனையிலிருக்கிறார். தன் சொந்த நாடான கிரீசுக்குத் திரும்பிச்செல்ல பல்லவநாட்டு மந்திரியிடம் அனுமதிப் பத்திரம் பெறச் சென்றிருந்த டேமதஸ் திரும்பிவந்து அவரை வணங்கி ஒதுங்கி நிற்கிறான்)

சுகதர்:—என்ன டேமதஸ்! போனகாரியம் என்ன ஆயிற்று?

டேம:—தாங்கள் நினைத்தபடியே தான் ஆயிற்று ஆச்சாரிய தேவா! மந்திரியார் அனுமதி கொடுக்க மறுத்துவிட்டார்.

சுக:—அதுதான் தெரிந்ததாயிற்றே. இனி என்ன செய்ய யோசனை?

டேம:—நான் என்ன யோசனை செய்ய இருக்கிறது ஆச்சாரிய தேவா! தாங்கள்தான் ஏதாவது யோசனை சொல்லவேண்டும்.

சுக:—நீ நாளைக்குக் கார்கடகம் புறப்பட ஏற்பாடு செய். அங்கே உனக்கு அனுமதிப் பத்திரம் கிடைக்க ஏற்பாடு செய்கிறேன். அதை வைத்துக்கொண்டு நீ கப்பலேறலாம். (மகதநாட்டுத் தூதுவன் சண்டசேனன் வருகிறான்)

சண்:—வணக்கம் ஆச்சாரிய தேவா!

சுக:—சண்டசேனரே! வாருங்கள்! வாருங்கள்! இப்படி உட்காருங்கள்!... வந்த காரியம் என்னவோ!

சண்:—தங்களிடம் ஒரு ரகசியம் சொல்ல வேண்டும்.

சுக:—என்னிடம் சொல்லவேண்டிய ரகசியம் அப்படி என்ன இருக்கிறது?......(டேமதசை நோக்கி) டேமதஸ் நீ போய் நாளைக்குப் பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச்செய். (டேமதஸ் வணங்கிவிட்டுப் போகிறான்) சண்டசேனரே! என்னிடம் சொல்லவேண்டிய ரகசியம் என்ன சொல்லுங்கள்.

சண்:—(மெதுவாக) ஒன்றுமில்லை ஆச்சாரிய தேவா! தங்களைப் பார்க்க ராஜகுமாரி பிரிவாதினி தேவியார் இப்பொழுது இங்கே வருவதாகச் சொன்னார்கள்.

சுக: என்னைப் பார்க்கவா! இங்கேயா! எதற்காக?

சண்:—சேனாபதி பம்பாதி தங்களை அவமதித்ததற்காகத் தங்களை நேரில் சந்தித்து மன்னிப்புக் கோர விரும்புகிறார்கள்.

சுக:—சேனாபதிக்காக அவர்கள் ஏன் மன்னிப்புக் கோரவேண்டும்? சேனாபதியின் வார்த்தைகளைப்பற்றி நான் சிறிதும் வருந்தவில்லை. ஆகையால் அதற்காக அவர்கள் மன்னிப்புக் கோர வேண்டிய அவசியமே இல்லை. நீங்கள் உடனே சென்று இதற்காக அனாவசியமாக இங்கே வரவேண்டாம் என்று அவர்களிடம் சொல்லுங்கள்.

(பிரிவாதினியும் கிருஷ்ணகுமாரியும் வருகிறார்கள்.)

சண்:—இதோ அவர்களே வந்துவிட்டார்கள்!

பிரி, கிரு:—வணக்கம் ஆச்சாரிய தேவா!

சுக:—வரவேண்டும்! வரவேண்டும்!...இப்படி அமருங்கள். (இருவரும் ஆசனத்தில் அமருகிறார்கள்.) வந்த காரியம் என்னவோ?

கிரு:—ராஜகுமாரி தங்களிடம் ஒரு முக்கிய காரியமாக வந்திருக்கிறார்கள்.

சுக:—என்னிடமா! இந்த ஏழைத் துறவியிடம் என்ன காரியம் சொல்லுங்கள்.

பிரி:—(கிருஷ்ணகுமாரியை நோக்கி) தேவி! நீங்கள்தான் சொல்லுங்களேன்.

கிரு:—தங்களிடம் சங்கீதமும் சித்திரக் கலையும் கற்றுக்கொள்ளவேண்டும் என்பது அரசகுமாரியின் விருப்பம். இதற்காகச் சேனாபதி யாரைத் தங்கள் கருத்தை அறிந்துவர அனுப்பி

னார்கள். ஆனால் அவரோ இங்கே வந்து தங்களிடம் அவமானகரமாகப் பேசி முறைகேடாக நடந்து கொண்டதாகத் தெரிய வந்தது. இதற்காக மன்னிப்புக் கேட்டு, தங்களிடம் நேரில் அனுமதி பெற்றுப் போவதற்காக ராஜகுமாரி அவர்கள் வந்திருக்கிறார்கள்.

சுக:—இதில் மன்னிப்புக் கேட்க என்ன இருக்கிறது? ஒருவன் போதை வெறியில் பிதற்றுவதை யாராவது குற்றமாக எடுத்துக் கொள்ளுவார்களா? சேனாபதியின் வார்த்தைகள் என்னைச் சிறிதும் வருத்தவில்லை. அவற்றைக் குற்றமாக நான் பாவிக்கவுமில்லை. ஆகையால் அதற்காக நீங்கள் மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியமுமில்லை.

பிரி:—அப்படியானால் ஆச்சாரிய தேவர் குற்றத்தை மன்னித்தருளினார் என நான் கொள்ளலாமல்லவா?

சுக:—குற்றமே இல்லாதபோது மன்னிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லையே தேவி!

பிரி:—அப்படியானால் ஆச்சாரிய தேவா என்னைத் தம் சிஷ்யையாக ஏற்றுக்கொள்ளத் தடை ஒன்றுமில்லையே.

சுக:—(ஆச்சரியத்துடன்) சிஷ்யையாக ஏற்றுக் கொள்வதா! அது எப்படிச் சாத்தியமாகும் தேவி,

பிரி:—(பணிவுடன்) ஆச்சாரிய தேவரே! இதில் சாத்தியம் சாத்தியமில்லை என்ற பேச்சுக்கே இடமில்லையே, தாங்கள் சேனாபதியிடம் கூறியபடி நானே இங்கு வந்து பாடம் கேட்டுப்போகத் தயாராக இருக்கிறேன். அப்படியிருக்கும்போது ஏன் சாத்தியப்படாது?

சுக:—தேவி! நான் உண்மை நிலையை எடுத்துச் சொல்லுவதற்காக வருத்தப்படக்கூடாது...தாங்



கள் ஒரு பெண். அதுவும் யௌவனப் பூரிப்பில் உள்ளவர்கள். கல்யாணமாகாத இங்நிலே. கன்னி. என்னிடம் நீங்கள் பாடம் கேட்க ஆரம்பித்தால் உலகம் பலவாறாக முணுமுணுக்கும். கதைகள் கட்டிவிடும். அபாண்டப் பழிகளைச் சுமத்தும்.

பிரி:—உலகம் என்ன சொன்னால் என்ன? அதற்கெல்லாம் நான் அஞ்சுபவளல்ல ஆச்சாரிய தேவா!

சுக:—நான் அதற்காகச் சொல்லவில்லை தேவி! நானும் அதற்கெல்லாம் அஞ்சுபவனல்ல. நேர்மையான பாதையில் செல்லும்வரை யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை. பயப்படவும் கூடாது. ஆனால் ஒன்று. இதன்படி நடந்தால் நானே தங்கள் நற்பெயருக்குக் களங்கந் தேடித் தந்த காதகன் ஆவேன் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக நிற்க வேண்டிய நானே இவ்விதம் நடந்து கொள்ளுவது நேர்மையுமல்ல. முறையுமல்ல. அடாத பாபச்செயலாகும்.

கிரு:—அதிருக்கட்டும், அரசகுமாரிகள் மடாலயத்தில் வேண்டுமானால் வந்து பாடம் கேட்டுப் போகட்டுமே என்று தாங்கள் சேனாபதியிடம் சொல்லவில்லையா?

சுக:—சொன்னேன். இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால் மடாலயத்துக்குக் கல்வி கற்கவரும் யாரும் மடாலயத்தின் நியதிகளுக்கு உட்பட்டே பாடம் கேட்க வேண்டும். மடாலயத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே யாரையும் அதில் சேர்த்துக்கொள்ளும் உரிமை ஆச்சாரியாருக்கு உண்டு. மாறாக நடக்க அவருக்கு உரிமையில்லை. இந்த நாட்டு மன்னனுக்குமில்லை. சேனாபதிக்குமில்லை. வேறு யாருக்குமில்லை. பெண்களுக்கு ஆண்களின் மடாலயத்தில் இடமளிக்கக் கூடாது என்பது எங்கள் மடாலயத்தின் பிரதான விதிகளில் ஒன்று. இது பகவான் புத்தரே வகுத்துக் கொடுத்த விதி. இதற்கு மாறாக நடக்கும் உரிமை எனக்கில்லை. வேறுயாருக்குமில்லை.

கிரு:—நீங்கள் சொல்லுவதும் ஒருவகைக்கு உண்மைதான். ஆனால் ஒன்று. ராஜகுமாரி மடாலயத்துக்கு வந்து கல்வி கற்கத்தானே மடாலய விதிகள் இடந்தரா? அரண்மனையில் கற்க இடம் தருமல்லவா? மடாலய விதிகளும் சட்டுத்திட்டங்களும் அரண்மனைக்குப் பொருந்தா அல்லவா?

சுக:—பொருந்தாதான். ஆனால் நான் மடாலயத்தைச் சேர்ந்தவன். ஆகையால் அதன் விதிகளும் சட்டதிட்டங்களும் என்னை எல்லா வகைகளிலும் கட்டுப்படுத்தும்.

கிரு:—அதுவும் உண்மைதான், ஆனால் அச்சட்டதிட்டங்கள் தாங்கள் அரண்மனைக்கு வருவதைத் தடை செய்யவில்லையே.

சுக:—தடை செய்யவில்லைதான். சாதாரண முறையில் அங்கேவர எனக்கு எவ்வித ஆட்சேபனையுமில்லை. ஆனால் அரச குமாரியின் ஆச்சாரியன் என்ற முறையில் அங்கே வருவதுதான் இயலாத காரியம்.

கிரு:—ஏன்?

சுக:—இதற்குக் காரணம் நான் இப்பொழுது சொல்ல இயலாது. வருங்காலம் சொல்லும். நீங்கள் வந்தும் வெகுநேரமாகிவிட்டது. நானும் போகவேண்டும். மாணவர்கள் வரும் நேரமாகிவிட்டது.

கிரு:—அப்படியானால் நாங்களும் புறப்படவேண்டியதுதானா?

சுக:—ஆம் தேவி! மாணவர்கள் வருவதற்கு முன் நீங்கள் போய் விடுவது நல்லது.

பிரி:—(தழுதழுத்த குரலுடன்) ஆச்சாரிய தேவா! நான் நம்பிக்கை என்னும் தீபமேந்தி இங்கே வந்தேன். நிராசை என்னும் இருள் சூழத் திரும்பிச் செல்கிறேன். தாங்கள் என்னை மாணவியாக ஏற்றுக்கொள்ள மறுத்தபோதிலும் தங்களையே என் குருவாகக் கருதுகிறேன். நான் வருகிறேன் குருதேவா! வணக்கம்.

(மண்டியிட்டு வணக்கம் செலுத்துகிறாள்)

கிரு:—நாங்கள் வருகிறோம் ஆச்சாரியதேவா!

(மண்டியிட்டு வணக்கம் செலுத்துகிறான்)

சண்:—நானும் வருகிறேன் ஆச்சாரியதேவா!

(குனிந்து வணக்கம் செலுத்துகிறான்.)

சுக:—(கையை உயர்த்தி ஆசீர்வதித்து) எல்லோரும் போய்வாருங்கள். ஸ்வஸ்திமத்யோ பவந்து! (எல்லோரும் போகிறார்கள். மறுபக்கமாகச் சேனாபதி பம்பாபதி வருகிறான்)

பம்:—சுகதரே!

சுக:—ஏன் சேனாபதி? என்னவேண்டும்?

பம்:—தங்கள் மடாலயத்துக்கு இன்று மந்திரியே விஜயம் செய்திருக்கிறார் (விஷ்ணுவர்மன் வருகிறான்)

சுக:—மந்திரியாரே! வாருங்கள்! வாருங்கள்! இப்படி இந்த ஆசனத்தில் அமருங்கள்...தங்கள் பாத துளி பட இந்த மடம் பாக்கியம்தான் செய்திருக்கவேண்டும். (மந்திரி ஆசனத்திலமருகிறார்.) சேனாபதியாரே! தாங்களும் அப்படி ஆசனத்தில் அமருங்கள்.

பம்:—(விறைப்பாக) என்னைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். நான் உட்கார இங்கே வரவில்லை.

சுக:—மந்திரியாருக்கு அடியேன் செய்ய வேண்டிய சேவை என்னவோ!

பம்: சேவை என்ன வேண்டியிருக்கிறது சேவை. நீங்கள்தான் எங்களை அவமானப் படுத்தி அதற்கு வழியில்லாமல் செய்து விட்டீர்களே.

விஷ்:—ஏதோ சேனபதி சொல்லுகிறாரே அது உண்மையா ஆச்சாரியரே?

சுக:—அவரைப் பொறுத்தவரை அது உண் மையாக இருக்கலாம்.

பம்: தம் மாணவன் ஒருவனைத் தூண்டி விட்டு என்னை அவமானப்படுத்தியது உண் மையா இல்லையா கேளுங்கள் மந்திரியாரே.

விஷ்:—என்ன? ஒரு மடாலயத்துப் பஞ்சை பல்லவ சேனபதியை எதிர்த்தானு?... என்ன இது உண்மையா ஆச்சாரியரே!

சுக:—பஞ்சைக்கும் மனம் உண்டு. மானம் மரியாதையுண்டு. நாய்தானே என்று கோலைக் கொண்டு குத்தினல் அதுவும் வள் வள் எனக் குரைக்கத்தான் செய்யும்.

விஷ்:—உங்கள் உவமானத்தையோ உபதேசத் தையோ கேட்க நான் இங்கே வரவில்லை. உங்கள் மாணவன் எங்கள் சேனபதியைத் தடியெடுத்துத் தாக்க முயன்றது உண்மையா? இல்லையா?

சுக:—தங்கள் சேனபதி என் மாணவனைக் கத்திகொண்டு குத்த முயன்றது உண்மை யானல் என் மாணவன் தடி எடுத்தது உண்மைதான்.

விஷ்:—(கோபாவேசத்துடன்) அந்நிய நாட்டி லிருந்து வந்த ஒரு ஆண்டிக்கு இவ்வளவு ஆணவமா?... எங்கே அவன்? அவனை உடனே குண்டுக் கட்டாகக் கட்டி என் முன் நிறுத்து சேனபதி!

பம்:—தங்கள் உத்தரவுப்படியே செய்கிறேன் மந்திரியாரே! (கைது செய்யப் புறப்படுகிறான்.)

சுக:—அப்படியே நில்லும் சேனபதி! (விஷ்ணு வர்மனை நோக்கி) மந்திரியாரே! இந்த மடாலயத்துக்கு அதிபதி நான். என்னுடைய அனுமதியில்லாமல் இங்கே யாரையும் கைது செய்தல் கூடாது. கைது செய்யவும் முடியாது.

விஷ்:—நான் யார்? யாரோடு பேசிக்கொண் டிருக்கிறீர்கள் என்பதை நிதானித்துப்பேசுங்கள் ஆச்சாரியாரே!

சுக:—நான் நிதானித்துத்தான் பேசுகிறேன் மந்திரியாரே! தங்கள் அதிகாரத்துக்கும் ஓர் வரம்பு உண்டு. அதைமீறி நடக்க வேண்டாம். இந்த மடாலயத்தின்மீதோ அல்லது என் மாண வர்கள்மீதோ என்மீதோ எவ்வித அதிகாரமும் தங்களுக்குக் கிடையாது. மடாலயம் எல்லோ ருக்கும் பொதுவான சொத்து. அதில் தனிப் பட்ட யாருக்கும் உரிமையோ அதிகாரமோ இல்லை.

விஷ்:—இதெல்லாம் உங்களிடம் கேட்க நான் வரவில்லை ஆச்சாரியாரே! என் நாட்டில், என் கண் முன்னல் என் சேனபதியை அந்நிய நாட் டுப் பஞ்சை ஒருவன் அவமானப் படுத்துவதை நான் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என் சேனபதியை அவமானம் செய்வதும், என்னை அவமானம் செய்வதும், என் நாட்டை அவமா னம் செய்வதும் ஒன்றுதான். இப்படிப்பட்ட ஒரு துரோகிக்கு நீங்கள் அடைக்கலம் அளிக்க வேண்டாம். இவ்வளவுதான் என்னல் சொல்ல முடியும்.

சுக:—நான் அப்படி யாருக்கும் அடைக்கலம் அளிக்கவில்லை மந்திரியாரே!

விஷ்.—ஏன் உங்கள் கிரேக்க மாணவன் இங்கே இல்லையா. தன் நாட்டுக்கே திரும்பிப்போய் விட்டானு? எப்படிப் போயிருக்க முடியும்? நான் தான் அனுமதிப் பத்திரம் கொடுக்க மறுத்து விட்டேனே.

சுக:—ஏன் மறுத்தீர்கள்?

விஷ்:—அது என் இஷ்டம். அதைப்பற்றி யெல்லாம் கேட்க நீங்கள் யார்?

சுக:—மந்திரியாரே! அடக்கமாகப் பேசுங்கள். அகந்தையினல் அழிவுதான் வரும்.

விஷ்:—ஓகோ! எனக்குப் புத்தி புகட்ட வந்து விட்டீர்களா! உங்கள் புத்திமதியெல்லாம் உங்க ளிடமே வைத்துக்கொள்ளுங்கள். எனக்கு வேண் டாம். (பம்பாபதியை நோக்கி) சேனபதி! ஏன் தாமதம்? எங்கே இருந்தாலும் அந்தக் கிரேக் கனைக் கைதி செய்து இங்கே கொண்டுவந்து நிறுத்து.

சுக:—என் உடலில் உயிர் உள்ளவரை என் மாணவன் யாரையும் கைதி செய்ய அனுமதி யேன்.

விஷ்:—உங்கள் அனுமதி தேவை இல்லை.

சுக:—அனுமதியின்றிக் கைதிசெய்தால் அனர்த்தம்தான் விளையும்.

விஷ்:—(ஏளனத்துடன்) அனர்த்தமா! யார் உங்களுக்கா எனக்கா?......முதலில் உங்களையே கைதி செய்கிறேன். உங்கள் அனர்த்தம் என்ன செய்கிறதென்று பார்க்கிறேன் (பம்பாபதியை நோக்கி) சேனுபதி! முதலில் ஆச்சாரியரைக் கைது செய்! மந்திரியாகிய என்னை மதியாமல் பேசியது அவர் மேல் முதல் குற்றம். (சுகதரைக் கைது செய்யப் பம்பாபதி நெருங்குகிறுன்.)

சுக:—மந்திரியாரே! என்னைக் கைது செய்ய நீங்கள் யார்? உமக்கு யார் இந்த அதிகாரம் அளித்தது?

விஷ்:—எனக்கு உங்களைக் கைது செய்ய மாத்திரம் அதிகாரம் இல்லை. உங்கள் தலையை வாங்கவும் அதிகாரம் உண்டு. உங்கள் மடாலயத்தைச் சுட்டுப் பொசுக்கித் தரை மட்டமாக்கவும் அதிகாரம் உண்டு. தெரியுமா?

சுக: மமதையாய் மதிகெட்டுத் திரியவேண்டாம். மடாலயத்தை அழித்தால் மகதம் கொதித்தெழும். வாகாடகம் வெகுண்டு கிளம்பும். பல்லவமும் பார்த்துக் கொண்டிருக்காது. ஆணவத்தால் அழியவேண்டாம்.

விஷ்;—யாருக்கு ஆணவம்? உங்களுக்கா எனக்கா? ஆணவத்தால் யார் அழிகிறுர்கள் பார்க்கலாம். மடாலயத்தை அழித்தால் என்னை யார் என்ன செய்யமுடியும்? அதையும் பார்க்கிறேன். (பம்பாபதியை நோக்கி) சேனுபதி! நான் உத்தரவிடுகிறேன். நாளை விடிவதற்குள் இந்த மடாலயம் இருந்த இடம் தெரியாமல் தரை மட்டமாக்கப்படவேண்டும். ஆச்சாரியர் அகந்தையின் சின்னம் அடியோடு அழிக்கப்படவேண்டும். என்ன தெரிந்ததா?

பம்:—தெரிந்தது; அப்படியே செய்கிறேன் மந்திரியாரே! (போகிறுன்)

விஷ்:—(ஏளனத்துடன்) ஆச்சாரியாரே! ஆணவத்தால் அழிந்தது நீங்களா நாஞ. பார்க்கலாம். (கேலியாகச் சிரிக்கிறுன்) ஹா, ஹா, ஹா. (அவனும் போகிறுன்)

(தொடரும்)

உங்கள் எதிர்காலம்

ஸி. பி. பி. எஸ்.

(1—11—54 நவம்பர் 30—11—54 முடிய)

1. மேஷ ராசி.

(அசுவதி, பரணி, கார்த்திகை. 1 ஆங்கால்)

இராசிக்கதிபதி குஜன் உச்சத்தில் சஞ்சரிப்பினும், நவாம்ஸ இயக்கத்தில் நீச்சமாகக் காணப்படுவதால் போதிய பலன்களை எழுதுவதற்கில்லை. தனதிபராகிய சுக்ரன் வக்ரமாயினும் நவாம்சத்தில் ஆட்சியாய்க் காணப்படுவதால், பணமுடை என்பதை எப்படியோ சரிகட்டும். க்ரஹங்களின் தன்மையை கூர்ந்து கவனிக்குங்கால்:— வெளிப்பார்வையில் நன்ருகவே தென்படுகிறது. என்ருலும்:– முன்யோசனையின்றி அவசரப்பட்டு பேசுவதினுலோ அல்லது செய்கைகளினுலோ தன் காரியத்தைக் கெடுத்துக்கொள்ளும் சூழ்நிலை ஏற்படக்கூடும், Becareful. ஒரு சிலருக்குத் தற்செயலான சிறு விபத்துக்கள் மறைமுக எதிரிகளால் ஏற்படும். அபவாதம் சிறு தண்டனைகள் என்ற அம்சங்களால் பாதிக்கப்பட நேரும். அச்சம் தேவையில்லை, 6, 7, 10க்குடையவர்களின் அமைப்பினுல். மாதப் பிற்பகுதியில் சோதரம், தாய், கணவன் அல்லது மனைவி இவர்களது சரீர நலனுக்குப் பணவிரையம் ஆகக்கூடும். ஒரு சிலருக்குப் பழைய ஸ்திரீகளின் உறவு நீங்கி புதிய ஸ்திரீகளின் தொடர்பு ஏற்படுவதில் கவனம் தேவைப்படும். வீடு, நிலம், கார். விவசாயிகளானுல் கால்நடைகள், உடல் நிலை என்ற அம்சங்களில் நல்லது கெட்டது என்றிராமல் மத்திமமான சூழ்நிலையிலேயே இருந்து வரக்கூடும், நவம்பர் 13, 14, 15, 16 இந்தத் தேதிகளில் திடீர் தன ப்ராப்தம் ஒரு சிலருக்குக் கிடைக்கக்கூடும். மாறின தொழில், நகர், வசிக்கும் இடம்இதன் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படுவதற்கில்லை.

2. ரிஷப ராசி.

(கார்த்திகை 2, 3, 4 ரோஹிணி மிருகசீரிஷம் 1, 2 ஆங்கால்)

இராசிக்கதிபதி சுக்ரன் 7-ல் வக்ரமாகவும், யோககாரகர் சனி அஸ்தமனமாகவும், சுபரான சூர்யன் நீச்சத்திலும் காணப்படுவதால் வாழ்க்கையில் மந்தகரமான சூழ் நிலையைக் குறிக்கும். ஒரு சிலர் ஆப்ரேஷன் சிகிச்சை மேற்கொள்ள நேரும்: குடும்பத்தில் அசுர நிவாஸம் காணப்படுவதால் தாம்பத்ய வாழ்க்கையில் சலிப்பு மேலோங்கும். மாதப் பிற்பகுதியில் சுக்ரன் அஸ்தமனமாவதால் பல நன்மைள் உருவாகக்கூடும். ஸ்திரீகளால் நன்மை, அதிகாரிகளின் பாராட்டு ஹேஷ்ய பூர்வமான போட்டியினங்களில் வெற்றியும். பிரிந்திருந்த தம்பதிகள் ஒன்றுசேர்வது வீடு, நிலம், கார், விவசாயிகளானுல் கால் நடைகள் என்ற அம்சங்களில் திருப்திகரமான போக்கே காணப்படும். பொருளாதாரத்தில் குறையொன்றும் சொல்வதற்கில்லை, ப்ரசாரம், ப்ரசுரம், அரசாங்கம் அல்லது பொதுமக்கள் தொடர்பில் கீர்த்தியும் ஏற்படும், குஜன், குரு. இத்திசை நடப்பவர்களுக்குமட்டும் சுப பலன்கள் மாறியே காட்டும். உத்யோகஸ்தர்களாயின் ஒய்வு எடுத்துக்கொள்வது நலம், இயந்திரத் தொடர்புள்ளவர்கள் வெகு ஜாக்ரதையாய் இருப்பது நலம், மாணவ மாணவிகளுக்கு உல்லாசப்ரயாணங்களில் கவனம் தேவைப்படும்.

N. B:—கால்நடைகளில் உயர் ஜாதி கறவை. குழந்தைகளில் பெண் இனம். பாதுகாப்பில் சிரத்தைகொள்ள நேரும்,

3. மிதுன ராசி

(மிருகசீரிஷம், 3, 4 ஆருத்ரா, புனர்வசு, 1, 2, 3 ஆங்கால்)

இம்மாத முற்பகுதியில் இராசிக்கதிபதியின் சஞ்சாரத்தால், வழக்கு வெல்லுதல், தொழிலில் ப்ரமோஷன், எதிர்பார்க்கும் ஆதாயங்கள் கிடைக்கப் பெறுதல், ஜேஷ்ட சோதரர்களின் அதிருஷ்டம் பிரமாதமாக ஓங்குதல். கணவனுல் மனைவிக்கும் மனைவியாலுல், கணவனுக்கும் சரீர நலம் சீர்பட இன்னும் சில வாரங்கள் செல்லவேண்டும். ஹேஷ்யப் பூர்வமான போட்டியினங்களில் ஓர் வரம்புக்குள்ளாக ஈடுபடலாம். வீடு, நிலம், கார், விவசாயிகளானுல் கால் நடைகள், என்ற அம்சங்களில் போதிய திருப்திகரம் இன்னும் சொல்வதற்கில்லை. மாதப் பிற்பகுதியில் வயது வந்த பெண்கள், குழந்தைகள், தனது பிரயாணம், தொழில் ஆகிய வற்றில் போதிய கண்காணிப்பும் (ஏமாறுதல், பரிகொடுத்தல் என்ற சூழ்நிலை) தேவைப்படும். இதுபோது வி, செ 6, 8-ஆக சஞ்சரிப்பதால் குடும்பச் சாவுகளால் மனக் குழப்பம் ஏற்படினும் வெகுவாய் பாதிக்கப்படமாட்டீர்கள். 6-ல் உள்ள சூரியன் சகல தோஷத்தையும் போக்க வல்லவராவர் என்ற காரணத்தால் வெளியூரில் இருப்பவர்கள் சொந்த ஊர் திரும்பு

தல். எந்த வகையிலும் இந்த ராசிக்காரர்களுக்கு பணமுடையென்பது இனி சொல்வதற்கில்லை, மாதக் கடைசியில் புதன் அஸ்தமனமாவதால் கூட்டுத் தொழில் மூலம் இலேசங்கள் நிகழக்கூடும் அல்லது விஷ பீடைகள் ஏற்படுமென்றுவது குறிப்பிட்டுவிடலாம்.

4. கடக ராசி

(புனர்வசு 4, ஆயில்யம், மகம்)

இம்மாதம் முதல் 10 நாட்கள் வரையில் சந்திரன் ஆரோஹணத்தில் காணப்படுவதால் நாணயம், கௌரவம், விவகாரங்களில் வெற்றி, பொது மக்கள் தொடர்பில் மிகுந்த ஆர்வம் குழந்தைகளின் சுபா சுப காரியங்களில் தன விரயமும் ஒரு சிலர் வட திசைப் பிரயாணத்திற்கு ஆயத்தமும் தனாதிபரான சூரியன் நீசத்தில் காணப்படுவது பண முடையைக் குறிக்குமென்றாலும் 11 மாதி தன் ஸ்தானத்தை நோக்குவதால் வெகுவாய்ப் பாதிப்பதற்கில்லை. 11 முதல் 25 வரையில் தேய் பிறையாகக் காணப்படுவதால் எத்துறையிலும் மீசுர பலன் சொல்வதற்கில்லை. சோதர, சோதரி, இளைய மனையாள், சிறு குழந்தைகள் இவர்களின் சரீர நலம் பாதிக்கப்படும். ஒரு சிலரின் தந்தைக்குத் துர்மரணம் நிகழக்கூடும் என்ற காரணத்தால் பிரயாணங்களை நிறுத்தி வைப்பது உத்தமம். வீடு, நிலம், வாகனம், கல்வி, தொழில் or வியாபாரம் ஆகிய இனங்களில் திருப்திகரமான அளவிற்குப் பலன் கிடைக்க ஏதுகரத்தைக் காணோம். பொதுவில் இம்மாதம் ஆறுதலற்ற மாதமேயாகும்.

N. B:— யோககாரகர்களிருவரும் உச்சம்பெற்று 7-ஆம் பார்வையாகச் சஞ்சரிப்பதால் கிடைக்கப்பெறும் ஆதாயங்களுக்குப் பல எதிர்ப்புகளைச் சுதாரிக்க நேரும்.

5. சிம்ம ராசி.

(மகம், பூரம், உத்ரம் 1-ஆங்கால்)

யோககாரகர் உச்சம் பெற்றும், இம்மாத 2 ஆவது வாரத்திலிருந்துதான் மீசுரபலன்களைத் தரும் சக்தி ஏற்படக்கூடும். தொழில் துறையில் ஏற்பட்ட மந்தம், நோயுற்ற மனையாள், தனக்கு மேலிருப்பவர்களுடன் கொண்ட மனத்தாங்கல், ஆகிய இனங்களில் மன அமைதி நிலவும். சோதர சோதிரிகளின் சுபா சுபகாரியங்களில் தீவிர முயற்சியும் விவகாரங்களில் பூர்ண வெற்றியும் காணக்கூடும். சந்திர திசை ஆரம்பமாயுள்ளவர்களுக்கு மட்டும் மனையாள், குழந்தை, ஆகிய இவர்களின் தேக நலப்பாதுகாப்பில் வேண்டிய கவனம் செலுத்த வேண்டும். 8 ஆம் வீட்டோன் 4 ஆம் வீட்டை நோக்குவதால், இடப்பெயர்சி பதவி மாறுதல் அல்லது நிலம், கார், ஆகிய அம்சங்களில் புதிய வகையில் மாற்றம் நிகழும். செயலாற்றும் பணிக்குப் பாராட்டுதல் ப்ரசாரம், ப்ரசுரம், அரசியில் ஈடுபாடு. கம்பெனித் தொடர்பு ஆகியவற்றால் வெகு லாபம் காணக்கூடும். மாதபிற்பகுதியில் குஜன் 7ல் பிரவேசிப்பது நல்லதல்ல என்ற காரணத்தால் மனைவியின் வாதனை மனவேதனை தரும் அளவிற்கு நிகழ்ச்சிகள் ஏற்படினும் கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடித்தல் நன்று. விவசாயிகளானால் கால் நடைகளில் போதிய பலன் சொல்வதற்கில்லை. ஓரளவு உயிர்ச் சேதமும் நடக்கக்கூடும். ராகு திசை நடப்பவர்களுக்குப் பெற்றோர்களின் க்ஷேமாபிவிர்த்தியில் கவனம் தேவை.

6. கன்யா ராசி

(உத்ரம் 2, 3, 4. அஸ்தம் சித்திரை 1, 2. ஆங்கால்)

யோககாரகாரன சுக்ரன் 3ல் வக்ரமாகக் காணப்பட்டாலும் உச்ச குரு நோக்குவதால் நோயுற்ற சோதரி சுகமடைதல், குழந்தை பாக்யம் அடைதல். இது வரை முரண்பாடாக இருந்து வந்த சிக்கல்கள் இனி மறைந்து விடக்கூடும், புதியதாகத் தொழிலேற்குதல் தற்காலிக பதவி நிரந்தரமாகுதல், ஊதிய உயர்வு பெறுதல், ஒரு சிலருக்குத் தடைப்பட்டிருந்த திருமணம் கூடுதலும். மாதப் பிற்பகுதியில்குஜன் 6லும் பு. சு. ஒன்று கூடுவதாலும் திடீர் தனப்ராப்தம் ஏற்படக்கூடும். சனி திசை நடப்பவர்களுக்குச் சரீர நலம் பாதிக்ககப்படும் Educational; Engineering, Railway, Postal & Telegraph, இது தொடர்புள்ள உத்யோகஸ்தர்களுக்கு யோகம் மீசுரமாகவே தென்படுகிறது, கடைசி வாரத்தில் மட்டும் குழந்தைகள் or பெற்றோர்களில் எவருக்கேனும் மோசமான நிலைமையில் சரீரம் பாதிக்ககூடும். கவலை தேவையில்லை. குஜன், வி 6 8 ஆக இருப்பதால் தாயாதிகளின் சச்சரவு மேலோங்கக்கூடும். இது காறும் தொடர்து வந்த இன்னல்கள் இனி மறையக்கூடும். வீடு, நிலம், கார், விவசாயிகளானால் கால் நடைகள் பொருளாதாரம் என்ற அம்சங்களில் குறையொன்றும் சொல்வதற்கில்லை. அதிக உழைப்பின் காரணமாக ஒரு சிலர் தொழிலில் ஓய்வு பெறக்கூடும், கூட்டு வர்க்கமும் ஏற்படும். பொதுவில் சென்ற பல மாதங்களைக் காட்டிலும் சிறப்பான மாதமென்றே குறிப்பிட்டுவிடலாம்.

7. துலா ராசி.

(சித்திரை 3, 4 ஸ்வாதி, விசாகம் 1, 2, 3-ஆங்கால்)

இராசிக்கதிபதி சுக்ரன் வக்ரத்தில் காணப்பட்டாலும் யோககாரகர்கள் வலுத்திருப்பதால் நோய் நீங்குதல், பதவி மாறுதல், கர்ப்பமுற்ற மனைவிமார்களின் க்ஷேமாபிவிர்த்திக்குப் பணம் விரயமாவதும் மாற்றமான நிகழ்ச்சிகளில்

மன அமைதியும். 6-ஆம் வீட்டோன் 10-ல் காணப்படுவதால் வாழ்க்கையில் பல இடைஞ்சல்கள் ஏற்படினும் பெரியோர்களின் பகை கெடுதலேத்தர இடமில்லே. வீடு, நிலம், கார், கால் நடைகள், மாணவர்களானல் உயர்தரக் கல்வி பொருளாதாரம் என்ற அம்சங்கள் திருப்திகரமாகவே தென்படுகிறது. வெளி வட்டார அலுவல்களில் பூர்ணமான பலன்கள் ஏற்படுவதற்கில்லே. ஆடிட்டர்ஸ், கெஜட்டெட் ஆபீசர்ஸ், ரேடியோ டைரெக்டர்ஸ், டாக்டர்ஸ், ஆகிய பதவிகள் வகிப்பவர்களுக்குத் தற்காலிகமான சிறு உயர்வு தொழிலில் ஏற்படக்கூடும். ஹேஷ்யபூர்வமான போட்டியினங்களில் புதன், சனி இத்திசை நடப்பவர்கள் வெற்றிகரமாக ஈடுபடலாம். வியாபாரிகளாய் இருப்பின் செம்மை நிற வஸ்துக்களால் வெகு இலாபம் அடையக் கூடும். ஒரு சிலர் இயந்திரச்சாலே புதியதான கட்டிடம், தொழில், கூட்டுப்பண்ணே இவைகள் அமைப்பதில் தீவிர முயற்சிகள் நடைபெறுவதில் தடையொன்றும் இராது. பொதுவாக சென்ற பல மாதங்களேக் காட்டிலும் திருப்திகரம் நிலவும் மாதமென்றே கூறிவிடலாம். 90% இந்த ராசிகாரர்களுக்கு மனையாள்வழி பண உதவிகள் தாராளமாகக் கிடைக்கும்.

8. விர்ச்சிக ராசி.

(விசாகம், 4 அனுஷம், கேட்டை)

இராசிக்கதிபதி குஜன் இராசியில் உச்சமானுலும் நவாம்ச இயக்கத்தில் நீச்சமடைந்த படியால் போதுமான அளவில் நற்பலனே எழுதுவதற்கில்லே. யோககாரகர் இராசிக்கும் 12-லும் அம்சத்தில் 4-ஆம் வீட்டிலும் காணப்படுவதால் தேக சுகத்தை நன்கு பராமரித்தல் வேண்டுமென்பதுடன் பெண் குழந்தைகளின் தேக நலனிலும் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ள நேரும். 2, 7, 11 இந்த ஸ்தானங்களின் 8ஆம் வீட்டைப் பாபர் நோக்குவதால் குடும்பம், நேத்ரம், மனைவி, ஜேஷ்ட சோதரம் ஆகியவர்களால் சிறு கிலேசங்கள் இன்னும் விட்டபாடில்லே. தனதிபரான குரு தற்காலிக உச்சம், பெற்றபடியால் பொதுமான அளவிற்குத் தனப் பெருக்கம் இல்லேயானுலும் பணத்தட்டு என்ற அம்சத்தால் பாதிக்கப்படமாட்டீர்கள். மாதக் கடைசியில் ஒரு சிலருக்குப் போட்டியினங்களில் பூர்ணமான வெற்றி கிடைக்கும். வீடு, நிலம், கால் நடைகள், தாய், நண்பர்கள் தொழில் ஆகியவற்றில் நல்ல முன்னேற்றம் ஏற்பட இன்னும் சில வாரங்கள் செல்லவேண்டும். உத்தியோகஸ்தர்களாயின் தற்காலிகமான உயர் பதவிகள் வகிக்கக்கூடும். மற்றெவ்விதமான துறையிலும் திருப்திகரமே நிலவும். பிரயாணங்களில் கவனம் தேவை. முக்கியமாய் வான ஊர்திப் பிரயாணம் கூடாது.

9. தனுர் ராசி.

(மூலம், பூராடம், உத்ராடம் 1 ஆங்கால்)

யோககாரகர்களின் பலஹீனமான ஸஞ்சரிப்பு எவ்வித நன்மையையும் குறிப்பாக எழுத இயல

பர்த் "ஸ்டேபிரைட்" எவர்ஸில்வர்
ஸ்டீல் பாத்திரங்கள்

சுகாதாரத்திற்கு உகந்தவை

- ஒவ்வொரு குடும்பத்தின் தேவைகள் அனேத்திற்கும் அவசியமானது.
- கல்யாணங்களுக்கும் மற்றும் எல்லாவித விசேஷங்களுக்கும் சீர்வரிசையாகவும் வெகுமதியாகவும் கொடுப்பதற்கு மிகவும் கண்யமானவை.
- நீடித்த உழைப்பு, உறுதி, நம்பிக்கை, விலே மலிவு முதலிய சகல அம்சங்களுடன் மொத்தத்திலும் சில்லறையிலும் கிடைக்கும்.
- உபயோகத்தில் கறுக்காதவை, கைக்காதவை, உடையாதவை.

எம். ஏ. எதிராஜலு நாயுடு
7/4, ஈவினிங் பஜார் (போன் 4106) மதராஸ்.

வில்லை. என்றாலும் சுலபரான குஜன் தனஸ்தானத்தில் உச்சம் அடைந்தபடியால் பொருளாதாரம் சரிகட்டி வரும். 7-ஆம் வீட்டில் கேதுவின் சஞ்சாரம், மனையாள் என்ற அம்சத்தில் பலவகையான கிலேசங்கள் பல்வேறு வழியில் இருக்கத்தான் செய்யும், 1, 2, 4, 6. 10 இந்த ஸ்தானங்களுக்கு 8 ஆகச் சனி சம்பந்தப்படுவதால்:- இந்த இராசிக்காரர்களின் நுண்ணறிவு, நயமான வார்த்தைகள், போற்றத்தக்க தொழில் மெச்சத்தகுந்த இடம், வெளியிடத்துக் கீர்த்தி, தான் வசிக்கும் பதவி ஆகிய அம்சங்களால் போதுமான பலன்கள் பெறுவதில் இம்மாதத்தில் தடைகள் காணப்படும். சுக்ரனின் அஸ்தமனத்திற்குப் பிறகு சகல துறையிலும் முற்போக்கே காணப்படும். தேகாரோக்யத்தில் அதிக கவனம் தேவை. ஸ்திரீகளினால் தன விரயம் ஏற்க நேரும். எவ்வித வகையிலும் நடு நிலைமையே தென்படும், மாதப் பிற்பகுதியில் குடும்பச் சச்சரவுகளில் நிதானத்தை இழத்தல் கூடாது.

10. மகர ராசி.

(உத்ராடம் 2, 3, 4 சிரவணம், அவிட்டம் 1, 2 ஆங்கால்)

இராசிக்கதிபதியின் அஸ்தமனம் மாத முற்பகுதி வரையில் இருப்பதால் விசேஷ பலன்களை எழுதுவதற்கில்லை. 23 தேதி முதல் நோயுற்ற மனையாள் சுகமடைதல். ஹேஷ்ய பூர்வமான போட்டியினங்களில் வெற்றி. ப்ரபல ஆபீஸர்களின் பாராட்டுதல், நாணயம், கௌரவம், அந்தஸ்து, பொதுமக்களின் தொடர்பில் மேன்மை காண்பது, தொழிலில் உயர்வும் ஸ்திரீகளின் ஏக போக வாஞ்சையும் எதிரிகளின் தொல்லைகள் மறைவதும். வீடு, நிலம், கார், விவசாயிகளானால் கால் நடைகள் முதலிய அம்சங்களில் திருப்திகரமான போக்கே காணப்படும். சுபர்களான, குஜன், பு. சு. இம்மூவரின் அமைப்பினால் எவ்வித இன்னல்களும் மின்னல்போல் மறையும். அடிக்கடி ஏற்படும் ப்ரயாணங்களில் தோல்வி என்பது ஏற்படாது, இனி இந்த இராசிக்காரர்கள், வீடு, வாகனம், தொழில் நூதன கல்வி முதலிய அம்சங்களில் நல்லதொரு மாற்றம் ஏற்படக்கூடும். தாய் வழி அம்மானுக்கு மிக மிகச் சோதனையான மாதமாகும். மாதக்கடைசியில் தாம்பத்திய வாழ்க்கையில் சிறு பிளவு ஏற்படக்கூடும். 5, 9 ஸ்தானங்களின் 8-ஆம்ஸ்தானத்தை, சனி பார்ப்பதால், குழந்தை யானால், தந்தைக்கும் தந்தையானால், குழந்தைக்கும் சரீர நலம் பாதிக்கப்படும்.

11. கும்ப ராசி.

(அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3ஆங்கால்)

இம்மாதத்தில் கு, சனி, சு, பு இந்நால்வரும் ஒன்று கூடுவதால், வீடு, நிலம், மனையாள் இவற்றின் மூலம் ஏற்பட்ட கிலேசம் மறைதல், கிரய விக்ரயத்தினால் இலாபம், கடன் நீங்குதல், இடப் பெயர்ச்சி, நோயினின்றும் விடுதலையாகுதல், சொந்த ஊர் திரும்புதல், குழந்தைகளின் க்ஷேமாபிவிருத்திக்குப் பண விரயம் ஆவதும், மாதக் கடைசியில் திடீர் தனப் பிராப்தமும் கிடைக்கக்கூடும். நடன நாடக காவியம் சங்கீதம் இது தொடர்புள்ளவர்களுக்கு யோகம் சற்றுக் குறைந்து காணப்படும். ஒரு சிலரின் தந்தைக்குத் தேக சுகம் படு மோசமாகத் தென்படும். மூத்த சோதர மூலம் கிலேசச் செய்திகள் வரக்கூடும். மாதப் பிற்பகுதியில் ஹேஷ்ய பூர்வமான போட்டியினங்களில் கலந்து கொள்ளலாம். இந்த ராசிக்காரர்கள் கொடுத்த கடனைத் திரும்பப் பெறுவதில் திருப்திகரமிராது. இவர்களது போக்கை வரும் டிசம்பரில் விரிவாக எழுதப்படும். ஒரு சிலரின் கருவுற்ற மனைவிமார்களுக்குக் கர்ப்பச் சிதைவு ஏற்படும். முன்கூட்டியே அவசியமான சிகிச்சை மேற்கொள்வது நன்று.

12. மீன ராசி.

(பூரட்டாதி 4 உத்திரட்டாதி, ரேவதி)

பிரபல யோககாரகர்களாகிய வி, செ உச்சமடைந்தும் சம சப்தமமாகக் காணப்படுவதால் மனையாளின் தேக நிலை படு மோசமானதாக இருந்து வரும். தனதிபதியின் உச்சம் பணமுடைக்கான அச்சம் ஏற்படுவதற்கில்லை. ஒரு சில இந்த இராசிக்காரர்கள் நகர் மாற்றுவது அவசியமாகும். மாறின பதவியில் மன உற்சாகம் காண இன்னும் சில மாதங்கள் செல்ல வேண்டும். இளைய சோதரர்களின் சுபா சுப காரியங்களிலோ அல்லது நூதன தொழில் ஏற்பதிலோ சில இடையூறுகளை ஏற்க நேரும். சுதாரித்துக் கொள்ளலாம். கவலை தேவையில்லை. இம்மாதக் கடைசியில் ஹேஷ்ய பூர்வமான போட்டியினங்களில் கலந்து கொள்ளலாம். வீடு நிலம், வியாபாரிகளானால் கொள் முதல் பேரம், விவசாயிகளானால் கால் நடைகள், மாணவ மாணவிகளுக்குக் கல்வியில் போதுமான பலனை எதிர்பார்ப்பதற்கில்லை. இந்த ராசிக்காரர்களின் மூத்த சோதர சோதரிகளின் தாம்பத்ய வாழ்க்கையில் ஏற்பட்ட இன்னல்கள் இனி மறையக்கூடும். 4-ல் சஞ்சரிக்கும் கேது விஷ பீடைகளைத் தந்தாலும் பாதிக்கப்படமாட்டீர்கள். பொதுவில் நடுநிலைமையான பலன்களை அளிக்கும் மாதமாகும்.

அலை கடலிலே!

சுனஜா

அந்தி மங்கி ஆறு நாழிகைகளுக்கு மேல் ஆகி விட்டது. இப்பொழுதோ அப்பொழுதோ என்று ஆழ்கடலின் அலைகளுக்கும், அமைதியாகப் பிரகாசிக்கும் விண்மீன்களைச் சுமந்து நிற்கும் அடிவானத்திற்கும் இடையிலே அல்லல்பட்டுக் கொண்டிருந்த கிருஷ்ணபக்ஷத்துப் பிறைச் சந்திரன் மறைவாயில் இருந்து கொண்டிருந்தது.

ஆனால் காத்தான் இன்னமும் அங்கேயே தான் உட்கார்ந்துகொண்டிருந்தான், அதே தோற்றம். நான்கு நாட்களுக்கு முன் அழகாகக் குலைதள்ளி, பெருமையோடு தலை சாய்த்து நின்றிருந்த வாழை மரத்தை யாரோ வெட்டிச் சாய்த்திருந்தார்கள். அதுமட்டுமா? அந்தப்பாவிகள் அதன் குலையையும் வெட்டிக்கொண்டு அல்லவா போயிருந்தார்கள். தன் வாழ்வு பாழானதே என்று கண்ணீர் விட்டு அழுவதுபோல இருந்தது வெட்டப்பட்ட இடங்களிலிருந்து வந்த வாழைப்பால்.

பேய் அறைந்ததுபோல உட்கார்ந்திருந்த காத்தானின் முகத்திலே உணர்ச்சியில்லை. ஏன்! அந்த விழிகளிலே பார்வையேகூட மங்கிவிட்டது போல இருந்தது. எப்பொழுது பார்த்தாலும் வழிந்துகொண்டிருந்த கண்ணீர் தனக்கென்று சாசுவதமாகத் தனிப்பாதை ஏற்படுத்திக் கொண்டிருந்தது அவன் களங்கமற்ற கன்னத்திலே! அவனுடைய பார்வை எங்கோ ஒரு சூன்யத்திலே குத்திட்டு நிலைத்திருந்தது. வெகு தூரத்தே அலைக்கு மேல் அலைமோதும் பொங்குமாங்கடல் அவனைப் பார்த்து எக்காளமிட்டுச் சிரித்தது.

அவன் எழுந்தான்! ஓடினான்! அலைகடலை நோக்கி!

"சிரி! சிரி! என் வாழ்வையே பார்த்துச் சிரித்துவிட்டாயே அடப்பாவி! ஏன் நாங்கள் இரண்டு பேரும் வாழ்ந்த வாழ்விலே உனக்கேன் பொறாமை?" அவன் கால்கள் தள்ளாடின. அவன் விரிந்து கிடந்த மணற்பரப்பிலே குப்புற விழுந்தான். கரை மோதி வந்த அலை ஒன்று அவனை மெல்ல அன்போடு வருடிவிட்டு மறைந்தது.

அவன் நினைத்தான்.

* * * *

அவனுக்கும் அவளுக்கும் மணமாகி இன்னும் ஒருவருஷம் பூத்துக்குலுங்கவில்லை. ஆனால் அவள் பூத்துக் குலுங்க ஆரம்பித்துவிட்டாள். சாய்ந்து ஒயிலாக நடக்கும் அவள் நடையில் சொக்கி நிற்கும் அவனுக்கு அர்த்தம் புரிய வெகு நாட்கள் பிடிக்கவில்லை. கதிரவன் உதிக்குமுன், கையிலே கட்டுச் சோற்றுடன், கட்டுமரத்திலேறி கடலிலே மீன் பிடித்து, மாலையிலே களைப்போடு வரும்பொழுது கால்களைச் சுற்றிக் களிப்புத் தருவதற்கு ஒரு குழந்தை! அதை அவள் தரப்போகிறாள். இதை நினைக்கும்பொழுது அவன் தேகம் புல்லரித்தது. ஆமாம்!

"செல்வீ!"

"ஏன் அத்தான்?" செல்வி வெளியே வந்தாள். மருக்கொழுந்துபோல இருந்த அவள் வெளியே வந்து தூணைத் தாங்கிக்கொண்டு நின்றிருந்தாள். அவன் அந்தக் குடிசையின் வாசலிலே வலையின் சிடுக்குப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஏன் அத்தான் கூப்பிட்டே!' அவள் அவனைப் பார்த்துக் கேட்டாள் கடைவாயில் மிதந்த களிப்புச்சிரிப்போடு!

"செல்வி! உனக்கேதாவது ஆசை இருக்கா?" செல்வியை நிமிர்ந்து பார்த்தபடி கேட்டான். அவள் முகம் மலர்ந்தது.

"ஏன் அத்தான்? திடீர்னு இந்தக்கேள்வி?" அவளுக்கும் தெரியும் இந்தக் கேள்வி ஏன் என்று. ஆனால் அது அவனுடைய வாயிலிருந்து வந்தால் அது ஒரு தனி மகிழ்ச்சி.

"சொல்லு செல்லி! உனக்கேதாவது வேணுமா?"

"நெசமாகவா அத்தான்?" அவள் யோசித்தாள்.

"அத்தான்! எனக்கு ஒரே ஒரு ஆசை! கேட்பியா?"

"கேட்பியா என்ன செல்லி! தருவியா என்று கேளு!"

"இல்லே அத்தான், அது தரது இல்லே, கேட்பதுதான் அது.

"சரி கேளு!"

"ஒரே ஒரு ஆசைதான் அத்தான்! அதை நீ எங்கே தரப்போறே?"

"ஏன் செல்லி என்னைப் பாத்தா அப்படியா தோணுது?" சகல சம்பத்தும் உடைய குபேரன் மாதிரி கேட்டான், தன் நெஞ்சத்தை நிமிர்த்திக் கொண்டு.

"நானும் நாளைக்கு ஒங்கூட வரேன் அத்தான்!"

"எங்கே செல்லி! கடலுக்கா?" அவன் பதறிப் போய்க் கேட்டான். அவன் பதற நியாயமே இல்லையே? இருந்தாலும் திடுக், திடுக்கென்று துடித்தது அவன் இதயம்.

"ஆமாம் அத்தான்! ரொம்ப நாளா ரெண்டு பேரும் சேந்தாப்போல கட்டு மரத்திலே போகணும்னு ஆசை அத்தான்!" அவன் அசைவற்ற தோள்களைப் பிடித்து உலுக்கிக்கொண்டே சொன்னாள்.

அவள் ஏதாவது தின்பதற்கு அல்லது உடுத்திக்கொள்ள ஏதாவது கேட்பாள் என்று எதிர்பார்த்த அவனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. "செல்லி!" பரிதாபமாக இருந்தது அவன் குரல். 'நான் சொல்றதைக் கேளு செல்லி, இது மாத்திரம் வேண்டாம். நீ வேறே ஏதாவது கேளு. நான்தான் பொழுது விடிஞ்சா நெருப்போட விளையாடற மாதிரி கடலுக்குப் போகவேண்டியிருக்கு. நீ அங்கேயெல்லாம் வரக்கூடாது செல்லி!' என்று அழாக் குறையாகச் சொன்னான்.

"ஆமாம்! இதுக்குத்தான் கேட்டியோ? உனக்கு என்ன ஆசைன்னு?" என்று அவள் வெட்டினாள்.

"அதுக்குச் சொல்லலே செல்லி! அது ரொம்ப அபாயமாச்சேன்னு சொல்லறேன்."

"அப்படீன்னா ஒன்னும் வேண்டாம் போ!" என்று முகத்தைத் தூக்கிக்கொண்டு நின்றாள், தன் உள்ளத்தில் இத்தனை நாட்களாக இருந்த ஒரே ஆசையை அவனிடம் சொன்னாள், அவன் இப்படி மறுதலிப்பான் என்று தெரியுமா?

காத்தான் உட்கார்ந்தான்; யோசித்தான்; தீவிரமாக யோசித்தான். என்னதான் அப்படி யோசித்தானோ தெரியவில்லை. "அவள் என்ன பணம், காசா கேட்டாள், தன்னுடன் வரவேண்டும் என்றுதானே கேட்டாள், வந்துவிட்டுப் போகட்டுமே, அதும் அவள் பிள்ளைத்தாய்ச்சி" அவள் ஆசையும்தான் பூர்த்தி ஆகட்டுமே!" இதைத்தான் யோசித்தானோ என்னவோ? கடைசியிலே விடு விடு என்று எழுந்து உள்ளே போனான், "செல்லி! நாளைக்கு நீயும் என்கூட வரலாம் செல்லி!" அவ்வளவுதான். பிறகு அங்கே கும்மாளமும் கூத்தும்தான்.

* * *

சேவல் கூவிற்று; செங்கதிரோன் எழுந்தான். அவனுடைய செம்பொன் கிரணங்களைப் பிரதிபலித்தன நீலக் கடலலைகள். அன்று எதிர்பாராதபடி மிகவும் அமைதியாக இருந்தது அலைகடல், அவன் அதை நோக்கி ஒரு கும்பிடு வைத்தான்.

கட்டு மரம் ஓரமாக ஒதுக்கிவிடப்பட்டிருந்தது.

செல்லி! அவள் வந்தாள். அவள் கண்களில் ஒளி வீசிற்று. அன்றைப் பொழுதுக்கு வேண்டியதெல்லாம் தயார் செய்து வைத்திருந்தாள். அவனுக்குப் பிடித்த மிளகுத் துவையல் கூட தயார் செய்திருந்தாள். ஆமாம், இன்று அவளுடைய நெடு நாளைய கனவு பலிதமாகப் போகின்றது.

கட்டு மரம் கடலில் தள்ளப்பட்டது. அவனும் அவளும் அதில் அமர்ந்தனர். ஒரு பக்கம் வலை பிணைக்கப்பட்டிருந்தது.

வெகு தூரம் போய்விட்டது. அன்று அவன் மீன் பிடிப்பதில்கூடச் சிரத்தை காட்டவில்லை. அன்புடைய ஒருத்தியை அருகில் இருத்தி. ஆனந்தப் படகிலே, அமைதியான கடலில் செல்லும் போது வேறு என்னதான் செய்யத் தோன்றும்.

அவள் பாடினாள்; ஆடினாள்; சிரித்தாள்; மகிழ்ந்தாள்;

அதை அவன் அனுபவித்தான்.

மாலை நெருங்கிற்று. மந்தஹாசமான மாலை வெயில் கிரணங்கள் எங்கோ மறைந்து கொண்டிருந்த தன் உடையவனைக் காட்டிக் கொண்டிருந்தன. அப்பொழுது!

காத்தான் திரும்பிப் பார்த்தான். மேலே பார்த்தான். அந்தத் திக்கிலே குமுறிக்கொண்டிருந்தன கருமேகங்கள்!

என்ன! புயலுக்கு அறிகுறியா? கட்டு மரத்தின் விசையைத் திருப்பினான், கரையை நோக்கி. அவன் கைகள் அலுத்துப் போயின துடுப்பைத் தள்ள தள்ள. அடேயப்பா! இன்னும் எவ்வளவு தூரம்! அதற்குள்!

எங்கெங்கோ திரிந்து கொண்டிருந்த மேகங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்தன. சில வினாடிகள்தான். பட, படவென்று சொரிந்தன, அத்தோடு காற்று வேறு உக்கிரமாகக் கிளம்பியது.



"அத்தான்!" அவன் திரும்பினான்.

"இது எவ்வளவு நல்லா இருக்கு பாத்தியா அத்தான்!"

என்ன! நல்லாவா இருக்கு, அவளுக்குப் புத்தி மழுங்கிவிட்டதா என்ன? அவன் பேசவில்லை. அவன் எப்படியாவது அவளை, அந்த அருமைப் பொக்கிஷத்தைக் கரை சேர்க்கவேண்டுமென்று முயன்றான்.

ஆனால் விதி சிரித்தது பின்னால்.

அவன் தள்ளினான்

காற்றடித்தது; கடல் குமுறியது.

அவன் தள்ளினான்.

காற்றின் வேகம் அதிகரித்தது; அலைகடலின் ஆக்ரோஷம் அதிகமாயிற்று.

அவன் தள்ளினான், தள்ளிக்கொண்டே இருந்தான். தசை நார்கள் பின்னிக்கொண்டன. விண் விண்ணென்று தெறித்தது.

புயலடித்தது, கொந்தளித்தது பொங்குமாங் கடல். ஊழிக் காலத்துப் பிரளயம்போல.

"அத்தான்!" எங்கேயோ 'கிணற்று'க்குள்ளே கத்தினாள் அவள்.

"செல்வி பக்கத்திலே வா!" அவன் கத்தினான். இல்லை! உயிரை விட்டே கூவினான். அதோ! அந்த இரண்டு கட்டைகள் தாண்டி விட்டால் அவள் அவனை நெருங்கிவிடுவாள்.

ஐயோ! இந்தச் சமயத்தில்தானா? வெகு நாட்களாகக் கட்டப்பட்டிருந்த கயிறு இற்றுப் போயிருந்தது. இன்றுதான் அதற்கு விடி மோக்ஷம்! அது அறுந்துவிட்டது.

அவன் கதறினான்; அவளும் கதறினாள்.

ஒரு கட்டு மரம் இரண்டாகப் பிரிந்தது.

அவளும் அவனும் தனித் தனியாகப் பிரிக்கப் பட்டார்கள். ஊழிக்கூத்து தொடர்ந்தது தனி ஆக்ரோஷத்துடன். கடல் பொங்கி எழுந்தது. புயலின் உத்வேகம் அதிகரித்தது. மழையோ, வானமே பொத்துக்கொண்டு கொட்டுவது போலப் பெய்தது.

"செல்வீ!"

பதிலில்லை, ஆனால் மங்கிய வெளிச்சத்தில் அவன் சுற்றும் முற்றும் பார்த்தான்.

அதோ அவள் அவனை அணு அணுவாகப் பிரிந்துகொண்டே இருந்த கட்டு மரத்தின் மேல் கையையும் காலையும் உதறினாள். வேக மாக ஆடும் தொட்டிலில் இருக்கும் குழந்தை போல.

அவன் கதறியது அவள் காதில் விழவில்லை.

"அத்தான்" அவள் கத்தியது அவன் காதில் விழவில்லை.

"செல்வி! அங்கேயே இரு!" அவன் குதித்து விட்டான் கடலிலே! அவளை அடைவதற்கு!

அவன் குதித்தது அந்த மங்கிய வெளிச்சத்திலே அவளுக்குத் தெரிந்தது, பழைய போட்டோவில் உள்ள தேய்ந்த முகம்போல. அவள் அப்போதுதான் நினைத்தாள் தனக்கும் நீந்தத் தெரியும் என்று.

அவளும் குதித்துவிட்டாள் முன் யோசனை இல்லாமல்.

ஒரு பெரிய அலை எழும்பி மறைந்தது.

* * *

சுரு, சுருவென்று உடலில் உறைத்த வெயில் அவனை எழுப்பியது. எங்கேயோ கொண்டு வந்து ஒதுக்கியிருந்தது. அவனை.

"செல்வி!" அவன் முணு முணுத்தான்.

"செல்வி!" அவன் கத்தினான். அது எங்கே அவள் காதில் விழப் போகின்றது. அவள் தான் அந்த ஆழியின் அமைதியிலே ஆனந்த மாகத் துயில்கொண்டுவிட்டாளே.

அவன் எழுந்தான்! ஓடினான்! கத்தினான்! கதறினான்! ஆனால்! அவளைத்தான் காணோம்.

* * *

ஆம்! அதே காத்தான்தான், இன்னும் உட்கார்ந்திருந்தான் அதே இடத்தில். அன்னம் இல்லை. தண்ணீர் இல்லை. எப்படி யாவது அவன் செல்வி தன் தூக்கத்திலிருந்து எழுந்து வந்துவிடமாட்டாளா? என்று எண்ணினான்.

"அத்தான்!"

அவன் நிமிர்ந்தான்.

"அத்தான்" அவன் பார்வை கடலிருந்த திக்கிலே சென்றது.

அதோ! அவள் கூப்பிடுகின்றாளே! அதோ! அவளேதான்!

அவன் ஓடினான். நிலத்தின்மேல் மாத்திரம் இல்லை. கடலிலும் ஓடினான். அவளை அணைத்துக்கொள்ள.

அலைகடல் அவனையும் அணைத்துக்கொண்டது.

சினிமாப் பேச்சு

எஸ். கண்ணன்

கிரிடிக் கிருஷ்ணசுவாமி சினிமா விஷயங்களைப் பற்றிப் பத்திரிகைகளுக்கு விமர்சனம் எழுதும் ஒரு நிருபர். சங்கீதம் சுந்தரமையர் ஒரு சிறந்த பாடகராய் இருப்பதுடன்கூட ஒரு சிறந்த சினிமா ரசிகர். இவர்களுடைய "சினிமாப் பேச்சு" இனிமேல் தொடர்ந்து "காவேரி"யில் வரும்.

கிரிடிக் கிருஷ்ணசுவாமி:— என்ன ஓய்! மூணு வாரமா "**வைரமாலை**" என்னும் படம் ஓடறதே பார்த்தீரா?

சங்கீதம் சுந்தரமையர்:— உங்களுக்கு என்ன பத்திரிகை அழைப்பு வந்துடறது. யாருக்கும் முன்னாலே போய்ப் பார்த்துட்டு வந்துடறீர். நம்மைப்போல ஆசாமிக்கு முடியறதா? அன்னிக்குச் சித்ரா டாக்கீஸுக்குப் போயிருந்தேன். ஜே ஜேன்னு கூட்டம். க்யூவிலே கூட நின்னு பார்த்தும் டிக்கட்டு கிடைக்கல்லே. படம் ஒரே ஹாஸ்யமா இருக்காமே? பத்மினியும், மனோஹரும் ரொம்ப நன்னா நடிச்சு இருக்காளாமே?

கி. கி:—படம் நன்னாத்தான் இருக்கு. ஒரே சிரிப்புத்தான். இதுவரையிலும் மனோஹர் வந்திருக்கும் படங்களிலே அவருடைய நடிப்பு இதுலேதான் நன்னா அமைஞ்சிருக்கு. பத்மினி நடிச்ச படங்களிலேகூட இதுதான் ரொம்பத் தரமா இருக்குன்னுகூடச் சொல்லத் தோணறது.

ச. சு:—'வைரமாலை"ன்னு பேர் வெச்சு இருக்கிறதைப் பார்த்தா ஏதோ விலையுயர்ந்த மாலை கெட்டுப்போய் அதைப்பத்தி, துப்பறியும் சமாசாரமா இருக்குமோன்னு தோணறது.

கி. கி:—அதுதான் இல்லே. கதையிலே வைரமாலைவரதென்னவோ வாஸ்தவம்தான். ஆனால் கதைக்கும் அதற்கும் சம்பந்தம் ரொம்பக் குறைவு.

ச, சு.—ஹாஸ்யப்படம்னா ஒரே கோமாளித்தனமா இருக்கும்னு நினைக்கறேன். ஹாஸ்யப் படங்களிலே முக்காவாசி சம்பவங்கள் நம்பத்தகுந்ததாக இருக்கிறதில்லே.

கி கி:—இந்தப்படத்திலே அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லே. முதல்லேருந்து கடைசி வரையிலும் சாதாரணமா நடக்கக் கூடியது மாதிரி தான் எடுத்திருக்கா.

ச. சு:—கதை என்னவோ?

கி. கி:—சுருக்கமா சொன்னாக்கா இரண்டு தரப்பிலே ஆள் மாருட்டம் ஏற்படுவதை ஆதாரமாகக் கொண்டது. படத்திலே பத்மினியும், மனோஹரும் ஒரு தெருவிலே சந்

"வைரமாலை"யில் பத்மினியின் நடனத் தோற்றம்

திச்சு ஒருவரை ஒருவர் நேசிக்கரு. இவா ளுக்கு இப்படி பரஸ்பரம் காதல் இருப்பது தெரியாமலேயே வேறு காரணங்களுக்காக இவா அப்பா இரண்டுபேரும் இவாளுக்கே கல்யாணம் செய்ய நிச்சயம் பண்ணி பெண் ணும் பிள்ளையும் ஒருவரை ஒருவர் பார்க்க ஏற்பாடு செய்யரு. ஆனு பத்மினியும் மனோ ஹரும் தங்கள் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறது வேறு யாரோன்னு நெனச் சிண்டு பெண் பார்க்கப்போகும் கட்டத் திலே அவரவர்கள் மாதிரி வேறு ஆசாமியை நடிக்க ஏற்பாடு செய்துடரு.

ச. சு:—அடடே வேடிக்கையா இருக்கே. அப்பறம்?

கி. கி:—இதிலிருந்து பல குழப்பங்கள் உண்டாகிடறது. பத்மினியும் மனோஹரும்

வைரமாலையில் K. R. செல்லம் ஒரு பைத்தியம், அதற்கு "வஸந்தா"ன்னு ஒரு குழந்தை – அதாவது ஸெல்யுலாயுடு பொம்மை, இந்தக் குழந்தைக்கு போடறத்துக்குத்தான் வைரமாலை களவு போயிடறது.

வெளியூருக்குப் போய்த் தங்களுடைய கல் யாணத்தை முடித்துக்கொண்டு விடுகின்ற னர். காணுமற் போன பிள்ளையும், பெண் ணையும் தேடி அலையும் தகப்பன்மார்களோ தங்கள் கவுரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள ஒருவர்க்கொருவர் விஷயத்தை ஒளி மறைவா வெச்சிருக்கா. கடைசிலே இவாரெண்டுபே ரும் வெளியூர்லே நேருக்கு நேரா சந்திச்சு கல்யாணம் பண்ணிண்ட தம்பதிகள் தங்கள் பெண்ணும் பிள்ளையுமாவே இருக்கறதைக் கண்டு ஆச்சரியத்தையும், சந்தோஷத்தை யும் அடையரு. இதுதான் கதை.

ச. சு:—இதுலே ராகினிக்கு என்ன பார்ட் டோ?

கி. கி:—ராகினி ஒரு காலேஜு பெண். அவளும் அவளுடைய காதலனும் மனோஹ ருக்குச் சிநேகிதாளா வர்ரு. ராகினி ஒரு அழகான நடனம் ஆடரு. மத்தப்படி ஒண் ணும் விசேஷமான பார்ட் இல்லே.

ச. சு:—பத்மினிக்குத் தம்பியா ஒரு பயல் வந்து அமர்க்களப்படுத்தருனுமே?

கி. கி:—ஆமாம். வாதி ராஜன்னு ஒரு குள்ள ஆசாமி பத்மினியின் தம்பியா நடிக் கருன். இதற்கு முன்னுலே நாடகமேடை யில் நடிச்சிருக்கான் போலிருக்கு. முகம் கொஞ்சம் முத்தினதா தெரியறதினுலே சிறு வயசுன்னு நம்பறது கொஞ்சம் கஷ்டமா இருக்கு, நடிப்பு பரவாயில்லே.

ச. சு:—மத்தப்படி இன்னும் யாரெல்லாம் நடிச்சிருக்காளோ?

கி. கி:—இந்தப் படத்திலே நடிப்புக்கு முதல் பரிசு பத்மினியின் அப்பாவா வர K. A. தங்கவேலுக்குத்தான் கொடுக்கணும். "சுகம் எங்கே" படத்திலேகூட சாவித்திரி யின் அப்பாவா வந்து பிரமாதமா நடிச் சார்னு "காவேரி"லே எழுதியிருந்ததைப் பார்த்திருப்பீரே.

ச. சு:—ஆமாம் நான்கூட அந்தப் படத் தைப் பார்த்தேன் ரொம்ப நன்னுத்தான் இருந்தது. கொஞ்சம் வயசான ஆசாமி போலிருக்கிறது.

கி. கி:—அதுதான் இல்லே. அவருக்கு 19, 20 வயசுதான் ஆகிறதாம். அப்படி

இருந்தும்கூட பெரியவாளா வர வேஷங்கள்ளே ஜமாச்சுத் தள்ளிப்பிடறார்.

ச. சு:—ஆமாம் இவருடைய பேச்சு, நடை, பாவனை எல்லாத்திலேயும் ஒரு விறு விறுப்பு இருக்கு. வெடுக்குன்னு பேசி கச்சிதமா நடிக்கிறார். அதிலுலேதான் எல்லோருக்கும் ரொம்ப பிடிக்கறது. மத்தப்படி வேறு யாரு நன்னு நடிச்சிருக்கா?

கி. கி:—மனோஹரின் சித்தப்பாவாக வரும் V. S. ராகவனின் நடிப்பு தேவலே. மனோஹர் சினேகிதன் மாலி ஒரு புது முகம். இவர் நடிப்பு சுமாராக இருக்கு. பிரண்ட் ராமசாமி ஒரு கமிஷன்ஏஜண்டாக வர்றார். சாதாரணமா ஒரு வேலையை முடிச்சுக்கொடுத்த பிறகுதான் கமிஷன் கேழ்க்கறதுண்டு. இவரோ தம்முடைய "ஐடியா"க்கு எல்லாம் கமிஷன் கேழ்க்கரூர்!

ச. சு—பாக்கப்போனுக்க 'ஐடியா'க்குத்தான் முதல்லே கமிஷன்குடுக்கணும். ஐடியா முதல் தரமா இருந்துட்டா அதைச் செய்கையாலே செஞ்சு காண்பிக்கிறது அப்படி ஒண்ணும் கஷ்டமில்லே.

கி. கி:—ஆமாம். அது நூத்திலே ஒரு வார்த்தை. இந்தப்படம் நன்னு அமைஞ்சிருக்கறதுக்கு டைரக்டர் ஜகன்னுத்தின் "ஐடியா"க்களைத்தான் பாராட்டணும்.

ச. சு:—அப்படின்னுக்க வைத்தியா பிலிம்ஸார் அவர் மொதல் படத்திலேயே ஒரு சக்கைபோடு போட்டுட்டான்னு சொல்றீர். சரி, நான் போய்ப் பார்க்கவேண்டியது தான். இந்த மாசத்திலே நீங்க வேறொரு படமும் பார்க்கலையோ?

R. N. R. பிக்சர்ஸாரின் ஜாதகம் இப்பொழுது தெலுங்கில் "ஜாதகபலம்" என்று வெளியிடப்பட்டிருக்கிறது. இந்தத் தெலுங்கு படத்தில் சூர்யகலாவும், R. நாகேந்திரராவும் தோன்றும் ஒரு காட்சி.

கி. கி:—நேஷனல் பிக்சர்ஸாரின் "**அம்மையப்பன்**" படத்தையும் பார்த்தேன். ஆனா இது ரொம்ப சுமார்தான்.

ச. சு:—புராணக் கதையா இருக்கும். உங்களுக்குப் பிடிக்கல்லே போலிருக்கு.

கி. கி:—நான்கூட படத்தின் பேரைப் பார்த்துட்டு புராணக்கதையா இருக்கும்னு ஏமாந்துட்டேன். ஆனா பழைய காலத்து ராஜா, ராணி கதைதான்.

ச. சு:—பின்னே "அம்மையப்பன்"னு ஏன் பேர் வெச்சிருக்கா?

கி. கி:—ராஜகுமாரி ஒருத்தி அந்த ராஜ்யத்து ராஜ குருவோடே கள்ள நட்பு வைத்துக்கொண்டு அவளுக்கு ஒரு குழந்தையும் பிறந்துடறது. அந்தக் குழந்தையை யாருக்கும் தெரியாமே ஒரு ஆச்சிக்கிட்டே வளக்கக்கொடுத்துடரு. அந்தப் பிள்ளை ஒரு சுத்த வீரனுடைய மனப் பண்புடன் வளர்கிறன். ஆனல் அவனுடைய நிஜ 'அம்மை'யையும் 'அப்பனையையும்'பற்றி பின்னல் தான் வெளியாறது. அதனல் தான் 'அம்மையப்ப'ன்னு பேர் வெச்சிருக்காப்பலே இருக்கு.

ச. சு:—சிவ, சிவா. நல்ல சுவாமி பேரை இப்படியாக்கிப்பிட்டாளே. ஆமா, இந்தப் படமும் 'சுகம் எங்கே' படமும் கதையமைப்பில் பல இடங்கள்லே ஒரே மாதிரியா இருக்குன்னு வதந்தியா இருக்கே. அது என்ன சமாசாரம்?

கி. கி:—வாஸ்தவந்தான். ஒண்ணுலே ராஜ குடும்பம், இன்னொண்லே குடியானவ குடும்பம். இவர்களுடைய கதையிலே சில இடங்கள்லே ஒத்துமை தெரியறது. வசனம் கூட ஓரிரண்டு இடத்துலே ஒரே மாதிரியா இருக்கு. கிட்டத்தட்ட ஒரே சமயத்திலே வந்திருக்கிற இரண்டு படங்கள்லே இது மாதிரி ஏற்பட்டிருக்கிறது கொஞ்சம் வருந்தத் தக்க விஷயந்தான்.

ச. சு:—'அம்மையப்பனு'க்கு யார் கதை வசனம் எழுதியிருக்கா?

கி. கி.—மு. கருணநிதி எழுதியிருக்கார். நடுவிலே நடுவிலே ராமாயணம், புறநானூறு இதை எல்லாம் கூட இழுத்து விடரூர்.

ச. சு:—சரிதான், கொஞ்சம் பிரசாரமும் இருக்கு போலிருக்கு. முக்கிய பாகத்திலே யாரு ஆக்ட் பண்றுளோ?

கி. கி:—S. S. ராஜேந்திரன்தான் தாய் தகப்பன் அறியாத ராஜகுமாரன். அவனுடைய காதலி புது முகம் சகுந்தலா. இவர் சுமாரா நடிச்சிருக்கார். படத்திலே S. வரலக்ஷ்மியும் நடிக்கிருர்ன்னு பார்த்துட்டு ஒரு பெரிய பார்ட் இருக்குமோன்னு நெனச்சேன். ஆனா சின்ன பார்ட்தான். ராஜேந்திரனுடைய உண்மையான அம்மாவா வரா. ஒரு சிறு வயசு ஆசாமியை இந்த வேஷத்துக்குப் போட்டிருக்கறது பொருத்தமா இல்லே. மேக்கப்பிலேயாவது சரி பண்ணிருக்கலாம் ஆனா அதுவும் செய்யலே.

ச. சு:—சரி. அது போகட்டும். அன்னிக்கென்னவோ பிரான்ஸில் நடந்த சர்வதேச பிலிம் விழாவில் பரிசு பெற்ற ஒரு இந்தியப் படத்தைப் பார்த்தேன்னு சொன்னீரே. அது என்ன?

கி. கி:—ஓ. அதுவா, **'பம்போஷ்'** என்ற இங்கிலீஷ் படம் அது. இதை A. T. படேல் ஹிந்தியிலே எடுத்து வெளி நாட்டிலே காண்பிக்கறதுக்காகப் படத்தின் நீளத்தையும் கொறச்சு. இங்கிலீஷ்லே டப் பண்ணிருக்கார். இதே படத்தைப் பல மேல் நாட்டுப் பாஷைகள்லேயும், இந்திய பாஷைகளிலேயும் கூட டப் பண்ணிருக்கா. தமிழ்லேகூட இந்தப் படம் வரப்போறதாம்.

ச. சு:—அப்போ படம் ரொம்ப தடபுடலா இருக்கும் போலிருக்கு.

கி. கி:—அப்படி ஒண்ணும் என் மனசுக்குப் படலே. கதை சிறு குழந்தைகளுக்குச் சொல்லக்கூடிய கதை மாதிரி இருக்கு. இங்கிலீஷ் படத்திலிருக்கும் சம்பாஷணையும் அந்தத் தோரணையில் தான் இருக்கு. படத்தினுடைய கதாநாயகி ஒரு சின்ன கிராமியப் பெண். 10 வயசு இருக்கும்.

ச. சு:—பின்னே என்ன, இந்தப் படத்திற்கு அவ்வளவு பெரிய பேரு?



உலகில் மிகப் பெரியதான

சிறிய கார் இப்பொழுது இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகிறது

ஸ்டாண்டர்ட்-8 உலகிலேயே சிறிய கார்களுள் மிகப் பெரியதாகும். வயது வந்தவர்கள் நால்வர் சௌகரியமாக உட்காரவும், வேண்டிய அளவு சாமான் வைத்துக்கொள்ளவும் இடமிருக்கிறது. நம்பமுடியாத அளவிற்கு சிக்கனமானது. ஒரு காலனுக்கு 40 முதல் 45 மைல்கள் ஓடும். புதிய ஸ்டாண்டர்டு-8ன் நிகரற்ற சேவைச் சிறப்பிற்கு, அதை உருவாக்கியவர்களின் அபூர்வமான என்ஜினியரிங் திறமையும் வேலைப்பாடுமே காரணம். எனவே இன்று இந்தியாவில் இணையற்ற குடும்பக் காராகத் திகழ்கின்றது.

SMS-7TM

ஸ்டாண்டர்ட் 8
குடும்பத்திற்குகந்த கார்

தி யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) லிட்

மதராஸ் — பெங்களூர் — உதகமண்டலம்

எங்கள் விற்பனையாளர்கள் :-

1. M/S. G. N. சக்ரபாணி செட்டி & சன்ஸ் லிமிடெட், மதுரை.
2. ,, G. N. சக்ரபாணி செட்டி & சன்ஸ் லிமிடெட். திருநெல்வேலி.
3. ,, அசோஸியேட் ஆட்டோமோபைல்ஸ், லிட். கோயம்புத்தூர்.
4. ,, காசி & சேது, கும்பகோணம்.

கி. கி:—முதல்லே ரொம்ப எளிய 'பிளாட்' இருக்கறதாலேயே படம் அழகா இருக்குன்னு சில பேர் சொல்ரு. ஆனல் என்னைக் கவர்ந்தது வேறு சமாசாரம்.

ச. சு:—அது என்னவோ?

கி. கி:—அழகான காஷ்மீர் தேசத்துலே அங்குள்ள ரம்யமான ஏரிகளைச் சுற்றிக் கதை அமைந்திருக்கிறது. இயற்கைக் காட்சிகளெல்லாம் ரொம்ப அழகா கலர்லே படம் எடுத்திருக்கா. ஏரியில் மிதக்கும் படகுகள் மீது கட்டப்பட்ட வீடுகளில் உல்லாசப் பிரயாணிகள் ஆனந்தமாக வசிப்ப தையும், அவர்களுக்கு எளிய காஷ்மீரிகள் சிறு படகுகளில் வந்து பூ, கறிகாய் முதலிய சாமான்கள் விற்பதையும், காஷ் மீரக் குடும்பங்களிடையே உள்ள பழக்க வழக்கங்களையும் வெகு அழகாகப் படம் எடுத்திருக்கா.

ச. சு:—அப்போ காஷ்மீருக்கே போக வேண்டாம், படத்தைப் பார்த்தா போரும், என்று சொல்றீர் போலிருக்கு.

கி. கி:–போக முடியாதவாளுக்குப் போய்ப் பார்த்த திருப்தி உண்டாகுமென்று சொல் லுவது மிகையாது. படத்தினுடைய எட்டு ரீலும் காஷ்மீரைப் பற்றிய ஒரு டாக்கு மெண்டரி படமென்றே சொல்லலாம்.

ச. சு;—சரி. டாக்குமெண்டரின்னு சொன்னவுடனே நெனப்பு வறது. நியூஸ் பேப்பரை வாசிச்சேளோன்னே. இப்போ சினிமாக் காட்சிகளுக்கு மொதல்லே கவர்ன் மெண்டார் எடுத்திருக்கும் டாக்குமெண்டரி, செய்தி முதலிய படங்களைக் கட்டாயமா காமிச்சிண்டு வராளே. அது மாதிரி தியேட் டர்க்காரனைக் காண்பிக்கச் சொல்றதுக்குச் சர்க்காருக்கு அதிகாரமில்லைன்னு தீர்ப்பா யிருக்காமே?

கி. கி;—ஆமாம். முன்னே I. C. S. உத்தி யோகத்திலிருந்த ஸ்ரீ R. M. சேஷாத்திரி என்பவருக்குத் திருத்திரப் பூண்டியிலே "பிரகன் நாயகி"டாக்கீஸ்ன்னு ஒரு சினிமாக் கொட்டகை சொந்தம். அவர்தான் இந்தக் கேஸை ஸுப்ரீம் கோர்ட் வரையிலும்போய், சென்னை சர்க்காருக்கு எதிராகத் தாமாகவே வாதாடி, தம் பக்கமே தீர்ப்பு வாங்கிண்டு வந்துட்டார்.

ச. சு:—அப்படின்னுக்க இனிமே சினிமா விலே செய்திப்படமோ, டாக்குமெண்டரி படமோ காண்பிக்கவே மாட்டாளோ?

கி. கி:—சட்டப்படி கொட்டாக்காரா காண்பிக்கணுங்கற கட்டாயம் இல்லே. ஆனல் பொதுஜனங்களுக்குச் செய்திப்படம் பார்க்க ஆவல் என்னவோ இருக்கு. அத னுலே அதைக் காண்பிக்கறதைப் பல சினிமாக் களிலே நிறுத்தமாட்டான்னுதான் நெனக் கிறேன்.

ச. சு:—செய்திப் படங்கள் பார்க்கறதாலே பொதுஜனங்களுக்கு அறிவுவளர்ச்சி உண்டா கிறது. என்னதான் பேப்பர்லே படிச்சாக் கூட ஒரு சம்பவத்தை நேரிலேயோ, படத் திலேயோ பார்க்கறமாதிரி இருக்கா? அன் னிக்குப் பாருங்கோ பீஹார், அஸ்ஸாம் மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளத்தைப்பத்தி சில நிமிஷ நேரம் செய்திப்படத்திலே பார்த் தேன். வேரோட மரங்கள் சாயறதும், அஸ்திவாரத்தோடே வீடுகள் இடிந்து வெள் ளத்தில் விழறதும், சமுத்திரம்போலத் தண்ணி ஓடறதும் பார்க்கறதுக்கு பயங்கர மாகத்தான் இருந்தது. அதுக்கு முன்னல் எவ்வளவோ நாள் பேப்பர்லே படிச்சிருந் தும்கூட படத்தைப் பாத்ததுக்கப்புறம்தான் வெள்ளத்தின் கொடூரம் மனசிலே பதிஞ்சுது.

கி. கி:—அதுக்கு ஆக்ஷேபணை என்ன. செய் திப் படங்கள் காண்பிக்கிறதை நிறுத்த மாட்டான்னு நினைக்கறேன். கட்டாயமாக் காண்பிக்கறதுன்னு இல்லாதபோது கவர்ன் மெண்டிலேயும் ஜனரஞ்சகமாக நல்ல படங் களா எடுக்கறதுக்கு ஹேது இருக்கு.

ச. சு.—சென்னை சர்க்கார்லே இந்த விஷ யத்தை இதோடே விட்டுடுவான்னு நினைக்கி றேளா?

கி. கி:—அவாளும் விடமாட்டான்னுதான் நெனக்கிறேன். இப்போ இருக்கற சட்டப் பிரகாரம் எந்த மாதிரிப் படமாயிருந்தாலும், எவ்வளவு நீளப் படமாயிருந்தாலும் கொட்டகைக்காரா காண்பிக்கணும்னு உத் தரவு இருக்காம். அப்படின்னு பத்தாயிரம் பன்னிரண்டாயிரம் அடி நீளமுள்ள படத் தைச் சர்க்கார் காண்பிக்கச் சொன்னு கொட்டகைக்காரா எப்படித் தொழில் நடத் தறதுன்னு ஸ்ரீ சேஷாத்திரி வாதாடினராம். இது அரசியல் சட்டத்திற்கு விரோதம்னு

SG/239
நீங்கள் எதை தவறவிட்டீர்கள்
என்பதை புகை பிடிக்கும்வரை
அறிவதில்லை.
"SCISSORS"
CIGARETTES
SPECIAL ARMY QUALITY
W.D.&H.O.WILLS.
BRISTOL & LONDON.
மூன்று தலைமுறைகளாக பிரசித்தி பெற்றவை
5 அணாவிற்கு 10. $\frac{1}{2}$ அணாவிற்கு ஒரு சிகரெட்.
சென்னை, ஆந்திரா, ஹைதராபாத், மைசூர் அல்லது குடகு விற்பனை வரி உள்பட.

சுப்ரீம் கோர்ட்டார் ஒப்புக்கொண்டு மேலே சொன்னபடி தீர்ப்புச் சொன்னு.

ச. சு:—அப்போ அறிவு வளர்ச்சிக்கு ஏத்த படங்களை குறிப்பிட்ட அடி நீளம் காண்பிக்கணும்னு திருத்தி உத்தரவு போட்டா செல்லுமோ என்னமோ,

கி. கி:—ஆமாம், இந்தப் பிரகாரம் தான் சென்னை சர்க்கார் மேல் நடவடிக்கை எடுத்துப்பான்னு நினைக்கறேன்.

ச. சு:—இதுக்கு ஏதாவது செய்யவேண்டியதுதான். அன்னிக்குப் பாருங்கோ, ஒரு படத்திற்குப் போயிருந்தேன். படம் சுத்த மட்டம். ஆனு செய்திச் சுருள்லே நம்ம இந்தியா தேசத்துலேருந்து போயிருக்கற சங்கீத கலாசார தூதுகோஷ்டிக்கு மாஸ்கோ விமான நிலையத்துலே நடந்த வரவேற்பு உபசாரத்தை எல்லாம் காண்பித்தான். சரி அதுக்குத்தான் நாம் கொடுத்த காசுன்னு நெனச்சுண்டு வந்து சேர்ந்தேன்.

கி. கி:—நீர் ஒரு பெரிய பாடகரோன்னே. அதனுல்தான் சங்கீத கோஷ்டியிலே கவனம் விழுந்துட்டது. கவர்மெண்டார் உம்மையும் சேத்து அனுப்பிச்சுருக்கலாம். அவாளுக்குத் தெரியாமே போச்சு.

ச. சு:—சரிதாங்கணும் உம்ம கேலி எல்லாம். எனக்கு டியூஷனுக்கு நாழியாயிடுத்து. நான் போயிட்டுவறேன்.

ஸ்திரீகளுக்கோர் வரப்ரசாதம்: லோத்ரா

"லோத்ரா ஸ்திரீ வர்க்கத்திற்கே கைகண்ட வரப்ரசாதம். இதன் சக்தியை ஒருவராலும் மறுக்கமுடியாது. 6-வரு காலம் சந்ததியில்லாமலிருந்த எங்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. தெய்வீக சக்தியுள்ள உங்கள் மருந்திற்கு எங்கள் மனமார்ந்த நன்றி."

(Sd) T. P. ஜகதீச ஆச்சாரி, மேல்விஷாரம்.

"சகல முயற்சிகளிலும் தோல்வியுற்ற நான் கடைசியில் "லோத்ரா"வின் மகிமையால் பயன் அடைந்தேன்."

(Sd) S. முருகேசன், சிங்கப்பூர்.

"தங்கள் 'லோத்ரா' நிஜமாகவே உயர்ந்த ரத்னம். இதை நாங்கள் என்றும் மறக்கமுடியாது."

(Sd) D. மருதை, கூனூர்.

★

ஸ்திரீகளுக்கே உரிய சகல கர்ப்பாசய நோய்களையும் குணப்படுத்தும் கைகண்ட டானிக் ஔஷதம்.

★

தயாரிப்பாளர்:- **கேசரி குடீரம் லிமிடெட்,**
ராயப்பேட்டை, சென்னை-14.

தமிழ்நாட்டுக்கு ஏஜண்டுகள்:-
ஸீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், மேலகோபுர வீதி, மதுரை.

தொடர்கதை:

வெற்றியும் தோல்வியும்

ஜி. எஸ். மணி

21

பசுபதியும், ஹரிஹரய்யரும் பேசிக்கொள்வதற்குச் சில மணி நேரங்கள் முன்பாகவே கனகமும், கமலமும் பேசிக்கொண்டார்கள்.

விடியற்காலம் ஐந்துமணி சுமாருக்குக் கமலம் மூர்ச்சை தெளிந்து எழுந்து உட்கார்ந்தாள். சுற்றுமுற்றும் நோக்கினாள். இடம் புதிதாக இருந்ததுபோல் தோன்றியது. தனக்கு அருகிலே இன்னும் யாரோ படுத்திருப்பது போல் ஒரு உணர்ச்சி அவளுக்குத் திடீரென்று ஏற்படவே திடுக்கிட்டுப் போய்த் திரும்பினாள்.

ஆம்! அவளருகிலே இன்னும் யாரோ படுத்திருந்தது உண்மைதான். உற்று நோக்கினாள் கமலம்.

"கனகம்?...கனகம்தானா அது?"

ஆம். அது கனகமே–சாக்ஷாத் அவளே!

வியப்பு மேலிட்டவளாய், "கனகம்!" என்று வாய்விட்டுச் சொல்லிக்கொண்டே ஒரே பாய்ச்சலில் அவளிடம் சென்றாள் கமலம்.

கனகம் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்.

கமலத்திற்கு சந்தோஷமும், ஆனந்தமும் சொல்லத்தரமில்லை. அப்படியே அந்தரங்கமான அபிமானத்துடனே கனகத்தைத் தன் மார்புடன் சேர்த்து அணைத்துக்கொண்டாள் கமலம்... "கனகம்! கனகம்! அம்மாடீ! என் அம்மாடீ! கடைசியில் உன்னைப்பார்க்கக் கொடுத்து வைத்தேனே இந்த ஜன்மத்திலேயே!" என்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள்.

கனகம் புன்னகை பூத்தாள்—"ஆமாம்! நீ தான் என்னை ஏமாற்றப் பார்த்தாய்? ஆனால்... நானா அப்படியெல்லாம் ஏமாந்து விடுகிறவள்? உன்னை தேடிக்கொண்டு நானும் சென்னைக்கு வந்துவிட்டேன்?... எங்கேயெல்லாமோ தேடினேன்–கடைசியில், இங்கேயும் பார்த்துவிடலாமென்று ஒரே உறுதியாக..."

"நான் இங்கேதான் இருப்பேனென்று உனக்கு எப்படித்தெரியும், கனகம்?" என்று குறுக்கிட்டாள் கமலம்.

"உனது மனப்போக்கு எனக்குத் தெரியாததா கமலம்? எனக்கே நீ 'காது குத்து'கிறாயே...?... இன்னும் விவரமாகச் சொல்லட்டுமா?..."

"வேண்டாம்!" என்று சிரித்துக்கொண்டே அவள் வாயைப் பொத்தினாள் கமலம்—'உம்...... ஊரில் அம்மா சௌக்யந்தானே?–உங்களுக்குள் கடிதப்போக்கு வரவு இருக்கிறதல்லவா?–"ஊம்" அப்புறம் அவள் கதையை அவள் சொன்னாள்—கனகம் கவனத்துடன் கேட்டாள்—"நான் பட்ட கஷ்டம் பொறுக்கமுடியாமல் விஷத்தைத் தின்று தற்கொலை செய்துகொண்டு விடலாமா வென்று கூட எத்தனை தடவைகள் யோசித்திருப்பேன் தெரியுமா கனகம்?" என்று அவள் சொன்ன

பொழுது—"அப்படியே நின்று மடிந்து தொலேவதுதானே? எதற்காக உயிரைவைத்துக்கொண்டு மறுபடியும் என் முகத்தில் விழித்துக்கொண்டு இங்கும் வந்து விட்டாய்? என்னே உன் அந்தரங்கத் தோழியாகவே நீ இன்னும் மதித்து என்னிடம் அன்பு பாராட்டுகிருய் அடி பேதாய்? நான் உன்னே அடியோடு வெறுக்கின்ற ஒரு விஷப்பூச்சியென்பது இன்னமுமா உனக்கு தெரியவில்லே?... என்னுடைய வாழ்க்கைப் பாதையில் குறுக்கிட, திரும்பவுமா நீ இங்கு வந்துவிட்டாய்?... இருக்கட்டும்! பார்க்கிறேன்!" என்று நினைத்துக் கொண்டாள் கனகம்,

பின்னர் கமலம், கனகத்தின் கதையைச் சொல்லும்படி வினவியதும் கனகம் கதையைத்தான் திரித்தாள்—அவளேத் தேடவே அவள் வந்ததாகவும், அந்த ஒரு வருஷகாலமாக அவள் தேடாத இடம் பாக்கியில்லேயென்றும், அன்றும் கூட்டம் கூடுமிடங்களில் ஒரு கால் அவளேக் கண்டுபிடிக்க முடியாதாவென்ற எண்ணத்துடன் ஸங்கீத ஸபைக்கு வந்ததாகவும், அவளேயே பாடகியாகப் பார்த்துப் பிரமித்ததாகவும்—மேற்கொண்டு 'என்ன செய்வது' என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கும் போதே தெய்வமே அவளேத் தன்னிடம் கொண்டுவந்து சேர்த்ததென்றும், இப்பொழுது அவளேத் தன்னருகில் பார்த்த பிறகு தான் உண்மையில் தன் உள்ளம் குளிர்ந்ததென்றும் ஒரேயடியாக அளந்தாள்—அபபுறம் பூங்குளத்தில் 'அம்மா' ரொம்பவும் கவலேப்பட்டுக் கொண்டு கிடப்பதாகவும், நாளேக்கே கமலி அகப்பட்டுவிட்ட 'சுப சமாச்சார'த்தை அவளுக்கு எழுதவேண்டு'மென்றும் தெரிவித்தாள்... பிறகு கமலம் கனகத்தை நோக்கி, 'கனகம்!... இது யார் வீடு?' என்று வெகு ஆவலுடனே வினவினுள்.

"பசுபதியின் இருப்பிடம்!" என்ருள் கனகம்.

"பசுபதியின் இருப்பிடமா?" என்று சொல்லி வாயைப் பிளந்தபடி ஒரு நிமிஷம் அப்படியே திகைத்துப்போனுள் கமலம்.

"இங்கே இருந்துகொண்டு என்ன செய்கிருர்?" என்ருள் திரும்ப.

"என்ன செய்கிருர்?...ராதையுடன் 'குஷி'யாகக் குடித்தனம் செய்கிருர்!" என்று எங்கேயோ பார்த்தபடி பதிலளித்தாள்! அவள் சொத்துக்கள் பணம் வேறு வந்திருக்கிறது...' கமலத்தின் நெஞ்சை, 'கர கர'வென்று அறுத்தன கனகத்தின் வார்த்தைகள், சஹிக்கமுடியாத ஏக்கம் நிறைந்த பெருமூச்சு ஒன்று அவள் உள்ளத்தைவிட்டு வெளியேறியது. அவள் சூன்யமான பார்வையுடனே எதிரே நோக்கினுள். விழிகளில் நீர் தளும்பியது.

சிறிது நேரம் நிசப்தம் குடிகொண்டது அவ்வறையில்.

பிறகு, 'அவருடைய இருப்பிடம் இதுதான் என்று உனக்கு என்னமாய்த் தெரிந்தது கனகம்? நீ எப்படிக் கண்டு பிடித்தாய்?' என்று வினவினுள்.

"நான் கண்டுபிடிக்கவில்லே—பாலுதான் கண்டு பிடித்துச் சொன்னுர்... 'மெரினுபீச்'சில் பசுபதியையும், ராதையையும் சேர்ந்தாற்போல் என்ருே ஒரு நாள் அகஸ்மாத்தாய்ச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தாராம்..."

"அப்படியானுல்... நீ இங்கே வருவதற்கு முன்னுல்...?"

"ஒரு வருஷகாலமாய்ப் பாலுவின் வீட்டில் இருந்துகொண்டுதான் அவரும் நானுமாய் உன்னேத் தேடியலேந்தோம்... அப்புறம் பசுபதியே என்னே நேரில் வந்து இங்கே வந்துவிடும்படி அழைத்தார். தாமும் உன்னேக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்வதாகச் சொன்னுர்... நானும், எத்தனே நாட்கள்தான் பாலுவின் வீட்டில் இருப்பது. என்று யோசித்து, அவர் அழைப்பிற்கிணங்கிவிட்டேன்"

"அப்படியா?... சரிதான்!" என்று மறுபடியும் நீண்ட பெருமூச்செறிந்தாள் கமலம்.

சிறிதுநேரம் இருவரும் அப்படியே மௌனமாய் உட்கார்ந்திருந்தார்கள். பின்னர், கனகம் கமலத்தைப் பார்த்து, 'சரி, கமலம்! நீ—எங்களுக்கு இன்னும் அதிகக் கவலேயைக் கொடுக்காமல், இந்தமட்டும் தெய்வாதீனமாய் வந்து சேர்ந்தாயே? அதுவே பெரிது... சரி நீ மிகவும் களேத்துப்போயிருக்கிருய்! இன்னும் சற்று நேரம் படுத்துக்கொண்டு களேப்பாறு. நான் போய்க் கொஞ்ச நேரத்தில் உனக்குக் காப்பி கொண்டுவந்து கொடுக்கிறேன்.' என்று சொல்லி அவளேப் படுக்கவைத்துவிட்டு அறையை விட்டு வெளியே சென்ருள்.

ஆனுல் கமலம் படுக்கையில் சாய்ந்துகொண்டிருந்தாளே தவிர அவளுக்கு மறுபடியும் தூக்கம் வரவில்லே. களேத்துப்போயிருந்தாள் என்பது என்னவோ வாஸ்தவம்தான். அத்துடன் அவள் உள்ளமும் சோர்ந்துபோயிருந்ததும் உண்மை. ஆனுல் அவளுக்குத் தூக்கம் எப்படி வரும்? பசுபதியும், ராதையுமே திரும்பத் திரும்ப அவள் மனக்கண்முன் காட்சியளித்துக்கொண்டிருந்தனர். துக்கம் செறிந்த பெருமூச்செறிந்தபடியே அவள் கலங்கித் தவித்தாள். ஏதேதோ யோசித்தவண்ணமே துடித்துக்கிடந்தாள்...

அன்று மாலே ஹரிஹரய்யர் தம் வீட்டிற்குத் திரும்புமுன் கமலத்தைக் கண்டு பேசி—சொல்லிக்கொண்டுபோக அவளிடம் வந்தார்,

"என்ன கமலம்! நம் வீட்டுக்குப் போகலாம் வருகிருயா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார்.

அவளுக்கு ஒன்றுமே சொல்லத் தோன்ற வில்லை. சிறிது நேரம் பேசாமல் தலைகுனிந்து கொண்டு நின்றாள். என்னவோ தெரியவில்லை துக்கம் பீறிட்டுக்கொண்டது அவளுக்கு. விக்கி விக்கி அழத் தொடங்கிவிட்டாள்...

ஹரிஹரய்யர் துடித்தே போனார்—'அசடே! எதற்காக அழுகிறாய்? சும்மா வேடிக்கைக்காக அல்லவா சொன்னேன்!... இதற்கு அழுவாளா? உன் மனசு எனக்குத் தெரியாதா? நீ இங்கேயே இரு இன்னும் கொஞ்சநாள் வரையில். பசுபதியே உன்னை இங்கே விட்டுப்போகும்படி என்னை மன்றாடிக் கெஞ்சிக்கேட்டுக்கொண்டான். நானும் இங்கேயே வந்து உன்னை அடிக்கடி பார்த்துவிட்டுப் போகிறேன், கவலைப்படாதே கண்ணே!— இதோ பார்— கூடிய சீக்கிரம் எல்லாம் சரியாகிவிடும்! அதற்கு நான் ஜவாப் தாரி?... இதோ— நான் சொல்வதைக்கேள்?— நான் எது சொன்னாலும் அப்படியே பலித்துவிடுகிறது என்பது உனக்குத் தெரிந்ததுதானே?... 'எப்படியும் பசுபதி அகப்பட்டுவிடுவான்,' கவலைப்படாதே! என்று நான் உன்னிடம் சொல்லிக் கொண்டே வந்திருக்கிறேனா, இல்லையா? இப்பொழுது நடந்திருப்பதைப் பார்த்தாயா? அவன் வீட்டிலேயே உன்னை என் அன்னை கொண்டு வந்து சேர்த்துவிட்டாள், பார்!—வீணாக உன் மனதை அலட்டிக்கொள்ளாதே, குழந்தாய்?... நடக்கிறது நடந்துதானே ஆகவேண்டும்? அழாதே! எல்லாம் உனக்கு அனுகூலமாகவே முடியப்போகிறது, பார்! எனக்கு எல்லாம் தெரியும்! பசுபதிகூட உன்னிடம் தனியாக எவ்வளவோ பேசவேண்டுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறான்...

கமலம் திடுக்கிட்டுப்போய் எதிரில் நின்று கொண்டிருந்த ஹரிஹரய்யரை நோக்கினாள்— 'உங்களுக்கு எல்லாம் தெரியுமா!' என்று சொல்ல முடியாத ஆச்சரியத்துடனே நடுங்கும் குரலில் அவரைக் கேட்டாள். 'எல்லாம் என்று அவர் சொன்னது—'ராதையைப் பசுபதி கல்யாணம் செய்துகொண்ட சமாச்சாரத்தை'யே அவ்விதம் குறிப்பிடுகிறார் என்று தவறுதலாக எண்ணிக் கொண்டுவிட்டாள், ஆனால் அவள், மற்ற அந்தரங்கங்களையெல்லாம் அவரிடம் அநேகமாகத் தெரிவித்திருந்தபோதிலும், 'அது' ஒன்றை மாத்திரம், ஏனோ சொல்லாமலேயே மறைத்து விட்டாள்! ஆகவே 'எல்லாம்' என்று அவர் அழுத்தமாகக் கூறியதும், அவள் நெஞ்சு துணுக்'குற்றது.

ஆனால், ராதையென்று ஒருத்தி அவர்களுடன் சம்பந்தப்பட்டு இருக்கிறாள்' என்பதே அந்த நிமிஷம் வரையில் ஹரிஹரய்யருக்குத் தெரியாது! ராதை அங்கேயே—அவருக்கு வெகு சமீபமாகவே—இருந்தும் கூட, கனகம் ரொம்ப ரொம்ப முன்னெச்சரிக்கையுடன், அவளை அவர் பார்வையிலே ஒரு க்ஷணம் கூட அகப்பட விடாமல், மறைத்துவிட்டாள் என்பது ஹரிஹரய்யருக்கும் தெரியாது. கமலமும் அறியாள்.

ஆகவே ஹரிஹரய்யர் 'எல்லாம்' என்று கமலத்தின் 'உள்ளத் தவிப்பை'த்தான் குறிப்பிடுகிறார் என்பது அவளுக்குத் தெரியவில்லை. 'எல்லாம் தெரியும்' என்று அவர் மறுபடியும் சொன்னதும் கமலம் குலுங்கக் குலுங்க அழுதாள்.

"பாவம்! அவளுக்குத்தான் பசுபதியிடம் எவ்வளவு அளவற்ற பாசம்!" என்றெண்ணி வியந்துகொண்டே, அவளுக்குத் தேறுதல் வார்த்தைகள் சொல்லிவிட்டுச் சென்றார், ஹரிஹரய்யர்—'எல்லாவற்றைப்' பற்றியும் இனி விவரமாகப் பூங்குளத்திற்கு—தகவல் தெரிவிக்கலாம்—என்ற எண்ணமும் அப்போது உண்டானது.

22

ஒரு சமயம் கனகத்தின் உள்ளத்தின் ஆழத்திலே ஊன்றப்பட்ட விஷ வித்தானது, முளை கண்டு, செடியாகி, இப்பொழுது பெரியதொரு ஆல விருக்ஷமாக, பல இடங்களில் வேர் கொண்டு வளர்ந்துவிட்டது! இனிமேல் பலன் தரவேண்டியதுதான் பாக்கி. கனகம் 'வேலை செய்ய'த் தொடங்கிவிட்டாள்! அவள் இத்தனை காலமாக வெகு ஆவலுடன் எதிர் நோக்கிக்கொண்டு காத்திருந்த வேளை, இப்பொழுது வந்துவிட்டதாக அவள் எண்ணினாள். அது 'அவள் வேளை'. இனியெல்லாமும் 'அவள் வேலை'தான்...

அவளும், கமலமும் அறையில் தனித்துப் பேசிக்கொண்டிருந்தனர்.

அப்பொழுது இரவு பதினொரு மணி சமயம். கார்காலத்து மேகங்களினால் மறைக்கப்பட்டிருந்த வானம் இருண்டிருந்தது.

ஒரு நக்ஷத்திர ஒளி கூட இல்லாமல் 'கருகும்'மென்றிருந்த ஆகாயம் சொல்லமுடியாத பயங்கரங்கள் நிறைந்த நாக்கு மேடையைப் போலிருந்தது. வானம் இருண்டதால் பூமியும் இருண்டது. பூமி இருண்டதால் பூமியிலிருந்த சகலமும் இருளடைந்திருந்தன. காற்றின் சலனம்கூட இல்லாமல், ஆழமறிய முடியாத சமுத்திரத்தைப்போல், எங்கும் 'கம்'மென்றிருந்தது.

"நான் சொல்லுகிறதெல்லாம் திரும்பத் திரும்ப இதுதான் கனகம்! எனக்குக் கல்யாணம்கூட இனிமேல் தேவையில்லை. ஆனால் எப்பொழுதும், சதாசர்வகாலமும் அவருடைய முக தரிசனம் மட்டும் எனக்குக் கிடைத்துக்கொண்டிருந்தால் போதும். அதைக்கொண்டே நான் திருப்தி அடைந்துவிடுவேன்! அவர் காலடியில் கிடந்து

கொண்டே, அவர் காலால் இடும் வேலையை என் தலையால் செய்துகொண்டு, என் சொச்சக் காலத்தையும் கழித்துவிடுவேன்!...இப்பொழுது இங்கே இருக்கிறேனே?...அவர் என் முகத்தைப் பார்க்காவிட்டாலும், அவர் என்னுடன் பேசா விட்டாலும், நானாவது அவரது திவ்யமான முகத்தை என் கண் குளிரப் பார்த்துக் கொண்டேயிருக்கிறேனே?...இதே மாதிரியாவது எப்பொழுதும் இருந்துகொண்டிருக்கும் பாக்ய மாவது எனக்கு நீடிக்குமா...?"

"என்னது? அவர் உன்னிடம் பேசாவிட்டா லுமா? கமலி! நீ கூடவா அவரை அப்படி நினைத்துவிட்டாய்...?"

"அதற்கில்லை...?"

"அதில்லை-நான் சொல்வதைக்கேள். அவர் உன்னிடம் பேசுவதற்கு எத்தனை தவியாய்த் தவித்துக்கொண்டிருக்கிறார், தெரியுமா, கமலம்? உனக்குத் தெரியாவிட்டாலும் அது எனக்குத் தெரியும்...!...நீங்கள் இருவரும் ஒரு நிமிஷ மாவது தனித்துச் சந்திக்க இது வரையில் சமயம் நேரவில்லை...அதற்காகவே அவர் காத் துக்கொண்டிருக்கிறார்.

கமலம் தாங்க முடியாத பர பரப்படைந் தாள். 'நிஜமாகவா!' என்று பிரமித்தாள்.

"ஆமாம்! ஒரு வேளை நாளைய தினமே நீங் கள் தனியாக ஒருவரையொருவர் சந்திக்கச் சந் தர்ப்பம் ஏற்பட்டுவிட்டால் கூட அவர், தம் மனதில் உள்ளவற்றையெல்லாம் உன்னிடம் அப்படியே திறந்து கொட்டிவிடத் துடித்துக் கொண்டிருக்கிறாராக்கும்! தெரியுமா...?..."

கமலத்தின் வாயெல்லாம் பல்லாயிற்று. எல்லை யற்ற ஆனந்த உணர்ச்சியினால் அவள் வதனம் மலர்ந்தது. அதே சமயம் கனகத்தின் உள்ளம் உள்ளூரக் கருகிச் சுருங்கியது. அவள் மனம் வெதும்பி வெடித்தது.

"அத்துடன் நிற்காமல், தம்மை நீயும் கல் யாணம் செய்து கொள்ளும்படி அவராகவே உன்னைக் கேட்கும்படி அவ்வளவு தூரத்திற்குக் கூடிய சீக்கிரம் வந்தாலும் வந்துவிடும்!" என்று மேலும் தொடர்ந்து கனகம் கூறியதும், கம லத்தின் உள்ளம் முழுவதும் ஒரு நேரத்திற்கு விகஸித்தது. ஆனால் மறு க்ஷணமே அவள் திடுக்கிட்டு, 'அவ்வளவு தூரத்திற்குக்கூட நான் இப்பொழுது ஆசைப்படவில்லை கனகம்! அது பேராசை யென்றே நினைக்கிறேன். இனிமேல் எனக்குக் கல்யாணம் கிட்டுமென்றே நான் நம்பவில்லை..."

"கிட்டினால்?" என்று அழுத்தமாகக் கேட் டாள் கனகம்.

கமலம் திடுக்கிட்டாள்-'என்ன சொல்லுகிறாய் கனகம்?' என்றாள்.

"அவரைக் கல்யாணம் செய்து கொள்ளும் பாக்யம் உனக்கு ஏற்பட்டால்? அப்பொழுது 'வேண்டா'மென்று விடுவாயோ என்றுதான் கேட்கிறேன்."

"ஆனால்...?"

"ஆனால் என்ன?"

"ராதா...?..."

கனகம் சிரித்தாள். 'அவளைப் பற்றி யோசிக் கிறாயா? உன் யோசனை சரிதான்... ஆனால் ராதா வைப்பற்றியும் எனக்குத் தெரிந்த அவ்வளவு உனக்குத் தெரியாது கமலம்!' என்றாள்.

"கனகம்! அவ்வளவு நல்லவளா, ராதா? எனக் குத் தெரியாதுதான்... அவளும் சம்மதிப்பாள் என்கிறாயா?... அப்படியானால்... என் உள்ளத்தி விருப்பது அவளுக்கும் தெரியுமா?... நீ சொன் னயா?..." என்று மூச்சு விடாமல் மேலும்மேலும் கேட்டுக்கொண்டே போனாள் கமலம்.

கனகம் மறுபடியும் சிரித்தாள். 'உனது அந்த ரங்கத்தையெல்லாம் நான் அவ்விதம் கண்டபடி கண்டபேர்களிடம் சுலபத்தில், வெளிட்டு விடுவேன் என்றெண்ணுகிறாயா கமலி, அதெல்லா மொன்றுமில்லை. ஆனால் ராதை என்னவோ. ரொம்ப நல்லவள்தான்!... ஆனால் அவள் மனசு தான் கொஞ்சம்... பலஹீனமான தன்மையுடை யது...' அவள் மறுபடி சிரித்தாள்.

"என்ன!... என்னவோ ஒரு தினுசாகச் சொல்லுகிறாயே? எனக்கொன்றும் புரிய வில்லையே, கனகம்?" என்றாள் கமலி.

"புரியாது, புரியாது! உனக்கு ராதையின் விஷயம் புரியாதுதான்!" என்றாள் திரும்பவும் ஒரு மாதிரியாக சிரித்துக்கொண்டே. பிறகு, திடீ ரென்று தீவிரமாக, கமலி! இப்பொழுது நான் உன்னிடம் ஓர் ரகசியத்தை வெளிப்படுத்தப் போகிறேன். அது வெகு அந்தரங்கமானது. தப் பித்தவறிக்கூட நீ அதை ஒருவரிடமும் வெளியி டக்கூடாது. நீ என்னை முழுவதும் நம்புகிறாய் அல்லவா?' என்று கேட்டாள்.

கமலம் இன்னும் ஒன்றும் புரியாமல் திகைத் தாள்.

"நான் உனக்கு அந்தரங்கமானவள் என்பதை நீ நம்புகிறாயல்லவா?" என்றால் கனகம் கொஞ் சம் ஓங்கிய குரலில்.

"நம்புகிறேன்" என்றாள் கமலம் தன்னையறியா மலேயே.

"சரி, அதேமாதிரி நீயும் எனக்கு அந்தரங்க மானவள்தான் என்பதையும் நம்புகிருயல்லவா?"

"நம்புகிறேன்"

"என் வார்த்தைகளுக்கு உன்னிடம் மதிப்பு இருக்கிறதல்லவா"

"இருக்கிறது"

"ரொம்பசரி, என்னுல் உன்னைப் பசுபதிக்குக் கல்யாணம் செய்துவைக்க முடியுமென்று இப்பொழுது நான் சொன்னுல் அதை நீ நம்புவாயா?'

கமலம் பிரமித்துப்போனுள்.

"நம்புவாயா?" என்ருள் கனகம் மறுபடியும் சற்று ஓங்கிய குரலில்.

கமலம் பிரக்ஞையில்லாதவளைப் போலவே நடந்துகொண்டாள். மனோவசியக்காரன் ஒருவன் தனது அபாரமான சக்திக்கு உள்ளடங்கிய ஒருவனைப் பிரக்ஞையற்றுப் போகும்படி செய்து, அவனை எப்படியெல்லாம் தன் இஷ்டப்படி ஆட்டிவைப்பானே, அதேபோலவே கனகம் கமலத்தை ஆட்டி வைப்பவள்போலே காணப்பட்டாள்.

"நம்புகிறேன்!" என்ருள் தன்னையறியாமலேயே.

"அப்படியானுல் மிகவும் சந்தோஷம், உன்னை அவருக்கு விவாஹம் செய்துகொடுக்கவே நினைத்து, உன்னைத் தேடிக்கொண்டு நான் இவ்வளவு தூரம் வந்தேன். அதுவும் அவராகவே உன்னைவந்து கேட்பதற்கு என்னென்ன வழிகள் செய்யவேண்டுமோ அதற்காகவே இப்பொழுது இவ்வளவு சிரமப்படுகிறேன்! தெரிந்ததா?" என்ருள் கனகம்.

கமலம் பேச்சற்றுப்போய் எதிரில் அமர்ந்திருந்த கனகத்தை மார்புறத் தழுவிக்கொண்டாள். விவரிக்க முடியாத உணர்ச்சி வெள்ளத்தினுல் அவளது புஷ்பம்போன்ற ஹிருதயம் பொங்கித் தத்தளித்தது. அவள் கனகத்தின் தோளில் சாய்ந்தவண்ணமே ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள்.

அவ்வளவிற்கும் கனகத்தின் நெஞ்சம் உள்ளூற, கருவி பொருமிக் கொண்டேயிருந்தது. கமலத்தின் செய்கையும், பேச்சும்கூட அவளுக்கு வேம்பாயிருந்தன. உள்ளத்தினுள் பொங்கிவந்த சகிக்கமுடியாத வெறுப்பை அவள் மிகவும் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டாள். கமலத்தின் பட்டுப்போன்ற மிருதுவான ஸ்பரிசம் கனகத்திற்குப் பொறுக்கமுடியாத நெருப்பாயிருந்த போதிலும் அவள் தயங்கிக்கொண்டு பேசாமலிருந்தாள்.

சிறிது நேரம் சென்ற பிறகு கமலம் மெதுவாகத் தலையை நிமிர்த்தி, "எல்லாம் சரிதான், கனகம்!...ஆனுல்...ராதை?...எப்படியிருந்தாலும் அவள் பாவத்தில் கைவைக்க எனக்கு மனம் வரவில்லையே?... நான் என்ன செய்வேன், கனகம் என்று ஏங்கினுள்.

"நல்ல முட்டாளடி நீ!........அதைத்தானே சொல்ல வருகிறேன்?...அதற்குள் இப்படி அவசரப்படுகிருயா?.........ராதையை என்னவென்று நினைத்தாய் நீ மூடமே?...அவள் பெரிய ஆளாயிற்றே?...

"என்ன? நீ சொல்லுவது எனக்குச் சரியாக விளங்கவில்லையே?" என்ருள் கமலம் கனகத்தின் முகத்தைப் பார்த்தபடியே.

கனகம் அங்குமிங்கும் நாற்புறமும் சுற்றிப் பார்த்தபடியே, "என்னவென்று நீ அவளை நினைத்தாய், கமலி! கொண்ட கணவனை வஞ்சிக்கும் துரோஹியல்லவா, அவள்? பசுபதியைவிட்டு விட்டு இன்னெரு பரபுருஷனிடம் பழகும் பதிதையல்லவா, அவள்!" என்ருள்.

"என்ன!" என்று தூக்கிவாரிப்போட்டபடியே கேட்டாள் கமலம்.

"ஆம்ாம்! இந்தச் சமாசாரம் பசுபதிக்கே இன்னும் தெரியாது! 'எனக்கும் தெரியா'தென்பதுதான் ராதையின் எண்ணம்! ஆனுல், பாவம், கூடிய சீக்கிரம் அவளுடைய 'குட்'டெல்லாம் வெளிப்பட்டு, சந்தி சிரிக்கப்போகிருள்!"

"என்ன!...நீ சொல்வதெல்லாம் நிஜம் தானு! கனகம்!" என்ருள் கமலம் தாங்கமுடியாத வியப்பினுல்.

"பின்? பட்டணத்துக் காலேஜில் தனியாகப் பி. ஏ., படிக்கவந்த ஓர் பெண்ணிடம் இதைத் தவிர நீ வேறென்ன எதிர்பார்க்க முடியும், கமலி? அதுவும் அவள் பசுபதியைக் காந்தர்வ விவாஹம் செய்து கொண்டதிலிருந்தே ராதையின் யோக்யதை உனக்குத் தெரியவில்லையா? தாயாரை விட்டாள்—தகப்பனுரை விட்டாள்—வேறு ஒருவரையும்கூட கலக்காமல், தானுகவே, 'குடுகுடு'வென்று தன் சுய ஜாதியிலிருந்தும் வேறுபட்ட, ஒருவரைக் கல்யாணம் செய்துகொள்வது காதல் ரொம்ப மேலிட்டு விட்டதனுல் என்ரு நீ நினைக்கிருய்? ஆமாம்! அதுவும் ஒரு விதத்தில் உண்மைதான் 'காதல்' ரொம்பவும் முற்றிப்போனுல் 'காமமாகப் பரிணமிக்க வேண்டியதுதானே!" என்று சிரித்தாள் கனகம்.

அவள் சொன்னது ஒவ்வொன்றும் கமலத்திற்கு ஆச்சரியத்தின் மேல் ஆச்சரியமாய், திகைப்பின் மேல் திகைப்பாய் வந்து விழுந்தது. அப்படியே பிரமித்துப்போய் உட்கார்ந்திருந்தாள்.

கடன் தருகிறேம்

அடமானமோ செக்யூரிடியோ இன்றி உங்கள் கையெழுத்தின் பேரிலேயே ரூ. 1000/- வரை கடன் தருகிறேம். விவரங்களுக்கு ஆங்கிலத்தில் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

BOMBAY MERCANTILE CO.

BOMBAY-23.

பிரபல்ய நோவு நிவாரணி

நோ-பெய்னின்

புகழ் அதன் இணையில்லா சக்தியினல் மேலும் பரவுகிறது

பெரிய, சிறிய ட்யூப் களில் கிடைக்கிறது

கல்கத்தா கெமிகல் கல்கத்தா 29

நோ-பெய்ன்

எல்லா வலிகளுக்கும் ஒரு ஔடதம்

Ta-IA

கனகம் தான் மேலும் தொடர்ந்து சொன்னாள்:

"கமலம்! நீ இப்பொழுது என்ன செய்யவேண்டும் தெரியுமா? இனி நீ எப்பொழுது பசுபதியைச் சந்திக்க நேர்ந்தாலும் சரி, ராதையின் இந்த ரகசியத்தைப்பற்றி ஜாடையாக நீ அவரிடம் வெளியிடவேண்டும். ஆனால் சொல்லும்பொழுது வெகு லாகவமாய்—பேச்சோடு பேச்சாய்—சொல்லவேண்டும். நீ சொல்லும்பொழுது அவருக்கே மனதில் அவளைப்பற்றிச் சந்தேகம் உதிக்கவேண்டும்...என்ன?...தெரிந்ததா?..." என்றாள்.

கமலத்தின் களங்கமற்ற முகாரவிந்தம் மெதுவாக இருண்டுகொண்டே வந்தது, அவளது தேகமாத்திரம் அப்படியே "கிடுகிடு"வென்று பதறியது. கை கால்கள் "வெடவெட"வென்று நடுங்கின. அவள் திகைத்தாள்: "கனகம்! இதைப்போய் என்னையா அவரிடம் சொல்லச் சொல்கிறாய்?... அவர் மனது இதைக் கேட்டால் என்ன பாடுபடும்?..." என்று இழுத்தாள்.

"பின் ராதை தன் தொழிலை இப்படியே நடத்திக்கொண்டிருக்கட்டும். பசுபதி அவளைப் பதிவ்ரதையென்றே யெண்ணி ஏமாந்து கொண்டிருக்கட்டும் என்கிறாயா, நீ?"

"அதற்கில்லை... 'உனக்கெப்படித் தெரியும் என்று அவர் கேட்டால்?"

"நீயே நேரில் பார்த்ததாகச் சொல்லவேண்டியது!"

"என்ன? என்னை மனமாரப்பொய்யா சொல்லச் சொல்கிறாய்?"

"அப்படியானால் நான் சொல்வது 'பொய்' என்கிறாயா நீ? சற்று முன் என்னை முழுவதும் நம்புவதாகச் சொன்னாயே? அது பொய்யா?..."

"கனகம்! என்மேல் கோபித்துக் கொள்ளாதே! கடைசியாக ஒன்றே ஒன்று உன்னைக் கேட்கிறேன்—நீ கண்ணால் கண்டதை எனக்கும் ரூபிப்பாயா? என்று அவர் கேட்டுவிட்டால்...?..."

"'ரூபிக்கிறேன்' என்று சொல்லிவிட்டு, 'விறுவிறு'வென்று என்னிடம் நீ வந்துவிட வேண்டியது, பிறகு எல்லாவற்றிற்கும் நானே ஜவாப்தாரியாக நிற்கிறேன்!... என்ன இப்பொழுது கவலையில்லாமல் இருப்பாயல்லவா?"

கமலம் மௌனமாய் ஜன்னலுக்கு வெளியே எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது மனத்திலே அவளால் சற்றும் தாங்கமுடியாத பெரியதொரு பாரத்தை ஏற்றிவைத்தது போன்ற ஒரு உணர்ச்சி அவளுக்கு உண்டாயிற்று. அவள் நீண்டதொரு பெருமூச்சு விட்டாள். கண்களிலே நீர் ததும்பியது.

அவளை யறியாமலேயே அவள் கைகள் இடுப்பைச்சுற்றித் தடவின. மறுக்ஷணம் அவள் தனது இடுப்பில் மறைவாக வைக்கப்பட்டிருந்த ஒரு சிறிய காகித மடிப்பை வெளியே எடுத்தாள். கைகள் நடுங்கின.

"என்னது கமலி!" என்று கனகம் மிகுந்த படபடப்புடன் வினவினாள்.

கமலம் அவள் முகத்தை ஏறிட்டு நோக்கினாள்.

"விஷம்!" இதைத்தின்று நான் அப்பொழுதே செத்துத் தொலைந்திருக்கக் கூடாதாவென்று இப்பொழுது நான் யோசிக்கிறேன் கனகம்! அப்பொழுதே தொலைந்திருந்தால்—இப்பொழுது உயிரை வைத்துக்கொண்டே சாகாமல் சாகவேண்டியதில்லை, பார்?...ஆனாலும்... வாயினால் என்னவோ சொல்லிவிடுகிறோம். 'தற்கொலை' செய்துகொள்வதென்பதும் அத்தனை சுலபமான காரியமில்லையென்றும் தோன்றுகிறது!" என்றாள் மெதுவாக.

கனகத்தின் உள்ளம் கொந்தளித்தது...

வானத்தில் வெகு தூரத்திலே மெதுவாக முணுமுணுத்த ஓர் இடி வரவர, கொஞ்சங்கொஞ்சமாக உரக்கச் சப்தித்துக் கொண்டே அவர்கள் தலைக்கு நேராக வந்ததும், காதே செவிடு படும்படி பெரிதாக இடித்தது.

குளிர்ந்த காற்று லேசாக வீசவே, மழைத் துளிகள் 'பிசுபிசு'வென்று விழ ஆரம்பித்தன.

23

ராதையும், கனகமும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

"கமலி! அந்த வெற்றிலைத் தட்டை யெடுத்துப்போய் உன் அத்தானிடம் கொடுத்துவிட்டு வா!" என்று கனகம் சொன்னதும் கமலத்தின் தேகமெல்லாம் சிலிர்த்து நின்றது.

வெற்றிலைத் தட்டை எடுத்துக்கொண்டு பசுபதி இருந்த அறையில் படபடக்கும் நெஞ்சுடனே நுழைந்தாள்.

கமலியைக் கண்டதும் பசுபதி அளவு மீறிய பரபரப்புடன் எழுந்திருந்தான். கமலியா! கமலி! வா என்றான் தடுமாறும் குரலுடனே.

தட்டை அவனருகில் வைத்துவிட்டு, திரும்பிப் போக யத்தனித்தாள் கமலம்.

பசுபதி ஒரே பாய்ச்சலில் அவளிடம் சென்று அவள் வலக்கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

"கமலி!...என் பேரில் கோபமா, உனக்கு?" என்று அவளை நோக்கிக் கெஞ்சியபடி கேட்டான்.

கமலி குனிந்த தலை நிமிராமலே, 'உங்கள் மேல் எனக்கு எதற்காகக் கோபம்?' என்று திரும்பக் கேட்டாள். அவன் பிடியிலிருந்து தன் கரத்தை விடுவித்துக்கொள்ள அவள் சிறிதாவது முயற்சிக்கவில்லை.

"பின்னே? இத்தனை நாட்களாக நான் இருக்கும் பக்கமாகத் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டேனென்கிறாயே? என்னுடன் ஒரு வார்த்தை கூடப் பேசமாட்டேனென்கிறாயே? உன்னோடு பேசுவதற்கு நீ இங்கு வந்தது முதற்கொண்டு நான் எப்படித் தவித்துக்கொண்டிருக்கிறேனென்பது உனக்குத் தெரிந்தால்...?"

"அதெல்லாம் எனக்குத் தெரியவேண்டிய அவசியமேயில்லை; தெரிந்துதான் எனக்கு என்ன ஆகவேண்டும்?...அதுதான் உங்களுடன் பேசுவதற்கும், உங்களைக் கண் குளிரப் பார்ப்பதற்கும் ராதா வந்திருக்கிறாளே!...இனி நான் என்ன?" என்று மிகவும் மிடுக்காகவே பேசினாள் கமலம்.

அவ்வளவு நிஷ்டூரமாகப் பேசியது அவளுக்கே ஆச்சரியமாகத்தானிருந்தது! அவ்வளவு தைரியம் மிகவும் இளகிய மனமுடைய அவளுக்கு எங்கிருந்துதான் வந்தது?... என்னவோ தெரியவில்லை. பசுபதியைக் கண்டதுமே, கமலத்திற்கு பழைய ஞாபகங்களெல்லாம், ஒன்றன்பின்னொன்றாக, 'மளமள'வென்று தொடர்ந்து வந்தன, அவளையறியாமலேயே அவளுக்குக் கோபத்தை மூட்டிவிட்டன....

"கமலி! நான் செய்தது தவறுதான், கமலி... என்னவோ அந்தச் சமயத்தில் புத்தியில்லாமல் அவ்வாறு செய்துவிட்டேன்!... என்னை உன் மனப்பூர்வமாக மன்னிப்பாயா, கமலி!... எனக்காக நீ என்னவெல்லாம் கஷ்டப்பட்டாய் என்பது இப்பொழுது எனக்குத் தெரிந்த பிறகு, என் மனசை என்னவோ கூரிய கத்தியைக் கொண்டு அறுப்பதுபோல் இருக்கிறது!... கமலி! இப்பொழுது உன்னைப் பார்க்கும்போதெல்லாம்... என் உள்ளம்..."

பசுபதி முழுவதும் சொல்லிமுடிக்கவில்லை இன்னும்.

அதற்குள் - 'அடாடா! அப்பொழுதே இவளைக் கல்யாணம் செய்துகொள்ளாமல் ஓடிவந்துவிட்டோமே' யென்று உங்கள் உள்ளம் தவியாய்த் தவிக்கிறதாக்கும்!......அடாடா! எப்பேர்ப்பட்ட மகத்தான காதல்! என்று விவரிக்க முடியாத ரோஷத்துடன் கூச்சலிட்டுக்கொண்டே, பெருமூச்சு வாங்க, திடீரென்று கதவை விரியத் திறந்துகொண்டு அவர்களுக்கு முன்னே பிரஸன்னமானாள் ராதா!

தாங்க முடியாத கோபத்தினால் அவளுக்குப் 'புஸ் புஸ்'ஸென்று மேல் மூச்சு வாங்கியது. கண் கொள்ளாமல் விழி வெளியே பிதுங்கியது; தேகமே நிலை கொள்ளாமல் பதறியது. அவள் நெஞ்சு படபடக்கும் ஓசை பசுபதிக்கும், கமலத்திற்கும் நன்றாகத் தெரிந்தது.

கமலத்தைப் பிடித்திருந்த கையை 'வெடுக்' கென்று உதறிக்கொண்டான் பசுபதி.

ராதாவிற்கு அந்தக் காட்சி சஹிக்கவே முடியவில்லை.

"உம்! ஏன் விட்டு விட்டீர்கள், அவள் கையை!...நீங்கள் கொஞ்சமும் எதிர்பார்க்காத சமயத்தில் நான் கரடியை விட்டடித்து, உங்கள் ஸரஸ ஸல்லாபங்களுக்குப் பங்கம் விளைவித்துவிட்டேனாக்கும்! உம்! நீங்கள் பயப்படவேண்டாம்! நான் இதோ போகிறேன்-மேலே தொடர்ந்து நடத்தலாம் நீங்களிருவரும் உங்கள் காதல் லீலைகளை! ஐயோ! என் தலைவிதி! எனக்கு இது கூடப் போருது! இன்னும் நன்றாய்வேண்டும்! முன் பின் கொஞ்சமாவது யோசிக்காமல் உங்களைப்போய்க் கட்டிக்கொண்டேனே? உங்கள் குணம், நடத்தை, மனம் இவைகளைப்பற்றி இன்னும் நன்றாகத் தெரிந்து கொள்ளாமல் உங்களிடம் சிக்கிக்கொண்டேனே? உங்களை மேலெழுந்த வாரியாகப் பார்த்து மயங்கிவிட்டேன். அது என் தப்புத்தான்! உங்கள் உள்ளத்தின் ஆழத்தைக் கண்டறியும் திறமை எனக்கு இல்லாதுபோய்விட்டது! அது என் குற்றம்தான்! உங்களை முன் பின் கூடப் பார்த்திராமல்—உங்களைப்பற்றி ஒன்றுமே அறியாமல் உங்களிடம் என் மனதைப் பறி கொடுத்ததற்கு இது நல்ல பாடம்-இது நல்ல தண்டனை? அட ஈச்வரா!...நீங்கள் இப்பேர்ப்பட்ட கேவலமான மனப்பான்மையுடையவராய் இப்படிப்பட்ட மோசமான அருவருக்கத்தக்க 'ஸ்திரீ லோல'ராய் இருப்பீர்களென்பது எனக்கு அப்பொழுதே தெரியாமல் போய்விட்டதே...?"

ராதையின் கண்கள் திடீரென்று கலங்கின. பொறுக்கமுடியாத துக்கம் நெஞ்சை அடைத்துக்கொண்டது. உள்ளம் விண்டு வெடித்தது. ஆனால் அத்துடன் நிற்காமல் அவள் இன்னும் ஒருபடி மேலே போனாள்.

விக்கிக்கொண்டே, கூனிக் குறுகிப்போய் அங்கே ஒண்டிக்கொண்டிருந்த கமலத்தைப் பார்த்துச் சொல்லமுடியாத ஆங்காரத்துடன் "அடி! உன்னை நான் என்னவோவென்று நினைத்துக்கொண்டிருந்தேன்? பார்த்தால் பசுவைப் போலிருக்கும் நீ பாய்ந்தால் புலியாக அல்லவா இருக்கிறாய்?...கடைசியில் நான் கண்ட கனவு

பலித்தே விட்டது!... இப்படி எனக்குத் துரோகம் நினைக்கவா இங்கே வந்தாய்?” என்று அலறியதும், ஒரு பாவமும் அறியாத குழந்தை மனத்தினளான கமலத்தின் எண்சாண் உடம்பும் ஒரு சாணுகக் குன்றிப்போய்விட்டது. அவள் ராதையின் முகத்தைப் பார்க்கவே அஞ்சி நடுங்கினுள்.

அவள் பேரிலிருந்து, மறுபடியும் ‘சடக்’கென்று பசுபதியின் மேல் பாய்ந்தாள் ராதை. அவனைப்பார்த்துப் பயங்கரமாய் உறுத்தி விழித்துக்கொண்டே, புருஷர்கள் என்ன அக்கிரமம் வேண்டுமானுலும் செய்யலாம்? மனைவிகளுக்கு எத்தகைய அநீதியை வேண்டுமானுலும் இழைக்கலாம்?...ஆனுல் பெண்களோ?...தாலி கட்டிய கணவனைவிட்டுப் பரபுருஷனை அகஸ்மாத்தாகப் பார்த்துவிட்டால்கூட போச்சு! குடியே முழுகி விடும்? அல்லவா? இதுதான் தர்ம சாஸ்திரம்? புருஷர்களின் தர்ம சாஸ்திரம் இவ்விதம்தான் அலறுகிறது? இல்லையா?......இருக்கட்டும்?...... உங்கள் இஷ்டப்படியே என்னவேண்டுமானுலும் செய்துகொண்டு ஆனந்தமாக இருங்கள்! “நான் இதோ போய்விடுகிறேன்! மேற்கொண்டு என்ன செய்யவேண்டுமென்பது எனக்குத் தெரியும்!” என்று நெஞ்சு மிதமீறிய வேகத்துடன் படபடக்க, வந்த ‘விருவிரு’ப்புடனேயே அந்த அறையை விட்டுப் போயும் விட்டாள், ராதை, கதவைத் தன் பின்னுல் “படீர்” என்று சார்த்திக் கொண்டு.

பசுபதியும், கமலமும் மறுபடியும் தனித்து விடப்பட்டார்கள். அவர்களிருவரும் கனவிலும் எதிர்பார்த்திராத காட்சி நடந்துவிட்டது. இருவருடைய மனமும் பழையபடி சரியான நிலையை அடையக் கொஞ்ச நேரம் பிடித்தது.

இனியும் அங்கே நின்றுகொண்டிருப்பது தவறு என்று எண்ணிய கமலம், தானும் அந்த அறையை விட்டு வெளியேற இரண்டு மூன்றடிகள் எடுத்துவைத்தாள். அப்பொழுது திடீரென்று கனகம் அவளிடம் ராதையைப்பற்றிச் சொன்னது அவள் நினைவிற்கு வந்தது. ‘சட்’டென்று நின்ருள். அதைப்பற்றி அவனிடம் சொல்லலாமா — வேண்டாமா வென்று ஒரு க்ஷணம் தயங்கினுள். ‘ஆனுல் விஷயம் இவ்வளவு தூரத்திற்கு முற்றிப்போய்விட்ட பிறகு—தான் மாத்திரம் அதை அவனிடம் வெளியிடாமல் ஏன் இருக்கவேணும் — அதைச் சொல்லுவதற்கு இதைவிட வேறு தகுந்த சந்தர்ப்பம் இனி எங்கிருந்து வரப்போகிறது’ என்ற யோசனை. ‘பஹிரங்கப்படுத்தியே விடுவது’ என்ற தீர்மானம்.

'பளிச்’சென்று பசுபதியை நோக்கித் திரும்பினுள்—‘ஹூம்! ரொம்ப நல்லவள் போலவும்—தான் மகா பதிவிரதை போலவும் என்னை அவமானப்படுத்திப் பேசிவிட்டுப் போய்விட்டாளே; இந்த ராதை? இவளுடைய அந்தரங்கங்களெல்லாம் எனக்குத் தெரியாது என்று நினைத்துவிட்

விட்டுப் போனுளென்று உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?' என்று அவனைப் பார்த்து, ஒரு வித மான அலக்ஷ்யமும், அதே சமயம், அதிகாரமும் கம்பீரமும் ஒலிக்கும் குரலில் வினவினுள். அவள் குரலில் ஒலித்த யாவையும் அவள் முகத்திலும் பிரதிபலித்தன.

„என்ன?...என்ன சொல்கிருய், நீ? கமலம்!" என்முன் திடுக்கிட்டுப்போன பசுபதி அவளை உற்று நோக்கியபடியே.

"கடைசியில் உங்கள் ராதா போகும்பொழுது என்ன சொல்லிக்கொண்டு போனுள் என்று நினை விருக்கிறதாவென்று கேட்கிறேன்?"

"இருக்கிறது?...'மேற்கொண்டு என்ன செய் கிறதென்பது எனக்குத் தெரியும்' என்று சொன்னதாக ஞாபகம்?"

"ஆமாம்! அதேதான்! அவள் சங்கதியும் அதில்தான் அடங்கியிருக்கிறது!"

"எதில்? என்ன அடங்கியிருக்கிறது? நீ சொல்லுவது எனக்கு ஒன்றுமே விளங்க வில்லையே? கொஞ்சம் புரியும்படி சொல்லக் கூடாதா கமலி?" என்று தடுமாற்றம் கொண்டு கெஞ்சினுன் பசுபதி.

"உங்கள் ராதையின் அந்தரங்கமெல்லாம் அவள் சொன்ன வார்த்தைகளிலேயே அடங்கி யிருக்கிறதே? இன்னுமா புரியவில்லை உங்க ளுக்கு?"

"ஒன்றுமே புரியவில்லை எனக்கு! என் மனசை என்னவோ வேதனை செய்ய ஆரம்பித்துவிட்டது, ஏற்கனவே நீ வேறு என்னை, இன்னும் என் னென்னவோ புரியாத புதிர் எல்லாம் போட்டு இன்னும் அறுக்கிருயே, உனக்கு என் மேல் கொஞ்சமாவது இரக்கமில்லையா, கமலி?"

"சரி— 'மேலே செய்யவேண்டியது என்ன வென்று எனக்குத் தெரியும்' என்று சொன்ன உங்கள் ராதை அதற்கு முந்தி என்ன சொன் னுள்?"

"என்ன சொன்னுள்?"

"ஸ்திரீகள் பரபுருஷர்களைப் பார்ப்பதைப்பற்றி என்னவெல்லாமோ தர்மசாஸ்திரம் படித்தா ளல்லவா?"

"ஆமாம்!"

"உங்கள் ராதையும் தான் வாயினுல், எதைக் கூடாது என்று சொன்னுளோ அதைத்தான் செயலிலும் காட்டி வருகிருள்!"

"என்ன?"

"மனைவிகள் பரபுருஷர்களைப் பார்த்துவிட்டால் கொண்ட கணவர்கள் 'குதி குதி'யென்று குதிப் பார்கள் என்ருளல்லவா? ஆனுல்... அவளும் உங் களைத் தவிர, வேருெரு பரபுருஷனைப் பார்த்துக் கொண்டுதானிருக்கிருள்!"

"கமலி!... என்ன சொன்னுய்?" என்று வீறிட் டுக் கத்தினுன், பசுபதி, அவன் கைகால்களெல் லாம் திடீரென்று உதறலெடுத்தன. மனம் பொங்கிவந்தது." நகசிகை பரியந்தம் அவனுக்குக் 'குபீ'ரென்று வியர்த்துவிட்டது.

"தயவுசெய்து கத்தவேண்டாம்! இது பரம ரகசியமானது!" என்று அத்தனை அமைதியாக அவள் சொன்னதை நினைத்துப் பின்னுல் அவ ளுக்கே எல்லை மீறிய வியப்பாக இருந்தது.

"ரகசியமா? பின் அத்தனை ரகசியமானது உனக்கெப்படித் தெரிந்தது?"

"இந்தமாதிரியெல்லாம் என்னிடம் வந்து நீங்கள் அலறுவதில் பிரயோஜனமில்லை! நானே கண்ணுல் கண்டேன்!" என்ருள் கமலம் உள்ளத் தின் எல்லையற்ற வெறுப்பு முகத்திலே பிரதி பலிக்க.

"உன் கண்ணுல் கண்டதை நீ எனக்கும் கொஞ்சம் காட்டுவாயா?"

களங்கமற்ற கமலம் பசுபதியை நிமிர்ந்து நோக்கினுள். உள்ளத்தின் பரம துக்கத்தின் சாயை அவள் அழகிய முகத்திலே தெளிவாகப் படர, "ஒரு நாள் காட்டுகிறேன்—சமயம் வந் ததும்! அன்றைய தினம், உங்களையே தஞ்ச மென்று இப்பொழுதும் நம்பியிருக்கும் என்னை என் ஹிருதயத்தைச் சிதறவிட்டு ஓடினீர்கள். இங்குவந்து ராதையின் வெளியழகில் மதிமயங் கினீர்கள். அவளுடைய உள்ளழகை உங்களுக் கும் ஒரு நாள் காட்டுகிறேன்—பார்க்கலாம்!" என்று அவள் சொல்லிக்கொண்டிருக்கும்போதே அவளது அஞ்சா நெஞ்சத்தைப் பார்த்துத்தானே என்னவோ—அவளுக்கே பொறுக்க முடியாமல் துக்கம் பீறிட்டுக்கொண்டு வந்துவிட்டது. ஏனே, கேவிக் கேவி—அழ ஆரம்பித்துவிட் டாள், கமலம்.

(தொடரும்)



ஆம், விருந்து
சிறப்பாக அமைய அதன் தயாரிப்பில் உபயோகப்படும் சமையல்சாதனமே காரணம். அதுதான் **காமதேனு வனஸ்பதி.**

காமதேனு வனஸ்பதி பதார்த்தங்களின் சுவையைப் பெருக்குகிறது. போஷாக்கையும் அதிகரிக்கச் செய்கிறது.

காமதேனு வனஸ்பதி சுத்தமானது. கைபடாதது. இப்பொழுது புதிய சீலிடப்பட்ட, காற்றுப்புதை டின்களில் கிடைக்கிறது.

வைடமின் "A" சேர்ந்தது

காமதேனு
வனஸ்பதி

தயாரிப்பவர்கள் :-

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்பொரேஷன் லிட்.

மேட்டூர் அணை R. S. *சேலம் ஜில்லா*

மானேஜிங் ஏஜெண்ட்ஸ் : **சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட்**

டில்லித் தபால்

கே. ஸ்ரீநிவாஸன்

பண்டித நேருவின் சைன விஜயத்தைப் பற்றிய சர்ச்சையே இப்பொழுது டில்லியில் விசேஷ சமாசாரம். பண்டிதரின் விஜயத்தின் முக்கிய நோக்கம் என்ன? அவர் சைனவில் ஏதாவது ரகசிய ஒப்பந்தம் செய்து வருவாரா? அவர் விஜயத்தின் பலனாக, இந்தியா சம்பந்தப்பட்ட வரை, அமெரிக்காவின் உறவு எப்படிப் பாதிக்கப்படும்?

அமெரிக்க உறவு அநியாயமாகக் குன்றி வருகிறதே என்று பிரலாபிக்கும் பத்திரிகைகள் நேருவின் விஜயத்திற்குத் தோஷம் கற்பித்து வருகின்றன. சீன பிரதமரான ஸ்ரீ சௌ-என்-லே மகா கெட்டிக்காரர், அவர் நேருஜியின் மனதை மாற்றி இந்தியாவுக்குப் பாதகமான சலுகைகளைப் பற்றிவிடுவார் என்றெல்லாம் சில பத்திரிகைகள் எழுதுகின்றன. சீனவின் எண்ணத்தை, அந்த நாடு டாக்டர் ஸிங் விஷயமாகவும் நேபாளம் விஷயமாகவும் என்ன சொல்கிறது என்பதைக் குறித்துத்தான் அறியவேண்டுமாம். அப்படியே, சீன ஏதாவது வாக்குறுதி கொடுத்தாலும் அதை எப்படி நம்புவது?

பண்டித நேருவின் விஜயத்துக்குக்காரணம் எதுவும் சொல்லத் தேவையில்லை. அவர் வெகு காலமாகவே சீனவின் நண்பர், சீன அநுதாபி. சீன பெரிய புரட்சியின் பலனாக மாறுதல் அடையு முன்னரே, பண்டிதர் சீனவின் வருங்காலம் மிகவும் பிரகாசமானது என்பதை வற்புறுத்தி வந்திருக்கிறார். அவர் சீனவுக்குச் சென்றதடவை விஜயம் செய்தபொழுது தான் யுத்தம் மூண்டது; அவர் விஜயமும் தடைபட்டது.

சென்ற 15 வருட காலங்களில் சீன பல துறைகளில் மாறுதல் அடைந்திருக்கிறது. தம் சுயநலத்தையே கருதி, அதற்காக உழைத்த சியாங்-காய் ஷேக்கின் ஆட்சி முடிந்து, மக்கள் ஆட்சி அந்த நாட்டில் நிலவுகிறது. புரட்சி என்பது நகர மக்கள் தொழிலாளிகள் மூலம்தான் சாத்தியம் என்ற ருஷ்ய சித்தாந்தத்தைப்பொய்ப்பித்து, விவசாயிகளும் புரட்சியைச் சாத்தியமாக்கக் கூடும் என்று நிருபித்தவர் ஸ்ரீமாத்ஸேடங். சீனப் புரட்சியில் ருஷ்யாவின் பங்கு கொஞ்சம்கூடக் கிடையாது. ஆகவே, சீனவின் கம்யூனிஸம் மற்றொரு புதிய மோஸ்தர் என்பதைச் சமீபத்தில் சீனவைச் சுற்றிப் பார்த்த தொழில் துறையில் ஊறிய பிரிட்டிஷ் மாஜி பிரதமர் ஸ்ரீகிளிமென்ட் ஆட்லியும், மாஜி சுகாதார மந்திரி ஸ்ரீஅனுரின் பெவனும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். கம்யூனிஸம் உலகத்தைக் கட்டியாள எண்ணமிடும் ஒரு சக்தி என்பதை, சீன சம்பந்தப்பட்டவரை கொஞ்சம் பார்த்துத் தெரிந்து கொண்ட பிறகே சொல்ல வேண்டிய விஷயம்.

நிற்க, முதல் முதலாக, உலகத்து ஜன சங்கியையில் ஐந்தில் ஒரு பங்கு கொண்ட நாட்டில் ஒரு யோக்கியதையுள்ள சர்க்கார் ஏற்பட்டிருக்கிறது. முன்னேற்றமும் நடக்கிறது. அந்த நாடு இந்தியாவின் உறவை நாடுகிறது. தவிர, அந்த நாடு நமக்கு அக்கம்பக்கத்தார். இந்தக் காரணங்களுக்காகவே பண்டிதர் அதற்கு விஜயம் செய்ய வேண்டும். இதுவல்லாமலும், இந்தியாவிற்குச் சமீபத்தில் விஜயம் செய்த பிரதமர் ஸ்ரீசௌ-என்-லியும் நம் பிரதமரை அழைத்திருக்கிறார்.

*   *   *

வெளுத்ததெல்லாம் பால் என்று ஸ்ரீநேரு நம்புகிறாரா? அதுதான் இல்லை. கம்யூனிஸ்டுகள் வழி என்ன என்பதை எல்லோரையும் விட அவர் நன்கு அறிந்தவர். சென்ற பார்லிமெண்ட் கூட்டத்தில் கூட ஆசியாவில் சில பகுதிகளில் சீனர்கள் பெருவாரியாக இருக்கிறார்கள். இது ஒரு பிரச்னையே. சீனர்கள் இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கவேண்டும். ஒன்று சீனர்களாக இருக்க விரும்பி சீன திரும்ப வேண்டும், அல்லது எந்தத் தேசத்தில் வசிக்கிறார்களோ அதில் பிரஜைகளாக வேண்டும் என்று நேரு சொன்னார்.

நேரு குறித்த பிரச்னை காரணம் தான் ஆசிய நாடுகள் ஒருமித்து எந்த முடிவையும் செய்வதற்குக் குறுக்கே நிற்கிறது. ஆகவே, நேரு தம் சீன விஜயத்தின்பொழுது கட்டாயம் சீனப் பிரதமரிடமிருந்து சில உறுதிகள் வாங்குவார் என்று நம்பலாம். அதில் முக்கியமானது, சீனு சம்பந்தப்பட்ட வரை, ஆசிய நாடுகளுடன் நல்லுறவு கொள்ளுவது, மற்ற நாடுகளின் உள் வியவகாரததில் தலையிடாமை,

டாக்டர் கே. ஐ. ஸிங் நேபாளத்தலைவர். நேபாளக் காங்கிரஸுடன் மனஸ்தாபம் காரணமாக அவர் நேபாளத்தை விட்டு ஓடி, திபெத்தில் புகுந்து, இப்பொழுது சீனுவில் அதிதியாக இருக்கிருர், இவரைச் சீனு நேபாளத்திற்குத் திருப்பியனுப்பவேண்டும் என்று நேபாளத்தில் வற்புறுத்துகிருர்கள். இப்படிச் செய்ய சீனர்கள் மறுத்தால் அவர்கள் கட்டாயம் டாக்டர் ஸிங்கின் தலைமையில் ஒரு சைன்யத்தை நேபாளத்துக்குள் அனுப்ப யோசிக்கிருர்கள் என்பது ஒரு சாராரின் கூற்று. இது குறித்தும் பண்டிதர் சீன விளக்கத்தைப் பெறுவது மிக்க அவசியம்.

* * *

டில்லியில் நடக்கும் பல முக்கிய ஸெப்டம்பர் அலுவல்களில் இந்திய போஸ்டாபீஸ்கள் நூறு வருஷ வாழ்வைக் குறித்து நடக்கும் கண்காட்சி. இதில் முக்கியமானது சர்வதேச ஸ்டாம்பு கண்காட்சி.

இந்த விழாவில் கலந்துகொண்டு பேசிய தபால் இலாக்கா மந்திரி ஸ்ரீஜக ஜீவன்ராம் ஸ்டாம்புகளை, 'பேசாத தூதர்கள்' என்ருர். முற்றிலும் உண்மை. ஸ்டாம்பு என்பது தபாலைக் கொண்டு செல்ல விதிக்கப்படும் கட்டணம் தானே என்று அமிஞ்சி 'தலை'களை உபயோகித்தது அந்தக் காலம். சர்வ லக்ஷணங்களும் கலர்களும் பொருத்தி இந்தியாவின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் அழகிய ஸ்டாம்புகளை நம் தேசம் தயார் செய்வது இந்தக்காலம்.

கண் காட்சியில் உள்ள ஸ்டாம்புகள் வித விதமாக, நம் ஸ்டாம்புகளைவிட உயர்ந்த ரக காகிதங்களில் அச்சிடப்பட்டுள்ளன. இது தெரியாமலா ஸ்டாம்பு சேகரிப்பது என்பது ஒரு தேர்ச்சிபெற்ற கலையாக விளங்குகிறது? மேல் நாடுகளில் முக்

SANKAR IC BRAND

சங்கர் பிராண்ட்

போர்ட்லண்ட் ஸிமெண்ட்

திடத்திலும் தரத்திலும் தேர்ந்தது

உறுதியும், அழகும் அமைந்த கட்டிட திட்டங்களுக்கு இன்றியமையாதது.

தயாரிப்பவர்:

இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் :
11/12, ஸெகண்ட்லைன் பீச்,
மதராஸ்.

தொழிற்சாலை:-
சங்கர்நகர்,
திருநெல்வேலி ஜில்லா.

நாடெங்கும் IC ஸ்டாகிஸ்டுகள் மூலம் வினியோகிக்கப்படுகிறது.

கியமாக ஸ்டாம்புகளைப் பார்த்த மாத்திரத்தில் எந்தத் தேசத்து ஸ்டாம்பு என்று சொல்லும் முறையில் ஒரு கலை மூலமாகவோ சரித்திர சம்பந்த சின்னம் மூலமாகவோ தெரிவிக்கிருர்கள். முக்கியமாக ருஷ்யாவிலும் பிரான்ஸிலும் மிக அழகிய ஸ்டாம்புகளை வர்ணப்பட சித்திரங்கள் மாதிரி வெளியிட்டிருக்கிருர்கள்.

இந்தியா ஒரு நூற்ருண்டுக்குத் தபால் சேவை செய்து, தபால் இலாக்கா மேலும் மேலும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது, என்பது பற்றி நாம் சந்தோஷப்படவேண்டிய விஷயம்.

* * *

தசரா பண்டிகை நம் நவராத்திரி விழாவின் பொழுது இந்தப் பக்கங்களில் கொண்டாடப் படுகிறது. அமாவாசையிலிருந்து பத்து நாட்களுக்குத் தினமும் ராமாயணத்திலிருந்து காட்சிகளை நடிகர்கள் பொது மைதானத்தில் நடிப்பார்கள். வங்காளத்தில் நம் பக்கங்களில் உள்ளது போல் துர்க்கைக்குத்தான் பூஜை. அஷ்டமியன்று அழகாகத் துர்க்கை பிம்பங்களைக் களிமண்ணில் உண்டாக்கி, கலர் கொடுத்து, ஆவாஹனம் செய்து, தசமியன்று அவைகளை நதியில் விஸர்ஜனம் செய்வார்கள் வங்காளிகள்.

முதல் முதலாக, நவராத்திரியை விமரிசையாக ஸௌத் இந்தியா கிளப் நடத்தியது. பத்து நாட்களில் ஏழு தினங்களில் சங்கீதமும் நாட்டியமும் கொண்ட புரோகிராம் நடந்தது. நிதி என்பது தான் எதற்கும் முட்டுக்கட்டை. வங்காளிகள் நடத்துவதுபோல ஸௌத் இந்தியா கிளப்பும், ஒரு விசேஷ நவராத்திரி கமிட்டி ஏற்படுத்தி, பணம் வசூல் செய்து, ஒரு கேந்திர ஸ்தானத்தில் பூஜை செய்ய ஏற்பாடு அடுத்த வருஷம் செய்தால் இன்னும் நல்ல பெயர் நமக்குக் கிடைக்கும்.

பாரதி தினத்தை நன்ருக நடத்திய தேசிய கலாச்சார ஸ்தாபனத்தையும் மெச்ச வேண்டும். மத்திய மந்திரி ஸ்ரீ கே. ஸி. ரெட்டி, ஸுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் ஸ்ரீ டி. எல். வெங்கட்ராமய்யர், ஸ்ரீ பி. ஜகன்னுத்தாஸ் மூவரும் பங்கெடுத்துக் கொண்டார்கள் என்ருல் பார்த்துக்கொள்ளுங்கள். ●

தீபாவளி !!

இப்புனித நாளில் - நண்பர்களுக்கும், எங்கள் அபிமானிகளுக்கும் எங்கள் மனமார்ந்த

நல் வாழ்த்துக்கள் !!!

'காவேரி'யில் வெளியாகும் ஒவ்வொரு அட்டைப்பட கலர் பிளாக்கும் எங்களால் செய்யப்பட்டது

ஸ்தாபிதம் : 1890 டெலிபோன் : 3202

எம். சி. அப்பாசாமி செட்டி அண்டு கோ.,
14, ஜோன்ஸ் தெரு,
மண்ணடி, மதருஸ்.

சந்தேக விளக்கம்

மூலம்: எஸ். கே. பொற்றக்காடு

மொழிபெயர்ப்பு: எஸ். பி. ராமகிருஷ்ணன்

மாலை வேளைகளிலே எப்பெழுதும் உலாவச் செல்வதுபோல் அன்றும் உலாவச் சென்றுவிட்டு வந்து பத்து நிமிஷம்கூட ஆகவில்லை. வேலைக்காரன் ஓடிவந்தான். என்னைக்காண ஒருவர் வந்திருப்பதாகக் கூறினன், 'வரட்டும்' என்றேன். அறையிலே மின்சார விளக்குகள் பகல்போலப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. வரும் விருந்தாளி சரியாக வரவேற்கப்பட வேண்டாமா! ஒரு நாற்காலியைஎடுத்துப்போட்டுவிட்டு ஒருசிகிரெட்டைப் பற்றவைத்தேன், புகைத்துக்கொண்டே புதிய மனிதரை வரவேற்க வெளியே நோக்கினேன்.

தடித்த சரீரம், வெளுப்பான நிறம், அடர்த்தியான தாடி, தலையிலே ஒரு தொப்பி, அவரது உருவம் ஒரு முஸ்லீமாக இருக்கவேண்டும் என்று எடுத்துக்கூறியது. நான் "சலாம்" செய்தேன். அந்த மனிதர் எனது வணக்கத்தைப் பார்க்காதது மாதிரி நடித்துக்கொண்டு அங்கிருந்த நாற்காலியில் போய் உட்கார்ந்தார்.

வாடிக்லைகக்காரர் அல்ல, வணக்கத்தை ஏற்றுக்கொள்ளக்கூட இல்லை, சந்தேகம் தோன்றியது. நோக்கினேன் சிந்தித்தேன். அதிகம் வளராத அடர்த்தியான தாடி, கருமையான கண்கள், புதிய துருக்கித் தொப்பியோடு வந்துள்ள அவரது நிலை எவரையும் சிறிதுநேரம் சிந்திக்கவும் ஆகர்ஷிக்கவும் கூடிய தன்மை உடையதாக இருந்தது, ஆனல் நான் அவரை இதுவரை பார்த்ததாகவே ஞாபகமில்லை. திடீரென்று நீங்கள் யார்? என்ன வேண்டும்? என்று கேட்கமுடியாத நிலையில் நான் இருந்தேன். எனது சிந்தனை அலைகள் மறுபடியும் அவரைப்பற்றிய ஆராய்ச்சி என்ற கரையில் மோதிக் கொண்டிருக்கும் பொழுது, திடீரென்று கோடை மழைபோல அவரது தொப்பியையும் தாடியையும் நீக்கினர்.

"உங்களுக்கு என்னைத் தெரிகிறதா" மிகுந்த கௌரவமான தொனியில் என்னைக் கேட்டார். எனது நிலை மீண்டும் குழப்பமாகியது. பழகிய குரல். கறுத்த கயல் கண்கள் எனக்குத் தெரிந்தவைதான், ஒரு நிமிஷம் சிந்தித்தேன். "ஓ திவாகர மேனனா" கர்ச்சித்தேன். கட்டி அணைத்துக் கொண்டோம்.

"ஆம் திவாகரமேனன் தான்" அவன் அந்தக் கௌரவத்தை விட்டுக் கொடுக்காது தலையாட்டிக் கொண்டு பையில் இருந்து ஒரு சிகரெட் எடுத்துப் பற்றவைத்தான்.

கடந்தகாலம், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் நாங்கள் இருவரும் நண்பர்கள். நண்பர்கள் மட்டுமல்ல, உற்ற துணைவர்களும்கூட, எங்களிடையே எந்தவிதமான ரகசியமும் இருக்காது. ஹிருதய ரகசியங்களைத் துறந்து கூறும் உயிர்த் தோழர்கள். ஆனல் எங்களது நெருக்கத்திலே ஒரு பிளவு ஏற்பட்டுவிட்டது. இணைபிரியாதவர்கள் பிரிந்துவிட்டோம், கடந்த ஏழு ஆண்டுகள் எங்களில் யாருமே சிந்திக்காத அளவிற்கு வெகு தூரத்திலே இருந்துவிட்டோம். எந்தவிதமான விபரமும் இல்லாதவன் திடீரென்று வந்துவிட்டான். எங்கிருந்தோ வந்தான். கடந்த காலங்களிலேகண்ட புதுமையில்லை முகத்திலே. மாற்றமடைந்த மனிதன்—கண்களிலே ஒரு மயக்கம், ஒரு மங்கலான ஒளித்தோற்றம்—முகத்திலே ஒரு கரும்படர்ப்பு—மெலிந்த உடல்—புன்னகை பூக்கும்போது காணும் குழிகள் கன்னங்களிலே இன்று இல்லை. ஆம்,அந்தப் புன்சிரிப்பு இருந்திருப்பின் நான் அவனை அடையாளம் கண்டுகொண்டிருந்திருப்பேனே!

அவனது நிலைகண்டு கலங்கினேன். "நண்பா, உன் அழகு உடல் எங்கே. என் கண்களையே நம்பமுடியவில்லையே. உனக்கு என்ன சம்பவித்தது, இதுவரை எங்கிருந்தாய். ஒரு சவக்குழியில் இருந்து எழுந்து வருவதைப் போலல்லவா இருக்கிருய். நண்பா! விபரமாகச்சொல்" எனது இதயம் படபடக்கக் கூறினேன்.

அவன் சிகிரெட்டின் சாம்பலைத் தட்டிவிட்டுக் கொண்டே சிரித்தான். சிரித்துக்கொண்டே "நண்ப! உனது கேள்விகளுக்குச் சரியான விளக்கம் கூற எனக்கு நேரமில்லை. எதிர்கால வாழ்வு நிர்ணயிக்கப்படவேண்டிய இக்கட்டானநிலை, அவசரமான நேரம். இந்த நேரத்திலே உனது உதவி இருக்கும் என்று எண்ணியே ஓடி வந்தேன். சம்பவம் பற்றி விரிவாகக் கூறவோ, உனது சிந்தனைக்குக் கூடுதல் நேரமோ எடுக்கவோ முடியாத நெருக்கடியான கட்டம். திவாகரமேனன் ரிஸ்ட்வாட்ச்சை நோக்கிக்கொண்டே "நேரம் ஆகிவிட்டது, இன்னும் ஒருமணிநேரம் தான் இங்கு இருக்கமுடியும். அந்த நேரத்திலே நான் கூறப்போகும் கதையை நீ கூர்ந்து கேட்கவேண்டும்" என்று கூறிக்கொண்டே கதையைத் தொடர்ந்தான். "நண்பா! நான் காலேஜில் படிக்கும்போது ஒரு ஏழை என்று உனக்குத் தெரியுமல்லவா! ஸ்காலர்ஷிப் கொண்டுதான் நான் படித்தேன். டியூஷன் கொண்டுதான் என் வாழ்க்கைப் படகை ஓட்டினேன். அன்று எனது எண்ணங்களையும் ஆசைகளையும் அறிந்த உயிர்த் தோழன் நீ ஒருவன் தான். இருப்பினும் உன்னிடம் ஒரு ரகசியத்தை நான் ஒளித்துவைத்திருந்தேன். பணக்காரனகிய ஒரு வக்கீலின் மகளை நான் மிகவும் உறுதியாக நேசித்து வந்தேன். காதல் களவியலில்தான் பிறக்கிறது. அதுதான் தனிப்பட்ட சந்தோஷத்தையும் கொடுக்கிறது. அந்தக்கள்ளக் காதலைப்பற்றிக் காதலனும் காதலியும் தவிர எவ

ருமேஅறிய முடியாது. அந்த ரகசியங்களின் அடி ஒழுக்கில்தான் மிகவும் அதிகமான நட்பு காணும். நண்பா! அவளுடைய பெயரை நான் இங்குக் குறிப்பிட விரும்பவில்லை. நாம் தற்சமயம் அவளை லீலா என்றழைப்போம். லீலாவின் பருவம் யௌவனத்தை அடைந்தபொழுது அந்தப் பரிசுத்த இதயம் காதல் மாலையைக் கையிலேந்தியிருந்த என்னைத்தான் முதலில் கண்டது. கண்டதும் கனிவு பிறந்தது. கனிவு நேசிப்பதற்கு வழி வகுத்தது. நேசம் பாசமாகியது, பாசத்தால் பிணைக்கப்பட்டோம். அவள் சாதாரண காதலியாக இருக்கவில்லை. எனது வாழ்விலே கிடைத்த கிடைத்தற்கரிய செல்வமாயிருந்தாள். அவளது ஒவ்வொரு கடாட்சமும் என்னுடைய ஆசைகளை முறுக்கிவிட்டது. அவளுடைய ஒவ்வொரு புன்சிரிப்பும் எனது சிந்தனைக்குத் தூண்டுகோலாகியது. அந்தப் 'பெண்' எனது வாழ்வின் ஒரு அங்கமாயிருந்தாள். இருப்பினும் 'நீ ஒரு ஏழை' என்பதை எனது மனம் அடிக்கொரு தடவையும் சுட்டிக்காண்பிக்கத் தவறவே இல்லை. பணமிகுந்த குடும்பம், படித்துப் படாடோபமாக வாழும் வக்கீல், இவர்களிடமிருந்து அவளைப் பிரித்துக் குடும்ப வாழ்வு நடத்தமுடியும் என்பது பகற்கனவு போலத் தோன்றியது. காதல் கனவின் சொர்க்கம். குடும்ப வாழ்வின் அடிப்படை. ஒரு தரித்திரனுடைய தாம்பத்தியம்—பாலைவனத்தில் நட்டுவைத்த மலர்ச்செடி. ஆகவே பணப்பெருமையில் வாழ்ந்த அவளைத் பட்டினியின் கோரப் பசிக்கு இரையாக்க விரும்பவில்லை. நான் ஒரு பணக்காரன் என்றால் மானத்தோடு அவளுடன் இன்பமாக வாழமுடியும் என நான் எண்ணினேன். எண்ணத்தை வெளியிட்டேன். அவளும் ஒப்பினாள். காலம் வரும்வரை காத்திருப்பதாகக் கூறினாள்.

நான்கு ஆண்டுகள், வேலை தேடி அலைந்தேன். திரிந்தேன். வேலை கிடைக்கவில்லை. சொந்த நாட்டிலே வேலைகிடைக்கவில்லை. கடல் கடந்தால் கிடைக்கும் என எண்ணினேன். கண் காணாத பூமிக்குச்சென்றால் காசு சம்பாதிக்கமுடியும் என நம்பினேன். எனது எதிர்காலத்தின் சிங்காரத் தோட்டம் சிங்கப்பூர் செல்ல ஆயத்தமானேன்.

வேதனையோடு பிரிந்தோம். நாம் பிரிவது அதிக நெருக்கத்திற்குத்தான் எனச் சமாதானம் கூறினாள். வழிச் செலவிற்கு அவளுடைய தங்கக் காசு மாலையைக் கழற்றிக்கொடுத்தாள். நாங்கள் கடைசியில் யாத்திரை கூறிப் பிரிந்தோம். அந்த நிலவு காயும் இரவை எண்ணி, நான் பல தடவை கனவுகண்டுகொண்டு இருக்கிறேன். 'காத்திருக்க' அதுதான் அந்த இரவின் பிரதிபலிப்பு என்று விரலும் கைகளுடன் விம்மும் மனத்துடன் வள்ளிக்கொடி கொண்டு எனது கழுத்திலே ஒரு மாலை சார்த்தினாள். என்னுடைய ஆசைப் பொக்கிஷமாகிய அவளது அதரங்களிலே கடைசியான "இச்" என்ற ஒலியை உண்டாக்கினேன்.

'ஒரு பணக்காரர் ஆகுங்கள். அது சுலபமான காரியமல்ல. இருப்பினும் உலகிற்கறிவிக்காது உலகினருக்குத் தெரியாது கஷ்டப்பட்டுப் பணம் சம்பாதியுங்கள்".

கப்பல் ஏறினேன். கடல் கடந்தேன். சிங்கப்பூரை அடைந்தேன். மாதங்கள் இரண்டு கடந்துவிட்டன. ஒரு குமாஸ்தா வேலை கிடைத்தது. ரப்பர் எஸ்டேட்டிலே, காதலின் மகத்துவத்தால் சிருஷ்டிக்கப்படும் இன்பவாழ்வைக் கண்முன்னே எண்ணிக்கொண்டு நான் சிரமப்பட்டு வேலை செய்தேன். ஆயிரம் மைலுக்கப்புறம், அலைகடலுக்கப்புறம் காதல் காதல் எனச் சாகும் ஒரு இதயம் எனக்காக என்னை வேண்டி, நினைந்து நினைந்து, நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறது என்பதை நினைக்கும்போது எனது வேலைக்கு ஒரு புத்துயிரைத் தந்தது. எனது உணர்ச்சிக்குக் கனக மாலை சார்த்திக்கொண்டு அவளது காதற் கடிதங்கள் வந்துகொண்டிருந்தன. கடிதமும் எண்ணமும் பரிமாறப்பட்டாலும் நான் சிங்கப்பூரில் உத்தியோகத்தில் இருக்கும் விபரம் அவளல்லாது யாருக்கும் தெரியாது.

காலம் கடந்ததை அறிய முடியவில்லை. இதற்கிடையே அவளுக்கும் நல்ல திருமண ஆலோசனைகள் நடந்தனவென்றும் அவளது சம்மதமில்லாதது கொண்டு எல்லாம் நின்று போய் விட்டன என்றும் அவளுடைய கடிதங்கள் அறிவித்தன. என்னுடைய மலேயா வாழ்விலே பல மாறுதல்கள் ஏற்பட்டு இருந்தன. ஆறு ஆண்டுகளிலே அந்த எஸ்டேட் மானேஜர் ஆக முடிந்தது. நல்ல ஒரு தொகையும் சம்பாதித்து விட்டேன்.

"பணக்காரனாகிவிட்டேன்." பாவையை அடைய வேண்டாமா! நாடு திரும்ப எண்ணினேன். இன்னும் சில மாதங்களிலே நாடு திரும்புவேன் எனவும் அவளுக்கு எழுதிவிட்டேன். ஆனால் அந்த மாதத்திலேயே ஒரு சம்பவம் நிகழ்ந்தது. எனது எஸ்டேட் முதலாளி ஒருநாள் என்னைக் கூப்பிட்டு, "மேனன், யுத்தம் தொடங்கியிருப்பதால் நான் அவசியமாக இங்கிலாந்து செல்ல வேண்டியிருக்கிறது. ஆறு மாதத்தில் திரும்பி வந்துவிடுவேன். அதுவரை இந்த எஸ்டேட் முழுவதும் உங்கள் பேரில் இருக்கட்டும்." என்று கூறினார்.

மறுநாள் அவர் இங்கிலாந்து பயணமானார். ஆனால் அவர் சொந்த நாட்டை அடைய முடியாது போய்விட்டது. வழியிலே எதிரிகளின் கையிலே சிக்கி மூழ்க்கடிக்கப்பட்டுவிட்டது அவர் சென்ற கப்பல். சிலர் பாதுகாக்கப்பட்டனர். பலர் பரிதவிக்கவிடப்பட்டனர். பாதுகாக்கப்பெற்றவர்கள் பட்டியலிலே அவர் பெயர் இல்லை. மூன்று மாதங்கள் காத்திருந்தேன். உரிமைக்காரர்கள் வரவில்லை. உரிமையற்ற சொத்துக்கு உரிமையாளனானேன். சொந்த நாடுவிட்டு இருக்கும் எனக்கு அந்தப் பெரும் எஸ்டேட் எதற்கு? விற்க முயன்றேன். விற்றேன், பத்துலட்சத்திற்கு. கப்பல் ஏறினேன். விபரம் அறிவிக்கவில்லை அவளுக்கு. திடீரென்று அவளது எதிரே தோன்றி, "இந்தா. நீ ஒரு லட்சாதிபதியின் மனைவியே! பிறர் அறியாது பெரும் பணக்காரனாகியவனின் காதலியே! அன்பிற்காகக் கடல் கடந்தவனின் காதல் தெய்வமே!" என அவளது

காதின் அருகிலே இருந்து சத்தமிட்டுச் சொல்ல வேண்டும் என்று இருந்தது எனது ஆசை.

ஏழு ஆண்டுகள் கழித்துக் கேரளத்திலே மீண்டும் காலெடுத்து வைத்தபோது இந்த நாட்டிலே உள்ள இயற்கையழகை என்னால் ரசிக்க முடியவில்லை. காரணம் எனது உடலிலே உள்ள ஒவ்வொரு ரத்தத் துளியிலும் அவளது அன்பு முகம்தான் தெரிந்தது.

நான் அவளது வீட்டை அடுத்துச் சென்றுவிட்டேன். எனது இன்பக் கோட்டை கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. இனி மனைபுகும் நிகழ்ச்சிமட்டும் தான் மாத்திரம் மீதமிருந்தது. ஆனால் அந்தச் சொர்க்கவாசலைத் திறந்து வேகமாகக் குடியேற நான் ஆசைப்படவில்லை.

அவளுடைய வீட்டின் பக்கத்தில் ஒரு வீடு காலியாக இருப்பது தெரியவந்தது. அன்றே அந்த வீட்டை வாடகைக்கு எடுத்தேன். வடநாட்டுசேட்போல வேஷமணிந்து அந்த வீட்டில் தங்கினேன். அன்று சாயங்காலம் நான் அவளைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. எனது மனம் வேதனைப்பட்டது. அந்த விலை மதிக்கமுடியாத மாணிக்கத்தை, நான் வைத்த கண் வாங்காது பார்த்துக்கொண்டேயிருந்தேன்.

திடீரென்று நான் நினைக்காத ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அவளுடைய தம்பி ஓடி வந்தான் என்னை நோக்கி. வாரி அணைத்தேன். குழந்தைப் பாசம் தூண்ட. 'சேது இங்கே வாடா' என அவள் அழைத்தாள். அவன் போகவில்லை. போகவே விரும்பவில்லை. அவள் அவனைக் கூப்பிட்டுக்கொண்டே வேலியின் அருகில் வந்தாள்.

நான் குழந்தையை அவளுடைய அருகில் கொண்டு சென்று கீழே இறக்கிவிட்டேன். அவள் குழந்தையைக் கையில் எடுக்கும்பொழுது அவளுடைய கூந்தலில் செருகி வைத்திருந்த முல்லைப்பூ அவளறியாமலே கீழே விழுந்தது. முல்லைப்பூவை எடுத்து மோந்தேன், கண்டுவிட்டாள். எனது முகம் வெளுத்துப் போய்விட்டது. அவள் லேசாகப் புன்சிரித்தாள். அவளது மோகனப் புன்னகை எனது இதயத்திலே வஜ்ரம் போலப் பதிந்துவிட்டது.

நல்ல வெண்மையான இரவு. குளிர்மையான காற்று வீசிக்கொண்டிருந்தது. நான் சிந்தையில்லாது முற்றத்திலே நடந்துகொண்டிருந்தேன். திடீரென்று அவள் தோன்றினாள்...ஆம் அவள்தான்! அடுத்துச் செல்ல ஒரு சக்தி என்னை முன்னோக்கித் தள்ளியது. அதற்குள் அவள் கையிலிருந்த முல்லைப் பூக்களைக் கீழே போட்டுவிட்டு மறைந்துவிட்டாள். அவள் மறைந்துவிட்டாள். இல்லை. மறைவாகத்தான் நின்றாள். நான் அந்த முல்லைப் பூக்களை எடுத்து, கண்ணோடு ஒற்றிக்கொண்டேன். "எங்களது புதிய அடுத்த வீட்டுக்காரர் யார்?" என்று என்னிடம் கேட்டாள். "நான் ஒரு காஷ்மீர்காரனாகிய குங்கும வியாபாரி" எனப் பதில் கூறினேன். பெயர் இஸ்மத்கான் என்றேன். "கொஞ்சம் சாம்பிள் குங்குமம் தரமுடியுமா?" என்றாள். "பார்சல் வரவில்லை" என்று பதில் கூறினேன். மறுநாள் நான் கடைவீதியிலிருந்து கொஞ்சம் குங்குமம் வாங்கிக் கொண்டு வந்தேன். "இது நல்ல குங்குமம். எனக்கு இன்னும் ஐந்து ரூபாய்க்கு வேண்டும்" என்று கூறிக்கொண்டே ஐந்து ரூபாய் கொடுத்தாள். அவள் கொடுத்த ரூபாய்க்கும் குங்குமம் கடைவீதியில் இருந்து வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தேன்.

எங்களது இடைவெளி நெருங்கிவிட்டது. அவளுடைய தந்தை க்ஷயரோக சிகிச்சைக்காக மதனபள்ளிக்குப் போயிருப்பதாகவும் வீட்டில் அவளும் அவளது தம்பியும் ஒரு பாட்டியும் மட்டுமே இருப்பதாகவும் அவள் கூறினாள். நாட்கள் ஒவ்வொன்றும் செல்லச்செல்ல எங்களது இடைவெளி நெருங்கிக்கொண்டிருந்தது. அப்பொழுதெல்லாம் "அபாயம்" "அபாயம்" என்று எனது அந்தராத்மா கூறிக்கொண்டிருந்தது. இந்தப் பொய்வேஷத்தை எடுத்து எறிந்துவிட்டு உண்மையான உருவத்துடன் அவளது எதிரே போய் நிற்கவேண்டும் எனப் பல தடவை எனது மனம் கூறியது. ஆனால் யௌவனத்தின் ஆபத்திற்கு வழிகாட்டுகிற அந்தப் பிரேரணைச் சக்தியாகிற மனப் பிசாசு "வரட்டும் வந்தால் பார்ப்போம்" என்று என்னைத் தடுத்துவிட்டது. இந்த முடிவு எங்கு கொண்டு போய்விடும் என்று எனக்கே தெரியவில்லை. கடைசியில் நான் பயப்பட்டது போலவே 'அது' சென்றடைந்துவிட்டது. நான் பயந்தேன் அவள் உறுதியுடையவளாகினாள். "அப்படியென்றால்" திவாகரமேனன் மூன்றாவதாக ஒரு சிகிரெட் எடுத்துப் பற்றவைத்தான். "அப்படியென்றால்" அந்த வார்த்தையை, கூடுதல் கவனிக்கவேண்டும். 'அப்படியென்றால்' இஸ்மத்கான் என்று அர்த்தம்.

உள்ளங்கள் பரிமாறப்பட கடிதங்கள் துணைபுரிந்தன. கையெழுத்து கூடிய அளவிற்கு மாற்றி அவளுக்கொரு காதல் கடிதம் எழுதினேன். ஆனால் பழக்கமான எழுத்திலே பளிங்குபோன்ற வாசகத்தோடு பதில் கிடைத்தது. அன்று இரவு எனது உறக்கம் பாழாக்கப்பட்டுவிட்டது. சிந்தனை என்னை அணு அணுவாகச் சித்திரவதை செய்தது. "கண்டவுடன் மனம் கவர்ந்த கண்ணாளா!" இந்த வாசகத்தை நான் நம்பவில்லை. பலதடவை புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். அந்தக் கடிதம் மேலும் தொடர்ந்தது: அந்தக் காதலின் சக்தியைப்பற்றி நான் இதுவரை எண்ணவில்லை, இப்பொழுது தான் அதனுடைய சக்தி தெரிந்துவிட்டது. காரணம் என்ன என்று அறியாதே நான் ஒருவரை ஆத்மார்த்தமாகச் சிநேகிக்கத் தொடங்கியுள்ளேன். காதலின் அந்த மின்னல் சிதறலிலே சக்தியும் தேஜஸூம் இருக்கின்றன. நிறுத்திவைக்கப்பட்டிருந்த எனது ஹிருதயம் அணை உடைந்ததுபோல தங்களிடம் ஓடிவருவதைத் தடுக்க என்னால் முடியவில்லை. எனது காதலைப்பற்றி எனக்கே ஆச்சரியம் தோன்றுகிறது."

இரண்டு வாரங்கள் கடந்துவிட்டன. ஒருநாள் இரவு சந்தித்தேன். அவளிடம் "எனது வேலைகள் எல்லாம் முடிந்துவிட்டன. நாளை பயணம் தொடங்கலாம் என இருக்கிறேன்" என்றேன்.

248552

அவள் அதுகேட்டு இடியுண்ட நாகம் போலானாள். அவளது நிலையிலே மாற்றம் கண்டது. பயந்த சுபாவத்தில், தணிந்த குரலில் "நானும் வருகிறேன்" என்றாள். பொங்கும் மனவேதனையை அடக்கிக்கொண்டு, "வேண்டாம். தங்களது காதலை ஏற்க முடியாத அபாக்யவான் இதுவரை தங்கள் காதலுக்காகப் பட்ட வைகளைக் காட்டிலும் இனிமேல் உள்ள தியாகம் தான் தங்களால் முடியாது" என்கிறேன் நான். 'ஏன் முடியாது, நான் எதற்கும் தயார்' என்று அவள் உறுதியாகக் கூறினாள். 'எதற்கும்' நான் இடை மறித்தேன். 'எனக்குப் பின்னே ஒரு வைதீகக் குடும்பம் இருக்கிறது' என்றேன்.

"மதம் மாறவும் தயார்."

"ஆனால் தாங்கள் எண்ணுவதுபோல நான் ஒரு பெரும் பணக்காரனல்ல, ஒரு ஏழை."

"எனது கையில் இறந்துபோன எனது தாயின் நகைகள் ஏராளம் இருக்கின்றன."

"அப்படியென்றால் தாங்கள் என்னுடன் வரத் தீர்மானித்துவிட்டீர்களா!"

"தாங்கள் எனது வேண்டுகோளுக்கு மறுப்புக் கூறாதிருந்தால்"

நான் மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தேன். கடைசியில் 'அப்படியென்றால் நாளை இரவு $9\frac{1}{2}$ மணிக்கு எனது அறைக்கு வரமுடியுமா?— நாம் இரவு 10 மணி வண்டிக்குப் போகலாம்.' அவள் சம்மதித்தாள், நான் 'பிறகும் தங்களது தந்தை மனம் நொந்து வேதனைப்படமாட்டாரா?'

அவள் சிறிதும் சந்தேகிக்காது 'சங்கதிகள் எல்லாம் விவரித்து இன்றே ஒரு கடிதம் எழுதி விடுகிறேன்' என்றாள்.

நான் பிறகு ஒன்றும் கூறவில்லை. அவள் போய்விட்டாள். திவாகரமேனன் நாற்காலியில் இருந்து எழுந்து 'நண்பா! சம்பவம் நிகழ்ந்தது நேற்று. இன்று இரவு $9\frac{1}{2}$-மணிக்கு அவள் எனது அறையிலே இருப்பாள். இனி நான் என்ன செய்யவேண்டும்? அவளைக் கல்யாணம் செய்வதா? வேண்டாமா? யோசித்து வேகம் சொல்லவேண்டும். நேரம் 9-15 ஆகிவிட்டது"

திவாகர மேனனின் கேள்விகேட்டு நான் சிறிது நேரம் ஆலோசித்தேன், பிறகு "திவாகரமேனன் நீ கட்டாயம் அவளைக்கல்யாணம் செய்யத் தான் வேண்டும்" என்றேன். கூண்டிலிட்ட சிங்கத்தைப்போல நிலையில்லாது அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்தான். எனது வார்த்தையைக் கேட்ட உடன் "என்ன? நீ நன்றாக யோசித்துக் கூறுகிறாயா? இந்தச் சொந்தக் காரியத்திலே ஒரு சத்தியம் இருக்கிறது என்று நீ எண்ணவேண்டும். நீ கூறுகிறாய் நான் அவளைத் திருமணம் செய்ய வேண்டுமென்று. என்ன நியாயம் கொண்டு நான் ஏழுவருஷம் அவளையே மனதில் தியானித்துக் கஷ்டப்பட்டு கடல் கடந்து வாழ்ந்தேன். அந்த மகிழ்வான மணவறையை எதிர்பார்த்து அல்லவா? அந்த மணவறையை எதிர்பார்த்து வந்து சேர்ந்த என்னை—திவாகர மேனனை வஞ்சித்து எவனோ ஒரு பரதேசிப் பயல், ஊர் பெயர் தெரியாத பயலுடன் ஓடிப் போகத் தைரியப்பட்ட அவளை நான் கலியாணம் செய்ய . வேண்டுமென்று கூறுகிறாய்! இதோ அவள் இஸ்மத்கானுக்கு எழுதிய காதல் கடிதங்கள்."

திவாகரமேனன் தன்னுடைய கோட்டுப் பையில் இருந்த கடிதங்களை எடுத்து மேஜைமேல் வைத்தான். "இந்தா. அவள் எனக்குக் திவாகரமேனனுக்குச் சிங்கப்பூருக்கு எழுதிய கடிதங்கள். காத்திருக்கிறேன் என்ற பல்லவியோடு கூடிய காதல் கடிதங்கள்." அவன் இன்னும் சில கடிதங்கள் எடுத்துவைத்தான். அதிலே ஒரு கடிதம் எடுத்துக்கொடுத்து "இவை இரண்டையும் பக்கத்துப் பக்கம் வைத்துப் பார், பிறகு அவளைத் திருமணம் செய்யவேண்டுமா என எண்ணிப்பார்?" அவன் இதைக் கூறிக்கொண்டு பலமாக மேஜைமீது இடித்தான். "வஞ்சகி" "வஞ்சகி" எனக் கூறிக்கொண்டு கைகளை பின்னால் கட்டிக்கொண்டு அறையிலே அங்கும் இங்கும் நடந்தான். அவனுடைய முகம் தேக்குமரத்தின் இளந்தளிர்போல சிவந்திருந்தது.

"சரி, அப்படியென்றால் நீ அவளைக் கல்யாணம் செய்யவேண்டாம்" என லேசான குரலில் கூறினேன். திவாகர மேனன் திரும்பி நின்று, என்ன! நான் இஸ்மத்கான். அவளை நான் வஞ்சிக்க வேண்டுமென்று கூறுகிறாய். எவளுக்காகக் கடல் கடந்து கஷ்டப்பட்டானோ அந்த மனிதனை அவளது மாஜி காதலனை, அவனது சம்பாத்தியத்தை அவள் கூறிய 'பணக்காரராகுங்கள்' என்ற வார்த்தையை, 'காத்திருக்கிறேன்' என்ற உறுதி மொழியை, சொந்தத் தாயை, வளர்த்த தகப்பனை, பிறந்த பொன் வீட்டை, மூதாதையர் வகுத்திருந்த 'மதத்தை', எல்லாவற்றையும் ஒரு மனிதனுக்காக, அவனது காதலுக்காக, அவன் ஏற்றுக் கொள்வான் என்ற நம்பிக்கையால் புல்லென உதறித் தள்ளப்பட்ட அந்தப் பெண் ரத்தினத்தை கைவிட வேண்டுமென்று கூறுகிறாய். அவளுக்காகத் தீர்ப்புக் கூறாதே. அந்தக் காதலின் மகத்தான சக்திக்காவது ஒரு நியாயமான தீர்ப்பு வழங்கு" என்றான்.

நான் சிந்தித்தேன். தலை புகைய ஆரம்பித்தது. முடிவு காணமுடியவில்லை. ஆனால் கடிகாரம் 9-30 அடித்து ஓய்ந்துவிட்டது. ஒன்பதரை! திவாகரமேனன் துள்ளிக்குதித்தெழுந்தான். அவன் மேஜையில் கிடந்த கடிதங்களையும் எடுத்துக்கொண்டு சொல்லாமல் கூட வெளியே ஓடினான். ஒரு நிமிஷம் கழிந்த உடன் அவனது காரின் சப்தம் அங்கு நிலவியிருந்த அமைதியைக் கலைத்தது.

அன்பர்களே. திவாகரமேனனின் கேள்விக்கு நீங்களாக இருந்தால் என்ன பதில் தருவீர்கள்! ●

Edited & Published & by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Kumbakonam.

மலேரியாவை ஒழியுங்கள்

நிச்சயமாக – ஆபத்தில்லாமல் – குறைந்த செலவில்

'பாலுட்ரின்'

மலேரியாவை வீழ்த்துகிறது

மலேரியாவின் சின்னங்கள்:

முதலில் குளிரால் நடுக்கமுண்டாகும். ஜுரம் ஆரம்பமாகும். பிறகு உடம்பு முழுவதும் வியர்த்து வலி உண்டாகும். இந்த அறிகுறிகள் ஏற்பட்டால் உடனேயே டாக்டரைப் பாருங்கள்.

எப்பொழுதும் 'பாலுட்ரின்' சாப்பாட்டிற்குப் பிறகு ஒரு டம்ளர் நல்லீருடன் உட்கொள்ளுங்கள்.

வயதுவந்தவர்களுக்கும் 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும்: ஒரு மாத்திரை (0.3 Gm.)
6 லிருந்து 12 வயதுவரையுள்ள குழந்தைகளுக்கு: அரை மாத்திரை
6 வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு: கால் மாத்திரை

தினந்தோறும் ஜுரம் குணம் அடையும் வரை கொடுக்கவும்.

ICI

மணம் நிறைந்த வாழ்க்கை மனிதனின் குறிக்கோ
குணம் நிறைந்த
டி.எஸ்.ஆ
வாசனாதிகள்
மணம் கமழவைக்கும்
அரைக்கீரைவிதை
சந்தனாதி
கோகுல் ஹேர்
கோகுல் மட்டிப்பால்
கோகுல் மாலா
GOKUL HAIR OIL
T.S.R
Use our Speciality
T.S.R & Co., Perfumers, KUMBAKONAM